# இந்திய கிராமத்தினருக்குச் சாக்ரடீஸ் செய்த உபதேசம்

ஆசிரியர்
எப். எல். ப்ரெயின்

OXFORD UNIVERSITY PRESS
With Compliments.

INDIAN BRANCH

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
பம்பாய் கல்கத்தா மதராஸ்

விலை அணா 15

# INDIA GRAMATHINARKU SOCRATES SEYTHA UPADESAM

*A Tamil Translation of*

SOCRATES IN AN INDIAN VILLAGE

BY F. L. BRAYNE

*First published 1930*
*Second edition 1946*

முதல் பதிப்பு 1930
இரண்டாம் பதிப்பு 1946

PRINTED IN INDIA BY S. VISWANATHAN AT THE CENTRAL ART PRESS,
14, SINGANNA NAICK STREET, G. T., MADRAS, (P. I. C. NO. MS. 161)
AND PUBLISHED BY GEOFFREY CUMBERLEGE,
OXFORD UNIVERSITY PRESS, MADRAS,
(PAPER ISSUE CARD NO. MS. 1) DATED 29—6—1946.

# ஆசிரியரின் முகவுரை

**சாக்ரடீஸ்** என்பார் மிகவும் முரட்டுத்தனமான ஒரு கிழவர். ஆனால் அவர் கிராமவாசிகளிடம் மனப்பூர்வமாக நல்ல எண்ணம் கொண்டவர்; அவர்களிடம் உள்ள குற்றங்களைக் கண்டதும், சிறிதும் எதனையும் ஒளிக்காது பட்டவர்த்தனமாக எடுத்துச்சொல்வார்; கிராமவாசிகளை அதி கடுமையாகவும் கண்டிப்பார். இங்ஙனம் இடித்தும் புண்படுத்தியும் பேசிய அவரைக் கிராமவாசிகள் வைதுத் திட்டியடித்துத் துரத்தியிருப்பார்கள். ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்யாமைக்குக் காரணம், அம்முதியவரது கள்ளங்கபடமற்ற மனமும் உள்ளதை யுள்ளவாறு எடுத்துக்காட்டும் உரையின் உண்மையுமேயன்றி அவரது வயோதிகப்பருவமும் நரைத்த மயிரும் அன்றும்.

நம்மையெல்லாம் தட்டி யெழுப்பவும், நமக்கு உண்மையை ஒளியாது உரைக்கவும் கடுஞ் சொல்லுடைய **சாக்ரடீஸ்** அவசியம் வேண்டும். கிராமக் குழந்தையின்மீது தூம்பும் தூசும் படிந்திருப்பதேபோல் பொய்வேஷம் நம்மைப் போர்த்துக்கொண்டிருக்கிறது. தன் குழந்தையின் மீதுள்ள அழுக்கையும் நோயையும் நகைகள் கொண்டு கிராமவாசி மறைப்பதேபோல் நாமும் நம்மிடமுள்ள குற்றங்களையும் குறைகளையும் நயமான பேச்சினாலும் வெளிவேடத்தாலும் மறைத்து வருகின்றோம்.

**சாக்ரடீஸ்** அதுகண்டு சகியார்; பொய்யைப் பொய் யென்றே கூறுவர். தாம் பார்வையிடும் கிராமத்தைச் சீர்திருத்துவதே அவரது நோக்கம். எங்ஙனமேனும் சீர்திருத்தாது அவர் விடார். ஆகவே இப்பொழுது

கிராமங்களிலே குப்பைகூளங்களைக் கொட்டி வைப்பதற்காக ஒதுக்குப்புறங்களில் குழிகள் இருப்பதை எங்கும் காணலாம்; கிராமங்கள் பலவற்றிலும் கக்கூசு வசதிகள் ஏற்படுத்தி யிருப்பதையும் பார்க்கலாம்; விவாகாதிகளைக் குறித்து வைக்கும்பேரேடு புத்தகங்களை எந்தக் கிராமத்திலும் காணலாம். நகைநட்டுகளிலும் காதணிகளிலும் செலவு குறைந்திருப்பதை யாவரும் அறியலாம்; பால்வடியும் முகம் படைத்த வாலிபச் சாரணர்களைக் கிராமந்தோறும் காணலாம்; ஆண் பிள்ளைகளின் பள்ளிக்கூடங்களில் பெண்பிள்ளைகளும் சேர்ந்து படிப்பது சாதாரணமாகிவிட்டது. அம்மை குத்திக்கொள்வதும் நோய்வராமலிருக்க ஊசி குத்திக்கொள்வதும் பிரபலமாகிவிட்டன. இன்னும், நீர் இறைக்கும் பாரசீக ராட்டினங்கள் என்ன, கலப்பைகள் என்ன, முதல்தரமான கோதுமை விதையென்ன, புதுமாதிரியான கரும்பு சாகுபடி என்ன, ஆயிரக்கணக்கான லாவாதேவிச் சாலைகள் என்ன, அவற்றில் உள்ள இருபத்தைந்து லட்சம் மூலதனம் என்ன, கானம்செய்து செல்லும் கோஷ்டிகள் என்ன, நாடகமேடைகள் என்ன, பூதக்கண்ணாடி கொண்டு படங்கள் காட்டிச் செய்யும் பிரசங்கங்கள் என்ன, கிராமப்பள்ளிக்கூடங்கள் என்ன, வீடு தேடிவந்து போதிக்கும் பாடசாலை யாசிரியர் என்ன, நூதனமான பொலிகாளைகள் என்ன, மாதர் நடமாடுதற்குரிய தோட்டங்கள் என்ன, ஸ்திரீகள் சங்கங்கள் என்ன, குழந்தைகளின் நூதன விளையாட்டுக்கள் என்ன, ஆண் பெண் இருவரும் சேர்ந்தாடும் டென்னிஸ் பந்தாட்டஸ்தலங்கள் என்ன, இவையெல்லாம் **சாக்ரடீஸ்** என்பாரின் தூண்டுதலால் ஏற்பட்ட திருத்தங்களாம்

இன்னும் எத்தனையோ சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள. விரிவு அஞ்சி அவைகளை இங்கே வரையாது விடுத்தனம். எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் முக்கியமானது யாதெனில், ஜில்லா ஜனங்கள் அனைவரும் தட்டி யெழுப்பப்பட்டுளர்; முன்னேற்றத்திற்கான உபாயங்களை உரைப்பின், அவைகளைக் காதுகொடுத்துக் கேட்கவும், பரீட்சை செய்து பார்க்கவும், தமக்குத் தாமே திருத்திக் கொள்ளவும் ஆங்குள்ளவர்கள் உற்சாகமும் ஊக்கமும் கொண்டிருக்கின்றார்கள்.

**சாக்ரடீஸ்** என்பாரிடம் அகப்பட்டுக்கொண்டுவிட்டால் அவர் எளிதில் விடார்; ஓயாமல் பேசுவார். ஆனால் அவர் வார்த்தைகள் தெளிவாக இருக்கும். சொன்னதையே திரும்பத்திரும்ப அவர் சொல்வார். அவ்வாறு சொல்லாமல் இருக்கவும் அவரால் முடியாது. ஏனெனில், ஓரே கருத்தைப் பலமுறையிலும் பற்பல ஆதாரங்களை யொட்டியும் எடுத்துக்காட்டிச் சொல்லாவிட்டால் கிராமவாசிகளின் மனத்தில் அது பதியாதன்றோ? குறைகளைப் போக்கிக்கொள்ளவேண்டி அவர் சொல்லும் பரிகாரங்கள் மிகவும் இலகுவானவை. மகா கடூரமாகவும் அதிகிரமமாகவும்கூட சிலவேளைகளில் பேசினால்தான் கிராமவாசிகளின் மனத்தில் உண்மை ஊடுருவித் தைக்கும். கிராமவாசிகள் மிகவும் ரோஷமுள்ளவர்களாயினும் இளகிய நெஞ்சம் படைத்தவர்கள்; ஆதலின் அதிகப்பிரசங்கித்தனமாக நண்பர்கள் சில சமயங்களில் உரைப்பதையும் அவர்கள் பாராட்டமாட்டார்கள்.

இந்நூலில் காணப்படும் விஷயங்கள் எல்லாம் கிராமத்தாருடன் சம்பாஷித்த காலையிலும் பிரசங்க

சமயத்திலும் பன்முறை எடுத்துச் சொல்லப்பட்டன வாகும்.

கிராமவாசிகள் தமக்குத் தாமே சிந்தனை செய்து பார்க்கவேண்டும் என்பதே சாக்ரடீஸின் முக்கிய கருத்தாம். நாளுக்கு நாள் உலகமோ மாறிக்கொண்டே போகின்றது. புராதனமான பழக்க வழக்கங்கள் முன்னம் நன்மை பயந்திருக்கலாம், அல்லது தீமையற்று இருந்திருக்கலாம். இப்பொழுதோ அவை தீமைக்கும் நாசத்துக்கும் இடமாயுள. ஆதலின் நமது பழக்க வழக்கங்களை எல்லாம் நாம் நன்கு சோதித்துப் பார்க்கவேண்டும்; மேலும் நவீன நிலைமைக்கு ஏற்ப, அவை நமது சுகத்தையும் ஆரோக்கியத்தையும் உயர் வாழ்வையும் நல்ல மாசூலையும் விளைவிக்கின்றனவா என்று சீர்தூக்கிப் பார்த்தல் அவசியம். நன்மை பயக்கும் பழக்கவழக்கங்களைக் கைவிடவேண்டியதில்லை; யாது நேரினும் அவற்றை விடாது அனுஷ்டிக்கலாம். ஆனல் தீமையே பயக்கும் பழக்கவழக்கங்களையோ வேரைக் களைந்து வெந்நீர் வார்க்கவேண்டும். நமக்கு நன்மை தரக்கூடுமாயின் நவீன மார்க்கங்களையே நாம் கையாளவேண்டும். இங்ஙனம் சீர்திருத்தம் செய்ய வேண்டிச் சாக்ரடீஸ் உழைத்த உழைப்பு பலிதமாயின், அவருடைய முயற்சியெல்லாம் வீணாகவில்லை யென்னலாம். கிராமத்தாரும் அவர் கூறிய கடுமொழிகேட்டு வருந்த இடமிராது.

வெஸ்ட்வுட்,
ஜூன் 1928

**F. L. ப்ரெயின்.**

# பொருளடக்கம்


1. நான்கு காரியங்கள் .... 1
2. காய்ச்சல் (சுரம்) .... 11
3. ஜாதியும் தீட்டும் .... 18
4. நகைகளும் ஸ்திரீகளது உரிமையும் .... 25
5. தண்ணீரும் விறகும் எருவும் .... 43
6. கிராமத்தைச் சுத்தம் செய்தல் அதாவது தன்முயற்சி .... 54
7. செயலற்றதன்மை அல்லது 'தாமே ஆகின்றன' .... 62
8. கிராம நாய்கள் .... 65
9. உங்கள் ஸ்திரீகளைக் கௌரவப்படுத்துங்கள் 71
10. நல்ல வழக்கங்களும் உபாத்தியாயரின் உயர் நோக்கங்களும் .... 81
11. கிராமத் தலைவர் .... 92
12. பரிசுத்தப் போர் .... 99
13. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் .... 104
14. மனிதரின் மேன்மை .... 116
15. மனிதர்களும் மிருகங்களும் .... 123
16. மூன்று எஜமானர்கள் .... 128
17. பயிற்சி .... 137
18. முன்னேற்றமடையும் வழி .... 146
19. விவேகமுள்ள விவசாயம் .... 158
20. ஊழியமென்கிற அறிவு .... 165
21. வெள்ளியையும் பொன்னையும் கரியாக்கல் 171

22. வீண் .... 180
23. உபயோகமற்ற எருதுகள் .... 189
24. இரண்டு பொக்கிஷங்கள் .... 193
25. விதி, அல்லது தெய்வச்செயல் .... 197
26. சௌகரியமான கிராமங்கள் .... 203
27. பீ. ஏ., பீ. எல். .... 214
28. 'மக்களின் மக்கள்' .... 225
29. ஒரு விடுகதை .... 232
30. 'ஆமாம் ஐயா' என்பதும் 'உடன்கல்வி'யும் 235
31. போய்வருகிறேன் .... 252
32. முடிவு .... 258

# நான்கு காரியங்கள்

சாக்ரடீஸ் செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு கிராமத்துள் நுழைந்தார். அவ்விடத்தில் அநேக ஜனங்களிருந்



நாங்கள் மிராசுதாரர்களே

ததைக் கண்டு, அவர்களுக்கு நமஸ்காரம்சொல்லி,

அவர்களை, 'நீங்கள் யார்?' என்று கேட்டார். அவர்கள் 'நாங்கள் மிராசுதாரர்கள்' என்று பதில் சொன்னார்கள்.

சாக்ரடீஸ் தாம் நின்ற இடத்திலிருந்து அக்கம்பக்கத்தைச் சுற்றிப்பார்த்தார். அக்கிராமம் அந்த ஜில்லாவில் நீர்ப்பாய்ச்சலில்லாமல் அடிக்கடி நிலங்கள் கரம்பாய்க் கிடக்கும் ஒரு பாகத்திலிருந்ததினால், எங்கு பார்த்தாலும் தரித்திரத்தின் குறிகளும் அசுத்தமுமே அவர் கண்களுக்குக் காணப்பட்டன. ஆகையால் அவர் வழக்கம்போல் பின்வருமாறு கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் மிராசுதாரர்கள் என்கிறீர்களே; மிராசுதாரர் என்றால் நிலத்தினின்றும் லாபம் அடைகிறவர்தானே?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் நீங்கள் பணக்காரராய் இருக்கவேண்டும்.

**கிராமவாசிகள்:** ஒருகாலும் இல்லை. கிழவா! என்ன யோசனை இல்லாமல் பேசுகிறாய்? (இதுவரையில் அவர்கள் அக்கிழவன் அறிவில் முதிர்ந்த மகான் என்பதை அறிந்தவரில்லை.)

**சாக்ரடீஸ்:** அப்படியானால் சற்றுமுன் நீங்கள் மிராசுதாரர் என்று சொன்னது அவ்வளவு சரியான வார்த்தை இல்லை என்று ஏற்படுகிறது.

**கிராமவாசிகள்:** (சாக்ரடீஸ் மகான் என்பதை இப்பொழுது அறிந்துகொண்டவராய் வெட்கத்துடன்) சாக்ரடீஸவர்களே, மன்னியுங்கள். சற்று முன்கூட்டி யோசனை இன்றி நாங்கள் மிராசுதாரர்களென்று சொல்லிக்கொண்டது தப்பிதம்தான்.

இதுமுதல் சாக்ரடீஸ் கேட்கும் கேள்விகளுக்கு அவர்

கள் வெகு ஜாக்கிரதையாய் விடைகொடுக்க ஆரம்பித்தார்கள்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் நீங்கள் யார்? நண்பர்களே!

**கிராமவாசிகள்:** யாராயிருந்தாலென்ன? நாங்கள் மனிதர்கள்.

**சாக்ரடீஸ்:** அதற்கென்ன சந்தேகம்? நீங்கள் மனிதர்களாய்த் தான் இருக்கவேண்டும். அதிருக்கட்டும்; மனிதர்கள் மிருகங்களைவிட உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களல்லவா?

**கிராமவாசிகள்:** சந்தேகமின்றி உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சாக்ரடீஸ் அங்கு அழுக்குப்படிந்த அசுத்தமான சிறு பையனொருவன் ஒரு சுத்தமான சிறிய நாய்க்குட்டியுடன் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டார்.

**சாக்ரடீஸ்:** அந்தப் பையன் எவ்வளவு அசுத்தமாய் இருக்கிறான் பாருங்கள்.

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா, எங்கள் கிராமத்தில் சிறு பிள்ளைகள் குளிப்பது என்பது வெகு அருமைதான். நாங்கள் வெகு ஏழைகள். எங்கள் ஸ்திரீகள் சாணி தட்டுவது, நெல்குத்துவது, சமையல் செய்வது முதலிய வேலைகளிலேயே அநேகமாய் அமர்ந்திருக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் குழந்தைகளைக் குளிப்பாட்டுவதற்கு நேரம் கிடைப்பதே இல்லை.

**சாக்ரடீஸ்:** அந்நாய்க்குட்டியைப் பாருங்கள், அது எவ்வளவு சுத்தமாய் இருக்கிறது.

**கிராமவாசிகள்:** ஆம், அதன் தாய் அதை ஒரு தினத்தில் அநேகம் தடவை நாக்கினால் நக்கி வெகு சுத்தமாய்

ஆக்குகிறது.

**சாக்ரடீஸ் :** சற்றுநேரத்திற்குமுன் மனிதர்கள் மிருகங்களைவிட உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களென்று சொன்னீர்களல்லவா? அழுக்குப் படிந்த குழந்தை சுத்தமான நாய்க்குட்டியைவிட உயர்ந்த வகுப்பைச் சேர்ந்ததென்று சொல்லலாமோ?

**கிராமவாசிகள் :** சொல்லமுடியாது. ஐயா, எங்களை மன்னியுங்கள். சுத்தமாயிருக்கும் விஷயத்தில் நாங்கள் மிருகங்களைவிட உயர்ந்தவர்களென்று சொல்ல இடமில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

**சாக்ரடீஸ் :** எப்படியும், மனிதர்கள் படித்தவர்கள் ; மிருகங்களுக்குப் படிப்பென்பதே தெரியாது.

**கிராமவாசிகள் :** (அவசரமாய்) அது உண்மையே ஐயா. மனிதர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். அவர்களிடத்தில் அநேக புத்தகங்களும் இருக்கின்றன.

**சாக்ரடீஸ் :** உங்களுக்குப் படிக்கத் தெரியுமா?

**கிராமவாசி :** இல்லை, ஐயா. தெரியாது.

**சாக்ரடீஸ் :** (ஒருவரைச் சுட்டிக்காட்டி) நீங்கள்?

**இன்னொரு கிராமவாசி :** தெரியாது.

**சாக்ரடீஸ் :** (மற்றொருவரை நோக்கி) நீங்களோ?

**மூன்ருவது கிராமவாசி :** தெரியாது.

**சாக்ரடீஸ் :** ஆனால் சற்றுமுன் நீங்கள் மனிதர்களென்று சொன்னீர்களே?

**கிராமவாசிகள் :** மன்னியுங்கள், ஐயா, நாங்கள் மூட மிருகங்கள்தான்.

**சாக்ரடீஸ் :** பசுக்கள் தமது கன்றுகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுகின்றன. நீங்களோ உங்கள் குழந்தைகளை அசுத்தமாய் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் மிருகங்களென்றும் எப்படி சொல்

லிக் கொள்ளலாம்?

**கிராமவாசிகள்:** நாங்கள் என்னென்று சொல்லிக்கொள்ளுகிறது? நாங்கள் என்ன செய்கிறது?

**சாக்ரடீஸ்:** சரி. நீங்கள் மனிதர்களென்று சொல்லிக் கொள்ளவேண்டுமானல், முதல் முதல் உங்கள் கிராமத்தையும் குழந்தைகளையும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். உங்கள் கிராமத்தைச் சுத்தமாய் வைப்பதற்கு நீங்கள் ஊருக்கு வெளியே ஆறு அடி ஆழம் குழிகள் தோண்டி, ஊரிலுள்ள குப்பை, செத்தை, அசுத்தங்களெல்லாவற்றையும் அவைகளில் கொண்டு போடவேண்டும்; உங்கள் குழந்தைகளைத் தினம் தினம் குளிப்பாட்டவேண்டும்.

**கிராமவாசிகள்:** அப்படியே செய்கிறோம், உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

அதற்குப் பிறகு சாக்ரடீஸ் கிராமவாசிகளுடன் பேசிக்கொண்டே சிறிது தூரம் நடந்துசென்றார். இதற்குள் அவர்கள் சற்றுமுன் தெரிந்துகொண்ட விஷயங்களை மறந்துவிட்டார்கள். அந்தச் சமயம் வழியில் ஒரு வண்டு சாணியுருண்டை ஒன்றைத் தன் வளைக்கு உருட்டிக்கொண்டு செல்வதைக் கண்டார்கள். அப்பொழுது கிராமவாசிகளில் ஒருவர் முன்பின் யோசனையின்றி 'அதோ அந்தச் சாணிவண்டைப் பாருங்கள் ஐயா; என்ன அசங்கியமான பிராணி! இவ்விதமான தாழ்ந்த ஜந்துவைக் கடவுள் ஏன் படைத்தாரோ தெரியவில்லை' என்றார்.

**சாக்ரடீஸ்:** கடவுளின் செய்கைகள் வெகு ஆச்சரியமானவைதான். இந்த வண்டு சாணியை உருண்டையாகச் செய்து தன் வளைக்குத் தள்ளிக்கொண்டுபோகிறது. அது வசிக்கும் இடம் வெளிச்சமும் காற்றுமில்

லாத ஒரு இருண்ட துவாரம் அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா. என்ன அசங்கியமான ஐந்து?

**சாக்ரடீஸ்:** உங்கள் மனைவிகளும் பெண்குழந்தைகளும் சாணம் தட்டுகிறார்களன்றோ? அவர்கள் சாணம் தட்டப்போகும்பொழுது அவர்களுடைய குழந்தைகளும் கூடச்சென்று அவ்விடத்தில் சாணத்தோடும், வரட்டிகளோடும் விளையாடுகின்றனவன்றோ?

**கிராமவாசிகள்:** வரட்டி எங்களுக்குப் பால் காய்ச்சுவதற்கும், அடுப்பு மூட்டுவதற்கும் அவசியமாக வேண்டியிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** அஃதல்ல நான் கேட்டது. அதன் அவசியத்தைப்பற்றி இன்னொரு சமயம் சொல்லுகிறேன். இப்பொழுது நான் கேட்பது உங்கள் மனைவிகளும் பெண்களும் தானே இந்த வரட்டிகளைத் தட்டுகிறார்கள் என்பதுதான்.

**கிராமவாசிகள்:** (சந்தேகத்தோடு) ஆம், ஐயா. அவர்கள் தாம் தட்டுகிறார்கள்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் வசிக்கும் மண்சுவர் வீடுகளில் ஜன்னல்கள் இருக்கின்றனவோ?

**கிராமவாசிகள்:** எங்களுக்குத் திருடர் பயம் அதிகம் ஐயா!

**சாக்ரடீஸ்:** நான் கேட்டது அது அன்று. உங்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் ஜன்னல்களிருந்தாலும் நீங்கள் இப்பொழுது இருப்பதைப்போலவே இருப்பீர்களல்லது மாறிவிடமாட்டீர்கள்; திருடர்களும் மலிந்துவிடமாட்டார்கள். அதைப்பற்றியும், ஏன் திருடர்கள் உங்கள் வீடுகளுக்கு வருகிறார்களென்பதைப் பற்றியும் சொல்லவேண்டியவை அநேகமிருக்கின்றன. ஆனால் நானிப்பொழுது கேட்பது உங்கள் வீடுகளுக்கு

ஜன்னல் களிருக்கின்றனவோ என்பதுதான்.

**கிராமவாசிகள் :** ஜன்னல்கள் இல்லை, ஐயா.

**சாக்ரடீஸ் :** அப்பொழுது உங்கள் வீடுகள் இருட்டாகத் தான் இருக்கவேண்டும்?

**கிராமவாசிகள் :** ஆம், ஐயா.

**சாக்ரடீஸ் :** ஆகவே, நீங்களும் சாணம் தட்டுகிறீர்கள்; காற்றும் வெளிச்சமுமில்லாத வீடுகளில் வசிக்கின்றீர்கள். எந்த விஷயத்தில் நீங்கள் சாணி வண்டுகளைவிட மேம்பட்டவர்கள்?

**கிராமவாசிகள் :** எந்த விஷயத்திலும் இல்லையென்றுதான் ஏற்படுகிறது.

**சாக்ரடீஸ் :** ஆகையால், உங்களை மனிதர்களென்று சொல்லவேண்டுமானல், கிராமத்தையும், குழந்தைகளையும் நீங்கள் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டியதுடன், சாணம் தட்டுவதையும் விட்டு, உங்கள் வீடுகளுக்கு ஜன்னல்களும் வைக்கவேண்டும்.

**கிராமவாசிகள் :** ஆம், ஐயா! நீங்கள் சொல்வது நியாயமென்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

அந்தச் சமயத்தில் அவர்கள் செல்லும் வழியில் பெட்டை நாயொன்று ஆறு குட்டிகளுடன் இருப்பதைக் கண்டார்கள். அவைகளில் மூன்று ஆண் குட்டிகள், மூன்று பெண் குட்டிகள்; அவைகளெல்லாவற்றையும் தாய் நாய் நாக்கினல் நக்கிச் சுத்தம்செய்து கொண்டே அவைகளுக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தது.

கிராமவாசிகளில் ஒருவன் அந்நாயின்மீது ஒரு கழியை எறிந்து அதை அதட்டி வழியிலிருந்து துரத்தினர்.

**சாக்ரடீஸ் :** தயவுசெய்து அம்மாதிரி செய்யாதேயுங்கள்.

சில விஷயங்களில் அந்நாய் மனிதர்களைவிட மேலானதாய்க் காணப்படுகிறது.

இதைக்கேட்ட கிராமவாசிகள் சற்று மனம் நொந்தார்கள்; ஆயினும் ஞானியாருடைய வாய்க்குப்பயந்து ஒன்றும் சொல்லாமலிருந்தார்கள்.

பிறகு சற்றுநேரத்தில் கிராம பாடசாலை பக்கமாக அவர்கள் செல்ல, அப்பள்ளிக்கூடத்தில் சுமார் முப்பது ஆண்பிள்ளைகள் மாத்திரம் படித்துக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். இதைப் பார்த்த சாக்ரடீஸ் சற்றுத் திகைத்து நின்று, பிறகு 'இக்கிராமத்தில் பெண்பிள்ளைகளே இல்லையோ?' என்றார்.

**கிராமவாசிகள் :** ஆண்பிள்ளைகளெவ்வளவோ அவ்வளவு பெண்பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் ஏன் இப்பள்ளிக்கூடத்தில் முப்பது பெண்பிள்ளைகள் படிக்கவில்லை?

**கிராமவாசிகள் :** (நகைத்துக்கொண்டு) இல்லைதான். பெண்பிள்ளைகள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வதில்லை. படிப்பு ஆண்பிள்ளைகளுக்குத்தான் தேவை.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் நீங்கள் உங்கள் ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் சமமாய் நடத்துவதில்லையோ?

**கிராமவாசிகள் :** நடத்துவதில்லை. பெண்பிள்ளைகள் யாருக்குவேண்டும்? ஆண்பிள்ளைகள்தான் முக்கியம்.

**சாக்ரடீஸ் :** ஆனால் அவர்கள் ஒரே பெற்றோர்கள் வயிற்றில்தானே பிறக்கிறார்கள்?

**கிராமவாசிகள் :** ஆம்.

**சாக்ரடீஸ் :** அவர்கள்தாமே உங்கள் பேரப்பிள்ளைகளுக்குத் தாய் ஆகப்போகிறவர்கள்?

**கிராமவாசிகள் :** அதற்கென்ன சந்தேகம்?

**சாக்ரடீஸ்:** உங்கள் தாயார்கள்கூட ஒருகாலத்தில் சிறு பெண்களாய் இருந்தார்களன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** வீட்டு விஷயங்களில் பொறுப்புள்ளவர்கள் யார்? ஸ்திரீகள்தானே?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** ஆகையினுலே எவ்வளவுக்கு ஒரு ஸ்திரீ புத்தி சாலியாயும் கெட்டிக்காரியாயும் இருக்கிருளோ, அவ்வளவுக்கு அவளது வீடும் சீரடையும்; அவளது புருஷனுக்கும் குழந்தைகளுக்கும் சந்தோஷமும் சௌக்கியமும் உண்டாகும், அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல், பெண்கள் அவர்களது வீடுகளின் ஒழுங்குக்கும், அவர்களது கணவர்களுடைய சுகத்திற்கும், அவர்களது குழந்தைகளின் நன்மைக்கும் முக்கிய காரணமாய் இருக்கின்ருர்கள். ஆகையினுல் நீங்கள் உங்கள் பெண்பிள்ளைகளை ஆண்பிள்ளைகளைவிட அதிக கவலையுடனும், அன்புடனும் வளர்க்க வேண்டியது அவசியமென்று ஏற்படுகிறது.

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா. இந்த விஷயத்தில்கூட நீங்கள் சொல்வது சரி, நாங்களிதுவரையில் நினைத்திருந்தது தவறு என்று நாங்களே ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, இப்பொழுது நீங்கள் கேவலமாய் நினைத்த அந்த நாய், தன் ஆண்குட்டிகளையும் பெண் குட்டிகளையும் ஒரேவிதமாய்ப் பார்ப்பதினுலே உங்களைவிட புத்தியில் மேலானது என்றுதெரிகிறதல்லவா?

**கிராமவாசிகள்:** நாங்களென்னவென்று சொல்லுகிறது?

ஐயா! எங்கள் வழிகளெல்லாம் தப்பிதமென்றுதான் ஏற்படுகின்றன.

**சாக்ரடீஸ் :** ஆகையினாலே, நீங்கள் மனித வகுப்பைச்



உன் குப்பைகளை ஆழமான குழியில் போடு

சேர்ந்தவர்களாக நினைக்கப்படவேண்டுமானால், நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் நான்கு உண்டு; மூன்றல்ல. அவைகள் :—

(1) குப்பைகளைப் பெருக்கி ஆழமான குழிகளில் போட்டுக் கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்; குழந்தைகளைக் குளிப்பாட்டி அழுக்கில்லாமல் வைத்திருக்கவேண்டும்.

(2) சாணி தட்டுவதை நிறுத்தவேண்டும்.

(3) உங்கள் வீடுகளுக்கு ஜன்னல்கள் வைக்க வேண்டும்.

(4) உங்கள் பெண்குழந்தைகளையும் ஆண்பிள்ளைகளைப்போல் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டும்.

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா. இவையெல்லாம் செய்யும் வரையில் நாங்கள் மனித வகுப்பைச் சேர்ந்தவர்களென்று சொல்லிக்கொள்ள நியாயமில்லைதான்.

**சாக்ரடீஸ்:** நல்லது, நான் வீட்டுக்குப் போகவேண்டும்; நாழிகையாய்விட்டது. நான் இந்தக் கிராமத்திற்கு வந்தது எனக்கு மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது. இனிமேல் ஒழிந்த வேளைகளில் பொழுது போக்குக்காக இவ்விடம் உங்களுடன் பேச வரலாமோ?

**கிராமவாசிகள்:** கட்டாயம் வாருங்கள், ஐயா. மறுபடியும் இங்கு நீங்கள் வரும்பொழுது மனிதவகுப்பைச் சேர்ந்தவர்களைக் காண்பீர்களென்று நம்புகிறோம்.

**சாக்ரடீஸ்:** நானும் அப்படித்தான் நினைக்கிறேன், நமஸ்காரம்.

**கிராமவாசிகள்:** நமஸ்காரம்! ஐயா!

## காய்ச்சல் (சுரம்)

சாக்ரடீஸ் அடுத்த முறை அக் கிராமத்திற்கு வந்தபொழுது, கிராமத்தில் பலர் சுரத்துடன் படுத்திருப்பதைக் கண்டார்.

'இது நிரம்ப பயங்கரமாயிருக்கிறது. இச்சுரத்தை

மருந்தால் குணப்படுத்துவதாவது அதை வராமல் தடுப்பதாவது முடியாத காரியம்போல் தோன்றுகிறது. இல்லையானால் உங்களைப்போன்ற புத்திமான்கள் இவ்வளவுபேர் சுரத்தில் படுத்துக்கிடக்கமாட்டார்கள்' என்று அவர் சொன்னார்.

இதைக் கேட்டிருந்தவர்களில் ஒருவன் படைச் சேவகனாயிருந்து ஊர் வந்திருப்பவன். அவன் 'ஐயா! நான்சேனையில்இருந்தபொழுதுஒருநாளும்சுரத்துடன் படுத்ததில்லை. அச்சேனையதிகாரிகள் நீர் தேங்கியிருக்கும் குழிகளிலும் குட்டைகளிலும் வாரத்துக்கொரு முறை கொஞ்சம் (கெருசின்) மண் எண்ணெய் ஊற்றுவார்கள்; எங்களை வாரத்திற்கு இருமுறை குவைனு (*Quinine*) சாப்பிடச் செய்வார்கள்; இரவில் எப்பொழுதும் கொசுவலைக்குள் தூங்கச் செய்வார்கள். நாங்கள் கொசுவலையை உபயோகப்படுத்த மறந்தோமானால் எங்களுக்குத் தண்டனைதான்' என்றான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் உங்களில் இவ்வளவுபேர் ஏன் சுரத்தினால் தொந்தரவு படுகிறீர்கள்? இப்படைச் சேவகன் இப்பொழுது சொன்னவாறு செய்து முன் ஜாக்கிரதையுடன் நீங்களெல்லோரும் இருந்து வருகிறீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** இவர் இவைகளை எல்லாம் இதுவரையில் எங்களுக்குச் சொன்னதேயில்லை. மேலும் இவர் சொல்லும் விஷயங்களில் எங்களுக்கு நம்பிக்கையுமில்லை. ஏனென்றால் அவை உண்மையானால் இவரேன் இவர் வீட்டில் அவ்வாறு செய்துவரவில்லை?

**சாக்ரடீஸ்:** என்ன, சிப்பாய்! இவர்கள் சொல்வதெல்லாம் பொய்தானே? புத்திமானாகிய நீர் உம்முடைய

வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் கொசுவலை வைத்திருப்பீர் என்பதில் என்ன சந்தேகம்! அப்படியே, அவர்களுக்குக் குவைனுவும் கொடுத்துத்தான் வருவீர்; நீர் தேங்கும் குழிகளிலும் குட்டைகளிலும் மண் எண்ணெய் ஊற்றித் தான் வருவீர் அல்லவா ?

**சிப்பாய்:** நான் படையினின்றும் வரும்பொழுது அநேக கொசுவலைகள் கொண்டுவந்தேன். ஆனால் அவைகளை ஒருவரும் உபயோகப்படுத்தாததால் என் மனைவி அவைகளைக் கத்தரித்து உட்சட்டைகளாய்த் தைத்து விட்டாள்.

**சாக்ரடீஸ்:** என்ன ஐயா! நீர் சொல்லியும் அவர்கள் கொசுவலையை உபயோகப்படுத்தத் தவறினார்கள் என்று சொல்லுகிறீர்? நீர் அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கொசுவலையை உபயோகப்படுத்த வேணுமென்று சொல்லி, நீரும் அதை உபயோகப்படுத்தி, அவர்களையும் அவைகளை உபயோகப்படுத்தும்படி கட்டாயப்படுத்தியிருக்கவேண்டும்.

**சிப்பாய்:** நானும் என் வலையை ஒருபொழுதும் உபயோகப்படுத்தவில்லை; அவர்களும் அவர்களது வலைகளை உபயோகப்படுத்தவில்லை.

**சாக்ரடீஸ்:** ஒழுங்கு நாட்டுதலில் வெகு கண்டிப்பாளி என்று உமக்குச் சைனியத்திலிருந்த கீர்த்தி வீட்டில் செல்லவில்லைபோலும்!

**சிப்பாய்:** அப்படித்தான் ஆச்சுது.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் சைனிய அதிகாரிகள் உமக்குச் சுரம் வராமல் தடுப்பது எப்படி என்று போதிக்கச் செலவழித்த காலமெல்லாம் வீண் என்றுதான் நினைக்க வேண்டும். கிராமவாசிகளே! அப்படியானால் நீங்கள் குவைனு என்பதைப்பற்றி ஒருநாளும் கேட்டதில்லையோ?

**கிராமவாசிகள் :** ஆம், ஐயா, கேட்டிருக்கிறோம். உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் அதைப்பற்றிச் சொல்லி வருகிறார். இவ்வூர் பெரிய மிராசுதாரும் சில குவைனா மாத்திரைகளை எங்களுக்குக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார். அம்மாத்திரைகளும் வெகு உபயோகமாயிருந்தன.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் நீங்கள் ஏன் அம்மாத்திரைகளைத் தினம்தினம் சாப்பிட்டுச் சுரத்தை ஒழித்துக் கொள்ளக்கூடாது?

**கிராமவாசிகள் :** கொடுத்த மாத்திரைகள் எல்லாம் ஆய் விட்டன, ஐயா.

**சாக்ரடீஸ் :** குவைனா மிகவும் உபயோகமுள்ள பொருள் அல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம், மிக்க உபயோகமுள்ளது தான்.

**சாக்ரடீஸ் :** அது நம் ஊரிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒருகடையில் விற்கிறதென்று நினைக்கிறேன், அல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம்.

**சாக்ரடீஸ் :** ஒருநாள் சுரமென்றால், குறைந்தது ஒரு ரூபாய் உங்கட்கு நஷ்டமல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம்; நஷ்டம் ஒரு ரூபாய்க்குக் குறைவில்லை. இது அறுவடை காலமல்லவா?

**சாக்ரடீஸ் :** குவைனாவின் விலை வெகு அதிகமோ?

**கிராமவாசிகள் :** இல்லை, இல்லை. எட்டு ரூபாய்க்கு ஐந்நூறு மாத்திரைகள்.

**சாக்ரடீஸ்:** சமையலுக்கு உப்பு, கடுகு, மிளகு முதலியவை வாங்குவதற்கு நீங்கள் கடைக்கு அடிக்கடி போகிறீர்களல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம், ஐயா.

**சாக்ரடீஸ்:** இச்சுரகாலத்தில் கடுகுமிளகைவிட குவைனு அதிக அவசியமான பொருளென்று தோன்றவில்லையா உங்களுக்கு?

**கிராமவாசிகள் :** அதற்கென்ன சந்தேகம்.

**சாக்ரடீஸ் :** உங்களுக்கு வேண்டிய கடுகு மிளகு சாமான் களை உங்களூர் பெரிய மிராசுதாரர் இனமாக வாங்கிக் கொடுக்கட்டும் என்று நீங்கள் காத்திருக்கிறீர்களா?

**கிராமவாசிகள் :** ஒருகாலும் இல்லை. நாங்கள் அவ்வளவு கதியற்ற ஏழைகளல்ல.

**சாக்ரடீஸ் :** ஆனல், குவைனு மாத்திரம் இனமாக வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள் போலும்!

**கிராமவாசிகள் :** சர்க்காரார் அதை இனமாக எல்லாருக் கும் தருகிருர்கள்.

**சாக்ரடீஸ் :** முதல் முதலில் சர்க்காரார் கொஞ்சம் மாத் திரைகளை அவைகளுடைய உபயோகம் உங்களுக்குத் தெரியும்படி இனமாகக் கொடுத்திருக்கலாம். அதனல் நீங்கள் இந்த விதைக்குங் காலத்தையும் அறுவடை காலத்தையும் வீணக்கலாகுமோ? ஒருவேளை உங்களில் அநேகர் சுரத்தால் இறக்கக்கூடுமன்ருே? இவ்வாறு செய்துகொள்வது புத்தியுள்ளவர்கள் செய்யும் காரிய மாகுமா? கொஞ்சம் பணம் செலவழித்தீர்களானல் உங்களெல்லாருக்கும் வேண்டிய குவைனுவை நீங்கள் வாங்கிக்கொள்ளக்கூடாதா? நீங்களே சிறிது யோசனை செய்து பாருங்கள்.

**கிராமவாசிகள் :** ஆம், ஐயா. நீங்கள் சொல்வது முற்றும் சரி. அது எங்களுடைய புத்தியில்லாத்தனந்தான். நாங் கள் இப்பொழுதே போய் எங்களுக்கு ஒரு வருஷத் துக்குச் சுரத்தைத் தடுக்கவேண்டிய குவைனுவை

வாங்கி வருகிறோம்.

**சாக்ரடீஸ்:** அது சரி. கொசுவலைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

**கிராமவாசிகள்:** ஐயா, நாங்கள் ஏழைகள். அவ்வித போகத்தை அனுபவிக்க எங்களாலெப்படி முடியும்?

**சாக்ரடீஸ்:** உங்களில் வயதான ஆண்பிள்ளைகள்கூட கடுக்கன் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; உங்கள் குழந்தைகளின் கைகளிலும் கால்களிலும் காப்புகள் போட்டிருக்கிறீர்கள். இவைகளெல்லாம் சுரம் வராமல் தடுக்குமோ?



கடுக்கன்கள் சுரம் வராமல் தடுக்காது

**கிராமவாசிகள்:** தடுக்காது என்பது உண்மையே.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் இந்நகைகளுக்குப் பதிலாய்க

கொசுவலைகள் வாங்குவது புத்தியுள்ள காரியமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா. அப்படிச் செய்வது புத்தியுள்ள காரியம்தான்.

**சாக்ரடீஸ்:** உங்களுடைய குழந்தைகளிடத்தில் உங்களுக்குப் பக்ஷமுண்டு அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அதற்கென்ன சந்தேகம்?

**சாக்ரடீஸ்:** நகைபோட்ட நோயாளிக் குழந்தைகளைவிட நகையில்லாவிடினும் தேக சௌக்கியத்தோடு கூடிய குழந்தைகள் இருந்தால் நல்லது என்று நீங்கள் நினைப்பீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் ஒரு கொசுவலையும், சில குனைன் மாத்திரைகளும், காதிலணியும் கடுக்கன், கையிலணியும் காப்பு இவற்றினும் அதிக உபயோகமுள்ளவைகளாயிருக்குமன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், உபயோகமுள்ளவைகளாய்த் தான் இருக்கும்.

**சாக்ரடீஸ்:** அம்மாதிரியே நீங்கள் செய்வீர்களென்று நம்புகிறேன். ஒரு கிராம முழுதும் இம்மாதிரி சுரத்துடன் படுத்திருப்பதையும், குழந்தைகள் நோய்கொண்டு பலவீனர்களாய் இருப்பதையும் பார்க்க எவ்வளவு வருத்தமாயிருக்கிறது! உங்களிடத்தில் கொஞ்சம் சாக்கிரதையும் முன்யோசனையும் இருந்தால் இப்படி இருக்காதல்லவா?

**கிராமவாசிகள்:** எங்களாலானதைச் செய்கிறோம், ஐயா! பெரியவரே!

**சாக்ரடீஸ்:** நண்பர்களே வந்தனம். நான் போய் வருகிறேன்.

**கிராமவாசிகள்:** வந்தனம் ஐயா, போய்வாருங்கள்.

# ஜாதியும் தீட்டும்

சாக்ரடீஸ் வழக்கம்போல் கிராமத்துப் பெரியோர்களின் மத்தியில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவ்விடத்திற்குச் சக்கிலிஜாதியைச் சேர்ந்தவன் ஒருவன் வந்தான். அவனை 'எட்ட உட்கார்' என்று அங்கிருந்த கிராமவாசிகள் அதட்டிச் சொன்னார்கள்.

**சாக்ரடீஸ்:** அவனை அவ்விதம் சொல்லுகிறீர்களே, அவன் என்ன குற்றம் செய்தான்?

**கிராமவாசிகள்:** அவன் (தீண்டாதவன்) சக்கிலிஜாதியைச் சேர்ந்தவன், ஐயா.

**சாக்ரடீஸ்:** சக்கிலி ஏன் தூரமாய் உட்காரவேண்டும்?

**கிராமவாசிகள்:** அவன் கீழ்ஜாதியான், தீண்டாதவன்.

**சாக்ரடீஸ்:** அவன் உங்களைத் தொட்டால் நீங்கள் அசுத்தமாய் விடுவீர்களோ?

**கிராமவாசிகள்:** ஆம், அதற்கென்ன சந்தேகம்.

**சாக்ரடீஸ்:** நீங்களெல்லோரும் இந்தக் கிராமத்திலேயே பிறந்தவர்களில்லையா?

**கிராமவாசிகள்:** அதை ஏன் கேட்கிறீர்?

**சாக்ரடீஸ்:** நான் எதற்காகக் கேட்கிறேன் என்பதைப் பற்றி நீங்கள் கவனிக்கவேண்டாம். நான் கிழவனல்லவா? என் புத்தி இப்படித்தான் ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்திற்கு மாறிக்கொண்டே இருக்கும்.

**கிராமவாசிகள்:** ஆம், நாங்களெல்லோரும் இவ்வூரில்தான் பிறந்தோம்.

**சாக்ரடீஸ்:** ஒரு பிரஸவம் ஏற்பட்டால் உடனே அவ்விஷயம் தெரிந்த ஒரு பெண்பிள்ளையை வரவழைக்கிறீர்களல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம்; இவ்வூரில் ஒரு மருத்துவச்சி இருக்கிறாள்.

**சாக்ரடீஸ் :** அவளொரு மிராசுதாருடைய மனைவியோ?

**கிராமவாசிகள் :** ஒருகாலும் இல்லை. மருத்துவத்தொழில் எங்கள் பெண்பிள்ளைகள் செய்யத்தகுந்ததில்லை.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் அம் மருத்துவச்சி யார்?

**கிராமவாசிகள் :** அவள் அம்பட்டச்சி.

**சாக்ரடீஸ் :** இம்மருத்துவச்சி பிரசவகாலத்தில் உங்களுடைய மனைவியர்களைத் தொடுகிறாள் அல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம், தொடுகிறாள்.

**சாக்ரடீஸ் :** குழந்தை பிறந்ததும் அதை முதல் முதல் தொட்டு அதற்கு வேண்டியவைகளை யெல்லாம் செய்வது அவள் தானே? அவளுடைய கைவிரல் தானே முதல் முதல் அக்குழந்தையின் வாய்க்குள் செல்வது?

**கிராமவாசிகள் :** அப்படித்தான்.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் உங்கள் மனைவியர், தாய்மார், நீங்கள் எல்லோருமே பிறந்தது முதல் அசுத்தமடைந்தவர்களே. உங்களுடைய ஜாதி எங்கே போச்சுது? கிராமவாசிகளே!

இதைக் கேட்ட கிராமவாசிகளில் சிலருக்கு மிக்க கோபம் வந்தது. ஆனால் அவர்களுள் புத்திமான்களாகிய சிலர், தமது கொள்கைக்கும் நடவடிக்கைக்கும் உள்ள மூடத்தனமான வித்தியாசத்தை ஒப்புக்கொண்டார்கள்; வெட்கத்தினால் தலைகுனிந்தார்கள்.

**சாக்ரடீஸ் :** உங்கள் கையில் ஒரு முள் பொத்து வீங்கிப்போனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

**கிராமவாசிகள் :** வேறு விதத்தில் குணமாகாவிட்டால்

ஒரு வைத்தியரண்டை போகிறோம்.

**சாக்ரடீஸ்:** அந்த வைத்தியர் உங்களுடைய ஸ்திரீ களுக்கு மருத்துவம் பார்ப்பவளுடைய புருஷன் தானே?

**கிராமவாசிகள்:** ஒருகாலும் இல்லை. என்ன, சாக்ர டீஸ்! நீங்கள்கூட இம்மாதிரி பேசுகிறீர்கள்? எங்கள் உயர்ந்த ஜாதியார். காலேஜில் (உயர்தரக் கலாசா சாலையில்) படித்துப் பரீக்ஷையில் தேர்ந்தவர்.

**சாக்ரடீஸ்:** உங்களுடைய பசு ஈனுங் காலத்தில் யாரைக் கூப்பிடுகிறீர்கள்?

**கிராமவாசிகள்:** அவ்விஷயத்தைப்பற்றி நன்கு அறிந்த ஒரு குடியானவனை அல்லது மிராசுதாரைக் கூப் பிடுவோம்.

**சாக்ரடீஸ்:** பிள்ளை பெறுவது ஸ்திரிகளுக்கு ஒரு கஷ்ட மான காரியமன்றோ? அதனால் அவர்களுக்கு ஒரு வேளை அபாயமுண்டானாலும் உண்டாகும் அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** உங்களுடைய மனைவியரிடத்தில் உங் களுக்கு ஆசை இல்லையா? அவர்களும் அவர்களது குழந்தைகளும் பிழைத்திருக்கிறார்களா இறந்தார் களா என்பதில் உங்களுக்குக் கவலை இல்லையோ?

**கிராமவாசிகள்:** எவ்வளவோ செலவு செய்து நாங்கள் கலியாணம் செய்துகொள்ளுகிறோம். எங்களுக்குக் குழந்தைகள் வேணுமென்கிற விருப்பம் மிகுதியும் உண்டு; அக்குழந்தைகளின்மேல் எங்களுக்கு ஆசை யும் அதிகமே. அப்படி இருக்க, எங்களது மனைவி களும் குழந்தைகளும் மடிவதை நாங்கள் எப்படி விரும்புவோம்? ஒருநாளும் விரும்பமாட்டோம்.

**சாக்ரடீஸ்:** சரி; உங்கள் கையில் காயம் பட்டால் ஒரு வைத்தியரிடத்திற்குச் செல்லுகிறீர்கள்; உங்கள் பசு கன்று போடுவதாயிருந்தால், அவ்விஷயத்தைப்பற்றி நன்கு அறிந்த ஒரு குடியானவனையோ அல்லது மிராசுதாரரையோ அழைத்து வருறீர்கள். ஆனால் உங்கள் மனைவிகள் பிரசவிக்கிறதாய் இருந்தால் கிராமத்தில் தாழ்ந்த ஜாதியாளும் அசுத்தமானவளுமாகிய ஒருத்தியை வரவழைக்கிறீர்கள், அல்லவா?

**கிராமவாசிகள்:** ஐயா, மன்னியுங்கள். அப்படிச்செய்வது எங்கள் அறியாத்தனம்தான்.

**சாக்ரடீஸ்:** உங்கள் ஸ்திரீகளில் சிலரைச் சென்னையிலுள்ள வைத்திய வித்தியாசாலைக்கு அனுப்பி, அவர்களை மருத்துவ வேலையில் பழக்கினால் நல்லதல்லவா? அப்படிச் செய்தீர்களானால் உங்கள் மனைவிமார்கள் பிரசவிக்குங்காலத்தில் மருத்துவ விஷயந்தெரியாத ஈனஜாதியைச் சேர்ந்தவளை அழைக்கவேண்டிவராது; உயர்ந்த குலத்தில் பிறந்து மருத்துவத்தில் தேர்ந்த சுத்தமான மருத்துவச்சிகள் கிடைப்பார்கள் அல்லவா?

**கிராமவாசிகள்:** உடனே அப்படியே செய்கிறோம், ஐயா! நாங்கள் இதுவரையிலும் எங்களது ஸ்திரீகள் நலத்தை கவனியாமல் குரூரமாயிருந்ததை நினைக்க எங்களுக்கே நிரம்ப வெட்கமாயிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** அதிருக்கட்டும். தீட்டு என்கிறீர்களே அதைப்பற்றி நான் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். அசுத்தமும் அழுக்கும் தீண்டத் தகாதவையல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** கிராமத்தில் உண்டாகும் அசுத்தங்களையும் குப்பைகளையும் என்ன செய்கிறீர்கள்?



வீதி பெருக்குகிறவர்கள் குப்பைகளை கிராமத்தைச் சுற்றி கும்பல் கும்பலாகக் கொட்டுகிறார்கள்.

**கிராமவாசிகள்:** வீதி பெருக்குகிறவர்கள் அவைகளைக் கொண்டுபோய்க் கிராமத்தைச்சுற்றிக் கும்பல் கும்பலாகக் கொட்டுவார்கள்.

**சாக்ரடீஸ்:** சில சமயங்களில் கிராமத்தின் நடுவிலும் கொட்டுவார்களோ?

**கிராமவாசிகள்:** ஆம், இவர்கள் சோம்பேறிகளாகையால் அவைகளைக் கொண்டுபோய் தூரத்தில் கொட்டுகிறதில்லை.

**சாக்ரடீஸ்:** உங்களூர் ஜனங்கள் காலைவேளையில் மல ஜலம் கழிப்பதற்கு எங்குப் போகிறார்கள்?

**கிராமவாசிகள்:** சமீபத்திலிருக்கிற வயல்களுக்குப்போகிறார்கள்.

**சாக்ரடீஸ்:** சில சமயங்களில் கிராமத்திற்கு உள்ளேயும் அதைச்சுற்றியும் ரஸ்தாக்களிலும்கூட போகிறதில்லையா?

**கிராமவாசிகள்:** ஆம், நீங்கள் சொல்வது உண்மையே. வெளியே எட்டப்போகாது சோம்பேறித்தனத்தால் அப்படிச் செய்கிறார்கள்,

**சாக்ரடீஸ்:** இந்த ஆபாசங்களெல்லாம் வெயிலில் உலர்ந்துபோகிறதல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** காற்றடித்தால் இவைகளினின்று தூசிகள் மேலெழும்பிப் பறக்குமன்றோ!

**கிராமவாசிகள்:** உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** மாடுகள் காலைவேளையில் வெளியில்போகும் பொழுதும் சாயங்காலத்தில் திரும்பி வரும்பொழுதும் அவைகளின் காலடிகளால் தூசிகள் மேலெழும்பி ஆகாய முழுதும் நிறைகின்றனவன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** மழைபெய்தால் மழைநீர் இவ்வசுத்தங்களையும் ஆபாசங்களையும் அடித்துக்கொண்டுபோய் மாடுகள் குடிக்கும் குட்டைகளிலும், மனிதர்கள் குளிக்கவும் சில சமயங்களில் குடி தண்ணீர் எடுக்கவும் உபயோகப்படும் குளங்களிலும் சேர்க்கின்றது அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆமாம்.

**சாக்ரடீஸ்:** இப்படி அசுத்தங் கலந்த மழைத் தண்ணீர் கிணறுகளுக்குச் சமீபத்திலுள்ள குழிகளிற்போய் விழுந்து தேங்குவதால் அக்கிணறுகளின் நீறும் அசுத்தமாகிறது அல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படியும் ஆகிறது.

**சாக்ரடீஸ்:** இவ்வாபாச தூசிகள் சிலவேளைகளில் உங்கள் கால்செருப்புகளில் ஒட்டிக்கொண்டு உங்களுடன் வீட்டிற்கு வரும் அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், சில சமயங்களில் அப்படியும் நேரிடலாம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் பெண்டிர் மாவு அரைக்கும் பொழுது அம் மாவில் இத்தூசிகள் விழுந்து கலக்கக் கூடுமன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் மனைவியர் சமையல் செய்யும் பொழுது சமையல் செய்யப்படும் பண்டங்களிலும் அத்தூசிகள் விழலாமல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அத்தூசிகள் கிணற்றினின்று கொண்டு வரப்படும் தண்ணீரிலும் விழலாம்?

**கிராமவாசிகள்:** விழக்கூடும்.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் நீங்கள் எப்பொழுதும் இக் கிராம ஆபாசதூசிகளில் சிலவற்றை உட்கொண்டே வருகிறீர்களென்று ஏற்படுகிறது?

**கிராமவாசிகள்:** அப்படித்தான் ஏற்படுகிறது.

**சாக்ரடீஸ்:** அவைகள் நீங்கள் குடிக்கும் தண்ணீரிலும் கலந்திருக்கின்றன.

**கிராமவாசிகள்:** அப்படித்தானிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** சுவாசம் உள்ளிழுக்கும்பொழுதுகூட இவ் வாபாச தூசிகளில் சிலவற்றை நீங்கள் உட்கொள்ளு கிறீர்கள்?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் நீங்கள் உங்களது வாழ் நாளில் ஒவ்வொரு தினமும் உட்கொள்ளும் ஆகாரத் தினுேடும், குடிக்கும் தண்ணீரோடும், சுவாசிக்கும் வாயுவினுேடும் அசுத்தத்தை உட்கொண்டபடியே இருக்கிறீர்களென்று ஏற்படுகிறது. அப்படி இருக்க, தீண்டாதவர்களைப்பற்றி ஏன் அவ்வளவு ஆர்ப்பரவம் செய்கிறீர்கள்? இனி, உங்களது ஜாதி மேன்மை யைப்பற்றியும் தீண்டாதவர்களின் ஜாதித் தாழ்மை யைப்பற்றியும் வீண்பேச்சு பேசிக்கொள்வதை விட்டு விடுங்கள்; உங்கள் ஊர் குப்பைகளையும் ஆபாசங் களையும் போட ஆழமான குழிகளை வெட்டுங்கள்; ஊரில் விவஸ்தையில்லாமல் எங்கும் ஆபாசம் செய் வதை நிறுத்தி உங்களில் ஆண் பெண் குழந்தை களனைவரும் அக்குழிகளிலேயே மலஜலங்களைக் கழிக் கும்படி கட்டாயப்படுத்துங்கள்; இவ்வாறு செய்வீர் களானால் எவ்வளவு நன்றுயிருக்கும்?

**கிராமவாசிகள்:** இனி அப்படிச் செய்ய முயல்கிறோம். ஆனால் அநேக நாள்களாய் நடைபெற்று வந்த வழக் கங்களை மாற்றவேணுமென்றால் அது வெகு சிரம மான காரியந்தான்.

## நகைகளும் ஸ்திரீகளது உரிமையும்

கிராமத்திலுள்ள பெரியோர்கள் சாக்ரடீஸைச் சூழ்ந்து உட்கார்ந்து அவருடன் பேசிக்கொண்டிருந்

தார்கள், அச்சமயம் அவ்வூர் ஸ்திரீகளிலிருவர் அவ் வழியே சென்றூர்கள். அவர்களில் ஒருத்தி தண்ணீர் எடுத்துப்போய்க்கொண்டிருந்தாள் ; மற்றவள் வைக் கோல் கட்டொன்றைச் சுமந்து சென்று கொண்



அழுக்கு உடைகளுடன் ஏன் நிரம்ப நகைகள் போட்டுக் கொள்கிறூர்கள்

டிருந்தாள். அப்பெண்பிள்ளைகளிருவரும் நிரம்ப நகைகள் போட்டுக்கொண்டிருந்தார்கள். அவை களில் பெரும்பான்மையானவை வெள்ளி நகைகள் ; சில பொன் நகைகளாயிருந்தன. அப்பொழுது கிராம

சிகளைப் பார்த்துச் சாக்ரடீஸ் சொன்னதாவது :- ண்பர்களே, நான் நகைகளைப்பற்றி உங்களுடன் பச விரும்புகிறேன், அவைகளைப்பற்றிய விஷயங் ள் என் புத்திக்கு நன்ருய்ப் புலப்படவில்லை.'

**ராமவாசிகள் :** என்ன விஷயம் தெரியவில்லை, ஞானி பாரே ?

**சாக்ரடீஸ் :** உங்கள் ஸ்திரீகள் ஏன் நகைபோட்டுக் கொள்ளுகிருர்கள் ?

**கிராமவாசிகள் :** இது ஒரு கேள்வியா ? நாங்களெல் லோரும் ஆண் பெண் அடங்கலும் ஏதாவது கொஞ் சம் நகைபோட்டுக்கொண்டுதான் இருக்கின்ருேம் ? ஆனுல் ஸ்திரீகள் நிரம்ப போட்டுக்கொள்ளு கிருர்கள்.

**சாக்ரடீஸ் :** அது தெரிகிறது. எதற்காகப் போட்டுக் கொள்கிருர்களென்பதுதான் புலப்படவில்லை.

**கிராமவாசிகள் :** அதற்கு எத்தனையோ காரணங்க ளுண்டு. அது தொன்றுதொட்டு வரும் வழக்கம். நகை போட்டுக் கொண்டால் அழகாயிருக்கும் ; மேலும் நகை போட்டுக்கொள்ள எல்லாருக்கும் ஆசைதான்.

**சாக்ரடீஸ் :** இப்பொழுது தெரிகிறது. நகைபோட்டுக் கொள்வது தொன்றுதொட்டு வரும் வழக்கம். அதனுல் தான் நீங்களதை விரும்புகிறீர்கள். மேலும் அவ்வழக்கத்தை அனுசரிக்காவிட்டால் உங்களிடத் தில் ஜனங்களுக்கு மதிப்பு இருக்காது. ஆனுல் ஒன்று கேட்கின்றேன் ; தொன்று தொட்டு வரும் வழ க்கங்களெல்லாம் நல்ல வழக்கங்களென்று சொல்

**கிராமவாசிகள் :** ஏன் சொல்லக்கூடாது?

**சாக்ரடீஸ் :** சில ஜனங்களுக்குத் திருடுவது தொன்று தொட்டு வரும் வழக்கமாயிருக்கிறது. அதனுல் அதனை நல்ல வழக்கமென்று சொல்வீர்களா?

**கிராமவாசிகள் :** சொல்லவே மாட்டோம்.

**சாக்ரடீஸ் :** ஆகையால் வழக்கங்கள் பழைமையானவை என்னும் காரணத்தினுலேயே அவைகளை நல்லவைகளென்று சொல்லக்கூடாதல்லவா?

**கிராமவாசிகள் :** சொல்லக்கூடாது.

**சாக்ரடீஸ் :** ஆகையினுலே தொன்றுதொட்டு வரும் வழக்கமென்பது தவிர, நகை போட்டுக்கொள்வதற்கு வேறு நல்ல காரணமொன்று நீங்கள் காட்ட வேண்டும்.

**கிராமவாசிகள் :** அப்படியானுல், நகைபோட்டுக்கொண்டால் பார்வைக்கு நன்ருயிருக்கிறது என்பதுதான் காரண மென்று வைத்துக்கொள்ளுங்கள்.

**சாக்ரடீஸ் :** ஆனுல் அப்பெண்கள் குளித்தே இருக்க மாட்டார்கள் போலிருந்ததே; அவர்கள் உடுத்தியிருந்த உடையும் எவ்வளவு பழையதாயும் அழுக்குப் படிந்ததாயுமிருந்தது? அதோ விளையாடும் குழந்தைகள் கைகளிலும் கால்களிலும் வெள்ளிக் காப்புகளை அணிந்திருந்தபோதிலும் அவர்களது தேகம் ஒரு பொழுதும் தண்ணீரென்பதையே கண்டிராதுபோலிருக்கின்றது: அவர்களணிந்திருக்கும் அற்ப உடைகளும் கந்தைகளாகவே இருக்கின்றன.

**கிராமவாசிகள் :** மற்றவை எப்படி இருந்தாலும் சரி, நகைகள் அவர்கட்கு அழகு செய்கின்றன,

**சாக்ரடீஸ் :** நீங்கள் செய்யும் காரியம் எவ்வளவுவிநோத

மாயிருக்கின்றது! அழுக்குப் போகத் தேகத்தைத் தேய்த்துக் குளிப்பதற்கும், உடுக்கும் உடைகளைக் கசக்கிக் கட்டுவதற்கும் காசு செலவில்லையெனினும் உங்கள் சோம்பேறித்தனத்தாலும் அஜாக்கிரதையினாலும் உடலையும் உடைகளையும் அழுக்கினால் நிரம்பும்படி செய்துகொள்ளுகிறீர்கள். பிறகு அவ்வழுக்கினால் ஏற்பட்ட விகாரத்தை மாற்ற பெரும் பணம் செலவழித்து நகைகள் வாங்கிப் போட்டுக்கொள்ளுகிறீர்கள் அல்லவா?

**கிராமவாசிகள்:** அப்படி இல்லை. உண்மையிலேயே நகைகள் போட்டுக்கொள்பவர்களுக்கு அழகைத் தருகின்றன.

**சாக்ரடீஸ்:** (உரத்த குரலோடும் கோபத்தோடும்) கடவுள் அவர்களை அழகுடன் படைத்தார்; அவ்வழகை நீங்கள் அழுக்கினாலும் கந்தைகளினாலும் விகாரமாக்குகின்றீர்கள்; பிறகு அவ்விகாரத்தை மறைக்க நகைகள் போடுகிறீர்கள். இது வெகு நன்றாயிருக்கிறது!

**கிராமவாசிகள்:** உண்மையில் நீங்கள் சொல்வது எங்களுக்கு மிகுந்த அவமானத்தை உண்டுபண்ணுகிறது, ஐயா.

**சாக்ரடீஸ்:** கேட்கிறதற்காகவும் விஷயங்களை அறிந்து விவேகமடைவதற்காகவும் நமது காதில் ஒரு துவாரத்தைக் கடவுள் உண்டாக்கியிருக்கிறார்; நீங்களோ நகைமாட்டுவதற்காக இரண்டாவது துவாரம் செய்துகொள்ளுகிறீர்கள். இவ்விரண்டாவது துவாரத்தின் வழியாய் நீங்களறிந்த புத்தியெல்லாம் வெளியே ஒழுகிப்போகின்றது!

**கிராமவாசிகள் :** எங்களைப் பரிகாசம் செய்யவேண்டாம், ஐயா. நாங்கள் கூடுமானவரையிலும் பிரயாசைப் பட்டு எங்களது தப்பித நடத்தைகளை மாற்றிக் கொள்ளுகிறோம்.

**சாக்ரடீஸ் :** மேலும் இக்கேடுகெட்ட நகைகள் போடப் போடத் தேய்ந்துபோகின்றன வல்லவா?

**கிராமவாசிகள் :** உண்மைதான்.

**சாக்ரடீஸ் :** ஸ்திரீகள் அதிக நகைகள் போடப்போட அவர்களுள் கொஞ்ச நகைகளுள்ளவர்களுக்கு மனக் கொதிப்புண்டாகி அவர்களது புருஷர்களை மேலும் மேலும் நகைகள் வாங்கிக் கொடுக்கச்சொல்லி தொந் தரவு செய்கிறார்களன்றோ?

**கிராமவாசிகள் :** ஆம், ஆம், உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** ஆகையினால் அவர்கள் எவ்வளவுக்கெவ் வளவு சொற்ப நகைகள் போட்டுக்கொள்ளுகிறார் களோ, அவ்வளவும் நல்லதல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம், உண்மைதான்.

**சாக்ரடீஸ் :** நீங்கள் செய்யும் மூடத்தனமான காரியங்க ளுள் நகைகளைத் தினம்தினம் சாதாரண உடுப்புடன் வீட்டிலும் வயலிலும் வேலை செய்யும்பொழுது போட்டுக்கொண்டிருப்பது பெரும்மூடத்தனமான காரியமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா? அவைகளை விசேஷ தினங்களிலும் திருவிழா நாள் களிலும் நல்ல உடைகளை உடுத்திக்கொண்டு வெளி யில் போகும்பொழுது மாத்திரம் போட்டுக்கொண் டால் நல்லதல்லவா?

**கிராமவாசிகள் :** அப்படிச் செய்வதுதான் நியாயமாய்த் தோன்றுகிறது.

**சாக்ரடீஸ்:** அப்படிச் செய்தால் அந்நகைகள் நல்ல பார்வை கொடுக்குமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்; ஆனால் பெண்கள் நகைகளைத் தாங்கள் எப்பொழுதும் போட்டுக் கொண்டு தானிருக்கவேண்டுமென்கிறார்கள்.

**சாக்ரடீஸ்:** அவர்கள் விஷம் சாப்பிடத்தான் வேண்டு மென்றால் அவர்களை அப்படியே சாப்பிட விடு வீர்களா?

**கிராமவாசிகள்:** ஒருநாளும் சாப்பிட விடமாட்டோம். என்ன கேள்வி கேட்கிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** அப்பொழுது நகைகளிடத்தில் ஸ்திரீ களுக்கு எவ்வளவு ஆசை இருக்கின்றதோ அவ்வளவு ஆசை உங்களுக்கும் இருக்கின்றதுபோலும்.

**கிராமவாசிகள்:** அப்படிக் கேட்டீர்களானால், எங்களுக் கும் நகைகளிடத்தில் ஆசையென்றுதான் சொல்ல வேண்டும்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் இப்பெரும் பண நாசத்திற் குப் பழியை ஏன் பெண்பிள்ளைகளின்மேல் போட வேண்டும்?

**கிராமவாசிகள்:** அதெப்படியாயினும்—ஒருகாலும் பண நாசமாகாது, நகைகள் நம்மிடத்தில் தானிருக்கின் றன: அவைகளை எந்நிமிஷத்திலும் பணமாக மாற்ற லாம்,

**சாக்ரடீஸ்:** ஒரு தட்டானிடத்தில் நகை செய்வதற்காக நீங்கள் நூறு ரூபாய் கொடுத்ததாக வைத்துக்கொள்ளு வோம். அவன் உங்களுக்குச் செய்துகொடுக்கும் நகையைச் சரியாக மதிப்புப் பார்த்தால் எவ்வள விருக்கும்?

**கிராமவாசிகள் :** தட்டான் யோக்கியனாயிருந்தால், ரூபாய் எண்பது பெறலாம்; அப்படி இல்லாவிடில அறுபது எழுபது ரூபாய்ப் பெறுமான முடையதாயிருக்கும்.

**சாக்ரடீஸ் :** மேலும் அது போடப்போடத் தேயக்கூடியது; ஆகையால் பத்து வருடங்கள் போட்டிருந்தோமானால் இருபது ரூபாய்க்குமேல் பெறாது அல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம்.

**சாக்ரடீஸ் :** இதன் மத்தியில் திருடன் வந்து அதை ஒரே ராத்திரியில் கொண்டுபோய் விடலாம்?

**கிராமவாசிகள் :** ஆம், அதுவும் உண்மைதான்.

**சாக்ரடீஸ் :** ஆகவே, உங்களிடத்தில் அதிக நகைகளிருந்தால் இரவில் நிம்மதியாய்த் தூங்கமுடியாது; நல்ல காற்று வருவதற்கு வேண்டிய சாளரங்கள் வீடுகளில் அமைக்கவும் முடியாது, அதனால் உங்களது தேக சவுக்கியம் குறையும். நூறு ரூபாயை நகைகள் வாங்குவதில் செலவழிப்பதை விட்டு, கோவாபரேடிவ் பாங்கியில் போட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம், பத்து வருஷங்களில் இந்த நூறு ரூபாய் எவ்வளவாகும்?

**கிராமவாசிகள் :** இருநூறு ரூபாய்களாகும் என்கிறார்கள்.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் நூறு ரூபாய்க்கு நகை வாங்குவது லாபகரமா அல்லது அந்தத் தொகையை நிதியில் போட்டுவைப்பது லாபகரமா?

**கிராமவாசிகள் :** நிதியில் போட்டுவைப்பதுதான் லாபகரம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் நாங்கள் தொன்று தொட்டு வரும் வழக்கங்களை அனுசரிக்க வேண்டியதாய் இருக்கிறது; என்ன செய்வோம்?

**சாக்ரடீஸ் :** அதிருக்கட்டும் உங்களிடத்தில் பணமில்லை,

உங்கள் ஸ்திரீகள் நகைகள் வேணுமென்று சொல்லு கிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொ ழுது என்ன செய்வீர்கள் ?

**கிராமவாசிகள்:** கடன் வாங்குவோம்.

**சாக்ரடீஸ்:** சரி! நகைகள் தேய்ந்துகொண்டிருக்க, வாங்கிய கடனுக்கு வட்டி ஏறிக்கொண்டே இருக்கு மல்லவா ?

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா! அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** கேட்கக் கேட்க விபரீதமாய் இருக்கிறது. ஓ புத்தியீனமான கிராமவாசிகளே! உங்களுக்கு அறிவு எப்பொழுது வரப்போகின்றது ?

**கிராமவாசிகள்:** ஐயா, நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் எங்கள் ஸ்திரீகளும் குழந்தைகளும் நகை களில்லாமற் போனால் கொஞ்சமும் திருப்தியடையார்.

**சாக்ரடீஸ்:** நாம் எல்லோருமே அழகான பொருள் களின்மீது இச்சைப்படுகிறோம். நாம் எல்லோருமே சந்தோஷமாயும் திருப்தியாயும் இருக்கவேண்டு மென்று ஆசைப்படுகிறோம். கடவுளே நம்மெல்லோ ருக்கும் அவ்வித அவாவைக் கொடுத்திருக்கிறார்.

**கிராமவாசிகள்:** ஐயா! நீங்கள் எங்கள் மனத்திலுள்ள அபிப்பிராயத்தை நன்றாய் வெளியிட்டீர்கள்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, நகைகள் உங்களுக்குத் திருப்தி யைக் கொடுக்கின்றன என்று நினைக்கிறீர்கள் அல் லவா ?

**கிராமவாசிகள்:** நாங்கள் எங்கள் கிராமங்களில் வேறு என்ன செய்யக்கூடும் ?

[இந்தச் சமயத்தில் ஒரு பெண்குதிரை அதன் குட்டி தன் பக்கத்தில் துள்ளிக் குதித்து வர அவ்வழியே சென்றது.]

**சாக்ரடீஸ்:** அவைகளைப் பாருங்கள். அவை நகை ஒன்றும் போட்டுக்கொள்ளாவிடினும் எவ்வளவு அழகாயும் சந்தோஷமாயும் காணப்படுகின்றன. மனிதன் அவைகளைவிட உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவனல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம். அப்படித்தான் நாம் எண்ணுகிறோம். ஆனால் நீங்கள் கேட்கும் கேள்விகளைக் கவனித்தால் அதைக்கூடச் சந்தேகிக்கவேண்டியதாய் இருக்கின்றது.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், உங்கள் குழந்தைகள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கிறதில்லைபோல் தோன்றுகிறது?

**கிராமவாசிகள்:** அவர்கள் வேண்டியமட்டும் விளையாடுகிறார்கள்: ஆனால் அநேக சமயங்களில் அதிகமாய் அழவும் அழுகிறார்கள்.

**சாக்ரடீஸ்:** சரி; அழுக்கும், ரோகமும், துன்பமும், கஷ்டமும் நிறைந்த வீடு எப்படிச் சந்தோஷமாய் இருக்கக்கூடும்? அதிருக்கட்டும், உங்கள் ஸ்திரீகளும் குழந்தைகளும் அடிக்கடி துன்பப்படும்படி இருக்க, மிருகங்கள் மாத்திரம் அழகாகவும் நிம்மதியாகவுமிருக்கின்றனவே அதெப்படி?

**கிராமவாசிகள்:** எங்களுக்கு அதெப்படித் தெரியும். ஐயா!

**சாக்ரடீஸ்:** அதற்குக் காரணம் என்னவாயிருக்கலாம் என்பதை நான் கொஞ்சம் சொல்லட்டுமா?

**கிராமவாசிகள்:** சொல்லுங்கள் ஐயா, கேட்போம்.

**சாக்ரடீஸ்:** அதற்கு முதல் காரணம் என்னவென்றால், மிருகங்கள் சுத்தமாய் இருக்கின்றன. சுத்தம் தேகசவுக்கியத்தைத் தருகிறது. தேகசவுக்கியம் மனத்

திற்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. மேலும் அவைகள் காற்று தாராளமாய் உலாவும் வெட்ட வெளியில் வசிக்கின்றன; தங்களையும் தங்கள் குட்டிகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளுகின்றன. நீங்களோ அசுத்தமான கிராமங்களில் வசிக்கிறீர்கள். உங்களைச்சுற்றி அழுகிக்கொண்டு கிடக்கும், மலம், சாணி, குப்பை இவைகளிலிருந்து அசுத்த அணுக்களைக் காற்று அடித்துக்கொண்டுபோய் நீங்கள் சாப்பிடும் ஆகாரத்திலும் குடிக்கும் நீரிலும் சேர்க்கின்றது. இவ்வாபாசங்களினின்று வரும் துர்நாற்றத்தை நீங்கள் சுவாசிக்கின்றீர்கள்; அவைகளின்மேல் உட்கார்ந்த ஈக்கள் சாப்பிடும் ஆகாரத்தின்மீதும், உங்கள் குழந்தைகளின் கண்களின்மீதும், உதடுகளின்மீதும் உட்காருகின்றன. மேலும் நீங்கள் வசிக்கும் வீடுகளில் போதுமான சூரிய வெளிச்சம் புக வழியில்லை. காற்று தாராளமாய்ப் போய் வருகிறதற்குவேண்டிய சன்னல்கள் கிடையா. உங்கள் ஸ்திரீகளும் குழந்தைகளும் குளிப்பது வெகு அபூர்வம். இக்காரணங்களால் உங்களுடைய தேக சவுக்கியம் குறைகின்றது. நீங்களும் பலவிதமான நோய்களுக்கு ஆளாகின்றீர்கள். இக்கெட்ட வழக்கங்களை நீங்கள் நீக்கவேண்டும். உங்களையும் உங்களது குழந்தைகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதுடன் நீங்கள் உடுக்கும் ஆடைகளையும் நன்றாய் அழுக்குபோகத் துவைத்துக் கட்டவேண்டும். உங்களுடைய வீடுகளுக்குப் போதுமான சன்னல்கள் வைத்துக்கொள்ளவேண்டும். நீங்கள் வசிக்கும் கிராமங்களை எப்பொழுதும் சுத்தமாய் வைத்துக்கொள்வதோடு நீங்களும் தேகாரோக்கியத்திற்கு அவசியமான விதிகளையும் அனுசரித்து வர

வேண்டும். இவைகளை எல்லாம் நீங்கள் செய்வீர்களானால் உங்கள் ஸ்திரீகளும் குழந்தைகளும் நீங்களும் சுத்தமாயும் தேக ஆரோக்கியத்துடன் கூடியவர்களாயும் இருப்பீர்கள்; அதனால் உங்களுக்குச் சந்தோஷமும் உண்டாகும்.

**கிராமவாசிகள் :** நீங்கள் எங்கள்மீது அதிகக் கடுரமாய் இருக்கிறீர்கள். உங்கள் சொற்படி எங்களால் நடக்க முடியாது, ஐயா.

**சாக்ரடீஸ் :** நான் இப்பொழுது சொன்ன விஷயம் உங்களுக்கு ஏதாவது பணச்செலவு உண்டாக்கும் என்கிறீர்களா?

**கிராமவாசிகள் :** இல்லை, பணச்செலவு உண்டாக்கும்படியான விஷயம் ஒன்றும் நீங்கள் எங்களுக்குச் சொல்லவில்லை.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் உங்களிடத்தில் முயற்சியும் ஊக்கமும் இல்லை யென்றுதான் சொல்லவேண்டுமல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம், ஐயா, நீங்கள் சொல்வது முற்றும் சரியே.

**சாக்ரடீஸ் :** யோசித்துப் பார்த்தீர்களானால், நான் சொல்வதை அனுசரித்தால் உங்களுக்குப் பணம் சேருமே தவிர, விரயம் ஆகாது. ஏனென்றால் நான் சொன்னபடி நீங்கள் செய்வீர்களானால் உபயோகமற்ற இந்த நகைகளை விரும்பவே மாட்டீர்கள்.

**கிராமவாசிகள் :** அது உண்மைதான், ஐயா.

**சாக்ரடீஸ் :** ஆபரணங்கள் நிரம்பப்பூண்டும் அழுக்கு நிறைந்த தேகத்தையுடையவர்களைவிட நகையில்லாவிடினும் சுத்தமும் தேக ஆரோக்கியமும் கூடிய

ஸ்திரீகளும் குழந்தைகளும் பார்க்க நன்ருயும் அழகாயும் இருப்பார்களல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம், அது உண்மையே.



நகைக்காக வீணே பணத்தை செலவு செய்யாதீர்கள்

**சாக்ரடீஸ் :** அப்படியாளுல், நகைக்காக வீணே பணத்தைச் செலவு செய்யாமல், அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவும், வேண்டிய குவைனு முதலிய மருந்துகளை வாங்கவும், மழைகாலத்தில் உபயோகப்படுத்தக் கொசுவலைகள் வாங்கவும் அந்தப் பணத்தை ஏன் உபயோகிக்கக்கூடாது?

**கிராமவாசிகள் :** ஆம், செய்யலாம். நீங்கள் சொல்வது சரியான புத்திதான். ஆனுல் எங்கள் ஸ்திரீகள் நகை வேணுமென்று சொல்வார்களே, அதற்கு என்ன செய்கிறது?

**சாக்ரடீஸ் :** கடன் வாங்காமல் அவர்களுக்கு நியாயமாய் எவ்வளவு நகைகள் வோண்டுமோ அவ்வளவும்

வாங்கிக்கொடுங்கள், அதற்கு நான் கொஞ்சமேனும் தடைசொல்ல மாட்டேன்.

**கிராமவாசிகள்:** அதில் அவர்களுக்குத் திருப்தி உண்டாகாது.

**சாக்ரடீஸ்:** ஏன்?

**கிராமவாசிகள்:** அவர்களுக்கு வீட்டில் ஒருவித சந்தோஷமுமில்லை; ஒருவித சுவதந்திரமும் கிடையாது. ஆகையால் தேகம் நிரம்ப ஆபரணங்கள் பூண்டிருந்தால் மாத்திரமே தங்கள் கணவர்கள் தங்களை அதிக மரியாதையுடனும் பக்ஷத்துடனும் நடத்துவார்களென்று அவர்கள் நினைக்கிறார்கள். அன்றியும் ஒருவேளை கடவுள் செயலால் அவர்கள் விதவையானார்களானால் நகைகள் அவர்களுக்கு ஓர் ஆதாரமாய் இருக்கும்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் உங்கள் ஸ்திரீகளுக்கு அவர்கள் நகைகளைத் தவிர வேறு ஆஸ்தி ஒன்றும் இல்லையோ?

**கிராமவாசிகள்:** இல்லை, ஐயா.

**சாக்ரடீஸ்:** ஆகவே அவர்கள் எவ்வளவு நகைகள் உங்களிடத்திலிருந்து பெறக்கூடுமோ அவ்வளவையும் கைப்பற்றிக்கொள்ள நினைத்து உங்களை நகைகளுக்காகத் தொந்தரவு செய்கிறார்கள் போலும்!

**கிராமவாசிகள்:** அது அப்படித்தான், ஐயா.

**சாக்ரடீஸ்:** நீங்கள் உங்கள் ஸ்திரீகளை மரியாதையுடன் நடத்துகிறதில்லையோ?

**கிராமவாசிகள்:** இல்லை. ஆயினும் அவர்கள் எங்களிடத்தில் மரியாதையாகவே நடந்துகொள்ளுவார்கள்.

**சாக்ரடீஸ்:** ஆனால் நீங்கள் மாத்திரம் ஸ்திரீகளை ஒரு

பிரதானமாக நினைப்பதில்லைபோலும்?

**கிராமவாசிகள் :** உண்மையில் இல்லைதான்.

**சாக்ரடீஸ் :** நீங்களும் உங்கள் குழந்தைகளும் ஸ்திரீகள் வயிற்றில்தானே பிறந்தீர்கள்? உங்களது பெண்களும் இனி உங்கள் பேரப்பிள்ளைகளுக்குத் தாய் ஆவார்களல்லவா?

**கிராமவாசிகள் :** ஆம்.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் உங்கள் ஸ்திரீகள் உங்களைச் சேர்ந்தவர்கள் தானே?

**கிராமவாசிகள் :** ஆம்.

**சாக்ரடீஸ் :** அவர்கள் உங்கள் மரியாதைக்கு பாத்திரர்கள் ஆகாவிடில், நீங்களும் உங்கள் புத்திர பௌத்திரர்களும் எவ்வித மரியாதைக்கும் பாத்திரர்களல்லாதவர்களே, அல்லவா?

**கிராமவாசிகள் :** அப்படித்தான் ஏற்படுகிறது.

**சாக்ரடீஸ் :** உங்கள் குழந்தைகளிடத்தில் நீங்கள் ஆசை வைத்திருக்கிறீர்களல்லவா?

**கிராமவாசிகள் :** நிரம்ப ஆசை வைத்திருக்கிறோம்.

**சாக்ரடீஸ் :** அப்படி இருந்தும் அக்குழந்தைகளைப் பெற்றுப் பரிவுடன் பாலூட்டி வளர்த்து, வாழ்நாளில் முக்கியமான இளமைப்பருவத்திலேயே அவர்களுக்குச் சன்மார்க்கப் பயிற்சியை ஊட்டுவதற்குக் காரணமாயுள்ள அவர்களது தாயாரை நீங்கள் அவமதிப்பதுமன்றி அக்கிரமமாயும் நடத்துகிறீர்கள். இதைவிட மதியீனமான காரியம் வேறு உண்டோ? யோசித்துப் பார்க்குமிடத்து உங்களைவிட உங்கள் ஸ்திரீகளே அதிக மரியாதைக்கும் கௌரவத்திற்கும் பாத்திரர்களென்று சொல்லவேண்டும். ஏனெனில் குழந்தை

களைப் பெற்று அதிக அன்புடனும் முன் யோசனை யுடனும் வளர்த்துக் குலம் மேம்படச் செய்வதற்கும் குடித்தனக் காரியங்களைச் சிறப்புடன் நடத்துவதற்கும் அவர்களே முக்கிய காரணமாய் இருக்கிறார்கள்.

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்வது சரியான விஷயமே.

**சாக்ரடீஸ்:** கவனித்துப்பார்த்தால் மேற்சொன்ன விஷயங்கள் சரிவர நடைபெறச் செய்யும் தொழிலில் அவர்கள் உங்களுடன் ஒத்துழைக்கும் கூட்டாளிகளாய் இருக்கின்றார்கள் அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், மேற்சொல்லியபடி உங்களுடன் ஒத்துழைக்கும் கூட்டாளிகளாக நீங்கள் அவர்களைப் பாராட்டித் தகுந்தபடிக் கௌரவப் படுத்தவேண்டும். குழந்தைகளைச் சரியாய் வளர்ப்பதற்கு வேண்டிய அறிவை அடையும்படி அவர்களுக்குக் கல்வி புகட்டவும் வேண்டும். அங்ஙனம் செய்யின் உங்களை நகைகளுக்காக அவர்கள் தொந்தரவு செய்யமாட்டார்கள். மேலும், சுத்தமும் சுகமும் தேக அழகும் மிகுந்த குழந்தைகளும் ஆநந்தம் நிரம்பிய அகங்களும் அவர்கட்கு மனமகிழ்ச்சியைத் தரும். நான் சொல்வது உண்மையல்லவோ?

**கிராமவாசிகள்:** ஐயா! நீங்கள் சொல்வது உண்மையே. அதனை மறுத்துரைக்க ஒருவராலும் இயலாது.

**சாக்ரடீஸ்:** கடவுள் படைப்பில் சிறு குழந்தைகளும் சிறு மிருகங்களும்தான் மிக்க அழகியவைகளா?

**கிராமவாசிகள்:** இல்லை; கடவுள் புஷ்பங்களையும் படைத்திருக்கிறார்.

**சாக்ரடீஸ்:** நீங்களெல்லோரும் அழகான வஸ்துக்களி

டத்தில் மிக்க ஆசை உடையவர்களாயிருப்பதனால், உங்கள் கிருகங்களெல்லாம் புஷ்பத்தால் நிறைந்திருக்கின்றனவென்று நம்புகிறேன். புஷ்பங்கள் கொள்வதற்காக நீங்கள் கடனும் வாங்கத் துணிவீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** (சிரித்துக்கொண்டு) எங்களுக்குப் புஷ்பங்கள் ஏன்?

**சாக்ரடீஸ்:** அப்படியானால் அழகாயிருக்கும் பொருள்களின்மீது உங்களுக்கு உண்மையில் ஆசை இல்லை என்று சொல்லுகிறீர்களா?

**கிராமவாசிகள்:** ஆசை உண்டு. ஆனால் புஷ்பச்செடிகள் வைத்துப் பயிராக்க எங்களுக்கு அவகாசம் கிடையாது. அதுவுமன்றிப் புஷ்பச்செடிகளின் விதைகள் எவ்விடத்தில் கிடைக்கும் என்பதாவது அவைகளைப் பயிர் செய்வது எப்படி என்பதாவது எங்களுக்குத் தெரியவே தெரியாது.

**சாக்ரடீஸ்:** வீட்டுக் காரியங்களை ஒழுங்குபெற நடத்துவதில் உங்களுடன் ஒத்துழைக்கும் உங்களது மனையாட்டிகள் ஏன் புஷ்பங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளக்கூடாது? உங்களது வீடுகளை அலங்கரிக்கவேண்டிய சில புஷ்பச்செடிகளை வைத்துப் பயிராக்குவதற்கு அவர்களுக்குப் பொழுது இல்லாமல் போகாது. ஒரு நல்ல மனையாட்டிக்குத் தன் வீட்டை அழகுபடுத்த எப்பொழுதும் அவகாசம் கிடைக்கும். அப்படியும் அவர்களுக்கு ஆபரணங்கள் வேண்டுமானால், சிறு வயதிலேயே சரிகைப் பின்னவும் சித்திரத் தையல் போடவும் அவர்கள் கற்றுக்கொள்ளட்டும்; அத்தொழில்களை அவர்களது பெண்களுக்கும் கற்றுக்

கொடுக்கட்டும். இப்படிச் செய்தால் அவர்கள் நகைகள் வாங்குவதில் பணத்தைச் செலவிட்டு அழிக்காது, அழகிய சித்திரத்தையல் போடுவதிலும், சரிகை பின்னுவதிலும், மலர்ச்செடிகளை வைத்து வளர்ப்பதிலும் ஒருவரை ஒருவர் வெல்ல போட்டி போட்டு உழைப்பார்கள். அப்பொழுது ஸ்திரீகளில் யார் இவ்வித காரியங்களை அதிக திறமையுடன் செய்கிறார்களோ அவர்களே மிக்க பெருமை பெற்றவர்களென்று நினைக்கப்படுவார்களே தவிர, கணவர்களை வருத்தி ஆபரணங்கள் நிரம்பப் பூண்டவர்கள் அங்ஙனம் நினைக்கப்படமாட்டார்கள்.

**கிராமவாசிகள் :** பெரியவரே, அப்படியே இனி நாங்கள் செய்ய முயற்சி செய்வோம்.

**சாக்ரடீஸ் :** இப்பொழுது நாம் இதுவரையிலும் பேசிக்கொண்டிருந்த விஷயங்களினால் என்ன ஏற்படுகின்றதென்பதைக் கவனிப்போம். நீங்கள் பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும்; உங்களுடன் ஒத்துழைப்பவர்களுக்குரிய கௌரவத்துடன் நீங்கள் அவர்களை நடத்தவேண்டும். வீட்டை அழகாயும் குழந்தைகளைச் சுத்தமாயும் சந்தோஷமாயும் வைப்பதற்கு வேண்டிய உதவி நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டும்; தங்களையும் தங்கள் குழந்தைகளையும் சுந்தரமாகச் செய்துகொள்ளவும். வீடுகளில் பூஞ்செடிகளை வைத்து வளர்க்கவும் அவர்களுக்குப் பழக்கிக் கொடுக்கவேண்டும். உங்கள் கிராமங்கள் சுத்தமாயும் மனிதர்கள் வசிக்கத் தகுந்தவைகளாயும் செய்யப்படவெண்டும். இவ்வாறு செய்வீர்களானால், நகைகள் வாங்க அவசியமிராது. உங்களுக்கு

அவசியமான செலவுபோக மிகுந்த பணத்தைப் பாங்கியில்போட்டு வருஷாவருஷம் அதன் தொகை பெருகிவருவதை நீங்கள் பார்க்கலாம்; நகைகள் தேயத்தேய அவைகளை வாங்குவதற்காக ஏற்பட்ட கடன் மேலும் மேலும் விருத்தி யடைந்துவரும் இக் கொடுமையைக் காணமாட்டீர்கள். எல்லாவற்றிலும் முக்கியமானது உங்கள் வாழ்நாளும் உங்கள் குடும்பத்தார் வாழ்நாளும் மனநிம்மதியும் சந்தோஷமும் நிரம்பியிருக்கும்.

**கிராமவாசிகள் :** ஐயா, நீங்கள் சொல்லும் புத்திமதிகள் மிகவும் சரியானவையாய் இருக்கின்றன, நாங்களும் அவைகளின்படி நடக்க முயல்வோம். ஆனால் அவைகளை யெல்லாம் நீங்கள் சொல்வதுபோல் செய்வது வெகு கஷ்டம். ஆகையால் அவ்வகை செய்யும் வழக்கம் எங்களுக்கு ஏற்பட அநேக வருஷங்கள் செல்லும் என்று நினைக்கிறோம்.

# தண்ணீரும் விறகும் எருவும்

சாக்ரடீஸ் ஒரு கிராமத்திற்கு வந்தார். அங்கு வறட்டிக் குதிர்கள் அநேகம் இருந்தன: ஸ்திரீகள் சாணி தட்டிக்கொண்டிருந்தார்கள்; புருஷர்கள் கயிற்றுக்கட்டில்களின் மீது உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர் கண்ணுக்குப் புலப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் அழுக்கு நிறைந்ததாயும் கவனிக்கப்படாததாயும் பெரும் தரித்திரத்துக்கு அறிகுறியாயும் இருந்தது.

**சாக்ரடீஸ் :** சலாம்! என்னமாய் இருக்கிறீர்கள்! நண்பர்களே!

**கிராமவாசிகள் :** ஐயா! எங்கள் வயல்கள் உரமில்லாமல் கிடக்கின்றன. எங்காவது கொஞ்சம் விளைவு இருந்தால் அதைக் காட்டுப்பன்றிகளும் எலிகளும் தின்று விடுகின்றன. மழை இல்லை; வயல்கள் காய்ந்து போகின்றன. சென்ற ஐப்பசி கார்த்திகை மாதங்களில் கண்ட காய்ச்சலினின்றும் நாங்கள் இன்னும் தேறவில்லை. எங்கள் ஆடுமாடுகள் தின்ன ஒன்றுமில்லை; எங்களுக்கும் சற்றேறக்குறைய அப்படியே தான். இந்நிலையிலிருக்கும் எங்களை எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்கவேண்டிய அவசியமென்ன இருக்கிறது?

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது, காற்று ஒன்று திடீரென்று வீசிற்று. அக்காற்று அழுக்கு மண்ணையும் அசுத்த தூசிகளையும் நிரம்ப வாரிவந்து சாக்ரடீஸ் முகத்திலும் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்திருந்தவர்கள் முகங்களிலும் அடித்தது. கிராமவாசிகள் அதை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. ஆனல் அது சாக்ரடீசை இருமவும், அவரது கண்கள் கலங்கி கரிக்கவும் செய்தது.

**சாக்ரடீஸ்:** இது எவ்வளவு அருவருப்பாயும் அசௌக்கியமாயுமிருக்கின்றது.

**கிராமவாசிகள் :** அப்படி ஒன்றுமில்லையே; காற்றடிக்கும்போதெல்லாம் இப்படித்தான் தூசு வந்துவிழும், இது எங்களுக்குச் சகஜந்தான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் உங்கள் வயல்கள் உரமின்றிக் கிடக்கின்றன என்று நீங்கள் குறைகூறக் கொஞ்சமேனும் நியாயமில்லை. காற்று அடித்துப் போகும் அசுத்தங்களையெல்லாம் ஒருகுழியில் போட்டு

அவை நன்ருய் மக்கினபிறகு அவைகளை உங்கள் நிலங்களுக்கு எருவாகப் போட்டீர்களாஞல் அவ் வயல்கள் அதிக செழுமை அடையுமே.

**கிராமவாசிகள் :** அங்ஙனம் செய்ய எங்களுக்கு நேரம் இல்லை; நாங்கள் ஏழைகளாகையால் கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருக்க எங்களால் முடியாது; அவ் வித பாக்கியம் பணக்காரர்களுக்குத் தான் கிடைக் கும்.

**சாக்ரடீஸ் :** கிராமங்கள் அசுத்தமாய் இருந்தால் அவை களைத் தப்பாமல் தரித்திரம் பிடிக்கும். உங்கள் கிரா மத்தை அசுத்தமாக்கும் அழுக்கே உங்கள் வயல்களைச் செழுமையாகச் செய்யக்கூடியது. நீங்கள் ஏன் பணக் காரர்களாய் இல்லை? நான் வரும் வழியில், பட்டுப் போன மரங்கள் பல பூமியில் வீழ்ந்து மக்கிக்கொண் டிருப்பதைப் பார்த்தேன். செலவில்லாமல் தாமே வளரும் மரங்களை தனவான்கள் அல்லாது வேறு யார் இங்ஙனம் அசட்டை செய்வார்கள்?

**கிராமவாசிகள் :** பட்டுப்போய்க் கிடக்கும் மரங்களை நாங்கள் என்ன செய்யலாம். மரக்கட்டைகள் வாங்கு கிறவர்கள் இங்கு யாரும் இல்லை.

**சாக்ரடீஸ் :** சமையல் செய்யவும், பால் காய்ச்சவும் நீங் கள் அம்மரக்கட்டைகளை அடுப்புக்கு உபயோகப் படுத்தக்கூடாதா?

**கிராமவாசிகள் :** அது முடியாது. அடுப்புக்கு நாங்கள் வறட்டிகளை உபயோகப்படுத்துகின்ருேம்.

இதைக்கேட்டதும் சாக்ரடீஸ் குலுங்க நகைத்தார்.

**கிராமவாசிகள் :** ஏன், ஐயா! நகைக்கிறீர்கள்?

**சாக்ரடீஸ் :** நகைக்காமல் எப்படி இருக்கமுடியும். நீங்

கள் செய்கிற காரியம் மிகவும் வேடிக்கையாய் இருக்கிறது. நீங்கள் சற்றுமுன் உங்கள் வயல்களில் சத்து இல்லையென்றும், நீங்கள் ஏழைகளென்றும் முறையிட்டீர்கள். அப்படி இருந்தும் யோசனை இன்றிச் சாணத்தால் செய்த வறட்டியை எரிக்கிறீர்கள். சாணத்தை விறகுக்குப் பதிலாய் உபயோகப்படுத்துவதால் எவ்வளவு லாபமுண்டாகுமோ அதை விடப் பதின்மடங்கு லாபம் அதை எருவாக உபயோகிப்ப



புத்தியுள்ள ஸ்திரீகள் அடுப்புக்கு வறட்டிக்குப் பதிலாக கட்டையை உபயோகிப்பார்கள்

தால் உங்களுக்கு உண்டாகும். அப்படியிருக்க, நீங்கள் உங்கள் பட்டுப்போன மரக்கட்டைகளைக் கறையான் அறிக்க விட்டுவிடுகிறீர்கள். ஏழை ஜனங்கள் கறையானுக்கு இரையிடக்கட்டுமோ? அது இருக்கட்டும், அதோ இருக்கும் வறட்டிக் குதிர் என்ன விலை யிருக்கும்?

**கிராமவாசிகள்:** அது சுமார் ஐந்து ரூபாயிருக்கலாம்.

**சாக்ரடீஸ்:** அதையே எருவாய் உபயோகப்படுத்துவதாய் இருந்தால் எவ்வளவு மதிப்பீர்கள்.

**கிராமவாசிகள்:** அதை எருவாக உபயோகப்படுத்திஞல் அவ்வெரு போட்ட நிலம் முந்தியைவிட ஒரு மரக்கால் தானியமும் பத்துமணங்கு வைக்கோலும் தரும்.

**சாக்ரடீஸ்:** அதாவது சுமார் ஐம்பது ரூபாய் அதிகமாய்த் தரும் என்று வைத்துக்கொள்ளலாமா ?

**கிராமவாசிகள்:** அதற்கு ஒருபோதும் குறையாது.

**சாக்ரடீஸ்:** அப்படியாஞல் உங்கள் நிலங்கள் செழுமையாய் இல்லாததற்கும் நீங்கள் ஏழைகளாய் இருப்பதற்கும் காரணம் இன்னதென்பது நன்ருய்த் தெளிவாகிறது. அதிருக்கட்டும்; ஒரு குதிர் கட்டுவதற்கு வேண்டிய வறட்டிகளைத் தட்டி முடிக்க ஒரு ஸ்திரீக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?

**கிராமவாசிகள்:** சுமார் மூன்று மாதங்கள் பிடிக்கும்.

**சாக்ரடீஸ்:** ஆகவே அந்த ஸ்திரீ மூன்று மாதம் ஆயாசத்தில் உழைத்து ஈனத்தொழில் செய்யின் ஐந்து ரூபாயே கிடைக்கிறது என்று ஏற்படுகிறது. இருக்கட்டும். ஒரு கமிசு அல்லது ஜிப்பா தைக்கிறதற்குத் தையற்காரனுக்கு என்ன கூலி கொடுக்கிறீர்கள் ?

**கிராமவாசிகள்:** நாலு அல்லது ஆறு அணு.

**சாக்ரடீஸ்:** அந்தக் கமிசு தைப்பதற்கு தையற்காரனுக்கு எவ்வளவு காலம் செல்லும் ?

**கிராமவாசிகள்:** சுமார் இரண்டுமணி பிடிக்கும்.

**சாக்ரடீஸ்:** ஒரு ஸ்திரீ நாலணு வறட்டிகளைத் தட்ட என்ன காலம் பிடிக்கும்?

**கிராமவாசிகள்:** சுமார் ஒரு வாரம் செல்லலாம்.

**சாக்ரடீஸ்:** அப்படியாஞல் அவளுக்கு எருமுட்டை

தட்டுவதைவிடக் கமிசு தைப்பது இலாபமான வேலை யன்றோ ?

**கிராமவாசிகளில் ஒருவன் :** என் மனைவிக்குத் தையல் வேலை தெரியாது ஐயா.

**சாக்ரடீஸ்:** தெரியாது என்பதற்குச் சந்தேகமே இல்லை. அவள் பிறந்தது முதல் மாவு அரைப்பதிலும் சாணி தட்டுவதிலும் தான் அடிமைபோல் உழைத்திருக்கிருள். எது கௌரவமான வேலை—சாணிதட்டுவதோ தையல் தைப்பதோ ?

**கிராமவாசிகள்:** தையல் தைப்பதுதான் ; அதற்கு என்ன சந்தேகம் ?

**சாக்ரடீஸ்:** அப்படி யிருந்தும், உங்கள் உடுப்புகளைத் தைப்பவன் இழிகுலத்தானுகிய தையற்காரன்; சாணி தட்டுவதோ உயர் குலத்தினராகிய உங்கள் ஸ்திரீகள் அன்ருே ?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான்.

**சாக்ரடீஸ் :** அப்படியானுல் தையற்காரனைச் சாணி தட்டவிட்டு, உங்கள் ஸ்திரீகளை உடுப்புகள் தைக்கச் செய்வது புத்தியுள்ள காரியமாயிருக்குமல்லவா ?

**கிராமவாசிகள் :** அது முடியவே முடியாது. தையற் காரன் ஒரு நாளும் வறட்டி தட்டமாட்டன்.

**சாக்ரடீஸ் :** தட்டமாட்டான், உண்மைதான்; அப்படிச் செய்ய அவன் அவ்வளவு முட்டாளல்ல. வறட்டி தட்டுவதே கூடாது என்பது எனது கருத்து. உங்கள் தரித்திரத்திற்குக் காரணம் சாணத்தை வறட்டியாகத் தட்டுவதுதான் என்று நான் நினைக்கிறேன்.

**கிராமவாசிகள் :** அப்பொழுது நாங்கள் சமைப்பதற்கும் பால் காய்ச்சுவதற்கும் என்ன செய்கிறது ?

**சாக்ரடீஸ்:** உங்கள் கிராமத்திற்கு வெளியில் நூற்றுக் கணக்காகப் பட்டுக்கிடக்கும் மரக்கட்டைகளையும், எள்ளு, துவரை முதலியவைகளின் தாள்களையும் அடுப்பெரிக்க உபயோகிக்கலாம்.



உங்கள் ஸ்திரிகள் உடுப்புகள் தைக்கவும்

**கிராமவாசிகள்:** ஆம்; ஆனால் பால் காயும்பொழுது பெண்கள் அடுப்பின் பக்கத்திலே உட்கார்ந்து வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டியிருக்கும்.

**சாக்ரடீஸ்:** ஆம், ஏன் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கக்கூடாது. இப்பொழுது சாணிதட்டுவதில் கழிக்கும் காலத்தைப் பால் பொங்கி வழிந்து போகாமல் பார்த்திருப்பதில் செலவிடட்டுமே. மேலும் அப்படிக் கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும்பொழுது தங்களுக்கும் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் வேண்டிய கமிசு முதலிய உடுப்புக்களையும் அவர்கள்

தைக்கலாம். அப்படிச் செய்வதினால் நீங்கள் தையற்காரனுக்குக் காசு கொடுக்க வேண்டிய அவசியமும் இராது.

சென்ற மார்கழிமாதத்தில் சென்னையில் நடைபெற்ற காட்சியில் பாலினின்று வெண்ணெய் எடுக்கும் இயந்திரம் ஒன்று வேலைசெய்வதைப் பார்த்தேன். அப்படி எடுக்கப்பட்ட வெண்ணெயை உருக்கி உண்டாகும் நெய், பாலைக்காய்ச்சி உறையிட்டுக் கடைந்தெடுத்த வெண்ணெயை உருக்கி உண்டாகும் நெய்யைவிட அதிகமாயும் சுத்தமாயும் இருந்ததோடு, இவ்விதம் நெய்யெடுப்பதற்கு எரிக்கவேண்டிய விறகும் கொஞ்சமாய்த்தான் பிடித்தது. அதிருக்கட்டும், நீங்கள் கொஞ்ச நேரத்துக்கு முந்தி உங்கள் மாடுகள் தின்ன வைக்கோல்கூட இல்லையென்று சொன்னீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், ஐயா, எங்கள் மாடுகள் தின்ன வைக்கோல் இல்லைதான்.

**சாக்ரடீஸ்:** அதற்கும் காரணம் முன்சொன்னதே. உங்கள் மாடுகளின் சாணம், குப்பை, செத்தை முதலியவைகளை நீங்கள் வயல்களுக்குக் கொண்டுபோய் போடுவதில்லை. அதனால் அவ்வயல்களுக்கு வேண்டிய எரு அருமையாகிவிட்டது. இம்மாதிரி சத்து இல்லாமல் கிடைக்கும் புலங்களில் மாடுகளுக்கு வேண்டிய வைக்கோல் எப்படி விளையும்?

**கிராமவாசிகள்:** வயல்களுக்கு நாங்கள் எருவிட்டபோதிலுங்கூட, மழை பெய்தாலல்லவோ பயிர்கள் நன்றாய் விளையும்?

**சாக்ரடீஸ்:** நான் வந்தவழியில் ஒரு ஏரி இருக்கிறதே,

அதை நீங்கள் உபயோகப்படுத்துவதில்லையோ?

**கிராமவாசிகள்:** அந்த ஏரியால் எங்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை; கெடுதிதான். நாங்கள் பயிர்செய்யக்கூடிய நிலங்களில் ஏரி நீர்பிடித்து அங்குப் பயிர் செய்யவிடாமல் அது தடுக்கிறது.

**சாக்ரடீஸ்:** அதன் நீரை ஏன் உங்கள் பயிர்களுக்குப் பாய்ச்சிக்கொள்ளக்கூடாது.

**கிராமவாசிகள்:** அதெப்படி முடியும்?

**சாக்ரடீஸ்:** ஏன்? வாய்க்கால்கள் வெட்டி ஏற்றம் போட்டு இறைத்துக்கொள்ளலாம்.

**கிராமவாசிகள்:** அவ்வாறு இதுவரையிலும் நாங்கள் செய்ததில்லை, அவ்வித வழக்கமும் எங்கள் ஊரிலில்லை. மேலும் அப்படிச்செய்ய பணமும் கிடையாது.

**சாக்ரடீஸ்:** சர்க்கார் விவசாய அபிவிருத்திக்காகக் கொடுக்கும் கடனை வாங்கி உபயோகிக்கலாமே. மேலும் உங்கள் கிராம நிதிகளிலிருந்தும் வேண்டிய பணம் கடனாக வாங்கிக்கொள்ளக்கூடாதா?

**கிராமவாசிகள்:** ஆம், ஆனால் சித்திரை வைகாசி மாதங்களில் ஏரிநீர் வற்றிப்போய்விடுமே.

**சாக்ரடீஸ்:** இருந்தாலும் அதன்நீர் உங்கள் முதல் போகப் பயிர் விளைகிறதற்குப் போதுமானதாயிருக்கும். உங்களில் புத்திமான்கள் யாராகிலும் கரும்பு பயிரிடுவதாயிருந்தால், அதற்காக ஒரு சிறு கிணற்றை வெட்டி, அக்கிணற்றினின்றும் நீரை மறு மழை பெய்து ஏரி நிரம்புகிறவரையில் அவர்கள் இறைத்துக்கொள்ளலாம்.

**கிராமவாசிகள்:** கரும்பு பயிரிடுவதில் உபயோகமே

இல்லை. பன்றிகள் வந்து அதை வளரவிடாமல் தின்றுவிடும்.

**சாக்ரடீஸ்:** பன்றிகள் எங்கிருந்து வருகின்றன?

**கிராமவாசிகள்:** கிராமத்தைச் சேர்ந்த காட்டிலிருந்து வருகின்றன.

**சாக்ரடீஸ்:** பன்றிகள் காட்டில் எப்படி வசிக்கின்றன?

**கிராமவாசிகள்:** முட்செடி புதர்களின்கீழ் வசிக்கின்றன.

**சாக்ரடீஸ்:** உங்களுக்குப் பன்றிகள் வேண்டுவதில்லையானால், ஏன் முட்செடிப் புதர்களை விதைத்துப் பயிர் செய்கிறீர்கள்?

**கிராமவாசிகள்:** (இதைக் கேட்ட கிராமவாசிகள் நகைத்து) முட்செடிகளை ஒருவரும் விதைத்துப் பயிராக்குவதில்லை, ஐயா ஞானியாரே!

**சாக்ரடீஸ்:** கிராமக்காட்டிற்கு நீங்கள்தானே சொந்தக்காரர்கள்?

**கிராமவாசிகள்:** ஆம், நாங்கள்தான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், உங்களுக்கு முட்புதர்கள் வேண்டியதில்லையாயின், அவைகளை ஏன் வளரவிடுகிறீர்கள்?

**கிராமவாசிகள்:** அவைகள் தாமே முளைத்து வளர்கின்றன.

**சாக்ரடீஸ்:** அவைகளாகவேயா? காட்டுக்கு எஜமானர்கள் நீங்களென்றல்லவோ சொன்னீர்கள்? நீங்கள் உங்கள் வீட்டில் முட்செடிகளை வளரவிடுகிறீர்களா?

**கிராமவாசிகள்:** ஒருகாலும் இல்லை.

**சாக்ரடீஸ்:** ஒரு முட்புதர் உங்கள் வீட்டில் முளைக்க ஆரம்பித்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

**கிராமவாசிகள்:** வெட்டிப்போடுவோம். அதற்குச் சந்தேகமென்ன?

**சாக்ரடீஸ்:** அப்படியானுல், பன்றிகள் வசிக்க இடமில்லாமலிருக்கும்படி முட்புதர்களைக் காட்டிலிருந்து ஏன் வெட்டி எறியக்கூடாது? அதிருக்கட்டும், கிராமக் காடு எதற்கு வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

**கிராமவாசிகள்:** கிராமத்து மாடுகள் மேய்வதற்காக எங்கள் முன்னோர்கள் இந்த நிலத்தை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல் உங்கள் மாடுகள் முட்செடிகளையும், பூண்டுகளையும் மேய்கின்றனவோ?

**கிராமவாசிகள்:** ஒருகாலும் இல்லை.

**சாக்ரடீஸ்:** அந்தப் பூமியெல்லாம் முட்செடிகளாலும், பூண்டு புதர்களாலும் தானே மூடப்பட்டிருக்கின்றன?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** ஆகவே உங்கள் முன்னோர்களின் அபிப்பிராயம் கொஞ்சமேனும் நிறைவேறவில்லை. மாடுகள் மேய்வதற்காக ஏற்பட்ட நிலம் இப்பொழுது காட்டுப் பன்றிகட்கே பிரயோஜனப்படுகின்றது. ஓ, கிராமவாசிகளே, உங்களைப்போல் புத்தியில்லாதவர்கள் யாரிருப்பார்கள்? முட்செடிகளையும் பூண்டுகளையும் வெட்டி எறிந்து மாடுகள் மேயப் புல்லையும் அடுப்புக்கு நல்ல விறகாகும் மரங்களையும் வைத்துப் பயிரிடுவதற்குப் பதிலாக, மாடுகள் மேய்வதற்கென்று உங்கள் முன்னோர்களால் விடப்பட்ட பூமியை உங்கள் பயிர்களையும் நாசஞ்செய்யும் காட்டுப்பன்றிகள் வாழும் இடமாகச் செய்துவிட்டீர்கள். அடுப்பெரிக்க வேண்டிய விறகுக்காக மரங்களை வைத்து வளர்க்காமலிருப்பதுமன்றி, தாமாகவே வளர்ந்த மரங்களின் கட்டைகளையும் கறையான் அரிக்கவிட்டுவிட்டு நிலத்

துக்கு எருவாக வேண்டிய சாணத்தை அடுப்பிலிட்டு எரிக்கிறீர்கள். இதனுல் வயல்கள் உரமிழந்து உங்களுக்கு வேண்டிய தானியங்களையும் உங்கள் மாடுகளுக்கு வேண்டிய வைக்கோலையும் விளைவித்து கொடுக்க சக்தியற்றவையாய் விட்டன. உங்கள் கிராமத்தில் உள்ள அசுத்தங்களையும் ஆபாசங்களையும் குழிகளிலிட்டு எருவாக்கி வயல்களுக்குப் போடாமலிருப்பதால், உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் கொடிய வியாதிகள் பல உண்டாகின்றன. ஏரியிலிருக்கும் நீரையும் உங்கள் வயல்களுக்குப் பாய்ச்சிக் கொள்ளமாட்டீர்கள். உங்களுக்கு நீரும், விறகும், எருவும் இருந்தும், இவைகளை நீங்கள் உபயோகப் படுத்தாமல் வீணுக்குகிறீர்கள். இம்மூன்று பொருள்களுமே ஒரு மிராசுதாரின் செல்வத்திற்கு ஆதாரமானவை. இம்மூன்றையும் நீங்கள் வீணுக்கி விட்டு, உங்கள் ஏழ்மைத்தனத்தைப்பற்றி முறையிடுகின்றீர்கள். இது எவ்வளவு விசனகரமான காரியம், பாருங்கள்.

## கிராமத்தைச் சுத்தம் செய்தல் அதாவது தன் முயற்சி

சாக்ரடீஸ் ஒரு கிராமத்தினுள் சென்ருர். அப்பொழுது காற்று வீசிக்கொண்டிருந்ததால், ஆபாசத் தூசுகளும், சாம்பற் றூசுகளும் காற்றில் எங்கும் பறந்துகொண்டிருந்தன. அதனுல் சாக்ரடீஸுக்கு நிரம்ப அசவுகரியமாய் இருந்தது. அல்லாமலும், அத் தூசுகள் சனங்களுடைய கண்களிலும், அவர்கள் சாப்பிடும் ஆகாரத்திலும் வீழ்ந்தன; சுவாசத்துடன்

அவர்கள் சுவாசாசயத்துள்ளும் சென்றன. இதைக் கவனித்த சாக்ரடீஸ், 'இந்த ஆபாசத் தூசுகள் உங்கள் கண்களில் வீழ்ந்து சுவாசத்துடன் உட்செல்லுவதாலும், நீங்கள் சாப்பிடும் ஆகாரத்தையும் குடிக்கும் நீரையும் அசுத்தப் படுத்தி உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் வயிற்றுப்போக்கு முதலிய வியாதிகளை உண்டுபண்ணுவதாலும் உங்களுக்கு அதிகத் தொந்தரவைக் கொடுக்கின்றன அல்லவா?' என்றார்.

**கிராமவாசிகள்:** நாங்கள் என்ன பண்ணுவோம்? தெருப்பெருக்குகிறவர்களை இவையெல்லாம் நன்றாய்ச் சுத்தம் செய்யும்படி சொல்லியிருக்கிறோம். ஆனால் வர வர அவர்கள் எங்கள் பேச்சைக் கேட்கிறதில்லை. சொன்னதைச் செய்யாததற்காக அவர்களை ஒரு வேளை அடித்தோமானால், உடனே எங்கள்மீது பினல் கோட் 323-ம் பிரிவின்கீழ் பிரியாது கொடுத்துவிடுகிறார்கள். எங்கள் கௌரவம் போய்விடுகிறது,

**சாக்ரடீஸ்:** அப்படியானால் கிராமம் வீதிபெருக்குபவர்களுக்குச் சொந்தமென்கிறீர்களா, என்ன?

**கிராமவாசிகள்:** அதெப்படி? ஒருபொழுதும் அப்படி ஆகாது. மிராசுதாரர்கள்தான் கிராமத்துக்குரியவர்கள்.

**சாக்ரடீஸ்:** ஆனால் வீதி பெருக்குபவன்தானே உங்கள் சௌக்கியத்திற்குக் காரணமாயிருக்கிறான்? அவனிஷ்டப்பட்டாலல்லவோ உங்கள் கிராமம் சுத்தமாகும்? அவன் கிராமத்தைச் சரியாய்ப் பெருக்கிச் சுத்தமாக வைத்தால், உங்களுக்குச் சௌக்கியமுண்டு; இல்லையானால் நீங்கள் இப்பொழுதிருப்பதுபோல்தானிருக்கவேண்டும். இப்படியிருக்க, நீங்கள் வீதி

பெருக்குபவன் ஆதீனத்திலிருப்பவர்கள் என்றன்றி வேறு என்ன சொல்லலாம்?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** ஆகவே, அவன்தான் இவ்வூருக்கு உண்மையில் உரியவன்.

அப்பொழுது தூசி விழுந்து உறுத்திய கண்களைக் கைகளால் நிமிண்டிக்கொண்டிருந்த கிராமவாசிகளில் ஒருவன் 'இன்று அப்படித்தான் தோன்றுகிறது' என்றான்.

**சாக்ரடீஸ்:** அது இருக்கட்டும். இக்கிராமத்தை இவ்வளவு அசுத்தம் செய்தவர்கள் யார்? யார் அந்த அசுத்தங்களை எல்லாம் இங்குக் கொண்டு கொட்டியது?

**கிரர்மவசிகள்:** ஓ! நாங்களும் எங்கள் ஸ்திரீகளுந்தான்.

**சாக்ரடீஸ்:** வீதி பெருக்குபவர்கள் எடுத்துப்போகமாட்டார்களென்று தெரிந்திருக்க, ஏன் இங்குக் கொண்டு வந்து இவைகளைக் கொட்டுகிறீர்கள்?

**கிராமவாசிகள்:** எப்பொழுதும் நாங்கள் இவைகளை இங்கேதான் கொட்டுவது வழக்கம்,

**சாக்ரடீஸ்:** நீங்கள் ஏன் அவைகளைக் கொஞ்ச நாளைக்கு முன் வெட்டிய குழிகளில் கொண்டு கொட்டக்கூடாது? அப்படிச் செய்தால் வீதி பெருக்குபவர்களை நீங்கள் லக்ஷியம் செய்யவேண்டியிராதல்லவா? அப்பொழுது இவ்வதிகப் பிரசங்கிகளாகிய வீதிசோதிப்பவர்களின் உதவியில்லாமலே உங்களூரை ங்கள் சுத்தமாய் வைத்திருக்கலாமே. மேலும் உங்கள் கிராமத்தை நீங்களே ஏன் சுத்தி செய்யக் கூடாது?

**கிராமவாசிகள்:** நாங்கள் மிராசுதாரர்கள். கிராமத்தைச் சுத்திசெய்யும் தொழில் ஊழியக்காரனுடையதே அன்றி எங்களதல்ல.

**சாக்ரடீஸ்:** ஓ! கிராமத்தை அசுத்தம் செய்வது மிராசுதாரர்களின் தொழில்; அதைச் சுத்தம் செய்வது ஊழியக்காரர்களின் தொழில். அப்படித்தானே?

**கிராமவாசிகள்:** அதற்கென்ன சந்தேகம்?

**சாக்ரடீஸ்:** எது மிக்க கௌரவமான வேலை? ஒரு வஸ்துவை அசுத்தப்படுத்துவதோ அல்லது அதைச் சுத்தம் செய்வதோ?

**கிராமவாசிகள்:** சுத்தம் செய்வதுதான் கௌரவமான காரியம். அதற்கென்ன சந்தேகம்?

**சாக்ரடீஸ்:** இப்படியானால், வீதி சோதிப்பவன் உங்களைவிட உயர்குலத்தான் என்கிறீர்களா?

**கிராமவாசிகள்:** ஒருபொழுதுமில்லை.

**சாக்ரடீஸ்:** அப்பொழுது உங்கள் கிராமத்தை நீங்களே ஏன் சுத்தம் செய்துகொள்ளக்கூடாது?

**கிராமவாசிகள்:** அப்படிச் செய்வது எங்களுக்கு வழக்கமில்லை.

**சாக்ரடீஸ்:** அசுத்தம் செய்யும் வழக்கத்தை மாத்திரம் ஏன் ஏற்படுத்திக்கொள்ளுகிறீர்கள்? அவனவன் செய்த கருமத்திற்குத் தகுந்தவாறு பலன் அனுபவிப்பானென்பது இவ்வுலக தர்மமென்பது உங்களுக்குத் தெரியாதா? ஆகையால் எவன் கிராமத்தை அசுத்தப்படுத்துகிறானோ அவன்தான் அதைச் சுத்தப்படுத்த வேண்டும். உங்கள் மதம் உங்களைச் சுத்தமாயிருக்க வேண்டாமென்று சொல்லுகிறதோ?

**கிராமவாசிகள்:** ஒருகாலுமில்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் உங்களூரை நீங்களே யேன் சுத்தம் செய்யக்கூடாது. நீங்களே சுத்தம் செய்ய வேண்டுமென்று ஏற்பட்டால், கிராமத்தை அசுத்தம் செய்ய அஞ்சுவீர்கள். மேலும் நீங்கள் கிராமத்தினின்றும் அப்புறப்படுத்துபவை எல்லாம் எருவாக உபயோகப்படப்போகின்றன. ஆகையால் எவ்வளவுக் கெவ்வளவு ஊரைப் பெருக்கி அசுத்தத்தை அப்புறப்படுத்துகிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு எரு உங்களுக்கு அதிகமாகிறது. எரு சேர்ப்பது விவசாயத் தொழிலல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம்; அது விவசாயத்தொழிலில் முக்கியமான விஷயம்.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் அதை வீதி கூட்டுவது என்பதற்குப் பதிலாய் எரு சேர்ப்பது என்று சொன்ஞல், அது மிராசுதாரர்கள் செய்யத்தகுந்த கௌரவமான தொழிலாகுமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படிச் செய்யலாம்.

**சாக்ரடீஸ்:** இனிமேல் கிராமத்தைச் சுத்தம்செய்தல் என்கிற பேச்சை விட்டுவிடுங்கள்; ஒவ்வொரு மிராசுதாரரும் ஒவ்வொரு தினமும் அவரால் கூடியவளவு எரு சேர்க்க வேண்டுமென்கிற ஏற்பாடு வைத்துக் கொள்ளுங்கள். இப்படிச் செய்வீர்களானல் உங்கள் கிராமம் இனி ஒருபொழுதும் அசுத்தமாயிராது.

**கிராமவாசிகள்:** அப்படியே செய்ய முயற்சிசெய்கிருேம், சாக்ரடீஸாரே.

**சாக்ரடீஸ்:** நாம் இதுவரையில் பேசியதிலிருந்து ஏற்படுவது என்ன? உண்மையான மிராசுதாரன் தன் கிராமத்திற்குத் தானே யஜமாஞக நினைக்கவேண்டும்;

கிராமம் அசுத்தமானுல் அவனே சுத்தம் செய்ய வேண்டியதாக இருக்குமாகையால், அதை எவ்விதத்திலும் அசுத்தப்படுத்தாமலிருக்க முயற்சி செய்ய வேண்டும். ஊழியக்காரர்களையே நம்பியிருப்பவர்கள் அசுத்தத்தினுல் அருவருப்படையாதவர்களென்றே நினைக்கவேண்டும். எவனொருவன் தான் செய்த அசுத்தத்தைத் தானே சுத்தப்படுத்த வேண்டியதாயிருக்குமென்று அறிகிருனே, அவன் தன்னுல் கிராமம் அசுத்தப்படாதபடி வெகு ஜாக்கிரதையாய் இருப்பான். ஆகையால் ஒரு உண்மையான மிராசுதாரன்,கிராமம்அசுத்தமாயிருந்தால் வியாதிஉண்டாகுமென்பதையும், எருவிட்ட புலங்கள் நன்ருய் விளையும் என்பதையும் நன்கறிந்து, எருவைச் சேர்க்கிருன். மேலும் கிராமத்தைச் சுத்தம் செய்வதென்ருல் எரு சேர்ப்பதுதானென்றறிந்து இதரர்களுடைய உதவியை எதிர்பார்க்காமல் தானே கிராமத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுவான்.

இப்படிச் சொல்லி முடித்த உடனேயே திடீரென்று சாக்ரடீஸ், 'நரகல் நாற்றம் நாறுகின்றதே, அதென்ன ?' என்று கேட்டார்.

**கிராமவாசிகள்** : நாங்கள் காலை வேளையில் மலஜலத்திற்கு வயப்புறம் போகிற வழக்கம். அதினுல்தான் அந்த நாற்றம்.

**சாக்ரடீஸ்** : காற்று வீசுகிறதினுல் இந்நாற்றம் எப்பொழுதும் ஊரைச் சூழ்ந்துகொண்டே இருக்கிறது. ஈக்கள் முதலில் இவ்வசுத்தத்தின் மீது உட்கார்ந்து பிறகு குழந்தைகளின் கண்களின்மீது உட்காருகின்றன. இக்குழந்தைகளின் கண்கள் இதனுல்தான்

கெட்டுப்போகின்றன என்று உங்களுக்குத் தெரிகிற தில்லை. இந்த ஈக்கள் உங்கள் சாப்பாட்டின்மீதும் உங்கள் குழந்தைகளின் கண்களின்மீதும் உட்காருவ தற்குமுன், அவைகள் கால்களிலிருக்கும் செருப்பைக் கழற்றிவைத்துக் கால்களைக் கழுவி வருகின்றன என்று ஒருவேளை நீங்கள் நினைக்கிறீர்கள் போலும்!

**கிராமவாசிகள்:** இம்மாதிரிதான் நாங்கள் அனேக கால மாய்ச் செய்து வருகிறோம். இதுதான் எங்கள் வழக்கம்.

**சாக்ரடீஸ்:** அதோ வெட்டியிருக்கிற குழிகளை ஏன் நீங்கள் உபயோகப்படுத்தக்கூடாது? அக்குழிகளுக் குக் குறுக்கே இரண்டு பலகைகளைப் போட்டுச் சுற்றி லும் சுவரெடுத்துவிட்டால், அது நல்ல மலங்கழிக்கு மிடமாகின்றது. நீங்கள் தினம் காலையில் தெருவில் கொட்டும் சாம்பலை இக்குழிகளில் நீங்கள் உட்கார்ந் தெழுந்த பிறகு கொட்டலாமல்லவா? நரகல் நல்ல எரு. ஆகையால் அக்குழிகளை மலங்கழிக்கு மிட மாக்கி அவைகளில் சாம்பலையும் போட்டீர்களானால், அவை உங்கள் புலங்களுக்கு உயர்ந்த எருவாகும். உங்கள் கிராமத்தில் துர்நாற்றமு மிராது; சாம்பற் றாசுகளும் நாள் முழுவதும் இப்பொழுதைப்போல் உங்கள் கண்களிலும் போஜனத்திலும் பறந்துவந்து விழா.

**கிராமவாசிகள்:** அப்படியே செய்கிறோம், சாக்ரடீ ஸய்யா.

**சாக்ரடீஸ்:** அழுக்கையும் அசுத்தத்தையும் தொட உங்கள் மதம் உங்களை விடுவதில்லையென்று சாக்குச் சொல்லுகிறீர்கள். ஆனால் நீங்கள் அவைகளை உண

ணவும், குடிக்கவும் சுவாசத்தோடு உட்கொள்ளவும் கூடாதென்று அம்மதம் தடுக்கவில்லையோ? காற்றடிக்கும்போதும், ஆடு மாடுகள் கிராமத்தில் செல்லும்பொழுதும், தரையில் படிந்திருக்கும் தூசுகளெல்லாம் மேல்கிளம்புகின்றன. அத்தூசுகளைச் சுவாசத்துடனும், ஆகாரத்துடனும், பருகும் நீருடனும் நீங்கள் உட்கொள்ளுகிறீர்கள்.

**கிராமவாசிகள்:** இனி எங்கள் மதம் எங்களை அசுத்தமாயிருக்கச் சொல்லுகிறதென்று ஒருபொழுதும் சாக்குரையோம். எங்கள் மதம் எங்களைச் சுத்தமாய்த்தான் இருக்கச் சொல்லுகின்றது. இனி நீங்கள் சொல்லுகிறபடி எங்கள் கிராமத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறோம். எமது வயல்களுக்கு அதனால் அதிக எருவும் கிடைக்கும்; அதனால் வயல்களும் செழுமையாய் விளைந்து எங்களுக்கு வேண்டிய தானியங்களைக் கொடுப்பதோடு எங்கள் மாடுகளுக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுக்கும்.

**சாக்ரடீஸ்:** சரி. அப்படி நடந்துகொண்டீர்களானால் உங்கள் கிராமம் மனிதர்கள் வசிக்கவும் குழந்தைகள் பிறந்து வளரவும் தகுந்த ஊராகிவிடும். நமஸ்காரம், நான் போய் வருகிறேன். இங்கு வீசும் துர்நாற்றத்தினால் என் தலை சுற்றுகிறது.

**கிராமவாசிகள்:** போய்வாருங்கள், சாக்ரடீஸாரே. நீங்கள் மறுபடியும் எங்களூருக்கு வருவதற்குமுன், நீங்கள் தங்கியிருக்கத்தகும்படி இக்கிராமத்தை நன்றாய்ச் சுத்தம் செய்து விடுகிறோம்.

# செயலற்றதன்மை அல்லது 'தாமே ஆகின்றன'

ஒருநாள் சாயங்காலம் சாக்ரடீஸ் ஒரு கிராமத்திற்குள் வந்து ஒரு கயிற்றுக் கட்டிலின்மீது உட்கார்ந்தார். அவரைப் பார்த்தால் ஏதோ மனக்கலக்க மடைந் திருப்பவர்போல் காணப்பட்டது. கிராமவாசிகள் அவரைச் சூழ்ந்துகொண்டு, 'சாக்ரடீஸய்யா! உங் களைப் பார்த்தால் மனக்கலக்கமடைந்தவர்போல் காணப்படுகின்றதே; நீங்கள் வருத்தப்படுவதற்கு என்ன காரணம்?' என்று வினவினார்கள்.

**சாக்ரடீஸ்:** 'ஆம், நீங்கள் சொல்லுகிறபடி மனவருத்த மாய்த்தானிருக்கின்றது. நீங்களெப்பொழுதும் உங் கள் தரித்திர நிலைமையைப்பற்றி முறையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் வரும் வழியில் உங்கள் புலங்களிலுள்ள பயிரை எலிகள் தின்பதையும், புல மெங்கும் எலிப்பாழிகளிருப்பதையும் கண்டேன், அவ்வெலிகள் நான் சமீபத்தில் செல்வதைக்கூட கவனியாது பயிர்களைக் கடித்துத் தின்றுகொண்டிருப் பதையும் பார்த்தேன்' என்றார்.

**கிராமவாசிகள்:** எல்லாம் உண்மையே. நாங்களென்ன செய்யலாம்?

**சாக்ரடீஸ்:** அதைவிட்டு இன்னம் சற்றுதூரம் வந் தேன். அங்கு உங்கள் பசுமாடுகள் மேய்ச்சலில்லா மல் கட்டாந்தரையில் நின்றுகொண்டிருந்தன. சமீ பத்தில் முட்செடிப் புதர்களடர்ந்த கிராமப்பொது நிலமிருந்தது. மாட்டுக்காரப் பையனை, 'அதோ வெகு செழுமையாய்ப் பச்சென்று வளர்ந்திருக்கும்

இடத்தில் ஏன் மாடுகள் மேயாமல் நின்று கொண்டிருக்கின்றன?' என்று கேட்டேன். நான் சொன்னதைக் கேட்டு அப்பையன் நகைத்தான். 'மாடு முட்செடிகளை மேயாதா என்ன?' என்று கேட்டேன். அவன் ஏதும் பதிலுரைக்காமல் எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கவேண்டுமென்று நினைப்பதே போல் தன் நெற்றியை விரலால் தொட்டுக் காட்டினன்.

**கிராமவாசிகள்:** நீங்கள் அம்மாதிரியான கேள்வி கேட்டதிலிருந்து உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டுமென்று அவன் நினைத்தது ஆச்சரியமன்று.

**சாக்ரடீஸ்:** மாடுகள் முட்செடிகளையும் பூண்டுகளையும் தின்னமாட்டா என்று உங்களுக்குத் தெரிந்திருந்தால் ஏன் அவைகளை விதைத்துப் பயிராக்குகிறீர்கள்?

**கிராமவாசிகள்:** அவைகள் தாமே உண்டாகின்றன. சாக்ரடீஸ் இதற்குப் பதிலுரைப்பதற்குள் நாய்கள் ஒன்ருெடொன்று சண்டைசெய்துகொண்டு குலைக்கும் பேரரவம் கேட்டது. அதே சமயத்தில் மனிதனொருவன் ஓடிவந்து, 'நாயொன்று பைத்தியம் பிடித்து ஒரு குழந்தையைக் கடித்துவிட்டது' என்று சொன்னுன். இதையெல்லாம் கேட்ட சாக்ரடீஸ், 'இந்நாய்களால் உங்களுக்கு ஏதாவது பிரயோசனமுண்டோ?' என்று கேட்டார்.

**கிராமவாசிகள்:** ஒரு பயனும் இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல் ஏன் அவைகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் நாய்களை அனேகம் குட்டிகளுடன் காண்கிறேன்.

அவைகள் உங்களுக்கு உபயோகமற்றவைகளாயிருந் தால் அவைகளை வைத்திருப்பானேன்?

**கிராமவாசிகள்:** 'அவைகள் தாமாகவே வந்து வளர் கின்றன' என்றார்கள்.

**சாக்ரடீஸ்:** ஓ, கிராமவாசிகளே! இக்கிராமத்திற்குச் சொந்தக்காரர்கள் நீங்கள்தானே?

**கிராமவாசிகள்:** அதற்கென்ன சந்தேகம்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் 'தாமே ஆகின்றன' என்பதற்கு என்ன அர்த்தம்? உங்களுக்கு எலிகள் வேண்டாவிடில் அவைகளை ஏன் கொன்றுபோடக் கூடாது? நாய்கள் வேண்டாமாயின் அவைகளை ஏன் உடனே அடித்துப்போடக்கூடாது? உபயோகமில் லாப் பூண்டுகளும் முட்செடிகளும் உங்கள் நிலங் களில் தேவையில்லாவிடில், அவைகளை ஏன் நீங்கள் வெட்டி எறியக்கூடாது? இவ்வூரிலுள்ள நாய்களை எல்லாம் கொன்றுவிட்டு, நீங்கள் வேண்டின் ஒவ் வொருவரும் ஒவ்வொரு நாயை வைத்துக்கொண்டு அதைச் சரியாய்ப் போஷித்துப் பழக்கி அது உங் களுக்கு நன்றியுள்ள வேலைக்காரனாகவும், நல்ல தோழனாகவும் ஆகும்படி ஏன் செய்துகொள்ளக் கூடாது? எலிகளை எல்லாம் கொன்று உங்கள் வயல்கள் நன்றாய் விளைந்து நல்ல மாசூல் தரும்படி செய்து கொள்ளலாமன்றோ? நல்ல மிராசுதாரர் மேய்ச்சலிடங்களில் முட்செடிகளையும் பூண்டுகளையும் வளரவிடார்; அவருக்கு உபயோகமுள்ள மரங்களை யும் செடிகளையும் மாத்திரந்தான் வைத்து வளரவிடு வார்; பயிர்களை எலிகள் தின்னும்படி பார்த்திருக்க மாட்டார்; அவ்வெலிகளைக் கொன்று போடுவார்;

ஊரில் இத்தனை பறநாய்களையுமிருக்க விடமாட்டார்; நாய்களை முற்றிலும் இல்லாமலேயாவது செய்வார்; அல்லது சரியாய்ப் பழக்கப்பட்ட நாய்களை மாத்திரம் வைத்திருப்பார். நீங்கள் உங்கள் வயல்களில் எலிகளை வரவிட்டீர்களானால், நீங்கள் அவ்வெலிகளின் குடிகளாகிறீர்கள். எலிகளே உங்கள் மாகூலை அறுவடை செய்துகொண்டு போய்விடும். உங்கள் கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருக்கும் தொழிலை வீதி சோதிப்பவ னிடத்தில் ஒப்புவித்தீர்களானால், நீங்கள் வீதி சோதிப்பவர்களின் அடிமைக ளாகின்றீர்கள். பறநாய்கள் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கும்படி வைத்துக்கொண்டீர்களானால், அந்நாய்களே உங்களைக் கேலி செய்யும். மாடுகள் மேயும் மைதானத்தில் முட்செடிகளை வளரவிட்டீர்களாகில், உங்களை முட்செடிகளுக்குப் பயந்தவர்க ளென்றுதான் சொல்லவேண்டி யிருக்கும்.

## கிராம நாய்கள்

கிராமவாசிகள் தன்னைச் சூழ்ந்துவரச் சாக்ரடீஸ் கிராமத்தின் வழியாய்ச் சென்றார். அவர் கிராமத்திற்கு வெளியே கொஞ்சதூரம் சென்றதும் தன்னுடன் வரும் கிராமவாசிகளைப் பார்த்துச் சொல்லலானார்:

'உங்கள் கிராமத்தை விட்டு இவ்வளவு தூரம் வந்த பிறகே துர்நாற்றமும் தூசும் கலக்காத நல்ல காற்று நமக்குச் சுவாசிக்கக் கிடைத் திருக்கிறது. ஆகையால், இங்கு உட்கார்ந்து சற்றுப் பேசுவோம். இன்று உங்களுடன் ஒரு புதிய விஷயத்தைப்பற்றிச்

சில சமாசாரங்களைக் கேட்க விரும்புகிறேன். உங்கள் கிராமத்தில் நாய்களனேக மிருப்பதைக் கண்டேன். ஆனால், அவைகளுக்கு எஜமான்க ளிருப்பதாகவாவது அல்லது அவைகள் ஏதாவது உபயோகமுள்ள வேலை செய்கிறதாகவாவது தெரியவில்லை. மேலும் அவைகள் பெரும்பாலும் அழுக்கால் மூடப்பட்டு, சிரங்கு, சொறி, புண் முதலான வியாதிகள் பிடித்துக் கேவல ஸ்திதியி லிருப்பனவாகக் காணப்பட்டன. உண்மையில் அவைகள் உங்கள் குழந்தைகளைவிடக் கேவல நிலைமையிலிருந்தன என்ருல், அதற்குமேல் சொல்ல வேறு என்ன விருக்கிறது? அவைகளை நீங்கள் கவனிக்கிற தில்லையா சொல்லுங்கள்.'

**கிராமவாசிகள்**: சாக்ரடீஸவர்களே, அதற்கு எங்களுக்கு அவகாச மில்லை, அன்றியும், அவை கேவலம் உபயோகமற்ற நாய்கள்.

**சாக்ரடீஸ்**: அப்படியானல், நீங்கள் அவைகளை ஏன் வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்?

**கிராமவாசிகள்**: அதற்கு நாங்க ளுத்தரவாதிகளல்ல; அவைகள் தாமாகவே வந்து இருக்கின்றன.

**சாக்ரடீஸ்**: நண்பர்களே! எத்தனை தடவை உங்களூரில் நடக்கிற விஷயங்களுக் கெல்லாம் நீங்களே தான் உத்தரவாதி என்று நான் விளக்கிக் காட்டுகிறது? இவ்வூருக்கு எஜமானர்கள் நீங்களே தவிர நாய்களல்ல; ஆகையால், அவைகள் இவ்வூரி லிருப்பதற்கும், அவைகளது நடத்தைக்கும் நீங்கள்தான் உத்தரவாதிகள். நீங்களே சற்றுமுன்பு அவைகள் உபயோகமற்றவைகளென் றுரைத்தீர்கள். அவைகள் ஊரில் திருடும் சோற்றையும், இடும் கூச்சலையும், பைத்தியம்

பிடித்துக் கடித்தா லதனுல் விளையும் தீங்கையும் கவ னிக்குங்கால், அவைகளை உபயோகமற்றவை யென்று



நாய்களின் நடத்தைக்கு நீங்கள்தான் உத்திரவாதிகள்

சொன்னுல் போதுமா? அவைகள் மிக்க தொந்தரவு கொடுக்கின்றவைகளென்றல்லோ சொல்லவேண்டும்?

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்வது கொஞ்சமேனும் பிசகில்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல், ஏன் அவைகளை நீங்கள் அடித்துப் போடக்கூடாது?

**கிராமவாசிகள்:** மதமும் ஆசாரமும் அதை ஒப்புக்

வெகு அன்புடன் நேசித்து அவனை எப்பொழுதும் பாதுகாத்து வருகின்றது. அது திருடர்கள் வராதபடி வீட்டைக் காக்கும்; வயல்களை அழித்து வீட்டிலுள்ள தானியங்களைத் தின்னும் எலிகளை அது கொல்லுகின்றது; எஜமானன் வெளியே வேலைக்குப் போயிருக்கும் காலத்தில் அவனது ஆகாரத்தையும், உடுப்புகளையும், சொத்துக்களையும் பத்திரமாய்ப் பாதுகாக்கின்றது. அதை எந்த வேலையும் செய்யப் பழக்கக்கூடும். முக்கியமாய்க் குடியானவர்களுக்கு அது ஒரு பெரும் துணைபோ லிருக்கும். ஒரு நாய்க்கு ஆட்டு மந்தை அல்லது மாட்டு மந்தையைப் பார்த்துக்கொள்ளும் படிக்கும், அவைகள் வழிதப்பிப் போகாமல் தடுக்கும் படிக்கும், ஆடுமாடுகளை மடக்கி வீடு கொண்டுவந்து சேர்க்கும்படிக்கும் சுலபமாய்ப் பழக்கிக் கொடுக்கலாம். இன்னும் அனேகவிதங்களில் நாய் நமக்கு உபயோகப்படும். ஆனால், நீங்கள் சாதாரணமாய் என்னென்ன உபயோகங்கள் நாயினால் நமக்கு உண்டு என்பதை அறிந்துகொண்டீர்க ளானால், இன்னும் என்னென்ன விதங்களில் அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் நீங்களே நாளடைவில் அறிந்துகொள்ளுவீர்கள். இவ்வளவு வேலைகளையும் நாய் தன் எஜமானன் தனக்கிடும் உணவிற்காகவும், தன்னிடத்தில் காட்டும் அற்ப அன்பிற்காகவுமே செய்யும், இவ்விதமாய் அதற்கு நீங்கள் சிறிய உபகாரத்தைச் செய்து அதன் பலனாக அனேகவிதமான பெரும் உதவிகளை அடையவேண்டு மென்கிற நோக்கத்துடன் கடவுள் நாயைப் படைத் திருக்கிறாரென்பதற்கு ஏதாவது சந்தேகமுண்டோ?

**கிராமவாசிகள்:** ஐயா, நீங்கள் சொல்வது சரியே, இது வரையிலும் இதர விஷயங்களைப்போலவே இதுவும் எங்களுக்குப் புலப்படாம லிருந்திருக்கிறது. கடவுள் எல்லாவற்றையும் எங்களுபயோகத்திற்கென்றேதான் உண்டுபண்ணி யிருக்கின்றார்; இதை அறியாதவர்களாயிருந்திருக்கிறோம்.

# உங்கள் ஸ்திரீகளைக் கௌரவப் படுத்துங்கள்

சாக்ரடீஸ் சந்தோஷ முகத்தோடும் தனக்குள் தானே சிரித்துக்கொண்டும் கிராமச் சாவடிக்கு வந்தார். அவர் இம்மாதிரி ஒருபொழுதும் காணப்பட்டதில்லையாகையால், கிராமப் பெரியோர்களுக்கு வெகு ஆச்சரிய முண்டாகி, அவருடனெப்படி சம்பாஷணையைத் துவக்குவது என்பதைப்பற்றி அவர்கள் சற்று யோசித்துப் பின்வருமாறு அவரை வினவினார்கள்.

**கிராமவாசிகள்:** வந்தனம் ஐயா! சாக்ரடீஸ் அவர்களே. என்ன விசேஷம் ஐயா? சுத்தமான கிராமத்தைக் கண்டீர்களா, அல்லது அழுக்கும் ஆபரணமுமில்லாக் குழந்தையைப் பார்த்தீர்களா, அல்லது படித்த பெண்மகளொருத்தி எங்கேயாவது புலப்பட்டாளா? ஒருநாளு மில்லாத இந்த மகிழ்ச்சிக்கு வேறு என்ன காரணம் பெரியவரே?

**சாக்ரடீஸ்:** நீங்கள் சொன்னது எதுவுமல்ல, சகோதரர்களே. இன்று காலையில் ஒரு பெரும் கஷ்டத்தி லகப்பட்டுக்கொண்டேன். (இப்படிச் சொல்லிக்கொண்டே மறுபடியும் தனக்குள்ளே சிரித்துக்கொண்டார்.)

**கிராமவாசிகள் :** உங்கள் களிப்புக்குக் காரணத்தை எங்களுக்கும் சொல்லுங்கள், பெரியவரே. எவ்வளவோ தடவைகளில் உங்கள் கோபத்திற்கு நாங்கள் பாத்திரரா யிருந்திருக்கின்றோம். ஆகையால், எப்பொழுதாவது நீங்கள் நகைக்கும்படி நேரிட்டால் அந் நகையில் நாங்களும் கலந்துகொண்டு உங்களுடன் சந்தோஷப்படுவது நியாயமன்றோ ?

**சாக்ரடீஸ் :** நிரம்ப சரி (உரத்துச் சிரித்துக்கொண்டு), அதைப்பற்றிச் சொல்லுகிறேன். ஆனால், கேட்ட பிறகு என்னிடத்தில் கோபம் கொள்வதில்லை என்று எனக்கு முதலில் வாக்குறுதி கொடுங்கள்.

**கிராமவாசிகள் :** இல்லை இல்லை சாக்ரடீஸ் அவர்களே. இந்தச் சமயம் நீங்களெது சொன்னபோதிலும், நாங்கள் கோபித்து உங்கள் சந்தோஷத்தைக் கெடுக்க மாட்டோம்.

**சாக்ரடீஸ் :** சரி; நடந்த சங்கதி இது: ராஜ்ய விவகார நிபுணர் ஒருவரைச் சந்தித்து அவருடன் அனேக சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தேன். முதலில் கொஞ்சநேரம் வரையில் சம்பாஷணை சஹஜமாய்த்தா னிருந்தது. வரவர அவருக்குக் கோபம் அதிகரித்து மிக்க மனவருத்தத்துடன், 'அநாதியான நாகரிகமும் கல்விப்பயிற்சியு முடைய எங்கள் பாரத மாதாவைத் தகுந்தபடி இப்பூமியி னிதரதேசத்தவர்கள் கௌரவப்படுத்துவதில்லை' என்று அவர் கூறினார். இதைக்கேட்ட நான் முட்டாள்தனமாய்க் குபீலென்று நகைத்தேன். இதனா லவரது கோபம் பின்னுமதிகரித்து, அவர் இதர தேசத்தவர்களையேயன்றி என்னையும் பழித்தார். அதற்கு நான், 'மன்னிக்கவேண்டும்,

மெம்பரவர்களே; நீங்கள் சொல்லிய வெகு ஆச்சரியமான வார்த்தைகளைக் கேட்டு என்னால் நகைக்காமலிருக்க முடியவில்லையே' என்றேன்.

'ஏன்' என்றார் அவர்.

'நீங்களே உங்களைக் கௌரவப்படுத்திக்கொள்ளாதபோது உலகத்தார் உங்களைக் கௌரவிக்கவேண்டுமென்று நீங்களெப்படி எதிர்பார்க்கக்கூடும்?' என்று மறுபடியும் நகைத்துக்கொண்டே சொன்னேன்.

'ஓ! நீங்கள் தீண்டாதவர்களைக் குறித்துச் சொல்லுகின்றீர்களோ? அது ஒரு பழைய கதையன்றோ? நீங்கள் நினைப்பதுபோல் அது அவ்வளவு முக்கியமான காரியமென்று எனக்குக் கொஞ்சங்கூட தோன்றவில்லை' என்று அவர் மறுமொழி யுரைத்தார்.

'தீண்டாதவர்களைப்பற்றிய விஷயமே நம் மெல்லோரையும் தலையைத் தொங்கப்போடும்படி செய்யத் தகுந்ததுதான். ஆனால் நான் குறிப்பிட்டுச் சொல்லியது அதுவல்ல' என்றேன்.

அதற்கவர், 'அப்படியானால் நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லியது எது?' என்று வினவினார்.

நான், 'உங்கள் ஜனத்தொகையில் பாதி ஸ்திரீகளே அன்றோ?' என்றேன்.

அவர் 'அது உண்மைதான்' என்றார்.

நான் 'ஆண்மக்க ளனைவரும் பெண்மகளிர் வயிற்றிற் பிறந்தவ ரன்றோ?' என்றேன்.

'ஆம், இவ்வித மூடத்தனமான கேள்விகளை ஏன் கேட்கிறீர்கள்?' என்று அவர் வினவினார்.

நான், 'ஆடு மாடுகளைவிட உங்கள் மகளிரை நீங்கள் கேவலமாக நினைக்கின்றீர்கள். இதைவிட்டு

அவர்களைத் தகுந்த மரியாதையுடன் நீங்களே நடத்தும் வரையில், உங்களை நீங்கள் கௌரவப்படுத்திக் கொள்ளுகிறீர்களென்று எப்படிச் சொல்லுவது? நீங்களும் உங்களை இதரர்கள் கௌரவப்படுத்த வேண்டுமென்று எப்படி எதிர்பார்க்கக்கூடும்?' என்று பதிலுரைத்தேன்.

இதைக்கேட்ட மெம்பரவர்கள் முன்னிலும் மதிக கோபங்கொண்டவராய் என்னைத் தூஷிக்கத்துவக்கியதோடு, புராதன நாகரிகங்கள்போன்ற விஷயங்களைப் பற்றி உரத்த குரலோடு பேச வாரம்பம் செய்தார். நான் உடனே அவ்விடத்தைவிட்டு விரைவாய் வந்து விட்டேன்.

இதைக்கேட்ட கிராமவாசிகளில் இளம்பிராயமுள்ள ஒருவர், 'இதில் நீங்கள் நகைப்பதற்குக் காரணமெதுவு மிருப்பதாக எங்களுக்குத் தோன்றவில்லை. சற்று விவரித்துச் சொல்லுங்கள் கேட்போம்' என்று வெகு முடுக்காய்ச் சொன்னார்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு மனிதன் ஒரு பசுவைக் கொன்றுனால், கலகமுண்டாகு மல்லவோ?

**கிராமவாசிகள்:** அனேகமாய் உண்டாகலாம்.

**சாக்ரடீஸ்:** ஒருவன் தன் மனைவியை வெகு கடூரமாய் நடத்தியதினால் அவளிறந்தாள், அல்லது தற்கொலை புரிந்தாள், அல்லது ஓடிப்போய்விட்டாளென்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுதுகூட ஊரில் கலகமுண்டாகுமோ?

**கிராமவாசிகள்:** ஒருநாளுமில்லை. நாங்கள் அவனுடைய நிலைமையைப்பற்றிப் பரிதாபப்படுவோம். அவன்

திரும்பவும் கலியாணம் செய்துகொள்வதா யிருந்தால் நாங்க ளெல்லோரும் போயிருந்து அதை நடப்பிப் போம்.

**சாக்ரடீஸ்:** உங்களது பசு கன்றுபோடும் காலத்தில் யாரைக் கூப்பிடுவீர்கள்?

**கிராமவாசிகள்:** அவ்விஷயம் நன்கு தெரிந்த ஒரு குடி யானவனைக் கூப்பிடுவோம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் மனைவியர்கள் பிரசவிக்கிற காலத் தில் யாரைக் கூப்பிடுவீர்கள்?

**கிராமவாசிகள்:** அம்பட்டச்சியைக் கூப்பிடுவோம்.

**சாக்ரடீஸ்:** அம்பட்டச்சி ஊரிலுள்ளவர்களில் அசுத்த மான கீழ்வகுப்பைச் சேர்ந்தவ ளல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** பிரசவிப்பதற்கு வீட்டில் அதிக இருட் டான அறையையும், பிரசவிப்பவ ளுபயோகத்திற்கு வெகு அழுக்குப்பிடித்த பழைய துணிகளையுமல்லவோ கொடுப்பீர்கள்?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** எங்கள் ஸ்திரீகள் கோஷா என்று நீங்கள் பெருமை பாராட்டுகிறீர்களே தவிர, அவர்கள் மல ஜலம் கழிக்க ஏற்ற ஏற்பாடுக ளொன்றும் செய்யா மல், அவர்களை இரவு வரும்வரையிலும் தவிக்க விட்டுப், பிறகு கிராமத்திற்கு வெளிப்புறத்திற்குக் கள்ளத்தனமாய்ப் போகும்படி செய்கிறீர்கள். பகலில் அவசியமாக் மலங்கழிக்க வேண்டியிருந்தால் வெட்க த்துடன் மறைவிடத்தைத் தேடிச் செல்லும்படி செய்கிறீர்கள். இரவானாலும் பகலானாலும் இப்படிப் பயந்து வெட்கப்பட்டுக்கொண்டு செல்லுமிடத்திலும்

நிம்மதியில்லாமல் அவர்கள் எந்தச் சமயத்தில் யார் வந்துவிடுவார்களோவென்று திகிலடைந்த நாய்களைப் போலிருக்கவேண்டியதா யிருக்கிறது. நான் சொல்வதி லேதாவது பொய்யுண்டோ? கிராமவாசிகளே!

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்வது சரியே. எங்கள் தப்பு நடத்தைகளி லொன்றாகிய இதைக் கண்டு பிடித்து நன்றாய் எடுத்துக் காட்டினீர்கள்.

**சாக்ரடீஸ்:** உங்கள் பெண் குழந்தைகளைச் சரியான மாதிரியாய் வளர்க்கவும், அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கவும் ஏதாவது ஏற்பாடுகள் செய்திருக்கின்றீர்களா?

**கிராமவாசிகள்:** ஒன்றுமில்லை.

**சாக்ரடீஸ்:** ஒருவனுக்குப் பெண்குழந்தை பிறந்தால், அவனது துரதிருஷ்டத்தைக் குறித்துப் பரிதாபப்படுகிறீர்க ளல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** வைத்தியர்கள் ஆண் குழந்தைகளைக் காப்பாற்றுவதைவிட பெண்குழந்தைகளைக் காப்பாற்றுவது சுலபமென்கிறார்க ளென்றாலும், உண்மையில் உங்கள் பெண்குழந்தைகள் சிசுக்களாக இருக்கும் பொழுதும், சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுதும் வெகு துன்பங்களுக்கு ஆளாகிறார்க ளன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், நாங்கள் எங்கள் பெண்குழந்தைகளைச் சரியாய்க் கவனிக்கிறதில்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டியதாய்த்தா னிருக்கின்றது.

**சாக்ரடீஸ்:** மேலும் இல்லாண்மையைப் பற்றியாவது, குழந்தைகளை வளர்க்கும் விஷயத்தைப் பற்றியாவது, அல்லது கணவர்களைப் போஷிக்கும் விஷயத்தைப்

பற்றியாவது அவர்கள் அறிவதற்கு முன்னே அவர்களுக்குக் கலியாணஞ் செய்வித்து, பள்ளிக்கூடம் போய்க் கற்றுத் தங்கள் புத்தியையும் தேகத்தையும் படிப்பதினாலும் விளையாடுவதினாலும் விருத்திசெய்து கொள்ளவேண்டிய காலத்தில் அவர்களைக் குழந்தைகளைப் பெறச்செய்கிறீர்கள்.

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்வ தெல்லாம் எங்களிலனேகர் சம்பந்தப்பட்டவரையில் உண்மையே. அவைகளில் சில விஷயங்கள் எங்க ளெல்லோரைப் பற்றியுமே சொல்லலாம்.

**சாக்ரடீஸ்:** உங்களி லனேகர் உங்கள் ஸ்திரீகளை அவர்கள் வாழ்நாள் முழுவதும் வீட்டிற்குள்ளேயே மூடி வைக்கிறீர்கள்.

**கிராமவாசிகள்:** ஆம், எங்களில் சிலர் 'கோஷா' என்னும் வழக்கத்தை அனுசரிப்பவர்கள்தான்.

**சாக்ரடீஸ்:** கோஷா வழக்கத்தை அனுசரிக்காத அனேகரும் அவர்கள் கொஞ்சம் படிப்பையாவது பணத்தையாவது அடைந்தார்களானால், அவர்களுடைய மாதர்களை வீட்டிலேயே அடைத்துப் போடுகிறார்க ளல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** வீட்டிலுள்ள பாடுகளையெல்லாம் படுவதும் குழந்தைகளை வளர்ப்பதும் ஸ்திரீகள் கடமையாயிருக்க, புருஷர்கள் வெற்றிலை மென்றுகொண்டோ அல்லது சுருட்டுப் பிடித்துக்கொண்டோ கவலையற்று இருக்கிறார்க ளல்லவா?

**கிராமவாசிகள்:** அதுவும் அனேகமாய் உண்மையே.

**சாக்ரடீஸ்:** உங்கள் மனைவியர் பெண்களே பெற்றுக்

கொண் டிருந்தார்களானல், அவர்கள்மேல் குற்றஞ் சொல்லி அவர்களைக் கடுமையுடன் நடத்துவதோடு,



வீட்டிலுள்ள பாடுகளையெல்லாம் படுவது ஸ்திரீகள் கடமையாயிருக்க, புருஷர்கள் சுருட்டு பிடித்துக் கொண்டிருக்கிருர்கள்

சில சமயங்களில் அவர்களைத் தள்ளிவிட்டு வேறு கலியாணம் செய்துகொள்வது முண்டன்ருே ?

**கிராமவாசிகள்:** அனேகமா யப்படித்தான் நடக்கிறது.

**சாக்ரடீஸ்:** நீங்கள் வசிக்குமிடம் அழுக்கும் அசுத்தமும் நிறைந்ததாக இருக்கின்றது. உங்கள் ஸ்திரீ

களுக்குக் குழந்தைகளைச் சரியாய் வளர்க்கவேண்டிய முறைகளைப்பற்றியும், வைசூரியைப் போன்ற சாதாரண வியாதிகள் குழந்தைகளுக்கு வராமல் எப்படித் தடுப்பது என்பதைப்பற்றியும் போதிக்க ஒருவித ஏற்பாடும் நீங்கள் செய்யவில்லை. ஆகையால், அவர்கள் குழந்தைகள் நோவுடன் அவஸ்தைப்படும் பொழுது அவைகளுக்குப் பால் கொடுத்து வருந்திக் கவனித்தும் அக்குழந்தைகள் மாள்வதைத் தாங்கள் பார்க்கும்படியாகிறது, அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், சாக்ரடீஸவர்களே, நீங்கள் எடுத்துக்காட்டிய குற்றங்களுக்கு நாங்கள் பாத்திரர்களென்று ஒப்புக்கொள்ளவேண்டியதா யிருக்கின்றது.

**சாக்ரடீஸ்:** நீங்கள் கொஞ்சம் முயற்சிசெய்து உங்கள் ஜீவித ஏற்பாடுகளைச் சீர்திருத்திக் கொண்டீர்களானால் இப்பொழுது நீங்களனுபவிக்கும் வியாதிகளில் பாதியை வராமல் தவிர்க்கக்கூடுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையோ?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படிச் செய்யக்கூடுமென்று தான் நினைக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் உங்கள் பெண்பிள்ளைகளைக் கல்வி கற்கும்படி செய்து, நன்றாய்ப் படித்து அவர்கள் வளர்ந்தபின் அவர்களுக்குக் கலியாணம் செய்வீர்களானால், அவர்கள் குழந்தைகளைச் சரியாய் வளர்க்கும் முறைகளை அறிந்திருப்பார்கள். அதனால், நோயாளிக் குழந்தைகளை இரவும் பகலும் கவலையுடன் கவனித்திருந்து கடைசியில் அவைகள் ஒன்றின்பின் ஒன்றாய் இறந்துபோவதனாலுண்டாகும் துக்கமும் கஷ்டமும் அவர்களுக்கு ஏற்படா.

**கிராமவாசிகள் :** பெரியவரே, நீங்கள் சொல்வ தெல்லாம் சரியே.

**சாக்ரடீஸ்:** அம்மை குத்துவதனு லுண்டாகும் பிரயோ ஜனத்தை அறிந்த ஒரு ஸ்திரீ, அம்மை குத்துகிறவர் வந்தால் தன் குழந்தையை மறைத்து வைப்பாளா?

**கிராமவாசிகள் :** ஒருபொழுதும் மறைத்து வைக்கமாட் டாள். தந்தையைவிட தாய்க்குத்தான் குழந்தையின் மீது அதிக ஆசை. ஆகையால், அம்மை குத்துவதின் உபயோகத்தை அவளறிந்தால் ஒருநாளும் தன் குழந் தைக்கு வைசூரி வரும்படி விடாள்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, உங்களுடைய ஸ்திரீகளை நீங்கள் கௌரவப்படுத்துவதில்லை. உங்கள் மாடுகளை விட அவர்களைக் கேவலமாய் நினைக்கிறீர்களென்ற போது, நான் பொய்யான விஷயமொன்றுஞ் சொல்ல வில்லையென்று இப்பொழுது உங்களுக்கு ஏற்படு கிறதல்லவா?

**கிராமவாசிகள் :** நீங்கள் சொல்லும் விஷயங் கொஞ்சங் கூட பிசகில்லை, சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** மிராசுதாரர்களே, நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். ஸ்திரீகள் உங்களுக்காக உழைப்பதற்கும், உங்களால் மிரட்டப்பட்டுக் கொடூர மாய் நடத்தப்படுவதற்கும், கடவுளா லுங்களுக்குக் கொடுக்கப்பட்ட அடிமைகளென்று நினைப்பதை விடுங்கள்; அவர்களும் புருஷர்களுக்குச் சமமானவர் களென்று கருதி, அவர்களுக்குக் கல்வி கற்பித்துச் சிரத்தையுட னவர்களைப் போஷியுங்கள்; அவர்களை உங்கள் வீடுகளைச் சுகமாகவும் சந்தோஷமாகவும் வைத்திருக்க உங்களுடன் ஒத்துழைக்குங் கூட்டாளி

களாக நினைத்து அதன்படி அவர்களிடத்தில் நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் வீடுகள் சந்தோஷமும் சுகமும் நிறைந்து விளங்கும். நீங்களும் உலகத்தவர்களால் கௌரவப்படுத்தப்படுவீர்கள்.

## நல்ல வழக்கங்களும் உபாத்தியாயரின் உயர் நோக்கங்களும்

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸவர்களே, நீங்கள் எல்லாவற்றையும் மாற்றி இக்கிராமத்தையே தலைகீழாக ஆக்கப் பார்க்கிறீர்கள்.

**சாக்ரடீஸ் :** இல்லை, நானப்படிச் செய்யக்கருதவில்லை, மிராசுதாரரே. ஆனால் பிரத்தியக்ஷமான தவறுகளையும் கொடுமைகளையும் காணின், என் மனம் கொதிப்பதினால் அவைகளைப்பற்றிப் பேசவேண்டியதாயிருக்கின்றது.

**கிராமவாசிகள் :** நீங்களெப்பொழுதும் எங்களிடத்தில் தப்பு கண்டுபிடித்துக்கொண்டும், எங்களைக் கடிந்து கொண்டுந்தானிருக்கிறீர்கள்.

**சாக்ரடீஸ் :** ஆம், நான் தப்புகளநேகங் கண்டுபிடித்துக்கொண்டுதானிருக்கிறேன். ஏனெனில் என் கண்களுக்குத் தப்புகளநேகம் புலப்படுகின்றன.

**கிராமவாசிகள் :** ஆனால் நீங்களெங்களிடத்தில் நன்மை ஒன்றுகூட கண்டதில்லையா ?

**சாக்ரடீஸ் :** அநேக நல்ல குணங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் அவைகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதற்கவசியமில்லை. அவைகள் நல்ல குணங்கள். அந் நல்ல குணங்களைப் பார்க்க எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கின்றது. நோயுள்ளவர்களுக்கே

வைத்தியர்கள் வேணுமேயொழிய நோயில்லாதவர் களுக் கெதற்கு?

**கிராமவாசிகள் :** சரி. ஆனால் நோயில்லாதவர்களையு மப்போதைக்கப்போது வைத்தியர் பார்த்து வந்தா லொழிய, அவர்களு மொருசமயம் நோயாளிகளாகலா மன்றோ?

**சாக்ரடீஸ் :** ஆம், அதை ஒப்புக்கொள்ளுகிறேன். இப் பொழுது எனக்கு ஞாபகம் வருகின்றது. நீங்கள் உங்கள் நல்ல வழக்கங்களை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் மறந்து கைநழுவவிட்டு, கெட்ட வழக் கங்களை மாத்திரம் விடாமல் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதுவுமன்றி நூதனமான



நீங்கள் சுருட்டுப்பிடிக்கும் வழக்கத்தை வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொண்டீர்கள்

கெட்ட நடவடிக்கையை வெகு சீக்கிரத்தில் கற்றுக் கொள்ளுகிறீர்கள். நல்ல நடவடிக்கையானால் அது கொஞ்சத்தி லனுபவத்திற்கு வருவதில்லை. நீங்கள் சுருட்டுப்பிடிக்கும் வழக்கத்தை நீரைக்கண்ட வாத்

தைப்போல் வெகு சீக்கிரத்தில் கற்றுக்கொண்டீர்கள்; ஆனால், உங்கள் அசுத்தங்களைப் போட்டுவைக்கக் குழிகளை வெட்டும்படி உங்களைத் தூண்டுவது எவ்வளவு கடினமான காரியமா யிருந்தது !

**கிராமவாசிகள் :** ஆம். நல்ல வழக்கங்கள் படிவதும் நிலைத்திருப்பதும் வெகு கஷ்டம்தான். கெட்ட வழக்கங்களோ வெகு சுலபத்தில் படிந்துவிடுகின்றன ; எங்கள் பழைய நல்ல வழக்கங்கள் வெகு விரைவாய் மறைந்துபோகின்றன.

**சாக்ரடீஸ் :** ஆம் ; முற்காலத்தில் கிராமவாசி அற்ப ஆகாகரத்தைப் புசிப்பவனாயும், நல்லொழுக்கங்களையுடையவனாயு மிருந்தான். ஆனாலிப்பொழுதைய படிப்பும், மோட்டார் ரெயில் வண்டிகளும் அவனது நல்லொழுக்கங்களை எல்லாம் கெடுத்துவிட்டன ; மேலும் அவனது கெட்ட வழக்கங்களைச் சற்றும் மாற்றாது இன்னும் நூதன கெட்ட வழக்கங்களைக் கற்றுக்கொள்ள உதவி செய்திருக்கின்றன.

இப்படி பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவ்வூர் பள்ளிக்கூட உபாத்தியாய ரங்குவந்தார்.

**சாக்ரடீஸ் :** மாஸ்டரவர்களே, இது உம்முடைய கடமை.

**உபாத்தியாயர் :** அதென்ன சாக்ரடீஸ் அவர்களே ? நானிப்பொழுது என்னென்ன புது விஷயங்களைத் தெரிந்துகொண்டு போதிக்க வேணுமென்பதைப் பற்றியும், நானனுப்பவேண்டிய மாதாந்தர கணக்குகளித்தனை என்பதைப்பற்றியும் கொஞ்சம் விசாரித்தீர்களானால், நான் படும் கஷ்டமெவ்வளவென்பது உங்களுக்கு விளங்கும்.

**சாக்ரடீஸ்:** மாஸ்டரவர்களே, தொன்றுதொட்டு வழங்கிவரும் நல்லொழுக்கங்கள் கெடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது உமது கடமை.

**உபாத்தியாயர்:** இந்த வேலையும் சேருகிறதா எனக்கு? இதற்கேதாவது சம்பளம் கொடுப்பார்களா?

**சாக்ரடீஸ்:** இல்லை, மாஸ்டரவர்களே. இக்கிராமத்தின் முன்னேற்றம் உங்களுடைய கையில் தானிருக்கிறது. இவ் வாண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள், இவர்களுடைய புத்தியையும் குணத்தையுமெப்படிப் பழக்கி உருவாக்குகின்றீரோ அதற்குத் தகுந்த மாதிரியே இவ்வூரும் முன்னேற்ற மடையும். இப்பொழுது உங்கள் பள்ளிக்கூடத்தில் பெண்பிள்ளைகளநேகர் படிப்பதைப் பார்க்க மிக்க சந்தோஷமாயிருக்கின்றது.

**உபாத்தியாயர்:** வாசிப்பு, எழுத்து, கணக்கு, சரித்திரம், பூகோளம் இவைகளைப் போதிப்பதுதான் எனக்கு ஏற்பட்ட கடமை.

**சாக்ரடீஸ்:** சரித்திரமும் பூகோளமும் கிடக்கட்டும், மாஸ்டரவர்களே. புத்தியை விருத்திசெய்வதோடு நல்ல குணமு முண்டாகும்படிக்குச் செய்வதுதான் உமது கடமை.

**உபாத்தியாயர்:** நான் ஏற்கனவே செய்யவேண்டியிருக்கும் வேலைகளுடன் இதையுமெப்படிச் செய்ய முடியும், சாக்ரடீஸவர்களே?

**சாக்ரடீஸ்:** உம்மைப்பற்றிய வரையில் நீர் மிக்கநல்லவர். தொன்றுதொட்டுவரும் நல்ல வழக்கங்களைப் பாதுகாப்பதும், கெட்ட வழக்கங்களைக் களைந்து போடுவதும் அவசியமென்று உமக்குத் தோன்றவில்லையா?

**உபாத்தியாயர்:** ஆம். அப்படித்தான் நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** உம்முடைய மாணுக்கர்கள் நூதன கெட்ட வழக்கங்களைக் கற்றுக்கொள்ளவேணுமென்பது உமதபிப்பிராயமா?

**உபாத்தியாயர்:** இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல் உம்முடைய குணமும் நடத்தையும், நீர் வெளியிடு மபிப்பிராயங்களும் சரியானவை யாயிருக்கவேண்டும். இவையெல்லாவற்றையும்விட நல்ல காரியங்களுக் குதவிபுரிந்து கெட்ட காரியங்களை நீர் கண்டிக்க வேண்டும்; இவ்வாறு உமது மாணுக்கர்களுக்கு நீரேவழிகாட்டியாக இருந்து அவர்கள் எப்பொழுதும் சன்மார்க்கத்திலேயே நடக்கும்படிச் செய்யவேண்டும்,

**உபாத்தியாயர்:** சந்தேகமில்லாமல் அதைச் செய்யக்கூடும், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** சரி; அப்படியே செய்யும். அதனுல் கால விரயமு மில்லை, பணச்செலவு மில்லை. அஞ்ஞான இருள் மூடிய இக்கிராமத்திற்கு நீரோர் தீபத்தைப்போ லிருக்கின்றீர்; அத்தீபத்தை எப்பொழுதும் பிரகாசமாக வைத்திருக்க வேண்டியது உமது கடமை.

**உபாத்தியாயர்:** என்னைப்போன்ற ஒரு அற்ப பள்ளிக்கூட உபாத்தியாயருக்கு அது ஒரு பெரிய காரியமே; ஆயினும் என்னு லானமட்டும் முயல்வேன்.

**சாக்ரடீஸ்:** அப்படி நீர் செய்வீரானுல் இக்கிராமத்தார் பிற்காலத்தி லும்மைப் புகழ்ந்து வாழ்த்துவார்கள். இக்குழந்தைக ளும்மிடத்தில் ஒப்பிக்கப்பட்டிருக்கின்றார்கள்; அந்நம்பிக்கைக்கு கெடுதல் வராமல் நீர் பார்த்துக்கொள்ள வேண்டும். சரியான வழியில் நீர்

நடந்து காட்டவேண்டும். இப்பொழுது ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. நேற்று உம்முடைய பள்ளிக் கூடத்தின் வழியாய்ச் சென்றபொழுது, நகைகள் போட்டுக்கொண்டிருந்த அனேக பிள்ளைகளையும் பெண்களையும் கண்டேன். அவர்களின் கைகளிலும் முகங்களிலுமிருந்த அழுக்கைப் பார்த்தால், அவர்கள் பிறந்தது முதல் ஜலத்தில் குளித்திருப்பார்களென்று நினைக்க இடமில்லாமலிருந்தது. சில பெண்குழந்தைகளின் காதுகளிலிருந்த கம்பிகளையும் இதர சாமான்களையும் பார்த்தால், ஏதோ யந்திரம் ஒன்று அங்கு வைத்திருந்ததைப்போலிருந்தது.



புத்தியுள்ள பெண் நகைகளில் பணத்தை வீணாக்காமல் மருந்து வாங்குவாள்

**உபாத்தியாயர்:** ஆம், அப்படித்தானவர்களெப்பொழுதும் பள்ளிக்கூடம் வருகிறார்கள்.

**சாக்ரடீஸ்:** சவுக்காரம், குவைனா, கொசுவலைகள் முதலானவைகளை வாங்காமல், குழந்தைகளுக்கு நகைகள் வாங்குவதில் பணத்தை வீணாக்குவது புத்தி இல்லாத காரியமல்லவா?

**உபாத்தியாயர்:** ஆம், அது முற்றிலும் புத்தியில்லாத காரியம்தான்.

**சாக்ரடீஸ்:** அவர்க ளிவ்வித நிலைமையி லிருக்கும் பொழுது அவர்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடுப்பதினுல் என்ன உபயோகம்?

**உபாத்தியாயர்:** பிள்ளைகள் படிக்கவேண்டியே பள்ளிக் கூடம் வருகிருர்கள்; அவர்களுக்குப் படிப்புக் கற்றுக் கொடுப்பது என்னுடைய கடமை. நீங்கள் சொல்லு மிதர விஷயங்களைக் குறித்துப் போதிப்பது என்னைச் சேர்ந்ததல்ல.

**சாக்ரடீஸ்:** கல்வி பயில்விப்பது உம்முடைய அலுவ லென்கிறீர். ஆனல், தேக சவுக்கியமும் சுத்தமு மில்லா விட்டால் அக்கல்விப் பயிற்சியினு லென்ன பயன்?

**உபாத்தியாயர்:** பயனில்லை என்பது உண்மைதான். நானதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல், அவை நான் கவனிக்கவேண்டியவைகளைச் சேர்ந்தவையல்ல.

**சாக்ரடீஸ்:** யாரால்கவனிக்கப்படவேண்டியவை அவை?

**உபாத்தியாயர்:** அதை நானறியேன்; என்னுடைய வல்லவென்பது நிச்சயம். ஒருகால் பெற்ருேர்களால் கவனிக்க வேண்டியவையா யிருக்கலாம்.

**சாக்ரடீஸ்:** உண்மைதான். ஆனல், நீர் இக்குழந்தை களை எவ்விதம் வளர்க்க நினைக்கிறீரோ அம்மாதிரியே அப்பெற்ருேர்கள் வளர்க்கப்பட்டவர்கள். ஆகையால் அவர்களுக்குத் தெரியாது. ஆகவே இந்த வேலையை முதலில் துவக்கவேண்டியவர் யார், மாஸ்டரவர்களே?

**உபாத்தியாயர்:** எனக்குத் தெரியாது. இவ்விஷயங்க ளொன்றும் நான் சொல்லிக்கொடுக்கும் புத்தகங் களில் இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்புத்தகங்க ளொருவேளை கிராமவாசிகளின் வழக்க ஒழுக்கங்களைப்பற்றி யறியாதவரால் எழுதப்பட் டிருக்கலாம்.

**உபாத்தியாயர்:** அப்படி இருக்கலாம்.

**சாக்ரடீஸ்:** உம்முடைய பள்ளிக்கூட படிப்பின் நோக்க மென்ன?

**உபாத்தியாயர்:** வாசிப்பு, எழுதுதல் முதலியவைகளைப் போதிப்பது.

**சாக்ரடீஸ்:** எழுதப் படிக்கத் தெரியவேண்டியது எதற்கு?

**உபாத்தியாயர்:** எனக்குத் தெரியாது. அவர்களை எழுதவும் படிக்கவும் சக்தியுள்ளவர்களாக்க என்றே நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** அதற்கும் ஒரு நோக்க மிருக்கவேண்டுமன்றோ?

**உபாத்தியாயர்:** அவர்கள் ஜீவனத்திற்குச் சம்பாதிப்பதற்காக என்பது தவிர எனக்கு வேறு நோக்கமொன்றும் தோன்றவில்லை.

**சாக்ரடீஸ்:** அவர்கள் சம்பாதிப்பதை நகைகள் வாங்குவதில் செலவழிப்பதா யிருந்தால், அவர்கள் ஜீவனஞ் செய்வதெப்படி? அவர்கள் அழுக்கிலும் அசுத்தத்திலும் வசிப்பதாய் இருந்தால் நோய்களால் பீடிக்கப்பட்டு இறக்கவேண்டியதாகும் அன்றோ?

**உபாத்தியாயர்:** சாக்ரடீஸவர்களே, உமது கேள்விகளாலும் கோட்பாடுகளாலும் என் புத்தியை நீர் கலங்கச் செய்கின்றீர்.

**சாக்ரடீஸ்:** கல்விப் பயிற்சியால் பிள்ளைகளும் பெண்களும் முன்னிலும் நல்லவர்களாகி, தேக ஆரோக்

கியத்தோடும், சந்தோஷத்தோடும் தங்கள் வாழ் நாளைக் கழிக்கச் சக்தியுள்ளவர்க ளாகவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அவர்களுடைய வீடுகளையும் வயல்களையும் சீர்திருத்துத லெப்படி என்பதை அறிந்து கொள்ளவே அவர்கள் வாசிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

**உபாத்தியாயர் :** கல்விப் பயிற்சியின் உண்மையான நோக்கம் கடைசியில் அங்ஙனம்தா னிருக்கவேண்டு மென்று யானும் நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ் :** ஆகையால், பள்ளிக்கூடத்தில் முதல் முதல் சொல்லிக்கொடுக்கவேண்டிய பாடம் அ, ஆ, இ, ஈ அன்று; முகத்தையும், கண்களையும், கைகளையும் எப்படி நன்றாய்க் கழுவுவது என்பதும், நகைகள் போட்டுக்கொள்வதைவிட குவைளையும் கொசு வலையையும் உபயோகப்படுத்துவது மிக்க நல்லது என்பதும் தான்.

**உபாத்தியாயர் :** இவைகள் உண்மையில் வெகு மேன்மையான பாடங்களே.

**சாக்ரடீஸ் :** இவைகளைவிட முதன்முதல் போதிக்கப் படவேண்டிய உயர்ந்த பாடங்கள் உமக் கேதாவது தோன்றினால் சொல்லும்.

**உபாத்தியாயர் :** இல்லை. ஒன்றுமில்லை.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் நீரேன் அவைகளைப் போதிக்கக் கூடாது?

**உபாத்தியாயர் :** அப்படி நான் செய்தால் பிள்ளைகள் பரீக்ஷையில் தேறமாட்டார்கள். எனக்கும் சம்பளம் உயராது.

**சாக்ரடீஸ்:** அப்படியில்லை, மாஸ்டரவர்களே: இது தான் விவகாரத்துக்கு வேண்டிய கல்வி. இம்மாதிரியாய் உம்முடைய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் போதித்தீ ராஞல், அவர்க ளும்மை ஒரு பொழுதும் கஷ்டப்பட விடமாட்டார்கள். அவர்களுடைய அறிவும் புத்தி கூர்மையும் அதிக விருத்தியடையும்; அவர்கள் பரீக்ஷையிலும் சீக்கிரமாய்த் தேறிவிடுவார்கள். உம்முடைய போதனையினு லவர்க ளுண்மையான பயிற்சியடைந்து பிற்காலத்தில் இவ்வுலக வாழ்க்கையாகிய பெரும்போரில் மனத்தளர்ச்சியின்றி முழு வலியோடு ஈடுகொடுக்க ஆயத்தமாவார்கள்.

இவ்வாறு சொல்லிக்கொண் டிருக்கும் சமயத்தில், தாய் ஒருத்தி அவள் குழந்தையைக் கெட்டமொழிகளால் கடிந்துகொண் டிருப்பது காதில் கேட்டது. அம்மொழிகள் சாக்ரடீஸவர்களின் காதில் வீழ்ந்ததும் அவருடல் பதைத்தது. மற்றெவரும் அம்மொழிகளைக் கவனித்தா ரில்லை.

**சாக்ரடீஸ்:** இது ஒரு கொடிய வழக்கம்.

**உபாத்தியாயர்:** எது? எனக்கொன்றும் புலப்படவில்லையே.

**சாக்ரடீஸ்:** அந்த அசுத்தமான மொழிகளை நீர் கேட்கவில்லையா?

**உபாத்தியாயர்:** ஓ! அதொன்று மில்லை. அன்பிஞலென் மாணுக்கர்களை நான்கூட இவ்வாறு சொல்வதுண்டு; இங்கு யாவரும் குழந்தைக ளிடத்திலும் ஆடுமாடுக ளிடத்திலும் இவ்வித வார்த்தைகளை உபயோகப்படுத்துவது வழக்கம். இந்த வார்த்தைகளுக்கு அர்த்த மொன்றும் கிடையாது.

**சாக்ரடீஸ்:** அவ்வித அசுத்த வார்த்தைகளை உபயோகப் படுத்துவது சரியான காரியம் என்று நீர் நினைக்கிறீரா?

**உபாத்தியாயர்:** சரியில்லை என்பது நிச்சயம். ஆனால் அவ்வார்த்தைகளுக்கு அர்த்தமொன்றுமில்லை. அவைகளை யாரும் ஒரு பொருட்டாய் நினைப்பதில்லை. அவ்வார்த்தைகளால் கெடுதியொன்றும் நேரிடா தென்றும் நான் சொல்வேன்.

**சாக்ரடீஸ்:** அவ்வார்த்தைகளால் கெடுதி தப்பாமல் உண்டாகும். அது உமக்கும் தெரியும், மாஸ்டரவர்களே.

**உபாத்தியாயர்:** ஆம், சற்று நிதானித்து யோசித்துப் பார்த்தால் கெடுதி என்றுதான் தோன்றுகிறது.

**சாக்ரடீஸ்:** ஆகையால் நீர் இதை நிறுத்தவேண்டும்; உம்முடைய மாணாக்கர்களுக்கு அசுத்த வார்த்தைகளை வெறுக்கும்படி நீர் போதிக்கவேண்டும். நீங்க ளெல்லாரும் அவ்விதமான அருவருப்பான வார்த்தைகளை உபயோகித்தால் உங்கள் குழந்தைகளுக்கு உங்களிடத்தும், தாயாரிடத்தும், சகோதரிக ளிடத்தும் எவ்விதம் கௌரவ முண்டாகும்?

**உபாத்தியாயர்:** இந்த விஷயத்தில் நீங்கள் வெகு பிடிவாதமா யிருக்கின்றீர்கள், சாக்ரடீஸவர்களே; ஆனால், நீங்கள் சொல்வது உண்மையே. தகாத வார்த்தைகளை உபயோகிக்கும் வழக்கம் மிகவும் வெறுக்கத் தக்கதே.

**சாக்ரடீஸ்:** அப்பொழுது அதை உம்முடைய கிராமத்திலாவது வேருடன் களைய நீர் கங்கணங் கட்டிக் கொள்ளும். நான் சிறு பிள்ளையா யிருந்தபொழுது ஏதாவது அசங்கியமான வார்த்தைகளை நான் சொன்

னேனுகில் என் தாயார் ஒரு சவுக்காரக் கட்டியையும், புருசையும் எடுத்துவந்து என் நாக்கை நன்ருய்ச் சுரண்டித் தேய்த்து அவ்வசங்கிய வார்த்தைகள் பட்டதனு லேற்பட்ட அசுத்தத்தைச் சுத்தமாய்க் கழுவுவாள். சீக்கிரத்தி லவ்வகை வார்த்தைக ளுபயோகிப்பதை நான் விட்டுவிட்டேன்!

**உபாத்தியாயர்:** அம்முறையை இங்கு உபயோகப் படுத்துவதா யிருந்தால் எங்கள் குழந்தைகளின் நாக்குகளை மாத்திரமேயன்றி எங்கள் நாக்குகளையுங் கூட இருந்த இடம் தெரியாமல் முற்றிலும் சுரண்டிவிட வேண்டியதா யிருக்கும்.

**சாக்ரடீஸ்:** நல்லது. இக்காரியத்தைச்செய்ய உடனே ஆரம்பம் செய்யும். உம்மைப்போன்ற உபாத்தியா யர்க ளவர்களுக்குள்ள செல்வாக்கைச் சரியாய் உபயோகப்படுத்துவார்க ளானுல் அவர்களா லெவ்வளவு காரியம் செய்து முடிக்கக் கூடுமென்பதைக் காண வெகு ஆச்சரியமா யிருக்கும்.

## கிராமத் தலைவர்

**மணியக்காரர்:** சாக்ரடீஸ் துரையவர்களே, இக்கிராம வாசிகள் தங்களை எங்ஙனம் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துப் போய்விட்டது; ஆனுலொருவரும் நான் சொன்னதைக் கேட்கிறதாக இல்லை.

**சாக்ரடீஸ்:** 'ஓயாம லோதியும் ஒருவரும் கேட்பாரில்லை' என்கிற பல்லவி வைத்து ஒரு பாட்டுக் கட்டலாமென்று நினைக்கின்றேன். நானெங்குச் சென்ருலு

மிந்தப் பல்லவிதான் காதில் விழுகின்றது, மணியக்காரரே.



ஒருவரும் கேட்பாரில்லை

**மணியக்காரர்:** உண்மைதான், சாக்ரடீஸவர்களே. எமக்கு இப்பொழுது நிரம்ப கஷ்டகாலமா யிருக்கின்றது. எமது கட்டளைக்கு யாரும் கீழ்ப்படிய மாட்டேனென்கிறார்கள்.

**சாக்ரடீஸ்:** அது ஏனப்படி, மணியக்காரரே? உமக்கு

அந்தஸ் தில்லையா? செல்வாக் கில்லையா? உம்மிடத்தில் கிராமத்தாருக்கு மதிப் பில்லையா?

**மணியக்காரர்:** எல்லாம் உண்டு, சாக்ரடீஸவர்களே. ஆயினும் ஏனோ அறியேன், வரவர அவர்கள் சொன்ன பேச்சை மாத்திரம் கேட்பதில்லை.

**சாக்ரடீஸ்:** இச்சீர்திருத்தங்களால் தேக ஆரோக்கியத்திலும், செல்வத்திலும், சுக போகத்திலும் உமக்கு உண்டாகும் அபிவிருத்தியைக் காணின் உம்மைப் போலவே நடக்க விரைந்து ஆரம்பிப்பார்களென்பதற்கு என்ன சந்தேகம்?

**மணியக்காரர்:** என்ன சொல்லுகிறீர், சாக்ரடீஸவர்களே? நீங்கள் சொல்லுவது விளங்கவில்லையே.

**சாக்ரடீஸ்:** நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. உம்முடைய பாரசீக ராட்டினத்தால் நீரிறைப்பதின் மேம்பாட்டைக் கண்டால் அதைத் தாங்களுமுபயோகிப்பார்க ளல்லவா?

**மணியக்காரர்:** என்னிடத்தில் பாரசீக ராட்டினமில்லை, சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** ஆனால், நீர் உமது கிராமத்தாருக்கு அநேக வருஷங்களாக அதை உபயோகப் படுத்தும்படி வற்புறுத்தி வருகிறீரன்றோ?

**மணியக்காரர்:** ஆம், அநேக வருஷங்களாக இரவும் பகலும் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆனால் அதன்படி ஒருவரும் நடக்கவில்லை. ஓயாமலோதியும் ஒருவரும் கேட்பாரில்லை.

**சாக்ரடீஸ்:** மணியக்காரரே, 'சொல்லிக் காட்டுவதை விட செய்து காட்டுவது நலம்' என்பார்களே, அதை அறியீரா? நீர் நெஞ்சு கம்மிப் போகும்படி பிரசங்கம்

செய்யும்போ தெல்லா மவர்கள் நகைத்து, 'அது அவர் சொல்வதைப்போ லுண்மையி லவ்வளவு மேம் பாடுடையதா யிருந்தால், அவரே ஏன் அப்படிச் செய்யவில்லை? முதலில் அவ்விராட்டினத்தை அவர் போடட்டும், பிறகு நாம் போடுவோம்' என்கிறார்கள்

**மணியக்காரர்:** இந்த விஷயத்தைப்பற்றி நான் நினைக் கவே இல்லை, சாக்ரடீஸவர்களே. எனது கடமை அவர்களை யவ்விதம் செய்யும்படி சொல்வதுதா னென்று நினைத்தேன்.

**சாக்ரடீஸ்:** அதாவது உமது நாக்குமட்டும் சீர்திருத்தத் தைப்பற்றிப் பேசுகின்றதேயொழிய, உமது மனம் இன்னம் பழைய கெட்ட வழக்கங்களிலேதான் பிடிமான முடையதாய் இருக்கின்றது.

**மணியக்காரர்:** அப்படி இல்லவேயில்லை, சாக்ரடீஸ வர்களே.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் நீர் உமது கிராமத்தாருக்கு நாய்களைப்போல் கண்ட இடத்தில் கிராமத்தி னுள்ளும், வெளியிலும் ஜலமலங்களைக் கழிக்கும் கெட்ட வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்று சொல் லிக்கொண் டிருக்கும்பொழுது, நீரும் உமது மனைவி மக்களும் அந்நாய் வழக்கத்தையே அனுசரித்து வருகி றீர்களா, அல்லது அப்படி இன்றிச் சுத்தத்திற்கேற்ற ஒழுக்கங்களைக் கையாண்டு கிராமத்தாருக்கு மாதிரி யாக நடந்து காட்டுகிறீர்களா?

**மணியக்காரர்:** இல்லை என்றே சொல்லவேண்டி யிருக் கிறது, சாக்ரடீஸவர்களே. மற்றவர்களைப்போல் தான் நானுஞ் செய்கின்றேன்.

**சாக்ரடீஸ்:** ஆகையா லுமது மனம் எங்களுட னில்லை, மணியக்காரரே.

**மணியக்காரர்:** இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

**சாக்ரடீஸ்:** ஆகையால், நீர் வழிகாட்டி அல்ல, பின் தொடர்பவர். முன்செல்பவர் பின்னே நாய்போல் குலைக்கிறீரே தவிர, உம்மா லுதவி ஒன்று மில்லை. இதரர்கள் முன்சென்று புதிய சீர்திருத்தங்களை அனு சரித்து அவைகளால் பயனடைந்தார்களானால், நீரும் அச் சீர்திருத்தங்களைக் கையாளத் துணிவீர். கிராமத்துள் பெரிய மனிதராயும் உயர்ந்த பதவியுள்ள வராயு மிருக்கும் உமக்கு என்ன கேவலமான நிலைமை இது! உமக்கு வெட்கம், மானம் என்ப தில்லையா?

**மணியக்காரர்:** சாக்ரடீஸவர்களே, நீங்க ளென்னை நிரம்ப அவமானப் படுத்துகின்றீர்கள். நான் மாத்திரம் தனிமையாய் ஊரிலுள்ளோரது நகைப் புக்கும் பழிப்புக்கும் பாத்திரனா யிருத்தல் மிகக் கஷ்டமான காரியம்.

**சாக்ரடீஸ்:** யாராவது ஒருவர் முற்செல்லவேண்டிய தவசியம், மணியக்காரரே; அன்றேல் முன்னேற்ற மென்பது முடியாத காரியம்.

**மணியக்காரர்:** அது முற்றிலு முண்மையே.

**சாக்ரடீஸ்:** அப்பொழுது, உம்மைப் போன்ற கிராமத் தலைவரைத் தவிர யார் இவ்விஷயங்களில் முன்னே வழிக்காட்டக் கூடியவர்கள்? நீர் செல்வ முடையவ ராகையால் இப்புதிய சீர்திருத்தங்களை அனுசரித்து அவைகளா லுண்டாகும் பலாபலன்களை இதரர் களுக்கு விளக்கக்கூடும். முதலி லவைகளால் பிரயோ சனமொன்று மேற்படா விட்டாலும், நீர் அதை யொரு

பொருட்டாய் நினைகக வேண்டியதில்லை; அதனு லுமக்கொரு கெடுதியும் நேரிடாது. சிறிய மனிதர் களாகிய மற்றவர்களால் இச் சீர்திருத்தங்களைப் பரீக்ஷை பார்க்க இயலாது. உம்மைப்போன்ற செல்வ வான்கள் அவைகளைக் கையாண்டு அவைகளுடயோக முள்ளவை யென்று காட்டிய பிறகே அப்பழக் கங்களை அவர்கள் பின் பற்றுவார்கள். உண்மையில் நமது ஜில்லாவில் பிரசுரிக்கப்பட்ட புதிய முறைக ளெதுவும் பழுதுபடவில்லை. அவைக ளொவ் வொன்றும் நன்குய்ப் பரிசோதிக்கப்பட்டுப் பயனுள் ளதாக வேற்பட்ட பிறகே ஜில்லா வர்த்தமான பத்தி ரிகை மூலமாயும், சுவரிலொட்டும் பத்திரிகைகள் மூலமாயும், பாட்டு நாடகங்கள் மூலமாயும் யாவரு மறியும்படி விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றன.

**மணியக்காரர்:** நீங்கள் சொல்வ தெனக்கு விளங்கிற்று. நானிவ்வூரின் தலைவனுகையால் முதலில் நானே வழி காட்ட வேண்டுமென்பதே உமது கருத்து. அப்படியே செய்ய முயலுவேன்.

**சாக்ரடீஸ்:** சுபேதார், ரிஸல்தாரவர்களே, உங்களுக்கும் சொல்லுகின்றேன். நீங்கள் மார்பைத் தட்டி உங்கள் யோக்கியதா பதக்கங்களை எடுத்துக்காட்டி, பிராஞ் சிலும் மெஸபொடேமியாவிலும் தைரியத்துடன் யுத்தத்திற்கு முதல் நின்று யுத்த வீரர்களை நடத்திச் சென்றதை அடிக்கடி சொல்லிக் கொள்ளுகிறீர்கள்; ஏன் உங்கள் கிராமத்தாரையு மப்படியே நீங்கள் முன்னின்று நடத்திச் செல்லக்கூடாது?

**சுபேதார்:** சண்டைக்கு முன்னின்று இரணவீரரை அழைத்துப் போவதற்கு வேண்டியதைவிட இவ்

ஊராரை யவர்கள் வெகு காலமாய்க் கைப்பற்றிவருங் கெட்ட பழக்கங்களி னின்றும் மீட்டு நடத்திக் கொண்டு போகத் தைரியம் அதிகம் வேண்டும், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** சுபேதாரவர்களே, நீங்கள் சொல்லுவது நிரம்ப சரியே. ஆனால் உங்களது சொந்த கிராமத் தவர்கள் கெட்ட வழக்கங்களை யொழித்து உயர்ந்த வாழ்க்கையை அடையும்படி நீங்களே வழிகாட்டி யாக இருந்து அழைத்துச் சென்று நீங்களின்னும் பெரும்புகழை அடையக்கூடாதா?

**சுபேதார்:** அப்படியே செய்ய முயலுவேன். ஆனால், நான் இளைப்பாறவும் நிம்மதியாயிருக்கவும் ஊருக்கு வந்தேனே தவிர, புதிய யுத்தமொன்று துவக்க வர வில்லை. அழுக்கு, நோய், சிறுமை, வறுமை இவை களைத் தொலைக்கப் போராடுதல் யுத்தத்திற்குச் சமானமேயாகும், பெரியவரே.



நகைப்பு, குண்டுகளைப்போல் கொல்லாது

**சாக்ரடீஸ் :** முயற்சி செய்யுங்கள். அதற்குப் பிரதி பலன் திண்ணம்; இப்போரில் சேதம் கிடையாது. நகைப்பு, குண்டுகளைப்போல் கொல்லாது. தூஷணை யும் கேலியும் சீக்கிரத்தில் சகஜமாய்விடும். உம்மைப் பார்த்து அவர்கள் நகைக்க நகைக்க, இக்கிராமத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டுமென் னும் பிடிவாதம் உமக்கு விருத்தியாகும்.

**சுபேதார் :** உமது பரிசுத்தப் போரில் நாங்களு முதவி புரிவோம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ் :** இப்போரில் தப்பாமல் வெற்றியடை வோம்; வெற்றியடையு மொவ்வொரு தடவையிலும் நம் சார்பி லநேகம் பேர் சேர்வார்கள். நம் வழிக்கு வரும் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு குடும்பமும் நம்முடன் சேர்ந்தவராவார்கள்; அவர்களே நம்முறை களின் மேன்மையைப் பிரசித்தி செய்வர். நாம் செய் யும் போர், செய்கையால் நடத்தப்படுமே தவிர, பேச்சுகளால் நடத்தப்படுவதல்ல. ஆகையால் நாம் அப்போரில் வெற்றியடைவோமென்பதில் சற்றே னும் சந்தேகமில்லை.

**மணியக்காரர்—சுபேதார் :** நீங்கள் சொல்வது முற்றிலு முண்மை என்பதை நாங்கள் நம்புகின்றோம். முன் னேற்றம் வெற்றிபெறக் கடவதாக!

## பரிசுத்தப் போர்

சாக்ரடீஸ் வழக்கம்போல் கிராமச் சாவடிக்குச் சென்றார். அச்சாவடி மாஜி ராணுவத் தலைவர்களா லும் மாஜி சிபாய்களாலும் நிறைந்திருந்தது. அவர் களும் ராணுவ உடுப்புக்களையும் அவரவர்கள் பெற் றிருக்கும் யோக்கியதா பதக்கங்களையும் தரித்து

வெகு உல்லாசத்துடனும், டம்பத்துடனும் காணப் பட்டார்கள்.

**சாக்ரடீஸ்:** நமஸ்காரம், கனவான்களே! இன்று நீங்கள் வெகு ஒழுங்காயுடுத்து, உல்லாசமாய்க் காணப்படு கின்றீர்கள். உங்களைப் பார்க்கும்போது எனக்கு என்ன ஞாபகம் வருகின்றது தெரியுமா?

**மாஜி ராணுவத் தலைவர்கள்:** என்ன சாக்ரடீஸவர்களே?

**சாக்ரடீஸ்:** மல மேட்டின்மேல் உட்கார்ந்திருக்கும் மயில்கள் என் நினைவுக்கு வருகின்றன.

**மாஜி ராணுவத் தலைவர்கள்:** சாக்ரடீஸ், இன்று காலை வெகு முரட்டுத்தனமாய்ப் பேசுகின்றீர்; ஏன் அவ் வளவு இகழ்ச்சியாக எங்களை அவமானப் படுத்துகின் றீர், கிழவரே?

**சாக்ரடீஸ்:** நீங்கள் வெகு அழகாய் உடுத்து யோக்கி யதா பதக்கங்களைத் தரித்திருக்கின்றீர்கள். ஆனால், நீங்க ளிருக்கும் கிராமம் வெகு அசுத்தமாய் இருக் கின்றது.

**மாஜி ராணுவத் தலைவர்கள்:** நீங்கள் சொல்வது உண் மையா யிருத்தல் எங்கள் துரதிர்ஷ்டமே. ஆனால், உங்களுடைய உபமானத்தினாலேயே நீங்கள் சொல் வது இயல்பென்றே ஏற்படுகின்றது.

**சாக்ரடீஸ்:** ஓ, அப்படியா? மயில்களா அம் மல மேட்டைக் குவித்தன?

**மாஜி ராணுவத் தலைவர்கள்:** இல்லை.

**சாக்ரடீஸ்:** உங்கள் கிராமத்தின் அசுத்த நிலைமைக்கு நீங்களெல்லோருமே உத்தரவாதிகளன்றோ?

**மாஜி ராணுவத் தலைவர்கள்:** நாங்களும் கொஞ்ச முத்தர வாதிகளென்று தான் நினைக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** அதிருக்கட்டும். இன்றைக்கு என்ன விசேஷம்? விவாகமா அல்லது வனபோஜனமா அல்லது வேறென்ன?

**சுபேதார் மேஜர்:** இங்கு வனபோஜனங் கூடவா? சாக்ரடீஸவர்களே! கிராமங்களில் தோட்டங்களே கிடையா.

**சாக்ரடீஸ்:** அப்படியானு லுங்கள் மனைவியர் அவரவர் குழந்தைகளைச் சாயங்கால வேளையில் நல்ல காற்றில் உலாவுவதற்கு எங்குக் கொண்டு போகிருர்கள்?

**சுபேதார் மேஜர்:** எங்குமில்லை; நீங்கள் சொல்வது வெகு விநோதமா யிருக்கின்றது!

**சாக்ரடீஸ்:** ஒரு சுபேதாரின் மனைவி சுபேதாரைப் போலவே ஒழுங்கா யுடுத்தும், சுத்தமாயும், நாகரிக மாயு மிருப்பாளல்லவோ? அப் பெருமாட்டி கிரா மத்திலுள்ள இதரர்களைப் போல் இருட்டிலும், அசுத் தத்திலுமா வசித்திருப்பாள்?

**சுபேதார் மேஜர்:** கிராமத்திலுள்ள இதர பெண்மகளிர் எப்படி வசிக்கின்ருர்களோ அதே மாதிரிதான் அவளும் வசிக்கின்ருள்.

**சாக்ரடீஸ்:** சுபேதார் மேஜரவர்களே, நீங்கள் ஊர் வந்ததும் உங்களது இராணுவ உடுப்புக்களைக் களைந் தெறிந்தது போல் இராணுவத்தி லிருந்தபொழுது நீங்களடைந்த பயிற்சியையும், உயர் வாழ்க்கையை யும் மறந்து கைவிட்டீர்கள். உங்கள் பழைய கெட்ட வழக்கங்களையே பின்தொடர்ந்து வந்தீர்களானுல், உங்களது முன்னேற்றத்திற்காக இராணுவத்தி லெடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிக ளெல்லாம் வீணுகி விட்டனவென்றே நினைக்கவேண்டுமல்லவோ?

**சுபேதார் மேஜர்:** எங்களை என்ன செய்யச் சொல்லு கின்றீர்? சாக்ரடீஸவர்களே! நீங்க ளெப்பொழுதும் ஏதாவது விநோதமான புதிய விஷயங்களைப் பற்றி எங்களுக்குச் சொல்லிக் கொண்டே இருக்கின்றீர்கள்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் உங்கள் கிராமத்திற்கு நாகரிகத் தையும், மேன்மையான பழக்கங்களையுங் கொண்டு வந்து அவைக ளவ்விடத்தில் வேரூன்றித் தழைத் தோங்கச் செய்யவேண்டும். சவுக்கியத்திலும் சுகா தார ஏற்பாடுகளிலும் உங்கள் வீடுகள் கிராமத் தாருக்கு ஓர் மாதிரியாக இருக்கவேண்டும்; உங்கள் மனைவியரும் குழந்தைகளும் உலாவிச் சந்தோஷிக்க நீங்கள் தோட்டங்களைப் பயிர் செய்யவேண்டும்.

**சுபேதார் மேஜர்:** நீங்கள் சொல்வது மனக் கவற்சியை உண்டாக்குகின்றது; அதற்கு வேண்டிய திரவியமு மெங்களுக்குண்டு. ஆனால் அவ்விதமான காரியங்கள் செய்வதில் எங்களுள் ஒற்றுமை ஏற்படுவது அரிது; மேலும் ஒருவரு மிவ்வித செய்கைகளுக்கு முன்னிற்ப தில்லை.

**சாக்ரடீஸ்:** இதுவும் பழைய கதையே! கெட்ட காரியங்களுக்கு நாம் ஒன்று சேர்வது எளிது; கெடுதி விளைவிக்கும் காரியங்களில் முதல் நிற்க அநேகம் பேர்கள் சீக்கிரத்தி லேற்படுவார்கள். ஆனால் நல்ல காரியங்களைச் செய்வதில் நாம் எப்பொழுது மொன்று சேர்வதில்லை; நல்ல காரியங்களைச் செய்வதில் முன் னின்று இதரர்களுக்கு வழி காட்டுவதற்கு ஒருவரும் ஏற்பட மாட்டார்கள்.

**சுபேதார் மேஜர்:** நீங்கள் சொல்வது உண்மையே. எப் பொழுதும் இங்கு அப்படித்தா னிருந்திருக்கின்றது.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் நாம் அதை மாற்ற வேண்டும். முதல்முதல் இவ்வூரில் 'மாஜி இராணுவத் தலைவர் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதனுபயோகத்திற்காகக் கொஞ்சம் பணத்தையும் சேர்த்து வைப்போம். பிறகு ஸ்திரீகளும், குழந்தைகளும் உட்காரவும், உலாவவும் ஒரு தோட்டத்தை ஏற்படுத்துவோம். அத்துடன் கிராமத்தைச் சீர்திருத்தி அதன் முன்னேற்றத்திற்குரிய வழிகளையெல்லாம் கையாள்வோம். நாம் ஏழைகளல்ல; மேலும் நாம் உபயோகிக்கப் போகின்ற புதிய ஏற்பாடுகளாலும்—அதாவது நல்த விதை, இரும்புக் கலப்பைகள், பாரசீக ராட்டினங்கள் (நீர் ஏற்றங்கள்)—கொஞ்சம் பணம் நமக்கு வரும்படி வரலாம். அசுத்தத்தையும் அழுக்கையும் ஒழிக்கும் முறைகளைக் கையாள பணம் வேண்டுவதில்லை; மேலும் சுரத்தினுல் படுக்கையில் வீணுய்ப் படுத்திருக்க வேண்டியிராதாகையால், அதனு லிப்பொழுது ஏற்படும் செலவும் சிறிது மீதியாகும். எப்படியானுலும் நாம் இவ்வாறு முயற்சி செய்து பார்ப்போம்.

**சுபேதார் மேஜர்:** நல்லது சாக்ரடீஸவர்களே. நாம் இக் காரியத்தைத் துவக்குவோம். நாங்கள் யுத்தத்தில் முன்னின்று ரணவீரர்களை அழைத்துச் சென்றதைப் போலவே, இந்த நற்காரியங்களில் நாங்களே முன்னின்று கிராமவாசிகளை நடத்திச்செல்ல முடியுமா என்று பார்ப்போம்.

# சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்

சாக்ரடீஸ் கிராமத்திற்குள் வந்தார். அவ்வேளைக் கிராம மணியக்காரரும், கர்ணமும், மிராசுதாரர்களும் அப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கும் ஜமாபந்திக் கணக்குகளைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள். வெகு நாளாய்ச் சுத்தம் செய்யாது கிடந்ததால், அக் கிராமம் வெகு அசுத்தமா யிருந்தது, வறட்டிக் குவி யல்க ளெங்குமிங்கும் கிடந்தன; நாய்கள் குறைத்துக் கொண்டிருந்தன; அதன்றியும் பார்த்த போதெல்லா மவருக்கு எரிச்சலை உண்டுபண்ணிக் கொண்டிருந்த இன்னும் அநேக விஷயங்களும் அவர் கண்களுக்குப் புலப்பட்டன. இவை கண்டு சாக்ரடீஸ் அச்சமயத் தில் வெகு கோபாவேசத்தை யடைந்தவரா யிருந்தார். 'நமஸ்காரம்' என்றூர் சாக்ரடீஸ். இதைக் கேட்டு அவருக்கு ஒருவரும் பதில் சொல்லாததால், முன்னிலு முரத்த குரலோடு 'நமஸ்காரம்' என்று அவர் மறு படியும் சொன்ஞர்.

'பேசாதே, அதிகாரிகள் சேர்ந்து யோசனை செய்து கொண்டிருக்கிறூர்க ளென்பது தெரியவில்லை உனக்கு? யார், கிழவா, நீ இம்மாதிரி நடுவே வந்து கத்து கின்றூய்?' என்று அதட்டிச் சொன்ஞர் கிராம கர்ணம்.

**சாக்ரடீஸ்:** மரியாதையற்ற சிறு குமாஸ்தாவே, என்ன அதிகாரிகள்?

**கர்ணம்:** ஜாக்கிரதையா யிரு, கிழவா! இல்லையாஞல் உன் வாயாலேயே நீ கெடுவாய். நான் சர்க்கார் உத்தி யோகஸ்தன்; காயமாய் ஆறு மாத காலமாய் இவ்வூர்

கர்ணம் வேலே பார்த்து வருகிறேன்; இதோ இருப்பவர்களெல்லோருங்கூட சர்க்கார் உத்தியோகஸ்தர்கள். இதெல்லாம் நீ அறியாயோ?



நான் சர்க்கார் உத்தியோகஸ்தன்

**சாக்ரடீஸ்:** மன்னியுங்கள், பிரபுவே; கொஞ்ச நேரத்

திற்கு முன் நீங்க ளெல்லோரும் அதிகாரிக ளென்று சொன்னீர்கள்; இப்பொழுது நீங்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்க ளென்று சொல்லுகின்றீர்கள்.

**கர்ணம்:** ஆம்; தடையில்லாமல் நாங்க ளெல்லோரு மதிகாரிகள்தான்.

**சாக்ரடீஸ்:** எப்படி ஒரு உத்தியோகஸ்தன் அதிகாரியாய் இருக்கக்கூடும்?

**கர்ணம்:** தடையில்லாமல் இருக்கலாம். நாங்களெல்லோரும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்; ஆகையால் அதிகாரிக ளல்லவோ?

**சாக்ரடீஸ்:** உத்தியோகஸ்தனுடைய கடமை அவனது எஜமானது கட்டளைகளை நிறைவேற்றுவதேயாம். ஆகவே, அவனெப்படி அதிகாரியாயு மிருக்கக்கூடும்?

**கர்ணம்:** நாங்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்; ஆகவே அதிகாரிகளும் ஆவோம். எங்களை அவமானப் படுத்தினல் அதனாலுனக்குத் துன்ப முண்டாகும்; எச்சரிக்கையா யிரு.

**சாக்ரடீஸ்:** நான் வெகு எச்சரிக்கையா யிருக்கின்றேன். ஆனால், மன்னியுங்கள், உத்தியோகஸ்தர்களாகிய நீங்கள் யாருடைய கட்டளையை நிறைவேற்றுகிறவர்க ளென்று அறிய எனக்கு ஆவலாயிருக்கின்றது. சற்றுச் சொல்வீர்களா?

**கர்ணம்:** சர்க்காரின் கட்டளைகளைத் தாம். இது தெரியாதா, முட்டாள் கிழவா?

**சாக்ரடீஸ்:** சர்க்காரென்கிறீர்களே, அதென்ன? ஓர் மனிதனு, பொருளா, என்ன அது? அதெப்படி நடைபெறுகின்றது?

**மணியக்காரர்:** அவனுக்கு நான் பதில் சொல்லுகின்றேன், கணக்குப் பிள்ளையவர்களே; நீர் போய் வரி

வசூல் கணக்கைத் தயார் செய்யும். கிழவா, சர்க்கார் என்பது தேசத்தை ஒழுங்கு படுத்துவதற்காக நாட்டப்பட்டிருக்கும் ஓர் பெரிய ஏற்பாடு. வசூல் செய்யப் படுகிற நிலத் தீர்வையினாலும் இதர வரிகளினாலும் அது நடைபெற்று வருகின்றது.

**சாக்ரடீஸ்:** அநேக வந்தனங்கள், மணியக்காரரே. இந்நிலத் தீர்வையையும் இதர வரிகளையும் யார் கொடுக்கிறார்கள் ?

**மணியக்காரர்:** மிராசுதாரர்களும் வர்த்தகர்களும்; இது தெரியாதா ?

**சாக்ரடீஸ்:** இப்பெரிய சர்க்கார் நடைபெறுவதற்கு வேண்டிய திரவியம் மிராசுதாரர்களும் வர்த்தகர்களும் கொடுக்கிறார்களென்றால் சர்க்காருக்குச் சொந்தக்காரர்களவர்களே யன்றோ ?

**மணியக்காரர்:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் இந்தச் சர்க்கார் அவர்களது நன்மைக்காக வல்லவோ இருக்கவேண்டும் ?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது இக் கனந்தங்கிய கணக்குப் பிள்ளையா லெடுத்துரைக்கப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்த ரெல்லோரும் இச் சர்க்காரின் உத்தியோகஸ்த ரல்லவோ ?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** நன்று ; சர்க்காருக்குச் சொந்தக்காரர் வரி கொடுக்கும் ஜனங்கள். ஆதலின் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் சொந்தக்காரர்களு மவர்களே யன்றோ ?

**மணியக்காரர்:** ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும்.

**சாக்ரடீஸ்:** இக் கிராமத்திலுள்ளவர்க ளனைவரும் நில வரி கொடுப்பதினுல், இங்குள்ள சர்க்கார் உத்தி யோகஸ்தர்க ளெல்லோரும் அவர்கள் சவுகரியத்திற் காகவே இருக்கின்ருர்களல்லவோ ?

**மணியக்காரர்:** ஆம், அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** ஆகையால் நீங்கள் அதிகாரிகளென்று டம்பமாகச் சொல்லிக் கொள்ளும் வார்த்தை சரியான வார்த்தையல்ல. உங்கள் கர்ணமும், நீங்களும் பொது ஜனங்களுக்கும், கிராமத்தாருக்கும் வேலைக்காரர்களே, அன்ருே ?

**மணியக்காரர்:** அப்படித்தான் நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** தன் நாக்கை உள்ளடக்கிப் பேசவேண்டு மென்றும், இவன் இக்கிராமத்தாருக்கு வேலைக்காரனே தவிர, அவர்களைக் கடுமையாய் நடத்துவதற்காக நிய மிக்கப்பட்டவனல்ல னென்றும், இந்தக் கர்ணத்திற்கு நீர் போதிப்பது நல்லது அல்லவா ?

**மணியக்காரர்:** நானப்படியே செய்கிறேன், சாக்ரடீ ஸரவர்களே.

**சாக்ரடீஸ்:** சர்க்கார் உத்தியோகஸ்தராகிய நீங்களெல் லோரும் படித்தவர்களல்லவா ?

**மணியக்காரர்:** ஆம்; இல்லாவிட்டால் எங்களுடைய வேலையை நாங்க ளெப்படிச் செய்ய முடியும் ?

**சாக்ரடீஸ்:** நீங்களெல்லோரும் எருக் குழிகள், சுத்தம், கல்வி, அம்மை குத்தல், முன்னேற்றம் இவைகளைக் குறித்து விளம்பரப் பத்திரிகைகளில் படித்திருக்க லாம்; நீங்கள் ஜில்லா வர்த்தமானப் பத்திரிகையைப் படிக்கிறீர்களல்லவா ?

**மணியக்காரர்:** இவைகளை எல்லாம் நான் பார்த்திருக்கின்றேன்.



இவைகளை எல்லாம் நான் பார்த்திருக்கின்றேன்

**சாக்ரடீஸ்:** உங்கள் ஜில்லா கலெக்டரவர்கள் கிராமங்களை எப்படிச் சீர்திருத்த வேண்டுமென்பதை எடுத்து உரைத்த உபந்நியாசத்தையும் கேட்டிருப்பீர்கள்?

மணியக்காரர், கர்ணம், மிராசுதாரர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, 'கேட்டோமா என்கிறீர்களா? கேட்டுக் கேட்டு எமக்கு அருவருப்பாய்விட்டது. நாங்களொருநாளும் அவ்விதமான உபயோகமற்ற சங்கதிகளை இன்று வரையில் கேட்டதில்லை. அவையெல்லாம் எங்களுக்கெதற்கு? சற்றுச் சொல்லும்;

தாசில்தா ரவர்களுக்குக்கூட அந்தப் பைத்தியம் பிடித்துவிட்டது; எங்களை நிம்மதியா யிருக்கவிடாம லடிக்கப் பார்க்கிறார். ஆனால் நல்லவேளை இதுவரை யிலும் தப்பித்துக்கொண் டிருக்கிறோம்' என்றார்கள்.

**சாக்ரடீஸ்:** (தனக்குள்ளே) இதுவோ பைத்தியம்? ஆயின் கலெக்டர் இவர்க ளெல்லோரையும் கடித்தால் அது நல்லதா யிருக்குமென்று நினைக்கிறேன். (உரக் கவும், கோபத்தோடும்) நீங்க ளெல்லோரும் 'உண்ட வீட்டிற்கு இரண்டு நினைப்பவர்கள்' என்று சொல்லு கிறேன்.

**மணியக்காரர்:** கவனத்துடன் பேசு, சாக்ரடீஸே. இந்த வார்த்தைகள் அதிகக் கடுமையா யிருக்கின்றன. வயது சென்றவ னாகையால், உன் சொற்களைச் சற்றுப் பொறுத்துக்கொள்ளக் கூடும். ஆனால், நீ வரம்பு கடந்து போகிறாய்; பிறகு இதனால் நீ வருத்தப்பட வேண்டியதா யிருக்குமென்பதைச் சிறிது தெரிந்து கொள்.

**சாக்ரடீஸ்:** ஓ அதிகாரியே! ஓ சர்க்கார் உத்தியோகஸ் தரே! என்னை மன்னியும்; இந்த வேலையைப் பற்றி உங்களுக் கெல்லாம் நன்றாய்த் தெரியும். அது நல்ல வேலையென்றும், ஜனங்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரக்கூடிய தென்றும் நன்கறிவீர். அப்படி யிருந்தும் அதை நீங்கள் நிந்திக்கின்றீர்கள்; அது நிறைவேறும்படி முயற்சி செய்பவர்களை நகைத்து, அவர்களுக்குதவி புரிகிறீர்களில்லை.

**மணியக்காரர்:** அது நாங்கள் செய்யவேண்டிய கடமை யல்ல.

**சாக்ரடீஸ்:** சற்று நேரத்துக்குமுன் நீங்கள் சர்க்கார் வேலைக்கார ரென்று சொன்னீர்களே. சர்க்கார் என்

பது யாது? அனுவசியமான துன்பத்திலுைம் ஏழ்மைத் தனத்திலுைம் வருந்தி, அசுத்தத்தில் வசித்து, சிறுமையுற்று, அழுக்கினுலும் வியாதிகளி னுலும் அகால மரண மடைந்துகொண் டிருக்கின்ற இக் கிராமத்துக் குடி மக்களே சர்க்கார் ஆவர் என்ப தும் நீங்களறிந்ததல்லவோ?

**மணியக்காரர்:** எங்களுக்கு ஏற்பட்ட கடமைகள் வேறு இருக்கின்றன. நீங்கள் சொல்பவை அவைக ளுள் அடங்கினவை யல்ல.

**சாக்ரடீஸ்:** ஆனுல், இக் கிராமத்தார் கொடுக்கும் தீர்வைப் பணத்திலிருந்தே உங்கள் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன; அப்பணத்தைக் கொண்டு ஏற்பட்ட பாடசாலைகளையும், ரஸ்தாக்களையும், வைத் தியசாலைகளையுமே நீங்கள் உபயோகப் படுத்துகின் றீர்கள். அப்படி யிருந்தும், அவர்கள் நிலைமையைச் சீர்ப்படுத்துவதும், அவர்களுக்கு உதவி புரிவதும் உங்களது கடமை என்று ஒப்புக்கொள்ளமாட்டீர்கள்.

**மணியக்காரர்:** நாங்கள் செய்யவேண்டிய கடமைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளுள் இது ஒரு பொழுதும் சேரவில்லை.

**சாக்ரடீஸ்:** நீங்கள் படித்தவர்கள்; உங்களுக்குத்தான் எது செய்யவேண்டிய தென்பது தெரியும்; அப்படி இருந்தும் உங்கள் கிராமத்தாருக்கு உதவி செய்வது உங்களது கடமை யென்பதை ஒப்புக்கொள்ள மாட் டீர்கள். ஆகையால் கிராமங்கள் இவ்வளவு கேவல மான நிலைமையி லிருப்பது ஆச்சரியமன்று. ஒரு பிள்ளையாவது, ஒரு பசுவாவது, அல்லது ஒரு ஸ்திரீயா வது—ஸ்திரீயைக் கடைசியில் சொன்னதற்குக் கோபித்துக்கொள்ள வேண்டாம், அப்படிச் செய்தது

உங்களது வழக்கத்தை அநுசரித்தே—இவர்களில் யாராவது கிணற்றில் வீழ்ந்தால், 'நமக்கு எவ்வளவோ கடமைகள்; ஓலமிட்டு அண்டை அயலாரை அழைத்து அவர்களை வெளியே எடுத்துப் போடுவது எமது வேலையல்ல' என்று சொல்வீர்களா?

**மணியக்காரர்:** முட்டாள்தனமாய்ப் பேசாதே, சாக்ரடீஸ். அது எல்லோரும் செய்யவேண்டிய கடமை. அப்படிக் கிணற்றில் யாராவது விழுந்தால், உடனே ஒத்தாசைக்குக் கூக்குரலிட் டழைத்து, என் தலைப் பாகையை அவிழ்த்து அதைக் கயிற்றுக்குப் பதிலாய்க் கிணற்றில் விட்டு அவர்களை வெளியே தூக்கிவிட முயல்வேன். இதில் என்ன சந்தேகம்?

**சாக்ரடீஸ்:** அப்படிச் செய்வதால் ஒரு மணி காலம் வீணாவதுடன், உங்கள் தலைக் குட்டையும் கெட்டுப் போய்விடுமன்றோ?

**மணியக்காரர்:** அதெப்படி யானாலும் அந்தச் சமயத்தில் உதவி செய்யவேண்டிய தெனது கடமை, சாக்ரடீஸே.

**சாக்ரடீஸ்:** ஒரு வீடு தீப்பிடித்துக் கொண்டால்?

**மணியக்காரர்:** என் வஸ்திரங்கள் நாச மடைவதாயிருந்தால்கூட என்னாலியன்ற மட்டும் கட்டாயம் உதவி செய்வேன்.

**சாக்ரடீஸ்:** அப்படிச் செய்வதும் உமது கடமையோ?

**மணியக்காரர்:** ஆம்; சந்தேகமே இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்படி இருந்தும், இக் கிராமத்துச் சிறுவர்களும் சிறுமிகளும் அசுத்தத்தினாலும், வியாதியினாலும், அறியாமையினாலும் தேக சவுக்கியத்தையும் கண் பார்வையையும் இழந்துகொண் டிருப்பதையும், வயல்களைச் சரியாய்ப் பண்படுத்திப் பயிர் செய்யத்

தெரியாமையால், இக்கிராமத்தவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மாசூலில் பாதியும் கிடைக்கா திருப்பதையும் பார்த்திருக்கும் நீங்கள், அவர்களைச் சரியான முறைகளைக் கையாளச் செய்து நல்வழிப் படுத்துவது உங்களுடைய கடமை இல்லை என்று சொல்லுவீர்களா?

**மணியக்காரர்:** இதுவரையிலும் இந் நியாயங்களெல்லாம் எனக்குத் தோன்றவில்லை. இப்பொழுது நீர் சொன்னதெல்லாம் கேட்ட பிறகு ஒருவேளை நீரே சரியா யிருக்கலாம்; சர்க்கார் உத்தியோகஸ்தராகிய நாங்கள் உண்ட வீட்டிற்கு இரண்டு நினைப்பவர்களாய்த்தா னிருந்திருக்கிறோம் என்று நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** உண்மையில் ஒரு குழந்தை எப்படி இறந்தாலென்ன?—கிணற்றில் வீழ்ந்திறந்தாலும், வைசூரியாலிறந்தாலும், அல்லது விஷபேதியா லிறந்தாலுமெல்லாம் ஒன்றுதான். ஆனால், கிணற்றில் வீழ்ந்திறப்பது மற்றெல்லாவிதச் சாவையும்விட ஒருவேளை நல்லதென்றே சொல்லலாம். ஏனென்றால், அதனாலக் குழந்தைக்கு அதிக அவஸ்தை யில்லை; மேலும் தொத்து வியாதிகளைப் போல் அது இதரர்களைத் தொத்திக் கொள்ளாதன்றோ?

**மணியக்காரர்:** சாக்ரடீஸ், நீர் சொல்வது சரியே. இப்பொழுதுதான் எங்களுடைய கடமைகள் உண்மையில் இன்னவை யென்று உம்மால் நான் தெரிந்து கொண்டேன். இனி நான் நீர் சொன்னபடியே நடப்பேன்; யானும் என் கர்ணங்களும் உம்முடைய நல்ல காரியத்தி லுமக்குப் பேருதவிகளா யிருப்போம். மிராசுதாரர்களே, நீங்களுங்கூட இதை மனத்திலுறுதியாய் வைத்துக்கொள்ள வேண்டும். நமக்கோ

செல்வாக் கதிகம்; நல்ல காரியங்கள் செய்ய தருணங் களு மநேக மேற்படும். இவற்றை யெல்லாம் சரியான வழியி லுபயோகப்படுத்தி, ஜனங்களை பீடிப்பதை இனி விட்டு அவர்கள் மேன்மேலும் சவுக்கியமடை யும்படி நாம் முயற்சி செய்ய வேண்டும். போய் வரு கிறேன், சாக்ரடீஸே! எனக்கு நீர் கஷ்டப்பட்டுப் போதித்த மேன்மையான விஷயங்களுக்காக உமக்கு நிரம்ப வந்தனம் செய்கிறேன். இவ் விஷயங்களை நான் ஒரு காலத்திலும் மறக்கமாட்டேன்.

இவ் வுத்தியோகஸ்தர்கள் போன பிறகு, பக்கத்தி லுட்கார்ந்திருந்த மாஜி ராணுவத்தலைவ ரொருவர் சாக்ரடீஸை நோக்கி, 'சாக்ரடீஸ், சபாஷ். இவர்கள் கொடிய பிரஜா பீடைகள். அவர்களுக்கு நீர் நல்வழி போதித்ததைப் பற்றி எனக்கு வெகு சந்தோஷமா யிருக்கின்றது' என்றார்.

**சாக்ரடீஸ்:** (அதிக கோபத்துடன்) மாஜி ராணுவத் தலைவர்களும், மாஜி சிப்பாய்களும் ஆகிய நீங்க ளென்ன? நீங்கள் அவர்களைவிட கேடே. நீங்கள் இராணுவத்தி லிருந்தபொழுது சுத்தத்தைப் பற்றியும் சுகாதார விதிகளைப் பற்றியும், நோய்வராம லெப்படி தடுப்பது என்பதைப் பற்றியும் கற்றுக் கொண்டீர் கள்; அநேக தேசங்களைப் பார்த்திருக்கின்றீர்கள், நன்றாய்ப் படித்துப் பெரிய பதவியை அடைந்திருக்கு மநேக ராணுவத் தலைவருடன் சம்பாஷித்திருக்கின் றீர்கள்; அவர்களு முங்களைத் தங்கள் புத்திரர்கள் போலவே நினைத்து உங்களுக்கு அநேக நல்ல விஷயங் களை வெகு அன்புடன் போதித்திருக்கின்றார்கள். அப்படி யிருந்தும் பென்ஷன் பெற்று ஊர் வந்ததும், வீட்டை நன்றாய் வைத்துக் கொள்வதிலும், வயல்களை

நன்முய்ப் பண்படுத்திப் பயிர் செய்வதிலும், நோய்கள் வாராமல் தடுப்பதிலும் கிராமத்தாருக்கு வழிகாட்டிகளா யிருந்து, ஸ்திரீகளைக் கவுரவப்படுத்திப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கும்படி செய்து அவர்களை மேன்மை யடையும்படிச் செய்வதை விட்டு, உங்கள் இராணுவ உடுப்புக்களைக் கழட்டி எறிவதே போல் கற்ற வெல்லாவற்றையு மறந்து, பழைய ஆபாச வழக்கங்களையே பின்பற்றி வருகின்றீர்கள். நல்வழிகள் தெரிந்திருந்தும், அங்ஙனமே செய்ய துணிதலில்லாச் சோம்பேறிகளைவிட நீங்க ளெவ்விதத்தில் மேலானவர்கள்? ஆ!

**மாஜி ராணுவத் தலைவர்:** சாக்ரடீஸ், நீர் சொல்வது அநேகமாய் உண்மையே. ஆனாலும், நாங்க ளவர்களைப்போல் பிரஜா பீடைகளல்ல.

**சாக்ரடீஸ்:** (இன்னமும் கோபத்துடனே) நீங்கள் பிரஜா பீடைகளா யில்லாம லிருக்கலாம்; ஆனால், பிறர் சொத்தையுண்டு அவர்களுக் கோருதவியும் செய்யாத உண்ணிகளைப் போன்றவர்க ளென்பதற்குச் சந்தேகமே இல்லை. மாஜி ராணுவத் தலைவர்களே! மாஜி சிப்பாய்களே! விழித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் இராணுவத்தில் கற்றுக்கொண்ட நல்ல வழக்கங்களை யெல்லா மிங்கும் கைப்பற்றி, உங்களுடைய கிராமத்தையும் வீடுகளையும் சுத்தமாயும், ஒழுங்காயும், சௌக்கியமாயும் வைத்துக் கொள்ளுங்கள்.

**மாஜி ராணுவத் தலைவர்:** உம்முடைய வாக்கு இன்று மிகக் கடுமையா யிருக்கின்றது. ஆயினும், நீர் கைப்பிடித்த காரியம் ஜனங்களின் நன்மையைக் கோரும் பெரிய காரியமாதலின் நாங்க ளுமக்கு எங்களாலியன்ற வளவு இதிலுதவி புரிவோம்.

**சாக்ரடீஸ்:** சுபேதாரவர்களே, இதைக் கேட்க எனக்கு நிரம்ப சந்தோஷமா யிருக்கின்றது. நானேதாவது கடினமான வார்த்தைகளைச் சொல்லி யிருந்தால் மன்னியுங்கள். ஒரு சமயம் உங்கள் மீது அதிகமான கோபங்கொண்டு உங்களைச் சீர்திருத்துவது முடியாத காரியமென்று நினைத்த போதிலும், என் எண்ண மெப்பொழுதும் நல்ல எண்ணமே. நானு மொரு காலத்தில் இராணுவத்தி லிருந்தவன்தான்; ஆகையால், இராணுவத் தலைவர்களையும் சிப்பாய்களையும் எனது நல்ல நண்பர்களென்றே எப்பொழுதும் எண்ணி வருகின்றேன்.

## மனிதரின் மேன்மை

**சாக்ரடீஸ்:** பெரியவர்களே, வெகு நாழிகையாய் உங்கள் கிராமத்தாரது வாழ்க்கையைப் பற்றி ஆலோசித்துக்கொண்டிருந்தேன். உங்கள் வழக்க ஒழுக்கங்களைக் கவனிக்குங்கால், உங்களினும் தாழ்ந்தவை என்று நீங்கள் டம்பமாய்ச் சொல்லிக் கொள்ளும் காட்டு மிருகங்களைவிட நீங்களெந்த விதத்திலும் மேன்மை யுற்றவர்களாய் ஏற்படவில்லையே.

**கிராமவாசிகள்:** கிழவனாரே, இன்று மாலை நீர் எங்களைத் தூஷிக்க வேண்டுமென்றே வந்திருப்பது போல் தோன்றுகிறது. ஏன் எங்களை இம்மாதிரி ஒரே மொத்தமாய்ப் பழிக்கின்றீர்?

**சாக்ரடீஸ்:** சொல்லுகிறேன் கேளுங்கள். நான் இன்று காலையில் வந்துகொண் டிருக்கும்பொழுது, அநேக ஜனங்கள் மிருகங்களைப் போலவே வயல்களிலும், கிராமப் பாதைகளின் ஓரங்களிலும் ஜலமலங்களைக்

கழிப்பதைப் பார்த்தேன்; சுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளாவது அல்லது மானத்தைக் காப்பதற் குரிய மறைவுகளாவது ஒன்று மவ்விடத்திலில்லை. யோசிக்கு மிடத்து அம்மிருகங்க ளிந்த விஷயத்தி லுங்களைவிட சுத்தமா யிருக்கின்றன வென்றே சொல்லவேண்டி யிருக்கிறது!

**கிராமவாசிகள்:** நாமெல்லோருமே ஏதாவதொரு சமயத் தில் எங்கேயாவது அது செய்யவேண்டி யிருக்கிற தல்லவா? நாங்களதைச் செய்யும் விதம் நாகரிக மற்றதா யிருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்ளு கிறோம்; மேலும் துர்நாற்றமும் சகிக்க முடியவில்லை தான். ஆனாலெங்களுக்கு இது சகஜமாய்ப் போய் விட்டது. அதெப்படியாவ திருக்கட்டும், நீங்க ளெங் களை இப்பொழுதென்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** கிராமக்குழிக ளிருக்கின்றனவல்லவா? நீங்க ளெல்லோரு மிப்பொழுது உங்கள் குப்பைகளைப் போடக் குழிகள் வெட்டி வைக்கிறீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படிச் செய்வதும் உங்களாலே தான். அக்குழிகளை வெட்ட ஆரம்பித்த நாள்முதல் எங்கள் கிராமங்கள் சுத்தமாயிருக்கின்றன. எங்கள் குழந்தைகள் வியாதியில்லாம லிருக்கின்றார்கள்; அவர்கள் கண்களும் தொந்தரவற் றிருக்கின்றன. மேலும் ஊரில் முன்போல் அவ்வளவு ஈக்கள் இல்லை; தூசும் குறைந்தது; விளைச்சலும் இரட்டித்தது. உண்மையில் எங்கள் குழிக ளெங்களுக்கு அநேக விதத்தில் இலாபகரமா யிருக்கின்றன.

**சாக்ரடீஸ்:** அக்குழிகளை மலங்கழிக்குமிடமாக உப யோகப்படுத்திக் கொள்ளுங்கள். குழியின் மீது இரண்டு பலகைகளைக் குறுக்காய்ப் போட்டு அதைச்

சுற்றிலும் சுவரினுலாவது, தட்டிகளாலாவது மறைவு போட்டால் மலங்கழிக்க அது ஒரு நல்ல இடமாகும். கிராமத்தைச் சூழ இவ்வாறு செப்பனிடப்பட்ட சில குழிகளைப் புருஷர்களுக் கென்றும், சிலவற்றை ஸ்திரீ களுக் கென்றும் பிரத்தியேகப் படுத்தி வைக்கவேண்டும். இவ்வித ஏற்பாடுகள் செய்தால், உங்களுக்கு எருவும் அதிகமாகும்; ஊரில் துர்நாற்றமும் வீசாது. மிருகங்களைப் போன்றவர்களென்று உங்களை யாரும் பழிக்க மாட்டார்கள். தினந்தோறும் ஊரில் பெருக்கித் தள்ளும் குப்பைகளையும், சாம்பலையும், மாட்டுச் சாணத்தையும் குழிகளில் மலத்தின்மேல் போட்டால் துர்நாற்றம் வீசாது; ஈக்க ளுண்டாகா; உங்களுடைய தேக சவுக்கியமும் விருத்தி யடையும். இப்பொழுதைப்போல் ஈக்கள் ஆபாசத்தின்மீது உட்கார்ந்து, பிறகு உங்கள் போஜனத்தின்மீதும், உங்கள் குழந்தைகளது கண்களின்மீது உட்கார்ந்து நோயுண்டாக்கா.

**கிராமவாசிகள்:** முதலில் எங்கள் ஸ்திரீகளுக்காக இவ்வித ஏற்பாடுகள் செய்கிறோம்; பிறகு எங்களுக்கும் செய்து கொள்வோம்.

**சாக்ரடீஸ்:** கிராமவாசிகளே, அதுமாத்திரமல்ல. வேறு விஷயங்களில்கூட நீங்கள் மிருகங்களை ஒத்திருக்கின்றீர்கள்.

**கிராமவாசிகள்:** என்னென்ன விஷயங்களில்?

**சாக்ரடீஸ்:** முதலாவது, உங்கள் வீடுகளில் வெளிச்சம் கிடையாது; சாளரங்களு மில்லை. அவைகளை எலிப் பொந்துகள் அல்லது முள்ளம்பன்றி வசிக்கும் தரைக் குகைக ளென்று சொல்லலாம்.

**கிராமவாசிகள்:** ஆம், ஆனால் எங்களில் சிலர் ஜன்னல்கள் வைக்க ஆரம்பித்திருக்கின்றோம். நீங்கள் பல

முறையா யெங்களுக்குச் சொன்ன விஷயங்களை நாங்கள் அசட்டை செய்யவில்லை, சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** இரண்டாவது, உங்கள் கலியாணங்கள் பக்ஷிகள் கூடுவதுபோ லிருக்கின்றன—அவைகளெவ் விடத்திலும் பதிவு செய்யப்படுவதில்லை.

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்வது உண்மையல்ல; சாக்ரடீஸவர்களே! நீங்கள் கடைசி முறை இவ் விடம் வந்து சென்றபிறகு, நாங்கள் கலியாணப் பதிவு புத்தக மொன்று ஏற்படுத்திக்கொண்டோம். இதனால் அநேக வழக்குகளும், இதர தொந்தரவுகளும் நீங்கி இருக்கிறபடியால், இவ்விதமான கலியாணப் பதிவு எல்லோருமே கட்டாயமாய்ச் செய்யவேண்டுமென்று ஏற்பட்டால் மிகவும் நல்லதா யிருக்குமென்பது எங்க ளெல்லாருடைய அபிப்பிராயம். ஆகையால், கலி யாணப் பதிவு எல்லோருமே கட்டாயமாய்ச் செய்ய வேண்டுமென்கிற சட்ட மொன்று ஏற்படுத்தும்படிச் சர்க்காரைக் கேட்டுக்கொள்ள நினைத்திருக்கின்றோம்.

**சாக்ரடீஸ்:** நிரம்ப சரி. நீங்க ளதிவேகமாக மிருகங் களைவிட உயர்ந்த நிலைமையை அடைந்து வருகிறீர்க ளென்று தெரிகிறது.

**கிராமவாசிகள்:** ஆம், உண்மைதான். ஆனால், நீங்கள் அநேக சங்கதிகளை மறந்துவிடுகிறீர்கள், சாக்ரடீஸ வர்களே. எங்கள் புஸ்தகங்கள், எங்கள் பெரிய கட்டடங்கள், இருப்புப் பாதைகள், தையல் இயந் திரங்கள், துவிச்சக்கிர வண்டிகள் இவைகளைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** உங்களுக்கு எழுதத் தெரியுமோ?

**கிராமவாசி ஒருவன்:** தெரியாது.

**சாக்ரடீஸ்:** உமக்கு ஒரு கல் வீடு கட்டமுடியுமோ?

**கிராமவாசி:** முடியாது, நான் கொற்றனல்ல.

**சாக்ரடீஸ்:** உம்மால் ஓர் துவிச்சக்கிர வண்டியாவது அல்லது தையல் இயந்திரமாவது அல்லது ஒரு சாதாரண கட்டை வண்டியாவது செய்ய முடியுமா?

**கிராமவாசிகள்:** நாங்கள் தச்சருமல்ல, கம்மாளருமல்ல; நாங்கள் வேறு கைத்தொழில் வேலைக்காரருமல்ல.

**சாக்ரடீஸ்:** உங்களால் இருப்புப் பாதை போட முடியுமா!

**கிராமவாசிகள்:** முடியாது; நாங்கள் இஞ்சினீர்களல்ல; நாங்கள் மிராசுதாரர்கள், சாக்ரடீஸே.

**சாக்ரடீஸ்:** இவைகள் ஒன்றையும் நீங்கள் செய்ய முடியாதாகையால், இவ்விஷயங்களிலும் உங்களுக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமொன்றுமில்லை யல்லவா?

**கிராமவாசிகள்:** இல்லை; ஆனால், நாங்கள ளவைகளை யெல்லாம் உபயோகப்படுத்தக் கூடும்.

**சாக்ரடீஸ்:** ஆம்; ஒரு எலி புகைவண்டியில் உட்காரக் கூடும்; அதனால் அது மனிதனாகி விடுமோ? அதுவுமன்றி, ஒரு துவிச்சக்கிர வண்டியாவது, தையல் இயந்திரமாவது பழுதுபட்டால், உங்களால் அதைப் பழுதுபார்க்க முடியுமா?

**கிராமவாசிகள்:** அதெப்படி இருந்தாலும், நாங்கள் மிருகங்களைவிட சிறந்தவர்களே, சாக்ரடீஸ்.

**சாக்ரடீஸ்:** சிறந்தவர்களா? ஒருகாலு மில்லை. வித்தியாசப்பட்டவர்க ளென்றால், ஒப்புக்கொள்ளுகிறேன். அதெப்படி யென்கிறீர்களா? முதலாவது, நீங்கள் உங்கள் குழந்தைகளைத் தேக முழுவதும் அழுக்கு நிறைந்தவைகளாய் வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்; அவைகளை ஒருபொழுதும் குளிப்பாட்டுகிறதில்லை; உங்கள் வீடுகளும் அசுத்தமா யிருக்கின்றன. மிருகங்

களோ, அவைகளுடைய குட்டிகளையும் இருப்பிடங்களையும் வெகு சுத்தமாய் வைத்துக்கொள்ளுகின்றன. அன்றியும் மிருகங்களுக்கு நோய் வருகின்றதில்லை. அவைகளது குட்டிகளின் கண்களும் உங்கள் குழந்தைகளின் கண்களைப்போல் கெட்டுப் போகிறதில்லை. மிருகங்கள் அவைகளின் பெண் குட்டிகளை நீங்களுங்கள் பெண் குழந்தைகளைச் செய்வதுபோல் அசட்டை செய்வதில்லை. ஆனால், அவைகள் தம் ஆண் குட்டிகளையும், பெண் குட்டிகளையும் ஒரேவிதமாய்ப் பாதுகாக்கின்றன. அவைகள் உங்களைப்போல் பெண்களை வீட்டுக்குள்ளடைத்து வைத்து வியாதியையும், அசௌக்கியத்தையு முண்டுபண்ணுவதில்லை. அன்றியும், மிருகங்கள் உங்களைப்போல் ஒன்றின் மனைவியை மற்றொன்று அழைத்துக்கொண்டு ஓடிப் போவதில்லை. மிருகங்கள் ஒன்றின்மே லொன்று வியாச்சியம் தொடுப்பதில்லை. நீங்கள் கிணற்றுத் தண்ணீரை அசுத்தம் செய்வதுபோல் குடிக்கும் தண்ணீரை அவை அசுத்தப் படுத்துவதுமில்லை.

**கிராமவாசிகள் :** போதும், போதும், நிறுத்தும், சாக்ரடீஸாரே. இன்று நீர் எங்களை முற்றிலும் அவமானப் படுத்த வேண்டுமென்று நினைத்திருக்கின்றீர்போலிருக்கின்றது.

**சாக்ரடீஸ் :** நான் சொல்வது உண்மையோ, பொய்யோ?

**கிராமவாசிகள் :** உண்மைதான்; ஆயினும் கேட்க வெகு கஷ்டமா யிருக்கின்றது.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் என்னை உங்களுக்கு இதமான பொய்களைச் சொல்லச் சொல்லுகின்றீர்களா?

**கிராமவாசிகள் :** இல்லை, சாக்ரடீஸவர்களே. அவைகளா லெங்களுக் கோர்வித அனுகூலமுமில்லை; அவ்

விதப் பொய்களை அநேக வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம், சாக்ரடீஸவர்களே. இவ்வளவு விஷயங்களை ஒரே தடவையாகச் சொன்னால் எங்களால் கேட்க முடியவில்லை. ஒவ்வொன்றாய்ச் சொல்லுங்கள்; நீங்கள் சொல்லுகிறமாதிரி நடப்போம். நாங்கள் மாத்திரமன்று, எங்கள் சகோதரர்களும், மனைவிகளும்கூட இனி நல்வழிக்கு வரவேண்டும்; அவர்களைப் புதிய வழக்கமேதாவதொன்றைக் கைப்பற்றுமாறு செய்வதற்கு அதிக நாட்கள் பிடிக்கின்றன.

**சாக்ரடீஸ்:** அது எனக்கும் தெரிகிறது. ஆனால், சில சமயங்களில் என் மனம் இடிந்து நீங்களொரு பொழுதும் முன்னேற்றம் உறுவது அரிது என்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது.

**கிராமவாசிகள்:** முன்னையைவிட நாங்களிப்பொழுது எவ்வளவோ சீர்ப்பட்டிருக்கின்றோம். உங்களுக்கும் அது புலப்படுமென்று நினைக்கிறோம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** ஆம், சில மாறுதல்கள் காணப்படுகின்றன. எருக்குழிகள், கலியாணப் பதிவு பட்டிகள், சில சன்னல்கள், நகைகளின் குறைவு, இன்னுமிவை போன்ற வேறு சில சீர்திருத்தங்களு மேற்பட்டிருக்கின்றன வென்பதை நான் அறிவேன்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, உங்களுக்கு நிரம்ப வந்தனம். நீங்கள் சொல்லுவது எங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்குகின்றது.

**சாக்ரடீஸ்:** ஆம்; (வீட்டுக்குப் போக மூலை திரும்பும்பொழுது புன் சிரிப்புடன்) நீங்கள் ஒரு விஷயத்தில் மிருகங்களுக்கு மேற்பட்டவர்களென்றே சொல்ல

வேண்டும். வீட்டுக்குப் போகுமுன் அதென்னவென்று நான் சொல்லாமல் போகக்கூடாது. மிருகங்களுக்குச் சாராயம் குடிக்கவாவது, சுருட்டுப் பிடிக்கவாவது தெரியாது—போய்வருகிறேன்.

## மனிதர்களும் மிருகங்களும்

சாக்ரடீஸ் கிராமச் சாவடிக்கு வந்தார். அப்பொழுது கிராமப் பெரியவர்கள் வழக்கம்போல் சுருட்டுப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

**சாக்ரடீஸ்:** உங்கள் கிராமத்திற்கு வந்து உங்கள் மத்தியில் வசித்திருந்து உங்கள் வழக்க ஒழுக்கங்களைக் கவனிக்க நான் விரும்புகின்றேன்.

இதைக் கேட்ட பெரியோர்கள் திகிலடைந்து தலையசைத்துச் சற்றுக் கோப மடைந்தவர்களைப்போல் முணு முணுத்துப் பேசிக்கொண்டார்கள். கடைசியில் முதியோ னொருவன், 'சாக்ரடீஸவர்களே! உங்களது முதிர்ந்த வயதுக்காகவும், சிறந்த கல்விக்காகவும் எங்களுக்கு உங்களிடத்தில் நிரம்பக் கௌரவமுண்டு. ஆயினும், நீங்கள் சொல்லும் காரியம் கொஞ்சமேனும் சாத்தியமானதன்று' என்றான்.

**சாக்ரடீஸ்:** இதென்ன பாவம்! மறுபடியும் எனக்கும் தெரியாமலே உங்களுக்குக் கோப முண்டாகும்படி ஏதாவது செய்துவிட்டேனா என்ன? பெரியோர்களே, நான் உங்களுடன் வசித்திருந்து உங்கள் வழக்க ஒழுக்கங்களை ஏன் அறிந்துகொள்ளக் கூடாது?

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! தயவுசெய்து நீங்களெங்கள்மீது கோபித்துக் கொள்ளவேண்டாம்

நீங்கள் சொல்வது ஆகக்கூடாத காரியம். நாங்க ளெல்லோரும் சம்சாரிகள்; ஆகையால் நீங்கள் சொல்வது முடியாது.

**சாக்ரடீஸ்:** ஏனப்படி, பெரியவர்களே?

**கிராமவாசிகள்:** முடியவே முடியாதய்யா.

**சாக்ரடீஸ்:** ஏன் என்று கொஞ்சம் சொல்லக்கூடாதா?

**கிராமவாசிகள்:** அப்படியானல் சொல்லுகிறோம், கேளுங்கள். நாங்கள் கோஷா அநுசரிக்கின்றவர்கள். ஆகவே நீங்கள் எங்களூரில் வசித்திருந்தால் நீங்க ளவர்களைப் பார்த்து விடுவீர்களோ என்று எங்கள் ஸ்திரீகள் அஞ்சி அவர்கள் தினசரி வேலைகளைச் செய்ய அங்குமிங்கும் போகப் பயப்படுவார்கள்.

**சாக்ரடீஸ்:** (குலுங்க நகைத்துக்கொண்டு) வெகு நேர்த்தி! என்ன சொன்னீர்கள்? நானும் சம்சாரி தான்; மேலும் அறுபது வயது கிழவன்; என்னைக் கண்டு யார் பயப்படுவார்கள்?

**கிராமவாசிகள்:** (சற்றுக் கோபங்கொண்டவர்களாய்) அதெப்படி இருந்தாலு மிருக்கட்டும். அது எங்கள் வழக்கம். நீங்க ளெங்கள் கிராமத்தில் வசிக்கமுடி யாது.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் நான் கிராமத்திற்கு வெளிப் புறத்தில் வசிக்கின்றேன். நீங்கள் எப்பொழுது என்னை உள்ளேவர விடுகிறீர்களோ, அப்பொழுது வருகிறேன்.

**கிராமவாசிகள்:** (சற்று வெட்கம் கொண்டவர்களாய்) அதுவும் முடியாத காரியம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** இதென்ன? உங்கள் கால் நடைகள்கூட கோஷா அநுசரிக்கின்றனவா என்ன? நான் ஏன் அங்கேகூட வசிக்கக்கூடாது?

**கிராமவாசிகள்:** அதற்காக அன்று, அது கஷ்டமான காரியம்.

**சாக்ரடீஸ்:** அவ்வளவு மருமம் ஏன்? என்னுடன் சொல்லுங்கள். எனக்கு உங்கள் மனதை நோகச் செய்ய விருப்பமில்லை. ஆனால் கூடுமான வரையிலும் உங்களுக்குச் சமீபத்தில் வசிக்க விரும்புகிறேன்.

**கிராமவாசிகள்:** தடையின்றி வந்திரும், சாக்ரடீஸவர்களே. உங்களை எங்களுடைய உண்மையான சிநேகித ரென்றே கருதியிருக்கின்றோம். ஆனால் எங்கள் மனத்தில் உறுத்துவது ஒரு விஷயமே. ஊரைச் சுற்றி மலம் கழிப்பது எங்கள் வழக்கமாகையால், அவ்விட மெல்லாம் வெகு ஆபாசமா யிருக்கும். ஆகையால் உங்களால் அங்கு வசிக்க முடியாது. நீங்களெதையும் வெகு சுத்தமாய் வைத்திருக்க வேணு மென்கிறதினால், அங்கு வசிக்க உங்களா லாகாது. மேலும் எங்கள் ஸ்திரீகளும் அங்கு அடிக்கடி செல்வார்கள்.

**சாக்ரடீஸ்:** என்ன! நீங்கள் கோஷா வழக்கத்தை அநுசரிக்கிறீர்க ளென்று சொன்னீர்களே.

**கிராமவாசிகள்:** ஆம், அநுசரிப்பது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** இது ஒரு வெகு விநோதமான கோஷாவா யிருக்கின்றதே. உங்கள் ஸ்திரீகள் வீட்டிற் குள்ளிருக்கும் பொழுது கோஷா என்கிறீர்கள்; ஆனால் அவர்கள் வெளியில் சென்று எவரும் வரக்கூடிய பொது இடத்தில் மலஜலங்களைக் கழிப்பது உங்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்ற வில்லை. நீங்கள் வெகு விநோதமான ஜனங்கள்!

**கிராமவாசிகள்:** அவர்கள் இரவில் செல்கின்றார்கள்.

**சாக்ரடீஸ்:** இன்னும் கேவலம்தான். அன்றியும், அவர்

களுக்குத் தேக உபாதியால் பகலில் போகவேண்டி யிருந்தாலோ?

**கிராமவாசிகள்:** அவர்கள் இரவு வரும்வரையிலும் எப் படியாவது சகித்துக் கொண்டிருப்பார்கள்.

**சாக்ரடீஸ்:** என்ன அசௌகரியம்! என்ன வேதனை! தேக ஆரோக்கியத்திற்கு எவ்வளவு கெடுதி! புருஷர் களாகிய நீங்கள் இவ்வித கஷ்டத்திற்கு உட்படச் சம் மதிப்பீர்களா?

**கிராமவாசிகள்:** எங்களுக்கு இஷ்டமானபோது இஷ்ட மான இடத்தில் போகிறோம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் ஸ்திரீகளிடத்தில் நீங்கள் எவ்வ ளவு கடுமையாய் இருக்கின்றீர்கள்!

**கிராமவாசிகள்:** ஓ, விளைச்சலுக்கு மத்தியில் அவர்கள் போய் உட்காரலாம்.

**சாக்ரடீஸ்:** கிராமத்திற்குச் சமீபத்தில் விளைச்சல் வரு ஷம் முந்நூற்றறுபத்தைந்து நாளுமா விளைகின்றது?

**கிராமவாசிகள்:** விளைச்சலில்லா விட்டால் புதர்கள், பூண்டுகள் இவை போன்றவை இருக்கின்றன.

**சாக்ரடீஸ்:** ஆம், ஒவ்வொருவரும் அப்படியே செய்வத னால், அதில் ஏகாந்தமென்ன இருக்கின்றது? மேலும், புதர்களும் அதிகமில்லை; இருப்பவைகளும் ஒருபக்கத் தில்தான் மறைவைக் கொடுக்கின்றன. பெண்கள் போய்க் கொண்டிருக்கும்பொழுது யாராகிலு மவ்வழி வரநேர்ந்தால், அவர்கள் திடீரென்று எழுந்து மறைய வேண்டியதாய் இருக்குமே. எவ்வளவு அருவருப்பான காரியம்!

**கிராமவாசிகள்:** ஆம், நீங்கள் சொல்வது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** ஸ்திரீகளிடத்தில் கொடுமையா யிருப்ப தோடுகூட, நீங்கள் உயர்ந்த குலத்தா ரென்றும்,

கோஷா வழக்கத்தை அநுசரிப்பவர்களென்றும் டம்பமாய்ச் சொல்லிக் கொண்ட போதிலும் அவர்களைச் சுத்தமாய் மானங் கெட்டவர்களைப் போல் நடந்து கொள்ளும்படி செய்கிறீர்கள். இவ்விஷயத்திலும் உங்கள் வழக்கங்கள் இரக்கமற்றவை; மேலும் அசுத்தமானவை; அன்றியும் உங்கள் ஸ்திரீகளின் மானத்தைக் குலையச்செய்து அவர்களை இழிவுபடுத்தத் தக்கவைகளென்று நான் சொல்லவேண்டி யிருக்கிறது.

**கிராமவாசிகள்:** சரி, இவைகளை எல்லாம் மாற்றுவதற்கு என்ன யோசனை சொல்லுகிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** அது வெகு சுலபமான காரியம். உங்கள் குப்பைகளைப் போடுவதற்காகவும், எரு சேர்ப்பதற்காகவும் குழிகள் தோண்டி யிருக்கிறீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அவைகளைச் சுற்றிலும் சுவர்களையாவது தட்டிகளையாவது போடுங்கள். (தட்டிகளைவிட சுவர்களே மேலானவை; ஏனென்றால் அவைகளில் ஈக்கள் தங்கி நிற்க இடமிராது). பிறகு அக்குழிகளின் மீது குறுக்காய் இரண்டு பலகைகளைப் போடுங்கள். இப்படிச் செய்யப்பட்ட குழிகள் நல்ல ஒதுங்கிடங்களாகி விடும். கிராமத்தைச் சுற்றி இவைகளில் சிலவற்றை ஸ்திரீகளுக் கென்றும் சிலவற்றைப் புருஷர்களுக் கென்றும் பிரத்தியேகப் படுத்திவையுங்கள். அப்பொழுது உங்கள் ஸ்திரீகள் இரவிலானாலும் பகலிலானாலும் நிர்ப்பயமாயும் சவுக்கியமாயும் அவைகளுள் போய் வரலாம். நீங்களும் அவர்களும் இவ்வகை ஒதுங்கிடங்களுக்கு அதிகாலையில் போகலாம்; பிறகு வீடுகளிலிருந்தும் கிராமத்திலிருந்தும் பெருக்கித் தள்ளும் குப்பைகளையும், சாணத்தையும்,

சாம்பல்களையும் இக்குழிகளில் போட்டால், துர்நாற்றமும் ஈக்களும் உண்டாகா. உங்கள் வயல்களுக்கு அதிக எரு கிடைப்பதற்கு இவ்வேற்பாடு அநுகூலமாகவு மிருக்கும்.

**கிராமவாசிகள் :** நாங்க ளப்படியே செய்வோம். எங்கள் வழக்கங்களிலுள்ள உண்மையான கெடுதிகளை எடுத்துக் காட்டியதற்காக நாங்க ளுங்களுக்கு மிக்க நன்றியுள்ளவர்களா யிருக்கின்றோம். வெகு காலமாய் இக் கெட்ட வழக்கங்களை நாங்கள் பின் தொடர்ந்து வந்தமையா லவைகளா லுண்டாகும் கெடுதிகள் எங்களுக்குச் சகஜமாய் விட்டன. சாக்ரடீஸவர்களே, இன்னொரு முறை உங்களுக்கு நிரம்ப வந்தனம்.

## மூன்று எஜமானர்கள்

**சாக்ரடீஸ் :** நமஸ்காரம், சகோதரர்களே.

**கிராமவாசிகள் :** நமஸ்காரம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ் :** இன்று காலை உங்களூரில் அசுத்தமும் துர் நாற்றமும் நிரம்பி யிருக்கின்றன. அதனால் நான் வரும்பொழுது மெத்தவும் தொந்தரவு பட்டேன்.

**கிராமவாசிகள் :** ஆம், வீதி சோதிப்பவர்கள் ஒரு கலியாணத்திற்குப் போயிருக்கிறார்கள். ஆகையால், ஊரெல்லாம் துர்நாற்ற மெடுத்து விட்டது.

**சாக்ரடீஸ் :** இதென்ன கஷ்டம்! நான் இவ்வூர் மிராசுதாரர்களுக்குச் சொந்த மென்றல்லவோ எண்ணி யிருந்தேன். வீதி சோதிப்பவர்களா இவ்வூருக்குச் சொந்தக்காரர்? நீங்களல்லவா?

**கிராமவாசிகள் :** நாங்கள் தான். அதற்கென்ன சந்தே

கம்? இக்கிராமத்துக் குரியவர்கள் வீதி சோதிப்பவர்களென்றும், நாங்களவர்களுக் கடங்கினவர்களென்றும் நீங்கள் ஏன் நினைக்கின்றீர்கள்?

**சாக்ரடீஸ்:** ஏனு? மழை பெய்யா விட்டால், விளைச்சலில்லாமல் போய்விடும்; நீங்களும் பசியால் வருந்திமாண்டு போவீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அது உண்மையே.

**சாக்ரடீஸ்:** மழையை அனுப்புகிறவர் கடவுளல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம், ஏனதைக் கேட்கிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** ஆகையால் கடவுள் உங்களுக்கு எஜமானரன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், கடவுளுடைய கிருபை எங்களிடத்தில் என்று மிருக்க வேண்டும்.

**சாக்ரடீஸ்:** சரி. சர்க்காரார் சிப்பாய்களையும் போலீசார்களையும், நியாய ஸ்தலங்களையும் ஏற்பாடு செய்திரா விட்டால், தேசமெங்கும் ஒரே குழப்பமாய் விடுமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆமப்படித்தா னய்விடும். திருடர்கள் இரவில் எங்களைக் கொள்ளையடிப்பார்கள்; ஊர்ப் பயணம் போவது அபாயகரமாய் விடும்; தபாலாபீசுகள் இரா; வயல்களுக்குப் பாய்ச்ச வாய்க்கால் நீரும் கிடைக்காமல் போய்விடும்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, சர்க்கார் கூட உங்களுக்கு எஜமானரல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், சர்க்காரும் எங்களுக்கு எஜமானர்கள்தான்.

**சாக்ரடீஸ்:** வீதி சோதிப்பவன்கூட உங்களுக்கு எஜமானன் என்று நான் சொல்லுகிறேன்.

**கிராமவாசிகள்:** ஒருகாலும் இல்லை. அப்படி நீங்கள் சொல்வது கொஞ்சமேனும் சரியில்லை, சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** வீதி சோதிப்பவன் கிராமத்தைச் சுத்தி செய்யா விட்டால், நீங்க ளெல்லோரும் அசுத்தத் தினு லிறப்பீர்கள்; உங்கள் குழந்தைகளுக்கு அநேக விதமான வயிற்று நோய்கள் உண்டாகிவிடும்; அவர் கள் கண்களும் வியாதியால் பீடிக்கப்படும். மொத் தத்தில் கிராமமே சீக்கிரத்தில் குடி யிருப்புக்கு யோக்கியதை யற்றதாய்விடும். இக் கிராமத்தின் நிலைமை ஏற்கெனவே வெகு கேவலமா யிருக் கின்றதன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், நீங்கள் சொல்வது முற்றும் உண்மையே, சாக்ரடீஸ். எங்கள் கிராமம் இப் பொழுது கொஞ்ச காலமாய் அசுத்தமாய்த்தான் போய்விட்டது. வீதி சோதிப்பவர்களும் அவர்களது மனைவியரும் தங்கள் வேலையைச் சிறிதேனும் கவ னிப்பதில்லை; அவர்களிடம் வேலை வாங்குவதும் எங்களுக்குக் கஷ்டமாய் இருக்கிறது.

**சாக்ரடீஸ்:** ஆகவே வீதி சோதிப்பவர்கள்தான் உங்க ளுடைய எஜமானர்களன்றோ?

**கிராமவாசிகள்:** கடைசியில் பார்க்குங்கால் அப்படித் தான் சொல்லவேண்டி இருக்கிறது, ஐயா.

**சாக்ரடீஸ்:** ஆகையால் உங்களுக்கு மூன்று எஜமா னர்களிருக் கின்றார்கள்—கடவுள், சர்க்கார், வீதி சோதிப்பவன்.

**கிராமவாசிகள்:** எங்களை அவ்வளவு அவமானப்படுத்த வேண்டாம், சாக்ரடீஸவர்களே! ஆனல் நீங்களெடுத்

துக் காட்டிய முடிவை எங்களால் மறுக்க முடிய வில்லைதான்.

**சாக்ரடீஸ்:** இன்னும் இம்மூன்று எஜமான்களுக்குள் வீதி பெருக்கியே முக்கியமானவனுய் இருக்கிறுன். ஏனெனில், அவனது தயவு உங்களுக்கில்லை யென்றுல் பத்து நாட்களில் உங்களூர் பன்றிகளும் வசிக்கத் தகுதியற்றதாய் ஆகிவிடுமன்ருே?

**கிராமவாசிகள்:** அதுவும் உண்மைதான், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** வீதிசோதிப்பவர்கள் எல்லாத் தேசங்களிலுமிருக்கின்றுர்களன்ருே? இங்கிலாந்து தேசம் வெகு சுத்தமாய் இருக்கின்றது. அத்தேசத்திலுள்ள ஊர் பெருக்கிகள் அடங்கினவர்களாயும் வேலைத் திறமுடையவர்களாயு மிருக்கவேண்டும்.

**முதலாவது பழைய சிபாய்:** இல்லை, ஐயா. நான் இங்கிலாந்திற்குப் போய் இருக்கிறேன். அவ்விடத்தில் வீதி பெருக்குகிறவர்களே இல்லை.

**இரண்டாவது பழைய சிபாய்:** பாலஸ்டைனிலும் ஸலோனிகாவிலும்கூட நான் வீதி பெருக்குகிறவர்களைப் பார்த்ததில்லை.

**மூன்ருவது பழைய சிபாய்:** மெஸபடோமியாவிலும் ஆபிரிகாவிலும்கூட பார்த்ததில்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல் இந்தியா ஒன்றிலேதான் வீதி சோதிப்பவர்கள் இருப்பதாக ஏற்படுகிறது.

**கிராமவாசிகள்:** அப்படித்தான் நினைக்கிருேம். வேறு எவ்விடத்திலும் வீதி சோதிப்பவர்க ளிருப்பதாய் எங்களுக்குத் தெரியவில்லை.

**சாக்ரடீஸ்:** அப்பொழுது இப் பூமியிலுள்ள தேசங்

களுக்குள் இந்தியா தேசமே வெகு சுத்தமானதாய் இருக்கவேண்டும்.

**பழைய சிபாய்கள், கிராமவசிகள் :** (எல்லாரும் ஒருமிக்க) இல்லவேயில்லை. இந்தத் தேசத்தைவிட இங்கிலாந்து சுத்தமானது; பிராஞ்சும் சுத்தமானது. உண்மையில் நாங்கள் பார்த்த தேசங்களில் எதிலும் நம் தேசத்துக் கிராமங்களைப் போலவ்வளவு அசுத்தமானவைகள் கிடையவே கிடையா.

**சாக்ரடீஸ் :** அப்படியானால் இந்தத் தேசம் சுத்தமாக இருப்பதற்கு வேண்டிய தனி ஏற்பாடுகளைக் கொண்டிருந்தும் இதர தேசங்களைவிட வெகு சுத்தமாயிருப்பதற்குப் பதிலாக வெகு அசுத்தமான தேசங்களிலொன்று யிருக்கிறதென்று சொல்லுகிறீர்கள் ?

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸவர்களே ! அப்படித்தான் சொல்லவேண்டியதா யிருக்கிறது ; ஆனாலதற்குக் காரண மின்னதென்று எங்களால் சொல்ல முடியவில்லை.

**சாக்ரடீஸ் :** நான் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டு மென்கிற கருத்துடையவனே அக்காரியத்தை நன்றாய்ச் செய்யக்கூடியவன். நீங்களெவ்வளவுக் கெவ்வளவு கிராமத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளுகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் உங்கள் புலங்களுக்கு எரு சேரும். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் நீங்கள் சுத்தத்தைப்பற்றிக் கவனிக்கின்றீர்களோ அவ்வளவுக்கவ்வளவு உங்கள் குழந்தைகளின் தேக சவுக்கியம் விருத்தியடையும். உங்கள் நிலங்களின் வளமையிலும் உங்கள் குழந்தைகளின் தேக சவுக்கியத்தி

லும் சிரத்தை கொண்டவர்கள் யார்? நீங்களோ அல்லது வீதிசோதிப்பவர்களோ?

**கிராமவாசிகள்:** நாங்கள் தாம், சாக்ரடீஸவர்களே; வேறு யாராய் இருக்கக்கூடும்?

**சாக்ரடீஸ்:** ஆகையால் உங்கள் கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டுமானுல், அது உங்களாலே தான் ஆகவேண்டும்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, என்ன அப்படி சொல்லுகின்றீர்கள்? எங்களில் சிலர் க்ஷத்திரியர்கள், சிலர் வேளாளர்கள்; இம்மாதிரியான உயர் குலத்தவர்களா அசுத்தத்தை தொட்டு எடுப்பது? ஒரு நாளும் செய்யமாட்டோம். கொஞ்சமேனும் யோசனையின்றி என்ன இம்மாதிரி சொல்லுகின்றீகள்?

**சாக்ரடீஸ்:** மன்னிக்கவேண்டும், கிராமவாசிகளே! உங்கள் உயர்குல வழக்கங்களை நானறியேன்; ஆயினும் இம்மாதிரியான பிசகு சாதாரணமாய் நான் செய்வதில்லை. இன்று நான் வரும்பொழுது காற்று வீசியது; ஒருவேளை ஊர் மாடுகள் ஊர் வீதிகளின் வழியே போய்க்கொண்டு இருந்தனவோ என்னவோ. எங்குப் பார்த்தாலும் ஆகாயத்தில் தூசு நிரம்பி இருந்தது. அத்தூசு என் சுவாசாசயத்திற்குட் சென்றது. அதனுல் என் புத்தி கொஞ்சம் தடுமாறி என்னை இங்ஙனம் புத்தியில்லாத வார்த்தைகளைச் சொல்லச் செய்திருக்கலாம்.

**கிராமவாசிகள்:** ஆம், தூசு ஒரு தொந்தரவுதான். வயது முதிர்ந்த பெரியவராகிய உங்களை நாங்கள் கோபித்துப் பேசினதைப் பற்றி எங்களுக்கு மன வருத்தமாய்த்தான் இருக்கிறது. ஆனுல் நீங்கள் சொல்

லியது எங்களுக்கு மிக்க அகௌரவமான விஷய மென்பதையும் நீங்கள் உணரவேண்டும்.

**சாக்ரடீஸ்:** எனக்கு நிரம்ப விசனமா யிருக்கின்றது. இனி அம்மாதிரியான வார்த்தைகளை ஒருபொழுதும் சொல்லமாட்டேன். ஆனால் ஒரு சிறிய விஷயத் தைப்பற்றி உங்களைக் கேட்க விரும்புகிறேன். காற் றடிக்கும்பொழுதும், அல்லது மனிதரோ மாடுகளோ நடக்கும் பொழுதும் மேல் கிளம்புகிற அத்தூசுகள் ஆபாசக் குவியல்களினின்று வருகின்றன அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், ஊரைச்சுற்றி ஆபாசக் குவியல் கள் இருக்கின்றன. அநேக காலமாய் அப்படித்தான் இருந்திருக்கிறது.

**சாக்ரடீஸ்:** இந்தக் கிராமங்கூட அநேக தலைமுறை முன் வசித்த மனிதர்களா லாக்கப்பட்ட ஆபாச மேட்டில்தான் கட்டப்பட்டிருக்கவேண்டும்,

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** இவ்வாபாசக் குவியல்களிலிருந்து கிளம் பும் தூசுகள் நீங்கள் சுவாசிக்கும் ஆகாயத்தில் நிரம்பி யிருக்கின்றன; அவை நீங்கள் உண்ணும் சாப்பாட் டிலும், குடிக்க உபயோகப்படுத்தும் கிணறுகளின் ஜலத்திலும், பானைகளில் வைத்திருக்கும் நீரிலும் கலக்கின்றன. மழைகாலத்தில் இத் தூசுகளை மழை நீர் அடித்துக்கொண்டுபோய்க் குளங்களிலும் குட் டைகளிலும் சேர்க்கின்றது; அந்த ஜலத்தைத்தான் நீங்கள் குளிப்பதற்கும், துணிகள் துவைப்பதற்கும், உபயோகப்படுத்து கிறீர்கள்; அதையே உங்கள் கறவை மாடுகளும் குடிக்கின்றன அன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், ஏன் குடிக்கக்கூடாது? வெகு காலமாய் அப்படித்தான் நடந்து வருகின்றது. இன்

றைக்கு ஏன் எங்கள் பழைய வழக்கங்களைப்பற்றியும் நாங்கள் வசிக்கும் விதத்தைப்பற்றியும் இவ்வளவு மும்முரமாய் விசாரிக்கின்றீர்கள்.

**சாக்ரடீஸ்:** மன்னிக்கவேண்டும், கிராமவாசிகளே! நீங்கள் சாப்பிடும் ஆகாரத்துடனும், குடிக்கும் ஜலத்துடனும், சுவாசிக்கும் காற்றுடனும் உட்கொள்ளும் இந்தத் தூசானது வெகு சன்னமாய்ச் செய்யப்பட்ட ஆபாசந்தவிர வேறொன்று மல்லவே, நண்பர்களே!

**கிராமவாசிகள்:** ஒரு வகையில் அது உண்மையாக இருக்கலாம்.

**சாக்ரடீஸ்:** ஆகையால் ஓர் உயர்குலத்தவன் ஆபாசத்தைப் புசிக்கலாம்; ஆபாசத்தைக் குடிக்கலாம்; ஆபாசத்தைச் சுவாசிக்கலாம்; அதாவது ஆபாசத்தைச் சாப்பாட்டிற்குச் சாம்பாராகவும், குடிப்பதற்கு ஷர்பத்தாகவும் உபயோகிக்கலாம்; ஆனால் தானும் தன் குழந்தைகளும் உட்கொள்ளும் ஆகாரத்தையும், தண்ணீரையும், காற்றையும் சுத்தமாய் வைத்துக் கொள்ளும் பொருட்டுத் தன் கிராமத்தைத் தானே சுத்தி செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் கோபங்கொண்டு என்னைத் தூஷிக்கிறீர்கள். உலகத்தை அசுத்தஞ் செய்வதும் அவ்வசுத்தத்தை நீக்க ஒரு முயற்சியும் செய்யாமலிருப்பதும் உயர்குலத்தானது உடன்பிறந்த உரிமைபோலும்! ஓ கிராமவாசிகளே, உங்கள் ஜாதி விவகார முறைமைகள் வெகு சிக்கலாய் இருக்கின்றன.

**கிராமவாசிகள்:** மன்னிக்கவேண்டும், சாக்ரடீஸ் அவர்களே! இந்தத் தடவை எங்களை வாய் திறக்க விடாமல் செய்து விட்டீர்கள். உங்களை நாங்கள் இப்பொழுது அவமரியாதையாய்ப் பேசினதைப்பற்றி

நாங்கள் மிக்க மனவருத்தப்படுகின்றோம். ஆனால் நாங்கள் என்ன செய்வோம்? வழக்கத்தை மாற்று வது வெகு கஷ்டமான காரியமாயிருக்கின்றது. நாங்கள் அசுத்தத்திலேதான் வளர்ந்தோம்; அதேமாதிரி எங்களுடைய குழந்தைகளையும் அசுத்தத்திலேயே வளர்ப்பது சுலபமான காரியம். ஆனால் வீடுகளைச் சுத்தமாக வைப்பதும், குழந்தைகளுக்குத் தேக ஆரோக்கிய முண்டாகும்படி எங்கள் கிராமங்களை நாங்களே சுத்தி செய்வதும், வெகுகாலமாய் வழங்கி வரும் வழக்கங்களை மாற்றுவதும் சுலபமல்ல, ஐயா.

**சாக்ரடீஸ்:** நீங்கள் சொல்வது உண்மைதான். முன்னேற்றத்திற்கு உயரச் செல்லும் வழி குறுகியும் செங்குத்தாயும் தானிருக்கும். ஆயினும் உங்கள் குழந்தைகளாவது தொன்றுதொட்டு வரும் அசுத்த வழக்கங்களைவிட்டு நல்ல பழக்கங்களை அநுசரிக்கும்படி செய்யுங்கள்.

**கிராமவாசிகள்;** ஆம், அப்படியே செய்கிறோம். ஆனால் செய்யும் வழிமாத்திரம் எங்களுக்குப் புலப்படவில்லை.

**சாக்ரடீஸ்:** வாலிபச் சாரணர்கள், ஒவ்வொரு பையனுக்கும் அவன் சுத்தமாயிருக்க வேண்டுமென்பதைப் பற்றியும், அவன் வசிக்கும் வீடு சுத்தமாய் வைக்கப் பட்டிருக்க வேண்டுமென்பதைக் குறித்தும், வேலைக்காரர்களையாவது அல்லது இதரர்களையாவது எதிர் பார்க்காமல் தாங்களே தங்களுக் குரியவைகளைச் சுத்தம் செய்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும் போதிக்கின்றார்கள். சுய உதவியும் பொது ஜன ஊழியமும் அவ்வாலிபச் சாரணர்களது கோட்பாடுகளாகும். உங்கள் சிறுவர்களைப் பேடன் பவுல் துரையவர்களால் ஏற்படுத்தப்பட்ட அவ்வாலிபச்

சாரண இயக்கத்தில் சேர்த்துச் சிறு வயதிலேயே சுத்தம், சுயமதிப்பு என்னும் சிறந்த குணங்களைக் கைப்பற்றும்படி செய்யுங்கள், இதுதான் வழி.

# பயிற்சி

**சாக்ரடீஸ்:** சவுக்கியமா, மணியக்காரரே?

**மணியக்காரர்:** சவுக்கியந்தான் ஐயா! தாங்களும் சவுக்கியந்தானே?

**சாக்ரடீஸ்:** இருக்கின்றேன் ஒருவாறு. நான் கிழவன்; தனிமையானவன் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அதிருக்கட்டும், உங்கள் குமாரனைக் காணேனே! எங்குப் போயிருக்கின்றான் இன்று காலையில்?

**மணியக்காரர்:** வெளியே வயல்களில் ஒரு குதிரையைப் பழக்கிக்கொண்டிருக்கின்றான்.

**சாக்ரடீஸ்:** எதற்காக அதைப் பழக்குகிறான்.

**மணியக்காரர்:** சவாரிக்காக; வேறெதற்காக இருக்கக் கூடும்?

**சாக்ரடீஸ்:** அதற்காகத் தனியாய்ப் பழக்கப்பட வேண்டுமென்பது இன்றுவரை எனக்குத் தெரியாது.

**மணியக்காரர்:** ஆம், சாக்ரடீஸ். உழவும், வண்டிகளை இழுக்கவும் எருதுகள் பழக்கப்பட வேண்டும்; மனிதர்களை முதுகின்மேல் சவாரி ஏற்றிச் செல்லவும், பந்தயத்தில் ஓடவும், இன்னும் அநேக வேலைகளைச் செய்யவும் குதிரைகள் பழக்கப்பட வேண்டும்.

**சாக்ரடீஸ்:** அப்படியா? அப்பொழுது அநேக வேலைக்காரர்களை அவரவர்கள் வேலைக்குப் பழக்க வேண்டியிருக்கும். ஒரு மிராசுதாரருடைய பாடு வெகு கஷ்டமானதாய் இருக்க வேண்டும்.

இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில், மணியக்காரர் மனைவி அவரைக் கூப்பிட்டு, அவரது பெண் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுக ளெல்லாம் செய்தாய்விட்டதா வென்று கேட்டாள்.

**சாக்ரடீஸ்:** ஓ! கலியாணமா! மெத்த சந்தோஷம். எப்பொழுது முகூர்த்தம்?

**மணியக்காரர்:** கலியாணச் சடங்குகள் நாளைக்குத் துவக்குகின்றன, ஐயா.

**சாக்ரடீஸ்:** உங்கள் பெண் ஏற்றுக்கொள்ளப் போகிற குடித்தன வாழ்க்கைக்கு வேண்டிய அறிவையும் பயிற்சியையும் அவளுக்கு வேண்டிய அளவு போதித்திருக்கிறீர்க ளென்று நினைக்கிறேன்.

**மணியக்காரர்:** நீங்க ளென்ன சொல்லுகிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** உங்கள் மாடுகளும் குதிரைகளும் அவைகள் செய்யவேண்டிய வேலைகளுக்கு நன்றாய்ப் பழக்கப்பட வேண்டுமென்று சற்று நேரத்திற்கு முந்தி நீங்கள் சொல்ல வில்லையா?

**மணியக்காரர்:** ஆம், அதற்கும் இதற்கு மென்ன சம்பந்தம்?

**சாக்ரடீஸ்:** பெண்களும் அவர்கள் இனி ஏற்றுக் கொள்ள வேண்டிய வேலைகளுக்குப் பழக்கப்பட வேண்டியது அவசிய மல்லவோ?

**மணியக்காரர்:** ஏன்? அவளுக்கு மாவரைக்கத் தெரியும்; சாணம் தட்டத் தெரியும்; கொஞ்சம் சமையல் செய்யவும் தெரியும்; இன்னும் என்ன வேண்டும்? அவள் பெண்ணாய்ப் பிறந்தவள் தானே?

**சாக்ரடீஸ்:** நிரம்ப சரி, இவ்வளவு நன்றாய்ப் பழக்கப் பட்ட மனைவியை மணக்க அவள் புருஷன் எவ்வளவு அதிர்ஷ்டசாலியாய் இருக்கவேண்டும்!

**மணியக்காரர்:** அதற்கென்ன சந்தேகம்? அவளுக்கு நகைக்காக எவ்வளவு செலவழித்திருக்கின்றேன்? அதுவுமன்றி அவனும் வெகு நல்ல பையன். அவன் குலம் விளங்க கடவுள் ஒரு பிள்ளையை அவனுக்குக் கொடுக்கவேண்டும்! இதுவரையில் அவன் தகப்பனுரின் பேரப் பிள்ளைகளெல்லோரும் சிசுக்களா யிருக்கும்பொழுதே இறந்து விட்டார்கள்—என்ன துரதிர்ஷ்டம்! பாவம்!

**சாக்ரடீஸ்:** இக்கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் குழந்தைகள் தேக பலத்துடனும் தேக ஆரோக்கியத்துடனும் வளரவேண்டுமென்று மனப்பூர்வமாய் ஆசைப்படுகிருர்களல்லவா?

**மணியக்காரர்:** ஆம், அதைக்குறித்தே நாங்கள் கடவுளை எப்பொழுதும் பிரார்த்திக்கிறேம்.

**சாக்ரடீஸ்:** குழந்தைகளை யார் வளர்க்கிருர்கள்?

**மணியக்காரர்:** அவர்களுடைய தாயார்.

**சாக்ரடீஸ்:** தாயின் கடமைகளுக்குள் இது வெகு முக்கியமானதல்லவா?

**மணியக்காரர்:** ஆம், வெகு முக்கியமானதுதான்.

**சாக்ரடீஸ்:** அக் குழந்தைகளுக்கு நேரிடக்கூடிய வியாதிகளையும் ஆபத்துக்களையும் நமது கிராமங்களின் அசுத்த நிலைமையையும் கவனிக்குங்கால், அது அவளுக்கு அதிக கஷ்டமானதாய்த்தான் இருக்க வேணுமன்றே?

**மணியக்காரர்:** ஆம்; அது உண்மைதான். நான் சற்று முன் சொன்னமாதிரி எனது சிநேகிதரது பேரப் பிள்ளைகளெல்லோரும் சின்னஞ் சிறு குழந்தைகளா யிருக்கும் பொழுதே இறந்து விட்டார்கள்; அவர்

பேரன் என்று அழைக்க ஒரு பேரப்பிள்ளைகூட இல்லாம லிருக்கிறார்.

**சாக்ரடீஸ்:** தாய்க்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பு மிக்க அதிகமான தென்பதற்குச் சந்தேகமே யில்லை.

**மணியக்காரர்:** ஆம், அதிகந்தான். என் பெண் அப் பொறுப்பைச் சரியாய் நிர்வகிப்பா ளென்று நினைக் கிறேன்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் எவ்வளவு கவலையுடன் அவனை அத்தொழிலுக்குப் பழக்கி இருக்கிறீர்கள்! அப்படி யிருக்க ஏன் அப்பொறுப்பை அவள் நிர்வகிக்க மாட்டாள்?

**மணியக்காரர்:** மறுபடியும் முன்போல் ஆரம்பித்து விட்டீர்களே! என்ன சொன்னீர்க ளிப்பொழுது?

**சாக்ரடீஸ்:** சற்று நேரத்திற்கு முன் உங்களுடைய எருதுகளையும் குதிரைகளையும் அவைகள் செய்ய வேண்டிய வேலைகளுக்கு வெகு ஜாக்கிரதையாய் நீங்கள் பழக்குகிறீர்க ளென்று சொல்லவில்லையா? உங்கள் பெண் அம்மிருகங்களைவிட உங்களுக்கு முக் கியமானவளன்றோ? ஆகையால் நீங்கள் அவளை இக் கஷ்டமான தொழிலாகிய குழந்தைகளை வளர்க்கும் வேலைக்கு நன்றாய்ப் பழக்கித்தா னிருப்பீர்கள்.

**மணியக்காரர்:** என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? அவள் மாவரைப்பாள். வறட்டி தட்டுவாள், சுமா ராய்ச் சமையல் செய்வாள் என்று சொன்னேனே. இதைவிட என்ன வேணுமென்கிறீர்?

**சாக்ரடீஸ்:** உங்களுடைய பெண்ணுக்குச் சிசுக்களை எப்படிக் குளிப்பாட்டுவது, அவைகளுக்கு எப்படி உணவு ஊட்டுவது என்பதைப்பற்றியும், அவை களுக்கு வேண்டிய உடுப்புகளை எப்படித் தைத்துப்

பழுது பார்ப்பது என்பதைப் பற்றியும், அவைகளுக்கு ஏற்படும் சாதாரண வியாதிகள், கண்வலி, வெட்டு



உங்கள் பெண்களுக்கு உடுப்புக்களை எப்படித் தைத்துப் பழுது பார்ப்பது என்பதைப்பற்றித் தெரியவேண்டும்

காயம், அடி, வயிற்றுவலி முதலியவற்றிற்கு எங்ஙனம் சிகிச்சை செய்வது என்பதைப் பற்றியும் நன்ருய்ப் போதித்திருக்கிறீர்களென்று நினைக்கிறேன். அவளுக்கு வீட்டில் நல்ல காற்று தாராளமாய் உலாவச் செய்யவும், வைசூரி, சுரம், முதலிய தொற்று நோய்கள் வாராதபடி காப்பாற்றிக் கொள்ளவும் தெரியுமல்லவா?

**மணியக்காரர்:** கிழவரே! என்ன புத்தி தடுமாறிப் பேசுகிறீர். என் பெண் சிறு குழந்தை; அதிலும் பெண்ணுய்ப் பிறந்தவள். அவளிருக்கட்டும், எனக்குத்தான் இவ்விஷயங்களைக் குறித்து என்ன தெரியும்? இவையெல்லாம் தலைவிதிப் பயன். கடவுளின் கிருபை இருந்தால், குழந்தைகள் தேகாரோக்கியத்துடன் ஓங்கி வளர்கிருர்கள். அவரது கிருபை இல்லை எனில், முற் பிறப்பின் வினைப்படி ஆகின்றது.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் அம்மைவைத்தல் குயினா, கக்கூசு, கொசு வலைகள் இவைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்களொரு காலத்தில் சிபாயியாய் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இவைகளின் பயன் நன்றாய்த் தெரியும். இவைகளைச் சேனையில் எவ்வள வுக் கெவ்வளவு நன்று கவனித்தார்களோ அவ்வளவுக் கவ்வளவு ராணுவத்தைச் சேர்ந்தவர்களும் தேக சௌக்கிய மடைந்திருந்தார்க ளன்றோ?

**மணியக்காரர்:** ஆம், அது உண்மைதான். ஆனால் ஒரு ஸ்திரீ இவைக ளெல்லாவற்றையும் குறித்துக் கவலைப் படுவானேன்?

**சாக்ரடீஸ்:** அவளுக்கு நோயற்ற குழந்தைகள் வேணு மானால், இவைகளை யெல்லாம் கவனிக்க வேண்டியது நிரம்ப அவசியம், மணியக்காரரே. உம்முடைய பெண் ணுக்குக் குழந்தை உடுப்புகள் தைக்கத் தெரியுமா?

**மணியக்காரர்:** தெரியாது. இதைத் தெரிந்துகொள்ள அவகாசமேது? மாவரைப்பதிலும், சாணம் தட்டு வதிலும், இன்னம் வீட்டிலுள்ள இதர வேலைகளைச் செய்வதிலும் காலமெல்லாம் கழிந்துவிடுகிறது. அதுவு மன்றி, அதைச் சொல்லிக் கொடுப்பது யார்? அவ ளது தாயார் தையல் வேலையை அறியாள்.

**சாக்ரடீஸ்:** மாவரைக்கும் யந்திரசாலையிற் கொடுத்து மாவை அரைத்துக் கொள்ளலாமே. சாணம் தட்டு வதை முற்றிலும் விட்டு, அடுப்பெரிப்பதற்கு விறகை யாவது கரியையாவது உபயோகப்படுத்திக் கொள்ள லாம். அப்படிச் செய்தால் சாணத்தை உங்கள் வய லுக்கு உரமாக உபயோகப்படுத்தி, விளைவையும் இரட்டிக்கச் செய்யலாம். அதனால் உங்களது செல் வமு மிரட்டிக்கு மன்றோ?

**மணியக்காரர்:** அப்படிச் செய்யலாமென்பது உண்மை தான். ஆனால், அவள் பெண்ணாய்ப் பிறந்தவள் தானே? அவளைப்பற்றி அவ்வளவு தொந்தரவு ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்?

**சாக்ரடீஸ்:** ஆனால், நீங்கள் சற்று நேரத்துக்கு முன் குழந்தைகளை வளர்ப்பது பெண்களின் வேலைகளுள் முக்கியமான வேலை என்று சொன்னீர்களன்றோ?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** குலம் விருத்தியாவதற்குத் தேகாரோக்கியமுள்ள குழந்தைகளவசியமென்று சொன்னீர்களல்லவா?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** குழந்தைகள் சிசுக்களாயிருக்கும் பொழுதே அநேகமாய் இறந்து விடுகிறார்கள் என்கிறீர்களல்லவா?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** இராணுவத்தில் உள்ள ஏற்பாடுகளினால் அதைச்சேர்ந்த சிபாய் முதலானவர்கள் தேக சவுக்கியத்தை அடைந்திருந்தார்களென்பதையும் ஒத்துக் கொண்டீர்களன்றோ?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அநேகமாய் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு இராணுவத்தைப் போல்தானென்று நினைக்கிறேன்.

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** யோசித்துப் பார்த்தால், எல்லாம் தலைவிதிப்படிதான் நடக்கிறதென்று சொல்லவும் இடமில்லை என்று ஒப்புக்கொண்டீரல்லவா?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ் :** அப்படியானால், தாயாகப்போகும் பெண்கள் செய்யவேண்டிய வேலைகளில் வெகு முக்கியம் தாய் வேலை; அதனைச் சரியாய்ச் செய்ய அவர்களை ஏன் பழக்கி வைக்கலாகாது?

**மணியக்காரர் :** எப்படி ?

**சாக்ரடீஸ் :** அவளைப் பாடசாலைக்கு அனுப்புங்கள்.

**மணியக்காரர் :** எங்கே? எங்கள் கிராமத்தில் பெண் பாடசாலை யில்லையே.

**சாக்ரடீஸ் :** ஆண் பாடசாலை இருக்கின்றதல்லவா ?

**மணியக்காரர் :** இருக்கின்றது.

**சாக்ரடீஸ் :** அப்படியானால், பிள்ளைகளுக்குப் பதிலாக அப்பள்ளிக்கூடத்திற்கு ஏன் பெண்களை அனுப்பக் கூடாது ? பெண் பாடசாலை அதிக அவசியமா யுங்களுக்கு வேண்டியிருக்க, அதில்லாமல் ஆண் பிள்ளை பாடசாலை எதற்கு ? அதிருக்கட்டும், ஏன் உங்கள் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் ஒரே பாடசாலையில் படிக்கக் கூடாது ?

**மணியக்காரர்:** ஆலோசியாமல் பேச வேண்டாம், சாக்ரடீஸ். நீர் சொல்வது சாத்தியமில்லாத காரியமென்பது உமக்கே தெரியும்.

**சாக்ரடீஸ் :** ஏனப்படி மணியக்காரரே ?

**மணியக்காரர் :** ஆண் பிள்ளைகள் எப்பொழுதும் ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் எப்பொழுதும் பெண் பிள்ளைகளே. அவர்களெப்படி ஒரே பாடசாலையில் சேர்ந்து படிப்பது ?

**சாக்ரடீஸ் :** கிராமத்தில் அவர்கள் சேர்ந்துதானே றார்கள் ?

: ஆம்.

**சாக்ரடீஸ்:** அப்பொழுது யாராவது அவர்களுக்குக் காவலிருக்கிறார்களா ?

**மணியக்காரர்:** இல்லை.

**சாக்ரடீஸ்:** அதனாலவர்களுக்கு எப்பொழுதாவது கெடுதி நேரிட்டிருக்கிறதா ?

**மணியக்காரர்:** ஒருநாளு மில்லை. நாங்கள் நிர்மல சிந்தையுள்ள கிராமவாசிகள்; எங்கள்மீது அம்மாதிரி சொல்லாது போல் தீங்கு சொல்லிக் காட்டவேண்டாம், ஐயா.

**சாக்ரடீஸ்:** பாடசாலையில் அவர்களை நன்கு கவனித்து வர மனிதர் இருக்கிறார்க ளல்லவா ?

**மணியக்காரர்:** ஆம், அப்படித்தான் நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், அவர்களுக்கு அங்கு என்ன கெடுதி நேரிடக்கூடும் ?

**மணியக்காரர்:** நீங்கள் சொல்லுமாதிரி கவனித்துப் பார்த்தால் தீங்கு எதுவும் ஏற்பட நியாயமில்லை என்றுதான் நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, உங்களுடைய பெண் குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புங்கள்; அவ்விடத்தில் வீட்டு வேலைகளை எப்படி நிர்வகிப்ப தென்பதைப் பற்றியும், குழந்தைகளை வளர்ப்ப தெவ்விதமென்பதைப் பற்றியும் அவர்கள் கற்றுக் கொள்ளட்டும். அப்படிச் செய்தீர்க ளானால், இப்பொழுதைப் போல் எல்லாம் விதிப்பயன்படிதான் நடக்கின்ற தென்று நினைக்க இடமிராது. சிசுக்களைப் பராமரிக்கும் வழி இன்ன தென்று அறியாததனால் உங்கள் குழந்தைகள் இப்பொழுது இறப்பதுபோல் அப்பொழுது இறக்க மாட்டார்கள்.

**மணியக்காரர் :** சாக்ரடீஸவர்களே, எனக்கும் என் பிள்ளை பெண்களுக்கும் வயதாகிவிட்டது. ஆகையால் நீங்க ளிப்பொழுது சொன்ன புத்திமதிகளால் நாங் கள் பயனடைய முடியாது. ஆயினும் என் பேரன் மார்களாவது அவர்களது பெண் பிள்ளைகளுக்கு ஏற் படக் கூடிய பொறுப்பைச் சரியாய் அறிந்து, அதற் குரிய விஷயங்களைப் போதிக்கவும் அதற்கு வேண் டிய பயிற்சியைக் கொடுக்கவும் செய்கிறேன்.

## முன்னேற்றமடையும் வழி

சாக்ரடீஸ் கிராமச்சாவடியண்டை சென்றபொழுது எங்குப் பார்த்தாலும் பெருங் குழப்பமா யிருந்தது. மேலும் எல்லோரும் கூட்டங்கூடிப் பேசிக்கொண் டிருப்பதையும் அவர் கண்டார்.

**சாக்ரடீஸ் :** என்ன விசேஷம் ? சகோதரர்களே ! யாராவது புதிதாய் அறுப்பறுக்கும் யந்திரம் கண்டு பிடித்தார்களா ? அல்லது கிணற்றி லிருந்து நீரிறைக் கும் யந்திரம் கண்டு பிடித்தார்களா ? என்ன இது ?

**கிராமவாசிகள் :** அதொன்றுமில்லை. யந்திரம் எதற்கா கக் கண்டு பிடிக்க வேண்டும் ? இப்பொழுது இருப் பவை போதாவோ ? நீங்க ளெப்பொழுது பார்த்தா லும் நூதன விஷயங்களைப் பற்றித் தான் தொல்லைப் படுகிறீர்கள்.

**சாக்ரடீஸ் :** அதிருக்கட்டும். உங்களில் இப்பொழுது இவ்வளவு குழப்பம் உண்டாக்குவது யாதோ ?

**கிராமவாசிகள் :** அறுவடை காலந் தோறும் எங்களை வரி கொடுக்கச் சொல்லுகிறார்கள்.

**சாக்ரடீஸ் :** என்ன கொடுமை ?

**கிராமவாசிகள்:** கொடுமை என்பதற்குச் சந்தேகமே இல்லை. இதை ஒருநாளுங் கேட்டறியோம்; எங்களை ஒரு பொருட்டாய் நினைக்கவில்லை; ஏற்கெனவே பாழும் மிராசுதாரர்களாகிய நாங்கள் சர்க்கார் வரிகளால் நசுக்குற்றிருக்கின்றோம்.

**சாக்ரடீஸ்:** உங்களுக்கு நேர்ந்திருக்கும் இவ் வாபத்தைக் கேட்க எனக்கு நிரம்ப பரிதாபமா யிருக்கின்றது. இப்புது வரியைக் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டாலென்ன ?

**கிராமவாசிகள்:** அப்படித் தான் சொல்லப்போகிறோம்.

**சாக்ரடீஸ்:** நிரம்ப சரி.



என்னை உங்கள் பிரதிநிதியாக அனுப்புங்கள். வரிகளைக் குறைத்து விடுகிறேன்.

**கிராமவாசிகள்:** சென்ற வாரத்தில் இங்கிலீஷ் படித்

தவ ரொருவர் மேநாட்டு உடுப்பு தரித்து இந்த ஊருக்கு வந்தார். அவர் 'என்னை நீங்கள் உங்கள் பிரதிநிதியாக அடுத்த முறை அனுப்புவீர்களானல் நான் சட்ட சபையில் பேசி நீங்கள் கொடுத்து வரும் நிலத் தீர்வையையும் இதர வரிகளையும் குறைத்து விடுகிறேன்' என்று சொன்னர்.

**சாக்ரடீஸ்:** கெட்டிக்காரப் பயல்! கட்டாயம் நீங்கள் அவனை உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**கிராமவாசிகள்:** அதில் சந்தேகமே இல்லை. நாங்கள் அவரைத்தான் எங்கள் பிரதிநிதியாக நியமிக்கப் போகிறோம்.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது நூதன வரி யென்றீர்களே அது எதற்காக? சென்னையில் ஒரு மணிக் கூண்டு கட்டுவதற்காகவோ?

**கிராமவாசிகள்:** இல்லை. முன்னேற்றப்போரை நடத்து வதற்காக அது வேணுமாம்.

**சாக்ரடீஸ்:** ஓ! அப்படியானல் அது அவ்வளவு கெட்ட தாய்த் தோன்றவில்லை. கொடுமையினுலும் இறு மாப்பினுலும் அது விதிக்கப்பட்டதென்று சொல்ல வும் தகாது.

**கிராமவாசிகள்:** ஏன் தகாது? இவை யெல்லாவற்றையும் செய்யவேண்டியது சர்க்காரின் கடமை யல்லவோ?

**சாக்ரடீஸ்:** ஆம். ஆனல் அப்படிச் செய்வதில் உதவி புரியவேண்டியது உங்களது கடமை யல்லவோ?

**கிராமவாசிகள்:** இல்லை; ஏன் நாங்க ளுதவி புரிய வேண்டும்.

**சாக்ரடீஸ்:** நீங்களே இக் காரியங்களை யெல்லாம்

செய்தாலொழிய இவைகளுக்கெல்லாம் பணச்செலவு பிடிக்குமன்றே?

**கிராமவாசிகள்:** ஆம், பிடிக்கும்.

**சாக்ரடீஸ்:** இதற்கென்று சர்க்காரார் உங்கள் கிராமத்திற்கு உத்தியோகஸ்தர்களை அனுப்பவேண்டுமானால் அதற்குப் பணச்செலவாகுமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அவர்களைப் பழக்கவேண்டும்; பின்னர் அவர்கள் ஊரூராய்ச் செல்லவேண்டும்; அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்; பிரயாணப்படியும் கொடுக்கவேண்டும் அன்றே?

**கிராமவாசிகள்:** ஆம், கொடுக்கவேண்டியது நியாயந்தான்.

**சாக்ரடீஸ்:** அவர்கள் பரோபகாரம் செய்கிறதா யிருந்தாலும், அவர்களுக்கு ஜீவனத்திற்கு வேண்டுமல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம், அதற்கென்ன சந்தேகம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய விஷயங்களை நீங்களே ஓழிந்த வேளைகளில் கவனித்துக்கொள்ளுவதா யிருந்தால் சொற்பதொகை போதுமாக இருக்கும். அப்படியன்றி முன்னேற்றத்தைப் பற்றி ஜனங்களுக்குச் சொல்லவும், அதற்காகச் செய்ய வேண்டியவை இன்னவென்பதை எடுத்துக்காட்டவும் சம்பளம் கொடுத்துப் பிரத்தியேகமாக உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்துவதா யிருந்தால் அதைவிட அநேக மடங்கு அதிகச் செலவு பிடிக்குமல்லவோ?

**கிராமவாசிகள்:** அதற்குச் சந்தேகமில்லை.

**சாக்ரடீஸ்:** அச்செலவுக்கு யார் பணம் கொடுப்பது?

**கிராமவாசிகள்:** சர்க்கார்தான் கொடுக்கவேண்டும். இதிலென்ன சந்தேகம்?

**சாக்ரடீஸ்:** சென்ற ஆறு வருஷங்களுக்குள் உங்களுக்காக அநேக மைல் கப்பிரோட்டுகள் போடப்பட்டிருக்கின்றனவே.

**கிராமவாசிகள்:** ஆம், உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அநேக வைத்தியசாலைகள்கூட கட்டப்படவில்லையா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** பள்ளிக்கூடங்களும் அவைகளில் படிக்கும் பிள்ளைகளின் தொகையும் இரட்டித்தனவன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** உண்மையில் உங்கள் நன்மைக்கு வேண்டிய காரியங்களெல்லாம் அதிதீவிரமாய் நடந்தேறினவன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் கொடுக்கும் வரிகள் அதிகமாயினவோ?

**கிராமவாசிகள்:** இல்லவே இல்லை.

**சாக்ரடீஸ்:** எல்லா சாமான்களுடைய விலைகளும் இப்பொழுது முன்னைவிட அதிகமாயின வல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** இக்காரியங்களெல்லாம் செய்யவேண்டின் திரவியம் எங்கிருந்து வருமென்று நினைக்கிறீர்கள்?

**கிராமவாசிகள்:** சர்க்காரிடத்திலிருந்து.

**சாக்ரடீஸ்:** சர்க்காரென்பது நீங்களல்லவோ? நீங்களல்லவோ வரிகளையெல்லாம் கொடுப்பவர்கள்?

இல்லாவிடின் சர்க்காருக்குத் திரவியம் ஏதாவது சுரங்கத்தி லிருந்தாவது புதையலி லிருந்தாவது வருகின்றதோ?

**கிராமவாசிகள்:** வரிகளைக் கொடுப்பவர்கள் நாங்கள் தான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், புதிது புதிதாய் விருத்தியாகிக்கொண்டேவரு மிவ்வேலைகளுக் கெல்லாம் நீங்கள் கொடாவிட்டால் யார் திரவியம் உதவுவார்கள்?

**கிராமவாசிகள்:** நாங்கள் மிக்க ஏழைகளாயிற்றே.

**சாக்ரடீஸ்:** இந்த வேலைகளால் உங்கள் செல்வமும் அதிக விருத்தியாகவில்லையா?

**கிராமவாசிகள்:** எப்படி?

**சாக்ரடீஸ்:** உங்களுக்குப் பொறுக்கு நெல் விதைகளைப் பற்றித் தெரியும். அவை அதிக நெல்லையும் அதிக வைக்கோலையும் கொடுக்கின்றன.

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** இவ்வுயர்ந்த விதையை உபயோகப்படுத்துவதால் ஏகரொன்றுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது? சுமார் பத்து அல்லது பதினைந்து ரூபாயிருக்குமா?

**கிராமவாசிகள்:** அவ்வளவுதான்.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது இந்த ஜில்லாவில் எத்தனை ஏகர் நிலம் நெல் விதைக்கிறார்கள்?

**கிராமவாசிகள்:** சுமார் பதினாயிரம் ஏகர்களிருக்குமென்கிறார்கள்.

**சாக்ரடீஸ்:** அப்படியென்றால் ஒரு லக்ஷம் அல்லது ஒன்றரை லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள மாசூல் அதிகமாக உண்டாகிறதென்று ஏற்படுகிறது அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** சர்க்கார் ஏற்பாட்டின்படி வளர்க்கப்படும் பொலி காளைகளைப்பற்றிச் சற்று விசாரிப்போம். இப்பொழுது இந்த ஜில்லாவில் அவ்வகை எருதுகள் சுமார் எழுநூறு இருக்கின்றனவல்லவா?

**கிராமவாசிகள்:** அப்படித்தானென்று நினைக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** ஒவ்வொரு பொலிகாளையும் வருஷத்தில் ஐம்பது கன்றுகளை உற்பத்தி செய்யலாமல்லவா?

**கிராமவாசிகள்:** அதைவிட அதிகம்; எழுபத்தைந்து அல்லது நூறு கன்றுக ளிருக்கலாமென்று நினைக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** ஐம்பது கன்றுகளென்றே வைத்துக்கொள்ளுவோம். 700 எருதுகள் எத்தனைக் கன்றுகளை ஒரு வருஷத்தி லுற்பத்தி செய்யக்கூடும்?

**பள்ளிக்கூடப் பையன்:** 35,000 சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** உன் தகப்பனாரா லிந்தக் கணக்கைப் போட முடியாதென்று நினைக்கிறேன்! இவைகளில் ஒவ்வொரு கன்றும் சாதாரண கோயிலெருதுகளா லுற்பத்தியான கன்றைவிட எவ்வளவு அதிக விலை பெறும்?

**கிராமவாசிகள்:** ஓ! சுமார் ரூ. 25 முதல் ரூ. 100 வரையில் பெறலாம்.

**சாக்ரடீஸ்:** மேலும் மூன்று நான்கு வருஷங்களுக்குள் இந்தச் சர்க்கார் பொலிகாளைகளா லுண்டான பசுங் கன்றுகளும் கன்றுகளை ஈனுமன்றோ? இதனால் இன்னும் அபிவிருத்தி அதிகமாகுமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** சரி, கன்றொன்றுக்குச் சராசரி ரூ. 30 என்று வைத்துக்கொள்ளுவோமா?

**கிராமவாசிகள்:** அது சரியான மதிப்புதான்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, முப்பத்தையாயிரத்து முப்பது எவ்வளவு?

**பள்ளிக்கூடப் பையன்:** ஒரு லக்ஷத்து ஐயாயிரம்.

**சாக்ரடீஸ்:** இன்னொருமுறை யோசித்துப்பார், தம்பி!

**கர்ணம்:** பத்தரை லக்ஷம்.

**சாக்ரடீஸ்:** சரி, வருஷத்தில் பத்தரை லக்ஷ ரூபாய்; குழியிட்ட எரு என்னுகிறது?—இப்பொழுது எருவைக் குழியில் போட ஆரம்பித்தபிறகு எருவும் முந்தியைவிட அதிகம் சேருகிறதல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம், நிரம்ப அதிகம்தான்.

**சாக்ரடீஸ்:** முந்திய குப்பைமேட்டு எருவைவிட இந்தக் குழி எரு உரத்திலும் அதிகமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், உரம் அதிகந்தான்.

**சாக்ரடீஸ்:** இப்பொழுதென்ன ஐம்பதினுயிரம் எருக் குழிகளிருக்கின்றனவோ?

**கிராமவாசிகள்:** அப்படித்தான் சொல்லுகிறுர்கள்.

**சாக்ரடீஸ்:** ஒவ்வொரு குழியிலுமுள்ள எருவை வருஷத்திலொருமுறை யல்லது இரண்டு முறை வெளியே எடுக்கிறுர்களல்லவோ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** ஒவ்வொரு குழியிலிருந் தெடுக்கப்பட்ட எருவை உபயோகப்படுத்துவதால் உண்டாகும் அதிக மாசூல் சுமார் ரூ. 30 பெறுமென்று மதிக்கலாமா?

**கிராமவாசிகள்:** நூறு ரூபாய்கள் என்று சொல்லலாம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** தப்பாமல் ரூ. 30 தான் அதிகமாய்க் கிடைக்குமென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியானல் வருஷத்திலுண்டாகும் அதிக மாசூலின் மதிப்பெவ்வளவாகிறது?

**பள்ளிக்கூடப் பையன்:** பதினைந்துலக்ஷ ரூபாய்கள், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** இந்தத் தடவை நீ சொன்னது சரி, தம்பி; இப்பொழுது கிராமங்களி லேற்பட்டிருக்கும் சுத்தத்தினல் சுரம் முதலிய வியாதிகள் விசேஷமாய்க் குறைந்திருக்கின்றன அன்றோ? இதை எவ்வளவு மதிக்கலாம்?

**கிராமவாசிகள்:** அதன் மதிப்பு நிரம்ப அதிகமே.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது நீங்களுபயோகப் படுத்தி வரும் நீரிறைக்கும் பாரசீக இராட்டினங்கள்—?

**கிராமவாசிகள்:** அவைகளைப் பொன் புதையல்களென்று தான் சொல்ல வேண்டும், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** உங்கள் ஸ்திரீகளும் குழந்தைகளும் புருஷர்களும் போட்டுக்கொள்ளும் நகைகளைக் குறைத்ததனாலும், கலியாணம் முதலிய விசேஷங்களுக்காக ஏற்படும் செலவுகளைக் குறைத்ததனாலும் உண்டாகிய லாபத்திற்கு மதிப்பு?

**கிராமவாசிகள்:** இதுவும் வெகு அதிகம்தான்.

**சாக்ரடீஸ்:** இன்னும், கூட்டுச் சேமநிதி (*Co-operative Bank*) யின் மூலதனமாகிய இருபத்தைந்து லக்ஷ ரூபாய்களுக்குள்ள வட்டியினு லேற்பட்ட லாபமெவ்வளவு?

**கிராமவாசிகள்:** அதுவும் ஒரு பெரிய தொகையாய்த்தானிருக்கவேண்டும். ஆனலெங்களுக்கு வட்டிக்கணக்குப் பார்க்கும் வழி மாத்திரம் தெரியாது.

**சாக்ரடீஸ்:** எல்லாவற்றிற்கும் சேர்த்து வருஷத்துக்கு ஐம்பதுலக்ஷம் என்று சொல்லுவோமா?

**கிராமவாசிகள்:** அதுவும் தாழ்ந்த மதிப்புதான்.

**சாக்ரடீஸ்:** அது அவ்வளவென்றே வைத்துக்கொள்வோம். உங்கள் நிலத்தீர்வையின் தொகை என்ன ?

**கர்ணம்:** பதினாறுலக்ஷம் இந்த ஜில்லாவுக்கு.

**சாக்ரடீஸ்:** ஆகவே, உங்களுடைய முன்னேற்றத்திற்காகச் செலவுசெய்த தொகையினால் நிலவரியிலிருந்து உண்டாகும் தொகையைவிடக் குறைந்தது மூன்று மடங்கு வருமானம் உங்களுக்கு ஏற்படுகின்றது அல்லவா ?

**கிராமவாசிகள்:** ஆம், உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியிருந்தும் ஒரு நல்விஷயத்திற்காக உதவிப்பொருள் சிறிது கொடுக்க வேண்டுமென்றால் வருத்தப்படுகிறீர்கள் ; சர்க்கார் வரிகளைக் குறைக்க வேணு மென்கிறீர்கள்.

**கிராமவாசிகள்:** இதுவரையில் அப்படித்தான் சொன்னோம் : ஆனால் நீங்களிப்பொழுது எடுத்துக் காட்டினதிலிருந்து அது தப்பிதமென்று நினைக்க இடமாகிறது.

**சாக்ரடீஸ்:** இந்தக் காரியத்தில் செலவிடப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் வருஷத்தில் உங்களுக்குப் பத்து அல்லது இருபது ரூபாய் லாபத்தைக் கொடுக்கிறதாக தெரிகிறதல்லவா ?

**கிராமவாசிகள்:** இப்பொழுது நீங்கள் செய்தமாதிரி கணக்கிட்டால் அதைவிட அதிகமாய்த்தா னிருக்க வேண்டும்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் வரிகளைக் குறைக்கவேண்டுமென்பதைவிடக் கொஞ்சம் அதிக வரி கேட்டாலும் கொடுக்கச் சம்மதிப்பது புத்திசாலித்தனமல்லவா ?

**கிராமவாசிகள்:** அப்படித்தான் தோன்றுகிறது, சாக்ரடீஸவர்களே. ஆனாலிதுவரையிலும் இந்த விஷயத்தை இம்மாதிரி நாங்கள் யோசித்துப் பார்க்கவில்லை.

**சாக்ரடீஸ்:** ஆகவே, தம்மை உங்கள் பிரதிநிதியாகச் சட்டசபைக்கு அனுப்பினால் நீங்கள் கொடுத்துவரும் வரிகளைக் குறைத்துவிடுகிறேனென்று உங்களுக்குச் சொன்னவர் உங்களுக்குக் கெடுதி செய்யப்போகிற வரே தவிர, நன்மை செய்யப்போகிறவரல்லவென்று விளங்குகிறதன்றோ?

**கிராமவாசிகள்:** உண்மையில் அப்படித்தான் ஏற்படு கிறது.

**சாக்ரடீஸ்:** ஆகவே, முன்னேற்றத்திற்காகவும், அபி விருத்திக்காகவும் செலவிடப்பட்ட பொருளானது நமக்குப் பெருகிய விளைச்சலாலும், சீர்மையடைந்த தேக சவுக்கியத்தினாலும், சுகத்தினாலும், சந்தோஷத் தாலும் அபரிமிதமான லாபத்தைத் தரும் சிறந்த மூல தனமாகவே நினைக்கப்பட வேண்டும்.

**கிராமவாசிகள்:** அது முற்றிலு முண்மையே.

**சாக்ரடீஸ்:** ஆகையால், சந்தாக்களைக் கொடுங்கள். உங்களுடைய வரிகளைக் குறைத்து விடுகிறேன் என்று சொல்பவருக்குப் பதிலாக உங்கள் தேசத்தை அபி விருத்தி செய்து உங்கள் முன்னேற்றத்திற்கு உழைத்து அதற்காக இன்னுமதிக வரிகளைப் போட வேண்டுமென்றாலும் போட ஏற்பாடு செய்யக்கூடிய ஒருவரை உங்கள் பிரதிநிதியாகச் சட்டசபைக்கு அனுப்புங்கள்.

**கிராமவாசிகள்:** நிச்சயமாய் அப்படியே செய்கிறோம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** இன்னொரு விஷயம். ஓ மூட கிராமவாசி களே! வருஷத்தில் நீங்கள் கொடுக்கும் நிலத்தீர்வை, சந்தாக்கள் இவைகளைவிட அநேக மடங்கு அதிகமாய்

நகைகளிலும், வியாச்சியத்திலும், லஞ்சத்திலும், வட்டிக்குவட்டி கொடுப்பதிலும், இவைபோன்ற இன்னம் பல உபயோகமற்ற காரியங்களிலு முங்கள் பணத்தை வீண் செலவு செய்கிறீர்களல்லவா ?

**கிராமவாசிகள் :** அது முற்றும் உண்மையே, சாக்ரடீஸ். அதை நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.



வெட்கத்தினுல் நாங்கள் தலை தாழ்த்துகிரும்

**சாக்ரடீஸ் :** எல்லாவற்றிலும் பரிதாபகரமான காரியமென்னவென்ருல் லஞ்சம் கொடுக்கவோ அல்லது வியாச்சியம் செய்யவோ ஆயிரம் ரூபாயானுலும் கூசாமலும் கொஞ்சமேனும் முணுமுணுக்காமலும் செலவிடுவீர்கள். ஆனுல் யாராவது **வாலிபச் சாரண இயக்கத்திற்காவது சிசுபரிபாலன** சங்கத்திற்காவது ஐந்து ரூபாய் கொடுங்கள் என்று கேட்டால், ஊர்கூட்டி ஆரவாரம் செய்து உங்களைக் கொள்ளையடித்து உங்கள் பணத்தைப் பறிக்கின்ருர்களென்று சொல்லுகிறீர்கள்.

**கிராமவாசிகள் :** நீங்கள் சொல்வது சரி; வெட்கத்தினுல் நாங்கள் தலையைத் தொங்கவிட நேரிட்டுளது.

# விவேகமுள்ள விவசாயம்

சாக்ரடீஸும் மணியக்காரரும் சாலைவழியாய்க் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருந்தார்கள். திடீரென்று சாக்ரடீஸ் நின்று தம் மேல் வேஷ்டியின் நுனியால் நாசியை அடைத்துக்கொண்டு, 'என்ன துர்நாற்றம்?' என்றார்.



என்ன துர்நாற்றம்!

**மணியக்காரர்:** ஏதோ ஒரு கேடுகெட்ட குழந்தை அது. இச்சிறு மிருகஜந்துக்கள் இப்படித்தான் ஊர் முழுமையும் எப்பொழுதும் ஆபாசஞ் செய்கின்றன.

**சாக்ரடீஸ்:** (நகைத்துக்கொண்டு) நானிதுவரையில் பார்த்ததிலிருந்தும் மோந்ததிலிருந்தும் இவ்வூர் முழுமையும் குழந்தைகளாகவேதான் இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது; மணியக்காரரே! இக்குழந்தைகளைக் கவனிக்கிறவர்கள் யார்?

**மணியக்காரர்:** அவர்கள் தாய்மார்கள்தான்.

**சாக்ரடீஸ்:** குழந்தைகள், தாயார்கள் சொல்லிக் கொடுத்ததையே செய்கின்றன அன்ருே?

**மணியக்காரர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** தாய் தந்தையர்கள் செய்வதைப் பார்த்து அதேமாதிரி அவைகளும் செய்கின்றனவன்ருே?

**மணியக்காரர்:** ஆம், ஆம்.

**சாக்ரடீஸ்:** ஆகையினுல் தாய் தந்தையர்கள் ஊரை ஆபாசம் செய்வதை விட்டாலொழிய அத்துர்வழக்கத்தைக் குழந்தைகள் கைப்பற்றித்தான் வரும்.

**மணியக்காரர்:** அப்படித்தான் நினைக்கிறேன், சாக்ரடீஸவர்களே. கெட்ட வழக்கங்களைக் குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பவர் அதன் தாய்தந்தையரே என்று சொல்லவேண்டி யிருக்கிறது.

இங்ஙனம் பேசிக்கொண் டிருக்கும்பொழுது ஒரு மனிதன் தலையின்மேலொரு விதை மூட்டையை வைத்துக்கொண்டு அவ்வழியே வந்தான்.

சாக்ரடீஸ் அவனை நோக்கி, 'நமஸ்காரம், என்ன கொண்டுபோகிறீர் இன்றைக்கு?' என்று கேட்டார்.

அம்மனிதன் 'நெல் விதை' என்ருன்.

**சாக்ரடீஸ்:** எங்கே வாங்கினீர் அதை?

**கிராமவாசி:** செட்டியார் கடையில்.

**சாக்ரடீஸ்:** என்ன மாதிரியான விதை அது?

**கிராமவாசி:** சாதாரணமாய் எல்லாரும் வாங்கும் விதைதான்.

**சாக்ரடீஸ்:** சாப்பிடுவதற்காக விற்கின்ருரே அதே மாதிரியான நெல்தானே இது?

**கிராமவாசி:** அதேமாதிரிதான்.

**சாக்ரடீஸ்:** செட்டியாருக்கு நெல் வகைகளைப்பற்றியும், அவைகளின் குணங்களைப்பற்றியும் நன்றாய்த் தெரியுமென்று நினைக்கிறேன். அவருக்கு எது விரைப்பாட்டிற்குத் தகுந்த நெல் என்பதும் தெரியுமன்றோ?

**கிராமவாசி:** அதொன்றுமில்லை. அவர், ஜனங்கள் கொண்டுபோய்க் கொடுப்பதை வாங்கி வைத்துக் கொள்ளுகிறார்; அதைத்தான் சாப்பாட்டுக்கென்றாலும் விரைப்பதற்கென்றாலும் விற்கிறார்.

**சாக்ரடீஸ்:** உங்களுக்கு இரும்பு சாமான் வேண்டுமானால் எங்கு வாங்குகிறீர்கள்?

**கிராமவாசி:** கொல்லனிடத்திலிருந்து வாங்குகிறோம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் நகைகளை யாரிடத்திலிருந்து வாங்குகிறீர்கள்?

**கிராமவாசி:** தட்டானிடத்திலிருந்து.

**சாக்ரடீஸ்:** மிட்டாய்களை?

**கிராமவாசி:** மிட்டாய்க் கடைக்காரனிடத்திலிருந்து.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் உங்கள் விதைகளை மாத்திரம் ஏன் சாதாரண கடைக்காரனிடத்தில் வாங்குகிறீர்கள்? விதைகள் விற்பவனிடத்திலிருந்து ஏன் வாங்கக்கூடாது?

**கிராமவாசி:** விதைகள் விற்கும் வியாபாரி யென்று ஒருவருமில்லையே.

**சாக்ரடீஸ்:** சர்க்கார் பண்ணையில் முதல் நெம்பர் விதைகள் கிடைக்குமே. அவைகளை ஏன் வாங்கலாகாது?



முதல்நெம்பர் நெல்லை விதை

**கிராமவாசி:** வாங்கலாம். ஆனால் அவர்கள் செட்டி

யார் கொடுப்பதைவிட ரூபாய்க்கு ஒரு படி குறைவாக விற்கிறார்கள்.

**சாக்ரடீஸ்:** ஆயினும், அதனால் ஏகருக்கு எவ்வளவு அதிகமாய் விளையும்?

**கிராமவாசி:** சுமார் இரண்டரைக் கலமுதல் ஐந்து கலம் வரையில் அதிகம் விளையும்.

**சாக்ரடீஸ்:** ஒரு ஏகராவுக்கு எவ்வளவு விதை வேண்டும்?

**கிராமவாசி:** சுமார் ஒரு கலம்.

**சாக்ரடீஸ்:** சர்க்கார் பண்ணை முதல் நெம்பர் விதை வாங்கினால் ஒரு ஏகராவுக்கு எவ்வளவு அதிகம் பிடிக்கும்?

**கிராமவாசி:** சுமார் அரை ரூபாய் முதல் ஒரு ரூபாய் வரையிலிருக்கும்.

**சாக்ரடீஸ்:** மாசூல் பத்து முதல் இருபது ரூபாய் வரையிலு மதிகமாகுமல்லவா?

**கிராமவாசி:** அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் உங்களுக்கு வேண்டிய நெல் விதைகளைச் சாதாரண கடையில் வாங்குவதைவிட சர்க்கார் பண்ணை விதைகளை விற்பவனிடத்திலிருந்து வாங்குவது புத்திசாலித்தனமா யிராதா?

**கிராமவாசி:** அது உண்மைதான். ஆனால் சர்க்கார் உடனே கையில் பணம் கொடுக்கவேண்டுமென்பார்களே.



உன் மாசூல் பத்து முதல் இருபது ரூபாய் வரை அதிகமாகும்

**சாக்ரடீஸ்:** உங்களுக்குத் தக்காவி கிடைக்காதா?

**கிராமவாசி:** ஆம், கேட்டால் உடனே கிடைக்கும்.

**சாக்ரடீஸ்:** மார்வாடிக்கு நீங்கள் என்ன வட்டி கொடுக்கிறீர்கள்?

**கிராமவாசி:** விதைக்காக வாங்கினுல் 100-க்கு 50 கொடுக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் கிராமத்தில் கூட்டுறவு சேமநிதி இருக்கிறதன்றோ?

**கிராமவாசி:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அவர்கள் கேட்கும் வட்டி என்ன?

**கிராமவாசி:** நூற்றுக்குப் பன்னிரண்டு என்று நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் நிதியில் சேர்ந்தவர்களல்லவோ?

**கிராமவாசி:** இன்னும் சேரவில்லை.

**சாக்ரடீஸ்:** ஆகவே, நீங்கள் சோம்பேறித்தனத்தால் தக்காவிக் கடன் பெறவாவது, நிதியில் சேரவாவது அல்லது சர்க்கார் பண்ணையிலிருந்து விதை வாங்கவாவது ஒரு முயற்சியும் செய்யாததால் அதிக வட்டியினுல் நஷ்டப்படுவதோடு நீங்கள் ஒவ்வொரு ஏகருக்கும் அனேக கல நெல் குறைவாக மாசூலெடுக்கவும் நேரிடுகிறது.

**கிராமவாசி:** அது உண்மைதான், சாக்ரடீஸவர்களே! ஆனுல் சோம்பேறித்தனத்தை மாற்றுவதென்றுல் வெகு கஷ்டமா யிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** அதிருக்கட்டும், நீங்கள் சென்னைக்கு இவ்வளவு சமீபமாக இருந்தும் ஏன் நெற்பயிரிட வேண்டும்?

**கிராமவாசி:** நல்ல குடியானவர்கள் எல்லாம் நெல் விதைக்கிறுர்கள்.

**சாக்ரடீஸ்:** ஆனால் உங்களூரிலிருந்து சென்னைக்கு நல்ல கப்பிரோட்டும், ரயில் பாதையும் இருக்கின்றன வல்லவா?

**கிராமவாசி:** ஆம், அதற்கும் நாமிப்பொழுது பேசிக் கொண்டிருப்பதற்கு மென்ன சம்பந்தம்?

**சாக்ரடீஸ்:** சென்னையி லிருப்பவர்கள் கறி காய்களுக்கும், அடுப்புக்கரிக்கும், வெள்ளைப்பூண்டு, வெங்காயம், சேப்பங்கிழங்கு, வெள்ளிக்கிழங்கு முதலியவைகளுக்கும் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

**கிராமவாசி:** ஆம், அப்படித்தான் நினைக்கிறேன். ஆனாலதற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? நாங்கள் மிராசுதாரர்களே அன்றிக் கறிகாய் தோட்டக்காரரல்ல.

**சாக்ரடீஸ்:** ஆம், நெல் முற்றி அறுவடை காலம் சமீபிக்குங் காலத்தில் பெருமழை பெய்யக்கூடு மல்லவா?

**கிராமவாசி:** ஆம், அனேக சமயத்தில் அப்படித்தான் ஆகிறது.

**சாக்ரடீஸ்:** நெல் அறுக்க நீங்கள் கூலியாட்களைத் தேடும்பொழுது, எல்லோரும் அதேசமயத்தி லவரவர்கள் புலங்களை அறுக்க ஆரம்பிக்கின்றார்களல்லவோ?

**கிராமவாசி:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்பொழுது ஆட்களுக்குக் கூலியும் அதிகம் கொடுக்கவேண்டி யிருக்கிறதன்றோ?

**கிராமவாசி:** ஆம்.

**சாக்ரடீஸ்:** ஆகையால் உங்கள் மாசூல் பெருமழையாலழியக்கூடு மென்பது மாத்திரமேயன்றி, உங்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தில் பெரும்பாகம் கூலியாட்களுக்குக் கொடுக்கவேண்டியு மிருக்கின்றது.

**கிராமவாசி:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் சென்னை நகர் உங்களுக்கு இவ்வளவு சமீபத்தி லிருப்பது ஒரு பெருத்த லாப மென நினைத்துக் கறிகாய்த் தோட்டக்காரர் செய்வது போல் அதிக வருமானம் கொடுக்கக்கூடிய கறிகாய் வகைகள் பயிராக்கி ஏன் சவுக்கியமாய் இருக்கக் கூடாது நீங்கள்?

**கிராமவாசி:** அதைப்பற்றி நாங்கள் யோசித்ததே இல்லை. அவ்வித பயிர் செய்வது தோட்டக்காரன் தொழில்தானென் றிருந்துவிட்டோம்.

**சாக்ரடீஸ்:** நிலத்திலிருந்து அதிக லாபமெடுப்பதில் ஏதாவது அவமான முண்டோ?

**கிராமவாசி:** ஒருகாலுமில்லை. அப்படிச் செய்வதுதான் புத்திசாலித்தனம்.

**சாக்ரடீஸ்:** உங்களிடத்தி லிப்பொழுது பாரசீக ராட்டினம் இருக்கின்றதன்றோ?

**கிராமவாசி:** ஆம், இருக்கின்றது.

**சாக்ரடீஸ்:** ஆனால் அது வருஷத்தில் ஆறுமாத காலம் வேலை யில்லாமலே கிடக்கின்றது; கிணற்றிற்காகவும் ராட்டினத்திற்காகவும் செலவிட்ட பணம் அந்த ஆறு மாதத்துக்கு ஒரு பிரயோஜனத்தையும் தருவதில்லை அன்றோ?

**கிராமவசி:** தருவதில்லை.

**சாக்ரடீஸ்:** நானிப்பொழுது சொன்ன பயிர்களில் ஏதாவதொன்றை வருஷ முழுவதும் விதைத்துக் கொண்டோ அல்லது அறுத்துக்கொண்டோ இருப்பீர்களானால், நீங்களும் உங்க ளுழவு மாடுகளும் உங்கள் ராட்டினமும் வருஷத்தில் ஆறுமாத காலம் வேலை

யில்லாமலிருக்க நேராது. மேலும் அறுவடை காலத்தில் இப்பொழுது நீங்கள் படும் தொந்தரவும் கூலியாட்களுக்கு இப்பொழுதைப்போல் அதிகப் பணம் கொடுக்கவேண்டிய கஷ்டமு முங்களைவிட்டு நீங்கும்.

**கிராமவாசி:** ஆம், அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானல் இனிமேல் நீங்களும் உங்களுழவு மாடுகளும் வருஷ முழுவதும் வேலையில் அமர்ந்திருக்கும்படியாகவும், ஆனல் ஒருபொழுதும் அதிகத் தொந்தரவு படாம லிருக்கும்படியாகவும் ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் கிணற்றினின்றும் உங்கள் பாரசீக ராட்டினத்தினின்று மடையக்கூடிய முழு லாபத்தையு மடையலாம்.

## ஊழியமென்கிற அறிவு

**சாக்ரடீஸ்:** இன்றைக்கு நான் மிக்க மனவருத்தமுற்றவனு யிருக்கிறேன்; ஓ கிராமவாசிகளே! மாதிரியாகக் காட்டக்கூடிய சில கிராமங்களைப் பார்க்கலாமென்றிருந்தேன்.

**கிராமவாசிகள்:** ஆனல் பார்க்கவில்லையோ?

**சாக்ரடீஸ்:** அவைகள் நல்ல மாதிரியாகத்தான் இருந்தன; ஆனல் எதிலென்பீர்களோ? அழுக்கிலும் அசுத்தத்திலும்.

**கிராமவாசிகள்:** அப்படியா! எங்கே போயிருந்தீர்கள்?

**சாக்ரடீஸ்:** கிராம வைத்தியசாலையையுடைய ஒருருக்குச் சென்றல் அங்கு எல்லாம் சுத்தமாகவும் தேக சவுக்கியத்திற்கு ஏற்றதாகவு மிருக்குமென்றும், குழந்தைக ளழுக்கில்லாமலும் முகமலர்ச்சியோடு மிருப்பார்களென்றும், கொசுவலைக ளெல்லாராலு முபயோகிக்

கப்பட்டு வருமென்றும் மொத்தத்தில் எல்லாம் ஒழுங்காயும் கிரமப்படியும் நடக்குமென்றும் நினைத்தேன்.

**கிராமவாசிகள் :** ஆனாலப்படி இல்லையோ?

**சாக்ரடீஸ் :** நன்றாய்ப் படித்துப் பயின்ற வைத்தியரையும் வைத்தியசாலையையுமுடைய அந்தக் கிராமங்கூட இதர கிராமங்களைப் போலவே அசுத்தமாயும் கேவலமாயு மிருந்தது. வைத்தியசாலையின் சுற்றுப்புறமுங்கூட அப்படியே தானிருந்தது; அக்கிராமத்தின் நிலைமையைச் சீர்திருத்த எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

**கிராமவாசிகள் :** ஆறு உபாத்தியாயர்களோடு கூடிய பாடசாலைகளையுடைய கிராமங்கள்கூட கேவலமாயிருக்கும்பொழுது, நீங்கள் பார்த்த கிராமம் கேடாக இருந்ததில் என்ன ஆச்சரியம்? வைத்தியசாலை இருப்பதினாலேயே கிராமம் ஒரு சீரடைந்திருக்க வேண்டுமென்று நீங்களேன் எதிர்பார்க்கின்றீர்கள்?

**சாக்ரடீஸ் :** அங்கிருந்து ஒருவருக்கே சொந்தமாயுள்ள மற்றோர் கிராமத்திற்குச் சென்றேன். இவர் நன்கு படித்தவர்; ஆகையா லவரது அறிவு நன்றாய் விசாலப்பட்டிருக்கவேண்டுமென்று யாவரும் நினைத்தல் தகுதியே. மேலும் அவர் தரிப்பது மேநாட்டு உடையே.

**கிராமவாசிகள் :** அக்கிராமத்தில் என்ன காணலாமென்று நினைத்தீர்?

**சாக்ரடீஸ் :** அவ்வூரேனும் குற்றம் ஏதும் கூறமுடியாத அவ்வளவு சுத்தமான இடமா யிருக்குமென்றுதான் எண்ணினேன்.

**கிராமவாசிகள் :** அப்படித்தானே இருந்தது?

**சாக்ரடீஸ்:** அதுவும் மற்ற கிராமங்களைப் போலவே கேவலமாய்த்தா னிருந்தது. முதலில் அது நான் எண்ணிவந்த கிராமமில்லை என்று நினைத்தேன். அது தான் நான் தேடிவந்த ஊரென்று தீர்மானித்துக் கொள்ள வெகுநேரம் சென்றது. ஆனால் அதற்கும் மற்ற ஊர்களுக்கும் சிறிதேனும் வித்தியாசமே ஏற் படவில்லை.

**கிராமவாசிகள்:** எதுவும் நன்மையாகவே முடியுமென்று நீங்க ளெப்பொழுதும் நினைக்கின்றீர்கள், சாக்ரடீஸ வர்களே. நாங்க ளெல்லோரும், படித்தவராயினும் படியாதவராயினும், பணக்காரராளுலும் தரித்திர ராளுலும், ஒரே மாதிரிதானென்று எப்பொழுது உங் களுக்குத் தெரியப்போகிறது? எங்களை ஒருவரும் தொந்தரவு செய்யாதிருக்கும் வரையில் எங்களுக்குத் தினப்படி வேண்டிய சாப்பாடும், எங்கள் சாதாரண மனோரதங்களைத் திருப்தி செய்துகொள்ள அனுகூலமு மிருந்தால் அவை போதும். மற்றெந்த விஷயத்தைப் பற்றியு மெங்களுக்கு அவசியமில்லை.

**சாக்ரடீஸ்:** இது மனதை முறியடிக்கின்றது. இம் மாதிரியான மனநிலையை முற்றிலும் மாற்றினலொழிய விமோசனமே ஏற்படாது. இதற்கு உபாயத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்வது சரியே.

**சாக்ரடீஸ்:** உங்களைப்போல் வயதானவர்களை மாற்று வது கஷ்டம். சிறுபிள்ளைகளை வழிப்படுத்துவதுதான் சரியான வழி என்று நான் நினைக்கிறேன்.

**கிராமவாசிகள்:** அதுதான் சரி. வயது முதிர்ந்தவர்களை விடச் சிறியவர்களை வழிப்படுத்துவது சுலபம்.

**சாக்ரடீஸ்:** ஆகையால், நாம் சிறுபிள்ளைகளைக்கொண்டு நம் வேலையைத் துவக்கவெண்டும்; அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் உண்பதும் உறங்குவதும் வெற்றிலை மெல்லுவதும் தவிர வேறு காரியங்களுமுண்டென்பதை அறிவித்து, அவர்கள் தம்மைத்தாமே சீர்திருத்திக் கொள்ளவும், ஒருவருக்கொருவர் அக்காரியத்தில் உதவிசெய்து கொள்ளவும் விருப்பமுடையவராகச் செய்யவேண்டும்.

**கிராமவாசிகள்:** நீங்கள் சொல்லும் யோசனை நல்ல யோசனைதான். ஆனாலதை எப்படி நிறைவேற்றுகிறது?

**சாக்ரடீஸ்:** வாலிபச் சாரண இயக்கமென்றொன்றிருப்பதாய் எனக்குக் கேட்ட ஞாபகம் வருகிறது. நீங்களதைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்களோ?

**கிராமவாசிகள்:** ஆம், நீங்கள் சொல்வது உண்மைதான். ஒரு திருநாளில் சில வாலிபச் சாரணர்களைப் பார்த்தோம். அவர்கள் கிழவிகளுக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய உதவி செய்தார்கள்; இன்னுமிதர ஜனங்களுக்குக்கூட வெகு இழிவான ஊழியங்களும் செய்தார்கள்.

**சாக்ரடீஸ்:** எனக்கு வேண்டியது அதுதான். ஜனங்களிதரர்களுக்கு உதவிபுரியும் பொருட்டு வெகு இழிவான வேலையையும் செய்யத் தயாரா யிருக்கவேண்டும். பெரியோர்கள் தங்கள் சிறுவர்களுக்குப் பொது ஜன ஊழியத்தின் பெருமையைப் புகட்டுவதோடு, சுயநலம் பாராட்டும் குணத்தை விடும்படியும், எப்பொழுதும் மேலும்மேலும் அபிவிருத்தி யடைவதிலேயே ஆவலுடையவர்களாயும் அவர்களைச் செய்ய வேண்டும்.

**கிராமவாசிகள்:** நிரம்ப சரி, சாக்ரடீஸவர்களே. இப்பொழுது இவ்வாலிபச் சாரணர்கள் எங்கு இருக்கிறார்களென்று கண்டறிந்து அவர்களுங்கள் காரியத்திற்கு உதவி புரிவார்களாவென்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.



சிறுவர்களுக்கு பொதுஜன ஊழியத்தின் பெருமையைப் புகட்டவேண்டும்

**சாக்ரடீஸ்:** ஆனால், சிறுவர்கள் மாத்திர மிவ்விஷயங்களைத் தெரிந்துகொண்டால் போதாது. இவைகளைப் பற்றி வாலிபர்கள் படிக்கும் கலாசாலைகளிலுங்கூட சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பது எனதபிப்பிராயம். அப்படிச் செய்தால் அக்கலாசாலையில் படித்து உபாத்தியாயராகவோ அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தராகவோ ஆகும் ஒவ்வொருவரும் மனிதர்களுக்கு உதவிபுரிய வேணுமென்கிற விருப்பமும் இவ்வுலகத்தை முன்னிலும் சிறப்புடையதாக்க வேணுமென்கிற மனோ உறுதியும் பெறுவர்.

**கிராமவாசிகள்:** நீங்கள் செய்யவேண்டிய காரியம் வெகு சிரமசாத்தியமானதா யிருக்கிறது, சாக்ரடீஸ வர்களே. அதாவது கலாசாலைகளைகளையும், பாடசாலை களையும், பண்டிதர்களையும், போதிக்கும் ஒவ்வொரு உபாத்தியாயரையும் நீங்கள் உங்கள் வழிக்குக் கொண்டுவர வேண்டும்.

**சாக்ரடீஸ்:** ஆம், அப்படித்தான் செய்யவேண்டும். நாம் படித்தவர்களிடத்தில் ஒரு புதிய உணர்ச்சி உண் டாகும்படி செய்யவேண்டும்; அதாவது ஊழியம் செய்யவேண்டும் என்கிற அறிவுதான். இவ்வறிவு அவர்களுக்கு உண்டாயின், அவர்களெந்த உத்தியோ கத்தி லமர்ந்தபோதிலும் பிறருக்கு உதவி செய்வதற் குச் சித்தமாயும் ஆவலுடையவர்களாயு மிருப்பார்கள்.

**கிராமவாசிகள்:** ஆனால் வைத்தியர்கள் கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருப்பது எப்படியென்று காட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், இஞ்சினீர்கள் வீடுகளில் நல்ல காற்று தாராளமா யுலாவச் செய்வதெப்படி யென்று சொல்லவேண்டு மென்றும், உபாத்தியாயர் கள் ஸ்திரீகளுக்கு அவர்களுடைய குழந்தைகளை எப் படிக் குளிப்பாட்டி அழுக்கில்லாம லிருக்கும்படிச் செய்வதென்பதைப் போதிக்க வேண்டுமென்றும் சொன்னால் அவர்கள் அதிக சம்பளம் கேட்கமாட் டார்களா?

**சாக்ரடீஸ்:** இல்லை. அவர்கள் போதகர்களைக்கொண்டு அவர்களுக்கு ஊழியம் என்கிற அறிவைப் புகட்டும் படி செய்தால் கேட்கவே மாட்டார்கள். அவர்கள் பாடசாலைகளி லிருக்கும்பொழுது வாலிபச் சாரண இயக்கத்தைச் சேர்ந்து, தன் முயற்சி, சுயநலம்

பாராட்டாமை, ஊழியம் புரிதல் என்னும் சிறந்த பழக்கங்களைக் கற்றுக்கொள்ளுவார்கள்; பிறகு கலாசாலைகளில் படிக்கும்பொழுது மிவ்வழக்கங்களைக் கைவிடாது அநுசரித்துவந்து, பிறகு பெரியவர்களாகி அவரவர்களுத்தியோகத்தில் அமர்ந்தபொழுதும் மனிதர்களுக்கு உதவி புரிவதிலும், அவரவர்கள் வீடுகளையும் கிராமங்களையும் சீர்திருத்துவதிலும், தாங்களே முன்னிலும் சீராக வாழ்வதிலும் அதிக முயற்சியுடையவர்களா யிருப்பார்கள்.

**கிராமவாசிகள்:** உங்கள் முயற்சி சித்திபெறக்கடவதாக! சாக்ரடீஸவர்களே. அப்பொழுது இத்தேசம் இந்திரலோகம் போலாய்விடும்மென்பதில் சந்தேகமே இல்லை.

# வெள்ளியையும் பொன்னையும் கரியாக்கல்

சாக்ரடீஸ் ஒருநாள் பல மிராசுதாரர்களுடன் வயல்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தனர். பயிர்கள் வெகு நோஞ்சலாய் இருந்தன.

'ஏன் பயிர்கள் இவ்வளவு கேடுற்றிருக்கின்றன?' என்றார் சாக்ரடீஸ்.

**கிராமவாசிகள்:** ஏற்கனவே இந்நிலம் உரக்கட்டை; அதுவும் வருஷத்துக்கு வருஷம் குறைந்துகொண்டே வருகிறது.

**சாக்ரடீஸ்:** அதேனப்படி?

**கிராமவாசிகள்:** அதேனோ காரணம் தெரியவில்லை. ஆனால் நாங்கள் சொல்வதென்னவோ உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அனேக ஜனங்கள் இப்படியே சொல்வதை நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் மாட்டுச் சாணியை நீங்கள் எரித்துத்தானே விடுகிறீர்கள் ?

**கிராமவாசிகள்:** ஆம்; நாங்கள் அப்படித்தான் செய்கிறோம்: எவ்வளவோ காலமாக அப்படியே செய்து கொண்டும் வந்திருக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** சரி. இப்பொழுது உங்கள் நிலங்கள் எல்லாவற்றையும் வருஷாவருஷம் சாகுபடி செய்கிறீர்களல்லவா ?

**கிராமவாசிகள்:** ஆம், நாங்கள் அப்படித்தான் செய்ய வேண்டியிருக்கிறது. எங்கள் ஜனத்தொகை விருத்தியாகிவிட்டது. ஆகையால் எல்லா நிலமும் சாகுபடிக்கு வந்துவிட்டன.

**சாக்ரடீஸ்:** முந்தியெல்லாம் இரண்டு மூன்று வருஷங்களுக் கொருமுறை நிலங்கள் கரம்பாய்க் கிடந்தனவல்லவா ?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான் இருந்துவந்தன.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது கொஞ்ச காலமாய் நீங்கள் நிலத்திற்கு இடும் எரு அதி சொற்பந்தானே ?

**கிராமவாசிகள்:** பிரதி வருஷமும் ஒவ்வொரு வயலுக்கும் போடுவதற்குப் போதுமான எரு எங்களுக்குக் கிடைப்பதில்லை.

**சாக்ரடீஸ்:** வயல்களுக்கு உணவு எருவே அல்லவா ?

**கிராமவாசிகள்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் எரிக்கும் இந்த மாட்டுச் சாணி வயலுக்கு மற்றெல்லாவற்றிலும் மேலான உணவன்றோ ?

**கிராமவாசிகள்:** ஆம், அது உண்மையே.

**சாக்ரடீஸ்:** இந்த மாட்டுச் சாணியே வயலிலிருந்து வைக்கோலாகவும், தானியமாகவும் திரும்பி வந்து விடுகின்றனவல்லவா?

**கிராமவாசிகள்:** அதுவும் வாஸ்தவம் தான்.

**சாக்ரடீஸ்:** ஆகவே, வருஷாவருஷம் நிலத்திலுள்ள சாரமெல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக்கொண்டு, அதற்குரித்தான உணவைக் கொடுக்காமல் மறுக்கின்றீர்களன்றோ?

**கிராமவாசிகள்:** ஆம், அப்படித்தான் நாங்கள் செய்வதாகத் தோன்றுகிறது.

**சாக்ரடீஸ்:** பிரதி வருஷமும் நிலத்தைப் பட்டினி போடுகிறீர்கள்; அப்படியிருந்தும் அது உங்களுக்காக உழைக்கவேண்டுமென்று மாத்திரம் எதிர்பார்க்கிறீர்கள், அல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம். நாங்கள் அப்படி செய்வதாகத் தான் ஏற்படுகிறது, சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** முன்காலத்தில் ஏதோ சில வருஷங்களுக்கொருமுறையே சாகுபடி செய்யப்பட்டனவாகையால், நிலங்கள் இழந்த வளத்தைத் திரும்பப்பெற சாவகாசம் இருந்தது. இப்பொழுதோ நீங்கள் வருஷாவருஷம் பயிரிடுகிறீர்கள்; ஆனால் அவைகளுக்கு உரமிடவேண்டுமென்பதை மாத்திரம் மறந்துவிடுகிறீர்கள். ஆதலால் நாளுக்குநாள் அவை பலஹீனமடைந்துவிடுகின்றன.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! நீங்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கவேண்டும். முன்பைவிட இப்பொழுது நாங்கள் குறைந்த கண்டுமுதலைச் அடைவதற்கு அதுதான் காரணமாயிருக்கவேண்டும்.

**சாக்ரடீஸ் :** உண்மை அப்படியிருக்க, 'நாங்கள் நிலத்தைப் பட்டினி போட்டோம்; அதனால் அது இனி எங்களுக்குப் பயன் தராது' என்று சொல்வதை விட்டுவிட்டு, அது வளமற்றதென்று அதன்மேல் குறை கூறுகின்றீர்களே.

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸவர்களே! நீங்கள் சொல்வது உண்மையே.

**சாக்ரடீஸ் :** ஆதலால், உங்களுக்கு நல்ல விளைச்சல் வேண்டுமானால், ஒன்று அடுப்பெரிக்க வேறேதேனும் ஒன்றைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்; அல்லது எருவுக்காவது மற்றொரு பொருளைத் தேடிக்கொள்ள வேண்டும். இப்பொழுது செய்துவருவதைப் போல் பயிர்த்தொழில் செய்வீர்களானால் நல்ல விளைச்சலை நீங்கள் ஒருநாளும் காணமாட்டீர்கள். ஆகையால் இவ்விரு வகைகளிலேதாவதொன்றைக் கண்டுபிடிக்க நீங்கள் ஓயாமல் முயற்சி செய்யவேண்டும்.

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸவர்களே! எங்களுக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

**சாக்ரடீஸ் :** எரிப்பதற்கு வேறொரு பொருளை ஏற்படுத்திக்கொள்வதே சுலபமான மார்க்கமென்று எனக்குத் தோன்றுகின்றது.

**கிராமவாசிகள் :** நாங்கள் எரிப்பதற்கெதை ஏற்படுத்திக்கொள்வது?

**சாக்ரடீஸ் :** நீங்கள் பால் காய்ச்சுவதற்குத்தானே வறட்டி முக்கியமாய் வேண்டுமென்கிறீர்கள்?

**கிராமவாசிகள் :** ஆம்; அதற்காகத்தான். விறகையாவது, கரியையாவது வைத்துச் சமையல் செய்து கொள்ளலாம்.

**சாக்ரடீஸ்:** பால் காய்ச்சுவது ஒன்றைப்பற்றித்தானே உங்களுக்குக் கவலை. இப்பொழுது பால் காய்ச்சாமலே அதை உறையச் செய்கிறீர்களே.

**கிராமவாசிகள்:** ஆமாம்; நாங்களும் அதைக் கேள்விப் பட்டிருக்கிறோம்: ஆனால் பாலைக் காய்ச்சி உறையிடு தல்தான் எங்களுக்குப் பிரியம்.

**சாக்ரடீஸ்:** நல்லது, அப்படியானால் விறகை உபயோகியுங்கள்.

**கிராமவாசிகள்:** சரி. விறகை உபயோகிப்பதானால் எங்கள் ஸ்திரீகள் அடுப்பை விட்டுப்போய் வேறு வேலைகளைக் கவனிக்கமுடியாதே.

**சாக்ரடீஸ்:** வேறு வேலை என்ன?

**கிராமவாசிகள்:** என்னவா? எரிமுட்டைகளைத் தட்டுவதுதான்.

**சாக்ரடீஸ்:** ஆனால், விறகெரிப்பதாக நீங்கள் வைத்துக் கொண்டுவிட்டால் எரிமுட்டை தேடவேண்டிய அவசியமே இராது. உங்கள் ஸ்திரீகள் அடுப்பங் கரையிலேயே உட்கார்ந்துகொண்டு பாலையுங் காய்ச் சிக்கொள்ளலாம்; தையல், பின்னல் முதலியவைகளை யுஞ் செய்யலாம்; அல்லது குழந்தைகளுக்குப் படிப் புஞ் சொல்லிக்கொடுக்கலாம். இல்லாவிட்டால் வேறு அவர்கள் என்ன செய்யத்தக்கவை என்று எண்ணு கிறீர்களோ அவைகளைச் செய்யலாம்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மையே. எங்கள் ஸ்திரீகள் வறட்டி தட்டுவதை நிறுத்துவார்களேயானால், பல வேலைகளும் செய்ய அவர்களுக்குச் சாவகாச முண்டாகிவிடும். கிராமப் பாடசாலைக்கு எங்கள் பெண்கள் போக

ஆரம்பித்த பிறகு, அவர்கள் எத்தனையோ புதிய வேலைகளைக் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் வறட்டி தட்டுவதை நிறுத்துங்கள். பால் காய்ச்ச வேண்டுபவர்கள், விறகு வைத்து எரித்துக் காய்ச்சட்டும்; அடுப்பண்டை உட்கார்ந்துகொண்டே வேறு வேலைகளையுங் கவனிக்கட்டும்.

**கிராமவாசிகள்:** ஆனால், விறகு எங்கிருந்து கிடைக்கும்?

**சாக்ரடீஸ்:** கோதுமை முதலிய பயிர்களைப் போன்றது தான் விறகும். அது உங்களுக்கு வேண்டுமானால் அதைப் பயிரிட வேண்டியதுதான்.

**கிராமவாசிகள்:** மரங்களைப் பயிராக்குவதா? இப்படி யாராவது கேள்விப்பட்டதுண்டா?

**சாக்ரடீஸ்:** வீடுகட்ட மரமும், அடுப்பெரிக்க விறகும் விரும்பும் எந்த புத்தியுள்ள மனிதனும் அவைகளைப் பயிரிடத்தான் வேண்டும்.

**கிராமவாசிகள்:** சரி, ஐயா! அவைகளை நாங்கள் பயிரிடுவோம். அதற்கு இடம் எங்கே? சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** ஏன்? கிராமத்திற்கு வெளியேயும் உள்ளேயும் எவ்வளவோ இடம் வீணாகக் கிடக்கின்றது. வீட்டுப் புறக்கடையிலும், குளக்கரைகளிலும், சாலைகளின் இருபக்கங்களிலும், மரங்கள் வைக்கத் தகுந்த இடங்கள் விசேஷமாக இருக்கின்றன. மேலும், அனேக கிராமங்களில் குன்றுகள் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவைகளைச் சுற்றித் தரிசாய் கிடக்கும் நிலங்களில் வேறொன்றும் விளைவதில்லை. மேலும் மாடுகள் மேய்வதற்கென்று அனேக கிராமங்களில் ஏற்பட்டிருக்கு மிடங்களில் வீட்டு வேலைக்காவது

அடுப்பெரிக்கவாவது உபயோகப்படாத பல புதர்களே மண்டிக்கிடக்கின்றன. அவைகளை யெல்லாம் வெட்டி, எரிப்பதற்கு உதவும் மரங்களை அங்கே நடுங்கள்.

**கிராமவாசிகள்:** அப்படிச் செய்தாலும் போதுமான விறகு எங்களுக்குக் கிடைக்குமோ என்பது சந்தேகந் தான்.

**சாக்ரடீஸ்:** நல்லது; பருத்தி, எள்ளு முதலியவைகளின் மிலாறுகள், சோளத்தட்டை, துவரங்குச்சி போன்ற சுள்ளிகள் இல்லையோ? ஆற்றோரங்களில் நாணற் றட்டைகளும் இருக்கின்றனவே.

**கிராமவாசிகள்:** இருந்தாலும், அவைகளெல்லாமுங்கூட போதியவை ஆகமாட்டா.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், அவைகளை முழுமையும் வீண் போக்காமல் உபயோகியுங்கள். போதாததற்கு மூட்டைக்கரி, நில்க்கரி இவைகளை எரிக்கப்பாருங்கள். ஐக்கிய சங்கங்கள் மூலமாய் நிலக்கரி, கரிமூட்டைகள் இவற்றை வண்டி வண்டியாய் வாங்கி உபயோகிப்பது இலாபமல்லவா என்பதைக் கவனியுங்கள். எப்படியாவது விலையில்லா எருவான சாணத்தை வயலுக்கு உபயோகமாகும்படி காப்பாற்றிவிடுங்கள்.

**கிராமவாசிகள்:** எங்களுக்கெல்லாம் வெகு முந்தி நீங்கள் செல்லுகின்றீர்கள். நீங்கள் சொல்கிறமாதிரி யாம் நடப்பதற்கு முன் நாங்களெவ்வளவோ அபி விருத்தி யடையவேண்டியதா யிருக்கிறது. முதல் முதல் எருவின் அபாரமான மதிப்பை நாங்கள் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். அல்லா மலும், இவைகளெல்லாம் இருப்புப் பாதைக்கு அருகாமையி லுள்ளவர்களுக்கே சாத்தியமாகும் என்று எண்ணுகிறோம்.

கடைசியாக, சாக்ரடீஸ் அவர்களை விட்டுப் போகு முன், 'இன்னும், ஆச்சரியமான புதிய விந்தையான சக்தியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 'மின்சாரம்' என்று பெயர். ஆறுகளினின்று அதை எப்படியோ எடுக்கிறார்கள். தாங்கள் இஷ்டப் பட்ட இடத்திற்கு அதைக் கம்பிகள் மூலமாகக் கொண்டுபோகிறார்கள். இந்த மின்சாரத்தைக் கொண்டு சமையல் செய்துகொள்ளலாம், விளக்கெரிக் கலாம், இன்னும் உங்களுக்கு வேறெந்த வேலை வேணு மென்றாலும் செய்துகொள்ளலாம். காலமாகவாக உங்களுக்குப் போதுமான விறகு கிடைக்காமலே போகக்கூடும். அவ்வித காலம் வந்தபொழுது இந்த மின்சாரத்தைக் கம்பிகளின் மூலமாய் ஆறுகளிலிருந்து கொண்டுவந்து உங்கள் சமையல்களைச் செய்துகொள் வது லாபகரமா யிருக்கும். அப்படிச் செய்வதனால் உங்கள் கழனிகளுக்கு இந்த அருமையான சாணத் தைச் சேர்த்து வைத்துக்கொள்ளலாம்,' என்றார்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, நீங்கள் வெகுநாட் களுக்குப்பின் நேரிடக்கூடியவைகளை இப்பொழுதே கண்டு சொல்லுகிறீர்கள். ஆனால் இதுவரையில் உங்களுடைய வார்த்தைகள் பொய்யானதில்லை. அதேமாதிரி இவ்வாச்சரியமான காரியமும் கைகூட லாம்.

**சாக்ரடீஸ்:** பார்ப்போம், ஆனாலும் ஒன்று மாத்திரம் நீங்கள் அவசியம் மனத்தில் வைக்கவேண்டும். இப் பொழுது செய்வதுபோல எரிமுட்டையாகிய தங்கத் தையும் வெள்ளியையும் வீணாகக் கொளுத்திவிடாதீர் கள். உங்களுடைய உணவையாவது, உங்களுடைய ஆடுமாடுகளுடைய உணவையாவது நீங்கள் எரித்து

விடுவீர்களா? அப்படியிருக்க உங்கள் வயல்களின் உணவை ஏன் எரிக்கின்றீர்கள்?



உங்கள் வயல்களின் உணவை ஏன் எரிக்கின்றீர்கள்

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! உண்மையாகவே இது வெகு நியாயமான கேள்விதான்.

**சாக்ரடீஸ்:** சில நாட்களுக்கு முன்னேதான் ஒரு நூதனமான தயிர் கடையும் மத்தைப் பார்த்தேன். அது சொல்ப நேரத்தில் அதிக வெண்ணெயை எடுப்பதாகவும், அதற்கு வேண்டிய கரி பழைய முறைப்படி செலவான கரியில் ஐந்திலொரு பங்கே செலவாகிறதென்றும் அவர்கள் சொன்னார்கள். வெண்ணெயும் வெகு சுத்தமாக இருக்கிறது. ஏன் அம்மாதிரியான மத்தை உபயோகிக்கலாகாது?

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, நாங்கள் அப்படியே செய்வோம்.

# வீண்

**கிராமவாசிகள்:** நாங்கள் நாளுக்குநாள் ஏழைகளாகிக் கொண்டு வருகின்றோம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** கிராமவாசிகளே! அது உண்மையென்பது எனக்குத் தெரியும். அது ஒரு ஆச்சர்யமாகவும் தோன்றவில்லை.

**கிராமவாசிகள்:** ஏன் பெரியவரே அங்ஙனம் சொல்லுகின்றீர்கள்?

**சாக்ரடீஸ்:** உங்களிடத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவையும் நீங்கள் வீணடிக்கிறீர்கள்.

**கிராமவாசிகள்:** வீணா? எப்படி ஐயா வீண்? எதையாவது வீணடிக்கும்படி அப்படி என்ன நாங்கள் பணக்காரர்களா?

**சாக்ரடீஸ்:** உங்களைவிட உலகத்தில் பொருள்களை வீணாக்குகிற மனிதர்களே கிடையாது.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, நீங்கள் சொல்வது எங்களுக்கு விளங்கவில்லையே. நாங்கள் சூதாடுவதுமில்லை; குடிப்பதுமில்லை; விலைபெற்ற வஸ்திரங்களை வாங்குவதுமில்லை; மோட்டார் வண்டியில் ஏறியுமறியோம்.

**சாக்ரடீஸ்:** இவைகளைத் தவிர உங்கள் பணத்தை வீணாக்கப் பல வழிகள் இருக்கின்றன.

**கிராமவாசிகள்:** அவைகளிற் சிலவற்றைச் சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** நல்லது. முதன்முதலாக உங்கள் கிராமங்களிலுள்ள குப்பைகளையும் எருக்களையும் வெளியில் குவியல் குவியல்களாய்க் கொட்டிவிடுகிறீர்கள். அவை

காற்றில் பறந்து, வெயிலில் காய்ந்து, மழையில் கரைந்து, மாடுகளால் வாரித்தூற்றப்பட்டு இப்படித் தானே அழிந்துபோகின்றன?

**கிராமவாசிகள்:** ஆம், ஆம். அது உண்மை என்று தான் நாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** இன்னும் கடவுளால் கொடுக்கப்பட்ட மிக விலையுள்ள மற்றொரு பொருளையும் வீணுக்குகிறீர்கள்.

**கிராமவாசிகள்:** எது அது?

**சாக்ரடீஸ்:** மாட்டுச்சாணி யெல்லாவற்றையும் நீங்கள் எரித்துவிடவில்லையா?

**கிராமவாசிகள்:** அதுவும் உண்மையே.

**சாக்ரடீஸ்:** மேலும், நல்ல விதைகளுக்குப் பதிலாக உபயோகமில்லாத விதைகளை விதைத்துக் காலத்தையும் வேலையையும் வீணுக்குகின்றீர்கள்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! அதுவும் வாஸ்தவந்தான். நாங்கள் எங்களுக்கு வேண்டிய விதைகளைக் கண்ட இடங்களிலெல்லாம்தான் வாங்குகிறோம்.

**சாக்ரடீஸ்:** நல்லது. இன்னும் நல்ல ஜாதி மாடுகளை வளர்ப்பதை விட்டுவிட்டு ஈன ஜாதி மாடுகளைப் போஷிக்கிறீர்கள். இப்பீடான ஜாதி மாடுகள் தீனியில் நல்ல ஜாதி மாடுகள் தின்பதில் குறைவாகத் தின்பதில்லை. வேலை செய்வதிலும், பால் கொடுப்பதிலும் அவைகளில் பாதிகூடத் தேறுவதில்லை.

**கிராமவாசிகள்:** இதுவும் உண்மை என்றுதான் நாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** இதுவுமல்லாமல், உங்கள் ஸ்திரீகள் குழந்தைகளைச் சுத்தமாய்க் குளிப்பாட்டி வளர்த்தல், குடும்பத்துக்கு வேண்டிய உடைகளைத் தைத்தல் இத்தகைய

முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டியிருக்க, அவர்களைச் சாணந் தட்டவும், மாவரைக்கவும்



உங்கள் ஸ்திரீகளை மாவரைக்க விடுகிறீர்கள்

விடுகிறீர்கள். இயந்திரங்கள் மாவை இன்னும் சுலபமாகவும் சீக்கிரமாகவும் அரைக்குமே! இப்படியெல்லாம் உங்கள் ஸ்திரீகளின் காலத்தை வீணடிக்கிறீர்களல்லவா?

**கிராமவாசிகள்:** அதுவும் உண்மையே.

**சாக்ரடீஸ்:** முடிவு என்ன? உங்கள் குழந்தைகள் அழுக்காகவும், கவனிப்பாரற்றும் அசௌக்கியத்துடனும் வளர்கின்றன. நீங்களும் தையற்காரனிடம்

பணத்தைக்கொட்டி அவனிடமிருந்து உடைகளைப் பெறுகின்றீர்கள்.



உங்கள் ஸ்திரீகளைச் சாணந்தட்ட விடுகிறீர்கள்

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸவர்களே, அதை நாங்கள் மறுக்க முடியாது.

**சாக்ரடீஸ் :** தண்ணீரிறைக்க ஒரு பாரசீக ராட்டினம் வைத்துக்கொள்ளாமல் கவலையேற்றம் போட்டுக்கொண்டு மாடுகளும் நீங்களும் வீணே உழைக்கிறீர்கள்.

**கிராமவாசிகள் :** ஆம், அதுவும் உண்மைதான்.

**சாக்ரடீஸ் :** இன்னும், உங்கள் அறுப்பறுக்கும் அரிவாளோ பல்குத்தும் ஆயுதத்திற்குச் சற்றுத்தான்

பெரிதாயிருக்கிறது. அதை உபயோகிப்பதால் எவ்வளவு காலமும் உழைப்பும் நஷ்டமாகின்றன, கவனித்தீர்களா!

**கிராமவாசிகள் :** ஆம், சாக்ரடீஸவர்களே, எங்கள் அரிவாள் ஒரு பெரிய ஆயுதமல்ல.

**சாக்ரடீஸ் :** நல்ல சீர்மைக் கலப்பையினால் உழுவதனால், மரக்கலப்பையால் உழுவதைவிட நாலுமடங்கு பிரயோஜனம் உண்டாகும் என்று நீங்களறிந்திருந்தும், நீங்கள் உழுவதெல்லாம் பழையகாலத்து முறுக்குத்தட்டின மரக்கலப்பைதானே ?

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸவர்களே, அது முற்றிலும் உண்மையே.

**சாக்ரடீஸ் :** அது அதிக காலத்தையும் வேலையையும் வீணாக்குவதில்லையா ?

**கிராமவாசிகள் :** ஆமாம் வீணாக்கத்தான் செய்கின்றது.

**சாக்ரடீஸ் :** இவ்வளவல்லாமலும், உங்கள் பணமெல்லாம் நகைகளில்தானே முடங்கிக் கிடக்கின்றது! நகைகள் செய்யும் கூலியால் எவ்வளவு பணம் நஷ்டமாகிறது ?

**கிராமவாசிகள் :** ஆம். நகைகளின் கூலிமூலமாக நாங்கள் இழக்கும் பணம் அதிகமே.

**சாக்ரடீஸ் :** நகையும் உபயோகிக்க உபயோகிக்கத் தேய்வடைகின்றதல்லவா ?

**கிராமவாசிகள் :** ஆம், ஆம். சீக்கிரத்தில் நகைகள் தேய்ந்துபோகின்றன.

**சாக்ரடீஸ் :** அப்படியில்லாமல், உங்கள் பணங்களைக் கூட்டுறவு சேம நிதிகளில் (Co-operative bank) போட்டால் அவை விருத்தியாகுமல்லவா ?

**கிராமவாசிகள் ;** ஆம், அது நிஜந்தான்.

**சாக்ரடீஸ்:** இன்னும், கொசுவலைகளை உபயோகப் படுத்தாமலும், குவைனு மருந்தைச் சாப்பிடாம லும், உங்கள் குழந்தைகளுக்கு அம்மை வைக்காம லும் உங்கள் தேக சௌக்கியத்தையும் வீணாக்கிக் கொள்ளுகின்றீர்கள்.

**கிராமவாசிகள்:** ஆம். நாங்கள் அப்படித்தான் நடந்து வருகிறோம்.

**சாக்ரடீஸ்:** மேலும் உங்கள் பணத்தை ஆடம்பர மான கல்யாணச் சடங்குகளிலும், கருமாதிகளிலும், விருதங்களிலும், வியாஜ்யங்களிலும் எவ்வளவு பாழாக்குகிறீர்கள்?

**கிராமவாசிகள்:** ஆம், இவ்விஷயங்களிலெல்லாம் எங்க ளுக்குச் செலவாகும் பணம் அதிகந்தான்.

**சாக்ரடீஸ்:** கூட்டுறவு நிதிகளில் வட்டி விகிதம் நூற் றுக்குப் பன்னிரண்டாக இருக்க, அவைகளைச் சேர்ந்து அவைகளின் மூலமாய்க் கடன்பெறுவதை விட்டு, வெளியில் முப்பத்தாறு வீதம் நீங்கள் கடன் வாங்குகின்றீர்கள்.

**கிராமவாசிகள்:** அதுவும் உண்மையே.

**சாக்ரடீஸ்:** நீங்கள் உங்கள் திரவியத்தை எவ்வளவு வீணடிக்கின்றீர்கள் என்பதற்கு அத்தாட்சியாக இவ் வளவு போதுமா? அல்லது இன்னும் சொல்லட்டுமா?

**கிராமவாசிகள்:** போதும், போதும், சாக்ரடீஸவர்களே. நாங்கள் உண்மையாகவே முற்றிலும் முன் யோசனை யற்றவர்களே.

**சாக்ரடீஸ்:** இதனால் என்ன ஏற்படுகிறது என்றால் உங்களைப் பணக்காரர்களாகச் செய்வதற்கு நூதன மான ஆச்சரிய சூழ்ச்சிகளொன்றும் வேண்டுவதில்லை.

கடவுள் உங்களுக்கு அளித்திருக்கின்ற இயற்கைப் பொருள்களேயும் செல்வங்களேயும் வீணுக்காமல் எப்படி உபயோகித்துக்கொள்வது என்பதை உங்களுக்குச் சொல்வதே போதுமானது. புதிய விஷயங்களாவது, புதிய ஏற்பாடுகளாவது உங்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை, உங்களுக்கிஷ்டமாஞல், நீங்கள் வீணுக்குகிற இன்னும் ஒரு விஷயம் சொல்லுகிறேன்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே, அதென்ன? அந்த ஒன்றைமாத்திரம் சொல்லாமல் விடுவானேன்? அதையும் சொல்லுங்கள் கேட்டுக்கொள்ளுகிறேம்.

**சாக்ரடீஸ்:** இன்னும் நான் சொல்லவேண்டியவை நிரம்ப உண்டு. ஆனல் இப்பொழுது ஒன்றைமாத்திரம் சொல்லுகிறேன்.

**கிராமவாசிகள்:** சரி, சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** அதோ தெரிகிறதே, அந்தத் தோப்பிலுள்ள மரங்களே வெட்டி நீங்கள் ஏன் விற்கலாகாது? அல்லது ஏன் உபயோகப்படுத்திக்கொள்ள லாகாது?

**கிராமவாசிகள்:** ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்காக எங்கள் பெரியோர்களால் அது பொதுவில் விடப்பட்டது. அதிலிருந்து நாங்கள் ஒன்றையும் தொடுவது ஆகாது.

**சாக்ரடீஸ்:** நல்லது. அதில் எவ்வகையான மரங்களும் புதர்களும் இருக்கின்றன?

**கிராமவாசிகள்:** கருவேல், இலந்தை, காட்டு நாரத்தை, சப்பாத்தி முதலியவைகளே அங்குள்ளவை.

**சாக்ரடீஸ்:** ஆடுமாடுகள் அவைகளேத் தின்னுமா?

**கிராமவாசிகள்:** தின்ஞ.

**சாக்ரடீஸ்:** அங்கு ஏதேனும் புல் முளேத்திருக்கின்றதா?

**கிராமவாசிகள்:** இல்லை. புல் முளைப்பதற்கு இடமில்லாமல் மரங்களும் புதர்களும் மண்டியிருக்கின்றன.

**சாக்ரடீஸ்:** ஆதலால் உங்கள் பெரியோர்களால் மாடுகள் மேய்வதற்காக விடப்பட்ட இந்த இடத்திலிப்பொழுது புதர்களும் மரங்களு மடர்ந்திருக்கின்றன. அதில் மாடுகள் மேய்வதற்கு ஒன்றுமில்லை; அவைகள் நிற்பதற்குக்கூட இடமில்லாமல் செடி கொடிகள் அடர்ந்துவிட்டன. எனவே இது முற்றிலும் வீணல்லவா?

**கிராமவாசிகள்:** உண்மையாக அதுவும் ஒரு வீண்தான். இந்தத் தடவையிலும் நாங்கள் உங்கள் கையில் சிக்கிக்கொண்டோம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் முன்னோர்கள் இந்தத் திடலை ஆடுமாடுகளுக்குப் புல் வளரவும் உங்களுக்கு விறகுக்காக மரம் வளரவும் விட்டுவைத்தார்கள். நீங்கள் சாணியை வீணாக்காமல் எருவாக்கி வயலிலிட்டு உங்களுக்கு அதிகத் தானியமும் கால்நடைகளுக்கு அதிக வைக்கோலும் கிடைக்க வேண்டுமென்பது அவர்களெண்ணம். அதற்குப் பதிலாக நீங்கள் வறட்டியை எரிக்கிறீர்கள்; விறகுகளை உபயோகிப்பதில்லை. நீங்கள் முட்டாள்தனத்தால், எரிமுட்டைகளுக்குப் பதிலாக எரிப்பதற்கு விறகைத் தரும் மரங்களையும் வளர்ப்பதில்லை; ஆடுமாடுகளுக்காகப் புல்லும் வளர விடுவதில்லை. உங்கள் முன்னோர்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவைக்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நிலத்தை மூடிக்கொண்டிருக்கிற உபயோகமற்ற மரங்களை உடனே வெட்டி அவைகளை ஒன்று விற்றுவிடுங்கள், அல்லது உங்களுக்குள்ளேயே பாகித்துக்கொள்ளுங்கள். புல் விதைகளையும், விறகுகளா

கும் மரவிதைகளையும் விதையுங்கள். அவைகளின் இலைகள்கூட பஞ்சகாலங்களில் ஆடுமாடுகளுக்குத் தழைகளாக உதவும்.

**கிராமவசிகள்:** நீங்கள் சொல்வது சரியென்றே எங்களுக்குத் தோற்றுகின்றது. அப்படிச் செய்வதே எங்கள் பெரியோர்களின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகுமென்று எண்ணுகிறோம்.

**சாக்ரடீஸ்:** இம்மாதிரி இயற்கைச் செல்வங்களை வீணுக்குலைவதை நிறுத்திவிட்டால்தான் உங்கள் தரித்திரமும் உங்களைவிட்டு நீங்கும்; அதுவரையில் அது நீங்காது. இப்பொழுது செய்து வருவதுபோல் நீங்கள் செய்து கொண்டே வந்து, சதாகாலமும் சர்க்கார் ஏதேனும் ஒரு மந்திரம் செய்து நமது வரும்படியை இரட்டிக்கச் செய்யமாட்டார்களா என்றும், வரிவாங்காமலே துரைத்தனத்தை நடத்தமாட்டார்களா என்றும் எதிர்பார்ப்பதில் சிறிதும் பிரயோஜனமில்லை. உங்கள் வியாதிக்குச் சிகிச்சை உங்கள் கையிலேயே இருக்கிறது.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! நீங்கள் சொல்வதெல்லாவற்றையும் கேட்டோம். அவைகளில் எள்ளளவும் பிசகில்லை. எங்கள் வாழ்க்கை முறைகளையும், பயிரிடும் வகைகளையும் நாங்கள் முற்றிலும் மாற்றிக் கொள்ளவேண்டும். அப்படியன்றி எங்களது பழைய மூடவழிகளையே சார்ந்து நடந்து, ஏதாவது ஒரு செப்பிடு வித்தையால் கோடீசுவரர்களாக மாட்டோமா என்று ஆகாயத்தைப் பார்த்தவண்ணமாகவே இருப்பது முட்டாள்தனமென்று எங்கட்கு நன்கு விளங்குகிறது.

# உபயோகமற்ற எருதுகள்

ஒருதினம் சாக்ரடீஸ் ஒரு பிராமணனுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு மாட்டுமந்தை அவ்வழி போயிற்று. சற்று நேரங் கழித்து, ஒரு சிறிய கோவில் காளையும் அதே பக்க மாகச் சென்றது. அதன் உடல் நன்ருகப் பருக்கா மலும், அவயவங்கள் ஒழுங்காக வளர்ச்சியை யடை யாமலும் இருந்தன.

**சாக்ரடீஸ்:** ஸ்வாமி! இந்தக் காளை யாருடையது?

**பிராமணன்:** அது எவருடையதுமல்ல; அது கோவில் காளை.

**சாக்ரடீஸ்:** உங்கள் பசுக்களுக்கு அதுதானே பயன் படுகிறது.

**பிராமணன்:** ஆம், இந்த ஊரில் அது ஒரே காளை தான். அதுதான் எங்கள் பசுக்களுக்கு உபயோகம்.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல், ஸ்வாமி! பிராமணோத்தம ரான தாங்கள் கசாப்புக்கடையை இவ்விதம் ஆதரித்துவருவது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக் கின்றது.

**பிராமணன்:** (வெகு கோபமாக) சாக்ரடீஸ்! உம்மு டைய வார்த்தையின் பொருள் விளங்கவில்லை. நீர் இந்தமாதிரி பேசுவதானுல் இவ்விடத்திலிருந்து உயிரு டன் தப்பித் திரும்புவது கஷ்டமாகும்.

**சாக்ரடீஸ்:** ஸ்வாமி! உண்மையாகவே நான் அப்படிச் சொன்னதற்காக வருந்துகிறேன்; ஆனுல் என்னை யறியாமலே சிற்சில சமயங்களில் என் மூட வாக்கி லிருந்து உண்மை வார்த்தைகள் வந்துவிடுகினறன.

**பிராமணன் :** கிழவரே ! நீர் சொல்வது முற்றும் பொய்; நீர் சொல்கிறபடி நான் அந்த ஈனமான காரியத்தை ஆதரிப்பதில்லை.

**சாக்ரடீஸ் :** பிராமணரே! நான் சொல்வதில் எள்ளளவும் பிசகில்லை. ஏன் இல்லையென்று சொல்லி வேஷம் போடுகிறீர்கள் ? அதனால் பொய் மெய்யாகுமா ?

**பிராமணன் :** எப்படி அய்யா நான் வேஷம் போடுகிறேன்.



நீர் சொல்வது முற்றும் பொய்

**சாக்ரடீஸ் :** அதோ போகிறதே அந்தக்காளை மிகவும் கேடுற்றிருக்கிறதல்வா ?

**பிராமணன் :** ஆம். அது மிகுதியும் நன்றாகத்தான் இருக்கவில்லை.

**சாக்ரடீஸ் :** அது வெகு கேவலமாய் இருக்கிறது என்கிறேன் நான்.

**பிராமணன் :** சரி. அது கொஞ்சம் கேவலமாகத்தான் இருக்கிறது.

**சாக்ரடீஸ்:** அது சுத்த மோசமாயிருக்கிறதென்று நான் கூறுகிறேன்.

**பிராமணன்:** நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள்? அது நல்ல காளை அன்று என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

**சாக்ரடீஸ்:** நல்லது. அதனால் உற்பத்தியாகும் காளைக் கன்றுகள் ஏர் உழ உதவமாட்டா; அதன் கடாரிக் கன்றுகள் பசுக்களானால் நல்ல கறவையைக் கொடுக்க மாட்டா.

**பிராமணன்:** கன்றுகள் இளப்பமானவைதான்.

**சாக்ரடீஸ்:** கசாப்புக்கடைக்குத்தானே அதை பிரயோஜனமாகும்?

**பிராமணன்:** சீ! சீ! ஒருநாளும் இல்லை. கடவுள் இதைத் தடுப்பாராக! சாக்ரடீஸ்! ஏன் என்னை இவ்விதம் புண்படுத்துகிறீர்?

**சாக்ரடீஸ்:** அவைகள் உங்களுக்கு உபயோகமில்லாமல் போனால், அவைகளை எப்படியாவது தொலைக்க வேண்டியது தானே?

**பிராமணன்:** ஏன்? நாங்கள் அவைகளில் சிலவற்றை விற்றுவிடலாம்.

**சாக்ரடீஸ்:** ஆம். ஆனால் உங்களிடமிருந்து வாங்குகிறவன் கசாப்புக்கடைக்குத்தானே அவைகளைக் கொண்டு போவான்.

**பிராமணன்:** ஒருகாலும் இல்லை. நாங்கள் அவைகளை விற்கும்பொழுது வாங்குகிறவனிடத்திலிருந்து அவ்விதம் செய்யக்கூடாதென்று உறுதிமொழி வாங்கிக் கொண்டுதான் விற்போம். நாங்களொருபொழுதும் கசாப்புக்கடைக்காரனுக்கு அவைகளை விற்கவே மாட்டோம்.

**சாக்ரடீஸ் :** நல்லது. அதிருக்கட்டும். வாங்குகிறவன் அவைகளை என்ன செய்வான் ?

**பிராமணன் :** அதென்ன செய்வானோ, நானறியேன்.

**சாக்ரடீஸ் :** அவனும் அவைகளை விற்றுவிடுவான்.

**பிராமணன் :** விற்கலாம்.

**சாக்ரடீஸ் :** அவன் ஏதேனும் நிபந்தனை வைப்பானோ ?

**பிராமணன் :** எனக்கெவ்விதம் தெரியும் ?

**சாக்ரடீஸ் :** அவைகள் இவ்விதமே கைகள் மாறிக் கொண்டே போகும். ஏனெனில் உபயோகமற்ற மாட்டை யார்தான் வைத்துக்கொள்வார்கள் ?

**பிராமணன் :** உண்மையே.

**சாக்ரடீஸ் :** கடைசியாக அவைகள் கசாப்புக்கடைக் காரனிடம்தான் செல்லும்.

**பிராமணன் :** முடிவில் அப்படியும் ஆகலாமென்று தோன்றுகிறது.

**சாக்ரடீஸ் :** ஆகையால், ஸ்வாமிகளே, நீங்கள் கசாப் புக் கடைக்காரனை ஆதரிக்கிறவர்களாகிறீர்கள் அல்லவா ?

**பிராமணன் :** எப்படியானாலும் கசாப்புக்கடைக்காரன் ஏதேனுமொன்றைக் கொன்றுதானே ஆகவேண்டும்? அது அவனது தொழில்.

**சாக்ரடீஸ் :** ஜாதிக் காளைகளின் கன்றுகளை அவன் கொல்வானா?

**பிராமணன் :** மாட்டவே மாட்டான் ; அவ்வளவு நல்ல கன்றுகளை அம்மாதிரி நாசமாக ஒருவரும் விடமாட் டார்கள்.

**சாக்ரடீஸ் :** கசாப்புக் கடைக்காரன் கூட அப்படிச் செய்ய மாட்டானன்றோ ?

**பிராமணன் :** செய்யமாட்டான்.

**சாக்ரடீஸ்:** சரி. நீங்களெல்லோரும் ஜாதிக் காளை களை வைத்திருந்தால், நீங்கள் அவைகளை யாருக்கு விற்றபோதிலும் அவை எப்பொழுதேனும் கொலைக் களத்தைக்காண நேரிடுமோ?

**பிராமணன்:** காண நேரிடாது; அது உண்மையே.

**சாக்ரடீஸ்:** ஆதலால் உபயோகமற்ற காளைகளை நீங்கள் வைத்துக்கொண்டிருக்கும் வரையில் கசாப்புக் கடை களை ஆதரிக்கிறவர்களாகவே ஆகிறீர்கள்.

**பிராமணன்:** சாக்ரடீஸ்! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் இதுவரையில் அதன் உண்மை இதுதானென்று எங்களுக்குத் தோன்றவில்லை. கோவில் காளையைக் காயடிப்பது பாபம் என்று நாங்கள் விட்டுவிட்டோம்.

**சாக்ரடீஸ்:** உண்மையில் காயடிப்பது பாபமில்லை; ஆனால் அதைப் பசுக்களிடம் விடுவதுதான் கொடிய பாவமென்று இப்பொழுதாவது தெரிகிறதா?

**பிராமணன்:** ஆம், அப்படித்தான் ஏற்படுகிறது.

**சாக்ரடீஸ்:** ஒரு பழைய வழக்கத்தைக் குருட்டுத்தன மாக அனுஷ்டிப்பது எப்பொழுதும் மூடத்தனம். எதையும் கண்மூடித்தனமாகப் பின் பற்றுகிறீர்கள். எப்பொழுதும் எதையும் கவனத்தோடு ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். நல்லதானால் வைத்துக் கொள்ளுங்கள், இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள்.

# இரண்டு பொக்கிஷங்கள்

சாக்ரடீஸ் ஒருநாள் கிராமச் சாவடியில் உட்கார்ந் திருந்தார். அச்சமயம் அவ்வூர் வாசியான ஜமேதார் ஒருவர் நன்றாக உடுத்திக்கொண்டு பரபரப்புடன் அப் பக்கமாக வந்தார்.

**சாக்ரடீஸ்:** ஜமேதார் ஸாஹிப்! எங்குக் கிளம்பியது இன்றைக்கு?

**ஜமேதார்:** ஏன்! பென்ஷன் வாங்கக் கஜானாவுக்குச் செல்லுகிறேன்.

**சாக்ரடீஸ்:** கஜானாவா? அதென்ன?

**ஜமேதார்:** கஜானாவென்றால் தெரியாதா? சர்க்கார் தங்கள் செல்வத்தை வைத்திருக்கும் இடம்தான் அது.

**சாக்ரடீஸ்:** ஓஹோ! அப்படியானால் இந்தக் கிராமத்தில் உங்களிடமும் கஜானாக்கள் இருக்கின்றனவென்று நினைக்கிறேன்.

**ஜமேதார்:** சாக்ரடீஸ்! நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்? எங்களிடம் கஜானாக்கள் ஏது? நாங்கள் மிக எளியவர்களாயிற்றே.

**சாக்ரடீஸ்:** ஜமேதார் ஸாஹிப்! இப்பொழுது வீட்டுப் புறக்கடையில் குழி வெட்டிவிட்டீர்களல்லவா?

**ஜமேதார்:** ஆம். நீங்கள் வற்புறுத்தினதின் பேரில் வெட்டியிருக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** உங்கள் குப்பையையும் சாணியையும் அதில்தானே போடுகிறீர்கள்.

**ஜமேதார்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** வீட்டில் கூட்டுவதையெல்லாம்கூட அதில் தானே?

**ஜமேதார்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** சாம்பலையெல்லாம்?

**ஜமேதார்:** அதில்தான்.

**சாக்ரடீஸ்:** ஊரைச்சுற்றி மழைக்காலங்களில் வளரும் பூண்டுகளையெல்லாம் வெட்டி அதனுள்ளேயே போடுகிறீர்களா?

**ஜமேதார்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் ஆடுமாடுகளின் சாணங்களை ?

**ஜமேதார்:** அதையுந்தான்.

**சாக்ரடீஸ்:** உங்கள் குடிசைகளிலிருந்து உதிரும் கீற்றுத் துணுக்குகளையும் வைக்கோலையும் ?

**ஜமேதார்:** அவையும்கூடதான்.

**சாக்ரடீஸ்:** தெருக்களிலும் கொட்டில்களிலும் கூட்டப்படும் குப்பைகளையெல்லாம் அதில் போடு கிறீர்களா ?

**ஜமேதார்:** போடுகிறேன்.

**சாக்ரடீஸ்:** அதாவது—ஜமேதாரே ! உங்கள் கையில் அகப்படும் எல்லா வீண பண்டங்களையும், அழுகின வஸ்துக்களையும் ஒன்றுகூட விடாமல் அதில் போடு கிறீர்களல்லவா ?

**ஜமேதார்:** ஆம், போடுகிறேன்.

**சாக்ரடீஸ்:** அவைகளெல்லாம் அங்கே மக்கிப்போன பிறகு சில மாதங்கள் கழித்து அவற்றை எடுத்து வயல்களில் கொட்டுகிறீர், அல்லவோ ?

**ஜமேதார்:** அப்படியேதான் செய்கிறேன்.

**சாக்ரடீஸ்:** முன்னை விட இப்பொழுது இரட்டிப்பு கண்டு முதல் ஆகிறதல்லவா ?

**ஜமேதார்:** சாக்ரடீஸ்! நீங்கள் சொல்வது சரி. முன் னம் எனக்குக் கிடைத்ததைப்போல் குறைந் தது இரண்டத்தனை விளைச்சல் இப்பொழுது கிடைக் கிறது.

**சாக்ரடீஸ்:** ஆகையால் உங்கள் எருக்குழி கேவலம் எருக்குழியல்ல—அது ஒரு கஜானா, அல்லவா ?

**ஜமேதார்:** ஆம், பெரியவரே ! என்னிடம் இருப்பது ஒரு கஜானாதான். நீங்கள் சொல்வது சரிதான்.

**சாக்ரடீஸ்:** அதிருக்கட்டும். கிராமத்து நிதியில் நீங்கள் சேர்ந்திருக்கிறீர்களோ?

**ஜமேதார்:** ஆம், அதுவும் உங்களுடைய உபதேசத்தால்தான்.

**சாக்ரடீஸ்:** உங்கள் பென்ஷனிலும், தானியங்களை விற்பதால் வரும் வருமானத்திலும் செலவானது போக மிகுந்ததை அதில்தானே போட்டுகிவருகிறீர்கள்?

**ஜமேதார்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** மாடுகளை விற்றுவரும் பணத்தையும் அதில் தானே?

**ஜமேதார்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** உங்கள் கையில் கிடைக்கும் எல்லாப பணத்தையும் அதில்தானே போடுகிறீர்கள்?

**ஜமேதார்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது நகைகளில் பணமொன்றும் செலவிடுவதில்லையே?

**ஜமேதார்:** இல்லவே இல்லை.

**சாக்ரடீஸ்:** ஆகையால் உங்களுடைய குப்பையெல்லாம் எருக்குழிக்கும், செலவுபோக மிஞ்சின பணமெல்லாம் நிதிக்கும் போகின்றனவல்லவா?

**ஜமேதார்:** ஆம், அப்படியேதான் நடக்கின்றது.

**சாக்ரடீஸ்:** நல்லது, குழி ஒரு கஜானா. இரண்டாவது கஜானா நிதி.

**ஜமேதார்:** சாக்ரடீஸ்! தாங்கள் சொல்வது சரியே. என்னிடம் இரண்டு கஜானாக்கள் இருக்கின்றன.

**சாக்ரடீஸ்:** ஒவ்வொரு புத்தியுள்ள மிராசுதாரிடமும் இரண்டு கஜானாக்கள் இருக்கின்றன—ஒன்று எருக்குழி; மற்றொன்று கிராம நிதி. இந்த இரண்

டையும் அவன் கைவிடாதிருக்கும் வரையில் அவனுக்கு ஒரு குறைவும் ஏற்படாது.

**ஜமேதார்:** சாக்ரடீஸ்! உங்கள் வார்த்தையில் சிறிதேனும் தவறில்லை; உங்கள் யோசனையைக் கேட்டு எருக்குழியை வெட்டி நிதியில் சேர்ந்தது முதல் எனக்குத் தரித்திரமே கிடையாது.

**சாக்ரடீஸ்:** நல்லது, கஜானுவுக்குப் போய்வருக. தங்களுக்கு எப்பொழுதும் அதிருஷ்டமே உண்டாகுக.

**ஜமேதார்:** பெரியாரே! வந்தனம், போய்வருகிறேன்.

# விதி, அல்லது தெய்வச்செயல்

**கிராமவாசி:** சாக்ரடீஸவர்களே! என் துக்கத்தை என்னென்று சொல்வேன். பயிர்களெல்லாம் சாவியாய்ப் போய்விட்டன. குழந்தைகளோ வியாதியால் அவஸ்தைப்படுகின்றன. கடனே தாங்கமுடியவில்லை. மிராசுதாரர்களாகும் எங்களுக்கு ஏதோ பெரிய கஷ்டகாலம் வந்துவிட்டது. சர்க்கார் மாத்திரம்—

**சாக்ரடீஸ்:** சரி; இதற்கெல்லாம் காரணம் சர்க்கார் தானே?

**கிராமவாசி:** மேலும் மழையோ—

**சாக்ரடீஸ்:** தெய்வங்கூட உங்களுக்குக் கெடுதியைத் தான் செய்கிறது!

**கிராமவாசி:** ஏன், நான் வெகு கஷ்டப்பட்டு வேலை செய்யவில்லையா? என்னிடம் கொஞ்சமாவது இரக்கம் காட்டலாகாதா? சர்க்கார் வந்து—

**சாக்ரடீஸ்:** திரும்பவும் சர்க்கார்தானு?

**கிராமவாசி:** ஏன்? நான் வரி செலுத்தவில்லையா: அதுதான் போகட்டும். பூமியாவது—

**சாக்ரடீஸ்:** சரி! மறுபடியும் தெய்வத்திற்குத்தான் வந்தது கஷ்டம்! துரதிருஷ்டமான தெய்வமே! பாழும் துரைத்தனமே! உங்களை இந்த மிராசுதாரர்கள் கடிந்து கொள்ளாத நாளே கிடையாதோ?



மிராசுதாரர்களாகும் எங்களுக்கு பெரிய கஷ்ட காலம்

மிராசுதாரர்களே! நீங்கள் உங்கள் எருவையெல்லாம் எருமுட்டையாக்கி எரித்துவிடுகிறீர்கள்; உங்கள் ஊரை நாற்றத்தாலும் அழுக்காலும் விஷமூட்டுகின்றீர்கள்; முனை மழுங்கிய உபயோகமற்ற பழங் கலப்பைகொண்டு உழுகின்றீர்கள்; விதை வியாபாரிகளிடம் விதையை வாங்காமல், ஏதோ மிட்டாய்க் கடைக்காரனிடம் விதை வாங்கி விதைக்கிறீர்கள்; நல்ல பாரசீக ராட்டினம் வைத்துத்

தண்ணீர் இறைக்காமல் ஏற்றம்போட்டு நீர்ப்பாய்ச்சுகிறீர்கள்; கூட்டுறவு சேமநிதிகள் பன்னிரண்டு வீதம் கடன் கொடுக்கக் காத்திருக்க, முப்பத்தாறு வீதம் கடன்வாங்குகிறீர்கள்; அழுக்கிலும் மலத்திலும் குடியிருந்து, வீடுகளுக்குச் சன்னல்களில்லாமல் அடைத்து வைத்துக்கொண்டு, குழந்தைகளுக்கு அம்மை குத்துகிறவர்கள் வந்தால் ஓடி ஒளிந்துகொள்ளுகிறீர்கள். இங்ஙனம் நீங்களே செய்துவிட்டு, பயிர்கள் பலன் கொடாமல் போகும்போதும், கடன்காரன் வந்து வழிமறிக்கும்போதும், குழந்தைகள் வியாதியால் கஷ்டப்படும்போதும் தெய்வத்தையும் துரைத்தனத்தாரையுமே நோகின்றீர்கள். நண்பர்களே! துரைத்தனம் என்பது வந்தவர்களுக்கெல்லாம் அன்னமிடும் தர்மசத்திரமா? கடவுள்தான் என்ன செய்வர்? உங்கள் கொள்கை வெகு நன்றாக இருக்கிறது!

**கிராமவாசி:** சாக்ரடீஸவர்களே! எங்களை என்ன தான் செய்யச் சொல்லுகிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** நல்லது. விஷயங்கள் கெடுதலாகப் போகுமேயானால், முதலில் குற்றம் எங்கேயிருக்கிறதென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும்; நீங்கள் சௌக்கியமாயிருக்கவும், உங்கள் பயிர்கள் நன்றாக வளரவும், உங்களாலானமட்டும் எல்லாவற்றையும் செய்துவிட்டீர்களா என்பதையும் முதலில் கண்டறியவேண்டும். அப்படி உங்களாலியன்றதெல்லாம் செய்தபிறகும் உங்கள் நிலைமை சீர்கேடாயிருந்தால், அப்பொழுது தெய்வத்தையும் சர்க்காரையும் நொந்துகொள்ளலாம்.

**கிராமவாசி:** நல்லது. பயிர்கள் விளையாமல் போவதும், குழந்தைகளுக்கு வைகுரிவருவதும் தெய்வத்தின் செயல் தானே! அதுவும் இல்லை என்பீர்களோ?

**சாக்ரடீஸ்:** அம்மை வைத்த பிள்ளைகளுக்கு வைசூரி காண்கிறதா?

**கிராமவாசி:** இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் தெய்வத்தைவிட அம்மை வைக்கிறவன் மேலானவனோ?

**கிராமவாசி:** நல்ல கேள்வி ஐயா, இது?

**சாக்ரடீஸ்:** பிளேக் வந்தபோது உங்கள் சிசுக்கள் ஏன் இறந்தன.

**கிராமவாசி:** விதிவசத்தால்தான்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், டாக்டர் வந்து உங்களுக்குப் பிளேக் அம்மை வைத்தபிறகு ஒருவரும் சாகவில்லையே?

**கிராமவாசி:** ஆம். அதுவும் உண்மையே.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் டாக்டர் விதியைக் காட்டிலும் அதிக வலிமை யுடையவரோ?

**கிராமவாசி:** இல்லவே இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்படி இல்லையானால், வைசூரிக்கு அம்மை வைத்தலும் பிளேக்குக்கு அம்மை வைத்தலும் கடவுளது சித்தத்திற்கு இசைந்தனவாகவே ஆகின்றன அல்லவா?

**கிராமவாசி:** ஆம், அப்படியே ஏற்படுகிறது.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் கிராமத்தில் எங்கும் கொட்டிக்கிடந்தால், உங்களையும் உங்கள் குழந்தைகளையும் விஷமிட்டுக் கொல்லும் குப்பையை, வயலில் போடப்பட்டால் உங்களுக்கு இரண்டுபங்கு சாகுபடியைக் கொடுத்து விடுகின்றதே. அதுவும் கடவுளின் இஷடந்தானோ?

**கிராமவாசி:** அதுவும் உண்மையாகவே காணப்படுகின்றது.

**சாக்ரடீஸ்:** இரும்புக் கலப்பைகளும், பாரசீக ராட்டினங்களும் கூடத் தெய்வச் செயல்கள்தாமோ?



பழைய மரக்கலப்பைகளுக்குப் பதிலாக
இரும்புக் கலப்பைகளை உபயோகப்படுத்துங்கள்

**கிராமவாசி:** அப்படியே தோன்றுகின்றன.

**சாக்ரடீஸ்:** ஒருவேளை, நீங்கள் சாகாமல் வாழ்ந்திருக்க வேண்டுமென்பதும், வியாதியில்லாமல் சுகமாக இருக்க வேண்டுமென்பதும், துர்பிக்ஷமான மாசூலைப் பெறுமல் பூர்ணமான மாசூலைப் பெறவேண்டுமென்பதும்கூட தெய்வ சம்மதமாயிருக்கலாமன்றோ?

**கிராமவாசி:** ஆம்.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல் உங்கள் குழந்தைகள் சாகும்போதும், பயிர் மோசமாகும்போதும் 'தெய்வச் செயல்' என்று சொல்லாதீர்கள். பிசகு எங்கே

இருக்கிறதென்று கண்டுபிடித்து அதைச் சரிப்படுத்தப் பாருங்கள். பகவான் உங்களுக்குத் தீமையே நினைப்பதில்லை. அவர் எண்ணுவதெல்லாம் நன்மையே. உங்கள் சோம்பலும் மூடத்தனமுமே உங்களுக்குத் தீங்கை விளைக்கின்றன. அப்படியிருக்க உங்கள் துக்கத்திற்கெல்லாம் கடவுள் காரணமில்லை; உங்கள் அறிவீனமும் மூடத்தனமுமே காரணமாமென்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

**கிராமவாசி:** நான் இதை மறக்காமல் மனத்தில் வைத்துக்கொள்ளுகிறேன், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** சர்க்காரையும் அனாவசியமாக நிந்திக்க வேண்டாம். சர்க்கார் உங்களிடத்திலிருந்து வசூல் செய்யும் வரி நீங்கள் சரியானபடி எருவிட்டுச் சாகுபடி செய்தால் உங்களுக்கு விளையக்கூடிய நெல்லில் இருபதில் ஒருபங்குகூட பெறாது. அதற்குப் பதிலாக அவர்கள் பாதுகாவலும், பாடசாலைகளும், ஆஸ்பத்திரிகளும், ரஸ்தாக்களும், இன்னும் நீங்கள் பண்டைக் காலங்களில் கேட்டும்கூட அறியாத நூற்றுக்கணக்கான நன்மைகளையும் உங்களுக்குச் செய்கின்றார்கள். ஆகையால் உங்கள் குற்றங்களையும் பிசகுகளையும் சர்க்கார்மீது சுமத்தலாகாது. சர்க்கார் உங்கள் கிராமத்தையும் உங்களையும் சீர்ப்படுத்த என்ன பாடு படுகிறார்கள்? அதை நீங்கள் அறியவில்லையே!

**கிராமவாசி:** சாக்ரடீஸ்! தாங்கள் சொல்வது வெகுசரி. கடவுளையும் துரைத்தனத்தாரையும் தூஷிப்பதற்கு முன், என்னிடத்தில் என்ன குற்றமிருக்கிறதென்பதை நான் நன்றாய் யோசித்துக் கண்டறிகிறேன். இந்தப் போதனையை ஒருநாளும் மறக்கமாட்டேன்.

## சௌகரியமான கிராமங்கள்

**சாக்ரடீஸ்:** நமஸ்காரம் பிள்ளையவர்களே! எங்கேயிருந்து வருகிறீர்கள்?

**பிள்ளை:** தோட்டத்திலிருந்து வருகிறேன்.

**சாக்ரடீஸ்:** அது எங்கேயிருக்கிறது?

**பிள்ளை:** கிராமத்திற்கு வெளியே என் கிணற்றுக்கருகில் இருக்கிறது.

**சாக்ரடீஸ்:** இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?

**பிள்ளை:** சுமார் அரைமைல் இருக்கும்.

**சாக்ரடீஸ்:** அங்கே எவ்வளவு காலமிருந்தீர்கள்?

**பிள்ளை:** ஒரே ஒரு இரவுதான் அங்கிருந்தேன்.

**சாக்ரடீஸ்:** ஐயா! உங்கள் மக்களும் மனைவியும் அங்கே சுகமாய் இருக்கிறார்களல்லவோ? இந்த ஊர்ச் சந்தடியிலிருந்தும் ஆபாசத்திலிருந்தும் வெளியே குடியிருப்பது வெகு நன்றாகத்தான் இருக்கும்.

**பிள்ளை:** பெரியவரே! என்ன உங்கள் புத்தி இன்று கொஞ்சம் தடுமாற்றமாயிருக்கிறது போல் காண்கிறதே? என்ன சொல்லுகிறீர்கள்?

**சாக்ரடீஸ்:** தடுமாற்றமொன்றுமில்லை. உங்களுக்கு ஒரு தோட்டமிருக்கிறதென்று இப்பொழுது சொன்னீர்களன்றோ?

**பிள்ளை:** ஆம்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் ஒரு பெரிய குடும்பி என்பது எனக்குத் தெரியும்.

**பிள்ளை:** சரி.

**சாக்ரடீஸ்:** ஆகவே, ஒரு தோட்டமுள்ள ஒரு மனிதர் தம் மக்களை அதில் வசிக்கவும் அதன் அழகான பூக்களின் மத்தியில் விளையாடவும் விடுவதைவிட

மேலான காரியம் வேறென்ன செய்ய இயலும்? நல்ல சுத்தமான காற்று வேறு எங்கு கிடைக்கும்?

**பிள்ளை:** அங்கே புஷ்பங்கள் அதிகம் இல்லை. என் குடும்பம் வசிக்கும் வீடு அதோ இருக்கிறதே அதுதான். தெரிந்து கொண்டீர்களா?

**சாக்ரடீஸ்:** நீங்கள் அதை அனுபவிக்காத பக்ஷத்தில் தோட்டம் இருந்தும் பிரயோஜனம் என்ன? உடனே இந்த ஊரை விட்டுவிட்டு அங்கே குடியிருக்கப் போங்கள்.

**பிள்ளை:** சாக்ரடீஸ்! உங்களுக்குத் திருப்தி என்பது ஒரு நாளும் ஏற்படாதா? நாங்கள் குழிகள் வெட்டி, அவற்றைச் சுற்றித் தட்டிகள் வைத்துக் குறுக்கே இரண்டு பலகைகள் போட்டுக் கக்கூஸ்கள் கட்டிக் கொண்டோம். தினந்தோறும் ஊரைச் சுத்தப்படுத்தி வருகிறோம். அன்றியும் வாரமொருமுறை ஊரை விசேஷமாகவும் சுத்தப்படுத்துகிறோம். உங்களுடைய வார்த்தையின்படியே பாரசீக ராட்டினமொன்று போட்டு, பழமரங்களையும் கறிகாய்ச் செடிகளையும் கிணற்றைச் சுற்றி நட்டிருக்கிறேன். நாங்கள் எல்லோரும் உங்களிடம் கொண்டுள்ள நன்றியறிவுக்கு எல்லையேயில்லை. எங்கள் தேக சௌக்கியம் முன்னிருந்ததைவிட நன்றாயிருக்கிறது. எங்கள் கழனிகளும் இரண்டத்தனை விளைகின்றன. நல்ல நீர்ப்பாய்ச்சலும், நல்ல விதையும், நல்ல உழவும், ஆகிய இவை எல்லாம் சேர்ந்து எங்களுக்கு மிகுதியும் பலனை அளிக்கின்றன. இன்னமும் என்ன வேண்டும் என்கிறீர்? அமைதியற்ற கிழவரே?

**சாக்ரடீஸ்:** ஆம். நீர் சொல்லுகிறபடியே உங்கள் கிராமம் இப்பொழுது சுத்தமாகத்தான் இருக்கிறது.

நாற்றம் இப்பொழுது வீசவில்லை. நீங்கள் கக்கூஸ் களாக உபயோகிக்கும் குழிகள் உண்மையாகவே உங்களுக்கு நன்மையைச் செய்கின்றன. முக்கிய மாக அவை உங்கள் ஸ்திரீகளுக்கு மிகவும் உபயோக மாகின்றன. முன்பிருந்ததைவிட நாய்கள் இப் பொழுது அதிக நன்ருகிவிட்டன. நீங்களும் இரண் டொரு நாய்களை வளர்க்க ஆரம்பித்து, அவைகளின் கழுத்துக்களில் பட்டை கட்டி, அவைகளுக்கு வசிக்க இடமும் ஆகாரமும் கொடுத்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரும் இட்டுக் கொஞ்சம் அவற்றைப் பழக்கியும் வருகிறீர்கள்.

**பிள்ளை :** ஆம். நாங்கள் அவைகள் எல்லாவற்றையும் செய்துவருகிருேம். ஆனால் அம்மம்மா! நீங்கள் அதை வற்புறுத்த எடுத்துக்கொண்ட சிரமம் எவ்வளவு! எவ்வளவு காலமாக நீங்கள் இவற்றையெல்லாம் போதித்து வந்திருக்கிறீர்கள்?

**சாக்ரடீஸ் :** நல்லது. என்ன செய்தபோதிலும் இன் னும் உங்கள் கிராமம் முழுமையும் நன்ருக ஆகவில்லை. நான் வரும் வழிமுழுதும் அனைத்தும் ஒழுங்கில்லா மலும், சின்னுபின்னமாகவும் சிதறிக் கிடக்கக் கண்டேன். உங்களை முழுமையும் சீர்திருத்துவது ஒருநாளும் கூடாத காரியம் என்றுகூட நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

**பிள்ளை :** அப்படியா? இன்னும் எங்கள்மீது குற்றம் என்ன?

**சாக்ரடீஸ் :** சரி. முதன் முதலாக உங்கள் தெருக்களை எடுத்துக்கொள்வோம். அவைகள் எவ்வளவு குறுக லாக இருக்கின்றன? சில தெருக்களில் சிறு வண்டி

களும் போகமுடியாது; மேலும் எதிரே வரும் வண்டிகள் மாறுவதற்கு இடமே இல்லை. நீங்கள் சுபாவமாகவே நல்லவர்களாக இருக்கிறபடியால் உங்களுக்குள் சண்டைகள் நேருவதில்லை. இல்லாவிட்டால் வண்டிகள் மாறுவதில் அநேக கொடிய சண்டைகள் உங்கள் வீதிகளில் ஏற்பட்டிருக்கும்!

**பிள்ளை:** ஆம். தெருக்கள் மிகவும் குறுகியே இருக்கின்றன. வீடுகளை உள்ளே தள்ளிக் கட்டவேண்டுமென்று சொல்பவர்கள் ஒருவரும் இல்லை. வீதிகள் விசாலமாக இருக்குமிடங்களில் வீட்டுக்காரர்கள் ஆளோடிகளையும், படிக்கட்டுகளையும் கட்டித் தெருக்களைக் குறுக்கிவிடுகிறார்கள்.

**சாக்ரடீஸ்:** அதற்கு அடுத்தபடியாகச் சாக்கடைகள் எப்படி இருக்கின்றன பாருங்கள். இவைகள் வீட்டோரங்களில் ஓடுகின்றன; தெருக்களில் குழிகுழியாக நீர் தேங்கி நிற்கின்றன. இவை வெகு விகாரமாயும் அசுசியாயு மிருக்கவில்லையா ?

**பிள்ளை:** நாங்கள் இவைகளை எப்படி மாற்றுகிறது ?

**சாக்ரடீஸ்:** வெகு கஷ்டந்தான். நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். சாக்கடைகள் வீட்டோரங்களில் ஓடுவது நல்லதன்று. அப்படி ஓடுமிடங்களில் அவற்றைத் தினந்தோறும் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும். மேலும் நீங்கள் குளிக்கு மிடங்களும் சாமான்களைக் கழுவிச் சுத்தம் செய்யும் இடங்களும் ஒரு புறமாயிருக்கவேண்டும். அங்கிருந்து ஓடும் ஜலத்தை வாய்க்கால்களின் வழியாய்த் தோட்டங்களில் பூஞ்செடிகளுக்குப் பாயும்படியாகச் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? மேலும் நீங்கள் குளிப்பதெல்லாம் கிணற்றுக்கு அருகில் இருக்கவேண்டும்.

**பிள்ளை:** ஆம், ஐயா. இவைகளை யெல்லாம் நாங்கள் செய்யலாம். ஆக்ஷேபணை யில்லை. ஆனால் ஸ்திரீகளும் குழந்தைகளும் கிணற்றடியில் குளிப்பது என்றால், அதற்காக கிணற்றருகில் பிரத்தியேகமாக ஓரிடம் ஏற்படுத்தவேண்டும்.

**சாக்ரடீஸ்:** ஏன் ஏற்படுத்தக் கூடாது? உங்கள் ஸ்திரீகள் அனேகமாய்க் கஷ்ட ஜீவனமே செய்துவருகிறார்கள். குளிப்பதாகச் சொல்லி வீட்டுக் கொல்லைகளையெல்லாம் ஆபாசம் பண்ணுகிறார்களே யல்லாமல், உண்மையாக அவர்கள் உடம்பைத் தேய்த்துக் குளிப்பதில்லை. ஆதலால்தான் அவர்கள் அவ்வளவு அழுக்குப் பிடித்தவர்களாக இருக்கிறார்கள்.

**பிள்ளை:** அது உண்மைதான். உங்களைத் திருப்தி பண்ணுவதற்காகவாவது கிணற்றிற்குச் சமீபத்தில் குழந்தைகளுக்கும் பெண்களுக்குமாக ஒரு ஸ்நான அறை கட்டிவிடுகிறோம்.

**சாக்ரடீஸ்:** அது மிகவும் நல்லது. வேண்டுமானால் சென்னையிலுள்ள ஸ்திரீகள் உத்தியானவனத்தில் கட்டப்பட்டிருக்கும் மாதிரி கட்டலாம்.

**பிள்ளை:** அதென்ன? சாக்ரடீஸவர்களே?

**சாக்ரடீஸ்:** முன்னே அது புருஷர்களின் தோட்டமாக இருந்தது. அங்குள்ள புத்தியுள்ள ஜனங்கள் அவர்களை விரட்டிவிட்டு ஸ்திரீகளின் தேக சௌக்கியத்திற்காக அதை நியமித்தார்கள். அதில் அழகான ஸ்நான அறையொன்றும் கட்டினார்கள்.

**பிள்ளை:** நான் போய் அதைப் பார்க்கவேண்டும்.

**சாக்ரடீஸ்:** நீர் போகமுடியாது. உம்முடைய மனைவியை அனுப்பலாம்.

**பிள்ளை :** சரி. அவளை அனுப்புகிறேன். ஆனால் நான் போகாவிட்டால் அவளுக்கொன்றும் அங்கே விளங்காது.

**சாக்ரடீஸ் :** சந்தேகமில்லாமல் விளங்கும். நீங்கள் நினைக்கிறபடி உங்கள் பெண்டுகள் அவ்வளவு மூடர்களன்று. தங்களுக்கும் குழந்தைகளுக்கும் நன்மை தரக்கூடிய விஷயங்களை மிகவும் நுட்பமாக அவர்கள் கிரகித்துக்கொள்வார்கள். மேலும் அந்தத் தோட்டத்தில் ஸ்திரீகள் சங்கம் என்றொரு இடம் இருக்கிறது. அங்குள்ள ஸ்திரீகள் வேண்டியவற்றை அங்கே போகிறவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள்.

**பிள்ளை :** நல்லது. அடுத்த தடவை நான் பட்டணம் போகும்போது அவளையும் அழைத்துச் செல்லுகிறேன்.

**சாக்ரடீஸ் :** சரி. உங்கள் குறுகலான தெருக்களைப் பற்றி நான் இன்னும் சிலவிஷயங்கள் சொல்லவேண்டி இருக்கிறது.

**பிள்ளை :** இன்னும் என்ன சொல்லப்போகிறீர்கள்? ஐயா பெரியவரே!

**சாக்ரடீஸ் :** புருஷர்களாகிய நீங்களோ வெகு மேன்மையாக உங்களை நினைத்துக்கொண்டு தெருக்களைக் கூட்டும் வேலையை ஸ்திரீகளிடம் ஒப்பித்துவிட்டீர்கள். அவர்கள் குப்பைக் கூடைகளை எடுத்துக்கொண்டு செல்லும்போது தெருக்கள் விசாலமாயிராமையால் ஆபாச தூசியெல்லாம் அவ்வழியே நடப்பவர்களுடைய தொண்டையில் புகுந்து வயிற்றுக்குள் செல்லுகின்றன.

**பிள்ளை :** ஆம், அது உண்மையே.

**சாக்ரடீஸ்:** ஸ்திரீகள் ஏன் குப்பைகளை வாரவேண்டும்?

**பிள்ளை:** ஏன்? எங்கள் ஸ்திரீகள் தாங்கள் குப்பைக் கூடைகளைத் தூக்கவேண்டியதில்லையென்றால் வெகு சந்தோஷப்படுவார்களென்பது உண்மைதான். எங்கள் கிராமத்தை நாங்களே கூட்டிக்கொள்ள வேண்டுமென்றும், தோட்டிகளை நம்பி விடலாகாதென்றும் நீங்கள் முன்னமே சொல்லி யிருக்கிறீர்களே.



ஸ்திரீகள் ஏன் குப்பைகளை வாரவேண்டும்?

**சாக்ரடீஸ்:** ஆம், அது உண்மையே. ஊரைச் சுத்தமாக்குவது உங்கள் கடமை. அப்படிச் செய்வதால் உங்களுக்கு இலாபமும் உண்டு. உங்கள் தேக சௌக்கியத்தைப் பற்றியும், நிலங்களின் விளைவைப் பற்றியும் தோட்டிகளுக்குக் கவலை என்ன? நீங்கள் எவ்வளவு கடுமையாகப் பேசினாலும் அவர்கள் வேலையைச் சுத்தமாகச் செய்யமாட்டார்கள்.

**பிள்ளை:** சரி, சரி. ஆனால் அதைப்பற்றின உபந்நியாசம் இப்பொழுது வேண்டாம். நாங்கள் தலையில் குப்பைக் கூடையைத் தூக்கிச் செல்லாமலிருக்க வழி ஏதாவதிருந்தால் சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** சபாஷ்! பிள்ளையவர்களே! தலையென்பது உங்களுடைய தலையல்லவே! உங்கள் மனைவியின் தலைதானே? அவள்தானே தூக்குகிறவள். நீங்கள் தூக்கி நான் ஒரு நாளும் பார்த்ததில்லையே!

**பிள்ளை:** சரி, அதுபோகட்டும். என் மனைவியின் தலையில்தான் என்று வைத்துக்கொள்ளுங்கள். மேலே சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** நல்லது. கூடைகளுக்குப் பதிலாக ஒரு சிறிய கைவண்டி செய்துகொள்ளுகிறதுதானே. ஊர் தச்சன் பக்கத்துப் பட்டணத்துக்குப் போனால் அது எப்படிச் செய்வது என்பதை உடனே கற்றுக்கொள்ளலாம். ஒரு முறை கைவண்டியை உபயோகிப்பது நான்கு தடவை கூடையைத் தூக்குவதற்குச் சமம். உங்கள் மனைவியரின் தலைமயிரும், உடையும் கூடையிலிருந்து சிதறும் அழுக்குகளால் ஆபாசமாகாமலும் இருக்கும்.

**பிள்ளை:** சாக்ரடீஸ்! உங்களுக்கு வந்தனம். உண்மையாகவே நீங்கள் சொல்வது நிரம்ப சரியாகவே காண்கின்றது. நான் அவ்விதமே செய்யப் பார்க்கிறேன்.

**சாக்ரடீஸ்:** அதில் இன்னொரு சௌகரியமும் இருக்கிறது. கைவண்டியை உபயோகிக்கும் பக்ஷத்தில் நீங்களே சில சமயங்களில் அதைத் தள்ளிக்கொண்டு போகலாம். உங்கள் மேன்மையான தலையினால் கேவலமான கூடையைத் தூக்கவேண்டியிராதாகையால் ஏற்கனவே அதிக வேலை செய்துவரும் உங்கள்

மனைவியருக்கு இந்தக் காரியத்தில் நீங்கள் கொஞ்சம் உதவி செய்யலாமல்லவா?

பிள்ளை: சாக்ரடீஸவர்களே! இந்த விஷயத்தில் நீங்கள் வெகு குறிப்பாக இருப்பதால், நான் அப்படியே செய்யப் பார்க்கிறேன்.

சாக்ரடீஸ்: சரி. உங்கள் கிராமத்தைப்பற்றிச் சொல்ல வேண்டிய சங்கதிகள் இன்னும் சில விருக்கின்றன.

பிள்ளை: இன்னும் என்ன சொல்லப்போகிறீர்கள் ஐயா?

சாக்ரடீஸ்: பாழ் வீடுகள் அனேகம் உங்கள் ஊரில் இருக்கின்றன. அவைகளில் எலிகளும் பாம்புகளும் அடைகின்றன. தரை மேடுபள்ளமாகவும், ஒழுங்கில்லாமலும் கிடக்கிறது. நீங்களும் உங்கள் வாலிபச் சாரணர்களும் சிறிது நேரம் செலவிட்டு அவைகளை யெல்லாம் இடித்து நிரவித் தரையை மட்டமாக்கி விட்டால், குழந்தைகள் பயமில்லாமல் அங்குமிங்கும் ஓடி விளையாடலாம். தெருக்களையும் சந்துகளையும் கல்லாலும் கப்பியாலும் செப்பனிட்டால் பார்ப்பதற்குச் சுத்தமாயும் அழகாயும் இருக்கும்.

பிள்ளை: நீங்கள் சொல்வது கஷ்டமான காரியமன்று. ஒருமுறை செய்தால் வெகுகாலம் அப்படியே இருக்கும்.

சாக்ரடீஸ்: அப்படியானால் உடனே செய்யுங்கள், பிள்ளையவர்களே!

பிள்ளை: பெரியவரே! அப்படியே செய்துவிடுகிறேன்.

சாக்ரடீஸ்: ஏன் உங்கள் தோட்டத்தை ஊருக்கு ஒரு மைலுக்கு அப்பால் வைத்துக்கொள்ள வேண்டும்? கிராமத்தையே ஒரு தோட்டமாக்கிக் கொள்ளக் கூடாதா?

**பிள்ளை:** எப்படி?

**சாக்ரடீஸ்:** அவ்விஷயம் எனக்கே சரியாகச் சொல்ல முடியவில்லை; இருக்கட்டும். பட்டணத்தில் அவ்வகை இடங்களை நீங்கள் பார்த்திருக்கலாம். அதுபோல நீங்களும் உங்கள் கிணறுகளுக் கருகிலேயே வீடுகளைக் கட்டிக்கொள்ளவேண்டும். அவை சுகமான சிறிய குடிசைகளானாலும் போதும். அவைகளைச் சுற்றிப் பூஞ்செடிகளை வையுங்கள். உங்கள் ஆடுமாடுகளையும் அங்கேயே வைத்துக் கொள்ளுங்கள். இவ்விதம் உங்கள் குடியிருப்பு நத்தத்தைக் குறைத்துவிட்டால், பொதுவாக ஜனங்களுக்கு அதிக விஸ்தாரமான தெருக்கள் போட வசதியுண்டாகும். திறந்த வெளிகளைச் சுற்றிச் சுவர்கள் எழுப்பி அவற்றுக்குள் புஷ்பச் செடிகளை வையுங்கள். ஆனால் காய்ந்த முள்ளினால் வேலி கட்ட வேண்டாம். ஏனெனில், அவைகள் தூம்பும் தூசியும் குவிதற்கு இடங்கொடுப்பதுமல்லாமல், தெருக்களையும் குறுக்கி விடுகின்றன. மேலும் தற்செயலாய்த் தீப்பற்றிக்கொண்டால் காற்றினால் ஊர் முழுமையும் அந்நெருப்பு பரவிவிடவும் அதுவே காரணமாகும்.

**பிள்ளை:** நீங்கள் சொல்வதெல்லாம் வெகு நன்றாகத்தான் இருக்கின்றன. அங்ஙனம் செய்வதும் கஷ்டமல்ல. ஆனால் சுவர்களெழுப்பினாலும் கட்டாந்தரையில் புஷ்பச் செடிகள் எப்படி வளரும்?

**சாக்ரடீஸ்:** இரண்டடி உயரமுள்ள ஒரு குட்டிச்சுவர் இருந்தால் போதும். மாடுகள் உள்ளே வரமாட்டா. கிணற்றிலிருந்து வீணாக ஓடும் ஜலமெல்லாம் தோட்டத்தில் பாயலாமே.

**பிள்ளை:** அதுவும் சரிதான். கொஞ்சம் சுறுசுறுப்பும், ஊருக்குள் சிறிது ஒற்றுமையும் இருந்தால், நீங்கள் சொல்வதையெல்லாம் வெகு இலகுவாக முடித்து விடலாம், ஆனால் நமது கிராமங்களில் அவை இரண்டுந்தானே இருப்பது துர்லபம்.

**சாக்ரடீஸ்:** ஆமாம். உங்களுள் விடாக்குடியும், தீராப் பொறாமையும் ஓயாச் சண்டைகளும் இருக்கும் போது ஒற்றுமை எங்கிருந்து உண்டாகும். ஆனால் உங்கள் ஊர் உபாத்தியாயரும் வாலிபச் சாரணர்களும் ஏன் இந்தக் கிராமத் தோட்டங்களை உற்பத்தி செய்யலாகாது?

**பிள்ளை:** சாக்ரடீஸ்! உங்கள் யோசனை சரியானதே. நாளுக்குநாள் சாரணர்கள் மிகவும் உபயோகமுள்ளவர்களாக ஆகிக்கொண்டே வருகின்றார்கள். அவர்கள் பேசுவதும் செய்வதும் யுக்தமாகவே இருக்கின்றன. மேலும் பட்டணத்துப் போதனைமுறைப் பாடசாலையில் நமது ஊர் உபாத்யாயர் தேர்ச்சி பெற்றிருக்கிறார். அவர் எவ்விதக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும், எவ்வித வேலையையும் செய்யவும் கற்றுக்கொண்டிருக்கிறார். இரும்புக் கலப்பை சரி தப்பினால் அதைச் சரிப்படுத்த அவருக்குத் தெரியும். கலப்பையைப் பிடித்துக் கோணலில்லாமல் உழவும் அவரால் முடியும். அவர்தாம் என் மனத்திற்குப் பிடித்த உபாத்தியாயர்.

**சாக்ரடீஸ்:** பேஷ்! அந்தப் பாடசாலை எனக்குத் தெரியும். கிராம வாழ்க்கையை எவ்விதம் இன்னும் சுகமுள்ளதாகச் செய்யலாம் என்ற முறைகளையே அங்கே போதிக்கிறார்கள். அங்கே பயிற்சி பெறும் உபாத்தியாயர்களை நீங்கள் விரும்புகிறீர்கள் என்று

கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாய் இருக்கின்றது. சரி, உபாத்தியாயரை இந்தக் கிராமத்தை எப்படி இன்னும் மேன்மையாகச் செய்யலாமென்று கேளுங்கள்; அவர் சொல்வதைக் கேட்டு அதன்படி நடந்து, உங்கள் ஊரை இப்பொழுது இருப்பதைவிட அதிக சுகமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். அதுவே எனது விருப்பம்.

**பிள்ளை :** பெரியவரே! அப்படியே செய்கிறேன். உங்களைத் திருப்தி செய்துவைக்க என்னாலானமட்டும் முயல்கிறேன்.

**சாக்ரடீஸ் :** சிநேகிதரே! என் திருப்திக்காக ஒன்றும் செய்யவேண்டாம். நீங்கள் சுகமாக இருக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுங்கள். நான் விரும்புவதெல்லாம் அதுதான்.

## பீ. ஏ., பீ. எல்.

வழக்கம்போல் சாக்ரடீஸ் ஊர்ச் சாவடிக்கு வந்தார். அவ்விடத்தில் ஒரு வாலிபன் வெகு நாகரிகப் பாங்காக ஐரோப்பிய உடை தரித்துக் கொண்டு ஒரு பெரிய மனிதன்போல் கிராம வாசிகளுடன் பேசிக் கொண்டிருந்தான். அங்கிருந்த பெரியோர்களெல்லாம் அவனைக் கௌரவித்து மிகுதியும் மரியாதை காட்டினார்கள். அவர்கள் வழக்கம்போல் வெற்றிலை மென்றுகொண்டிருந்தார்கள். ஆனால் அவனோ ஒரு சிறு சிகரட் பிடித்துக்கொண்டிருந்தான். சாக்ரடீஸ் அவனைக் கண்டு இங்கிலீஷ் முறையில் வந்தனம் சொல்லி விட்டு, மற்றவர்களிடம் வழக்கம்போல நமஸ்காரம் கூறினார். அப்பொழுது ஊர் மணியக்காரர்

சாக்ரடீஸை நோக்கி, 'பெரியவரே! இதோ இருப்பவன் என்னுடைய மூத்த குமாரன்—பீ. ஏ., பீ. எல்.' என்றார்.

**சாக்ரடீஸ்:** வெகு சந்தோஷம். மணியக்காரரே! அவரால் உமக்கு மிக்க பெருமை உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. அவர் சட்டம் படித்திருக்கிறார் அல்லவா?

**மணியக்காரர்:** ஆம், அவர் இப்பொழுது ஒரு வக்கீலாக இருக்கிறார்.

**சாக்ரடீஸ்:** நல்லது. அப்படியானால் வீணுக வழக்காடுவதால் உண்டாகும் தீமைகளைப் பற்றி உங்களுக்கு எடுத்துக் காட்டவே அவர் இங்கு வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

**மணியக்காரர்:** அப்படி இல்லை. எங்கள் வழக்குகளிலெல்லாம் வகாலத்தைத் தம்மிடம் கொடுக்கும்படியாக எங்களைக் கேட்கவே அவர் இங்கே வந்திருக்கிறார்—நம் ஜாதியைச் சேர்ந்தவர்களே! உங்கள் வியாஜ்யங்களை நீங்கள் வேறு யாரிடமும் கொடுக்கக்கூடாது—பிள்ளையவாள்! அடுத்த பட்டியிலிருக்கும் அந்தத் துஷ்டன் உங்கள் நிலத்தில் ஆக்கிரமித்தானல்லவா? அவன்மீது வழக்கெடுக்க இதுவே சமயம். என் பிள்ளையிடம் கொடுங்கள்—அப்பா! என் குழந்தையின் படிப்புக்கு நான் எவ்வளவு செலவழித்தேன்! அதில் கொஞ்சமாவது பிரதி பிரயோஜனம் அடையவேண்டாமா?

**பிள்ளை:** ஆம், ஆம். அந்த வழக்கைப்பற்றி இப்பொழுது நான் கவனிக்கவேண்டியதுதான்.

**சாக்ரடீஸ்:** ஒருவேளை வக்கீல் உங்களிடமிருந்து ஒன்றும் பெற்றுக்கொள்ளமாட்டாரென்று எண்ணுகிறேன்.

**தகப்பனும் குமாரனும்:** (சேர்ந்து கொண்டு): ஓஹோ! பெற்றுக்கொள்ள மாட்டாரா? சாக்ரடீஸவர்களே! எங்களுக்கு வயிறு கிடையாது என்று நினைத்தீர்களோ?

**சாக்ரடீஸ்:** ஆனால் இந்தச் சட்டப்படிப்பு, ஊரில் இன்னும் அதிகக் கலகங்களைமூட்டி, அதிகச் சண்டைகளை உண்டாக்கி, இன்னும் அதிக தரித்திரத்தையும் உண்டுபண்ணப் போகிறதோ?

**தகப்பன்:** வியாஜ்யம் என்பது தேசத்திற்குக் கேடு தான். அதற்காக என்ன செய்வது? குமாரன் பீ. ஏ. படித்துத் தேறினன். அதற்குப் பிறகு சட்டப்படிப்புத்தானே எல்லோரும் விரும்பும் படிப்பாக இருக்கிறது? ஆதலால் எல்லாரையும்போல அவனும் அதைப் படித்தான்.

**சாக்ரடீஸ்:** ஏன் அவன் ஒரு டாக்டராகவாவது, என்ஜினீராகவாவது ஆகலாகாது?

**தகப்பன்:** அவைகளுக்கெல்லாம் அதிகநாள் படிக்க வேண்டும்; கஷ்டமும் அதிகம். அவர்களைவிட வக்கீல் அதிக கௌரவமுள்ளவனென்பது எங்களுடைய எண்ணம்.

**சாக்ரடீஸ்:** எப்படி?

**தகப்பன்:** ஏன்? வக்கீல் இஷ்டப்பட்டதைப் பேசலாம்; செய்யலாம். ஒருவரையும் அவன் மதிக்க வேண்டுவதில்லை. எவனையும் அவன் வணங்கவேண்டியதில்லை. 'பார் அஸோஸியேஷன்' என்று ஒரு கூட்டம் இருக்கிறது. அதற்குச் சட்டமும் இல்லை;

கட்டுப்பாடும் கிடையாது. அதில் அவன் சேர்ந்து கொள்ளுகிறான். இஷ்டப்பட்டபோது வேலை செய்து உயர்ந்த 'பீஸ்' களை அவன் பெறலாம். இவ்வளவு சௌகரியங்கள் வேறெந்த உத்தியோகத்திற்கு உண்டு? ஆகையால் அவன் ஒரு வக்கீலாகப் பிரியப் பட்டான்.

**சாக்ரடீஸ்:** சரி! ஒவ்வொரு பையனும் வக்கீலாகி விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர்கள் எல்லோரும் எப்படிப் பிழைக்கிறது?

**தகப்பன்:** அதென்னவோ எனக்குத் தெரியாது. எங்கள் ஊரில் வேண்டிய வழக்குகள் இருக்கின்றன. எங்கள் இனத்தார் தமது வழக்குகளைக் கொடுத்தாலே அவனுக்குப் போதும்.

**சாக்ரடீஸ்:** வக்கீல் ஐயா! நீங்கள் உண்மையாக நியாயஸ்தலத்தில் என்ன செய்கிறீர்கள்?

**வக்கீல்:** ஏன்? வழக்குகளைப்பற்றி வாதிக்கிறோம்.

**சாக்ரடீஸ்:** முடிவு என்ன?

**வக்கீல்:** ஏதோ ஒருபக்கம் ஜயிக்கிறது.

**சாக்ரடீஸ்:** மற்றது?

**வக்கீல்:** தோற்கிறது.

**சாக்ரடீஸ்:** இரண்டு பக்கங்களும் முன்பு இருந்ததை விட ஏழையாகின்றன அல்லவா?

**வக்கீல்:** ஆம். அநேகமாய் அப்படித்தான்.

**சாக்ரடீஸ்:** ஆகையால், உண்மையில் இரண்டு பக்கங்களுக்கும் நஷ்டம் உண்டாகிறதல்லவா?

**வக்கீல்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** ஆகையால் உம்முடைய உத்தியோகம் ஜனங்களை ஏழைகளாக்கவே உதவுகின்றது.

**வக்கீல்:** ஆம். அப்படித்தான் காண்கின்றது.

**சாக்ரடீஸ்:** டாக்டரைப்போல யாருக்கேனும் உங்களால் உதவியுண்டா?

**வக்கீல்:** இல்லை.

**சாக்ரடீஸ்:** ஒரு பாலம் கட்டுவதோ அல்லது ஒரு எஞ்சின் செய்வதோ இவைகளிலேதாவது உங்களால் முடியுமா?

**வக்கீல்:** முடியாது.

**சாக்ரடீஸ்:** உபாத்தியாயரைப்போலவாவது பிற ஜனங்களுக்குப் போதித்து அவர்களை நல்வழிப்படுத்துவதும் உமது வேலையில்லை.

**வக்கீல்:** அதுவும் இல்லை. கோர்ட்டுகளுக்கு வருவதனால் ஜனங்கள் ஒருவேளை பின்னும் கேட்டை அடைகிறார்களென்றுதான் நினைக்கவேண்டி யிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** ஆதலால் உங்களால் விருத்தியடைவது ஒன்றுமில்லை. உங்கள் கலாசாலைகளில் போதிப்பது போல உங்கள் தொழில் விருத்தியம்சத்தைக் கொடுப்பதாகாது.

**வக்கீல்:** இல்லை.

**சாக்ரடீஸ்:** ஊரிலுள்ள ஜனங்கள் சண்டையிட்டுக் கொள்வதால் நீங்கள் ஜீவனம்பண்ணிப் பணம் சம்பாதிக்கிறீர்கள்.

**வக்கீல்:** ஆம், அது உண்மையே.

**சாக்ரடீஸ்:** ஆதலால் உங்கள் வாழ்க்கை நிலத்திலுள்ள கொசுவைப் போன்றதும், நீரிலுள்ள அட்டையைப் போன்றதுமாகும். பிறருடைய இரத்தத்தைக் குடித்து நீங்கள் பிழைக்கிறீர்கள். உங்களால் உலகத்துக்கு ஆகக்கூடிய நன்மையொன்றுமில்லை.

**வக்கீல்:** சாக்ரடீஸ்! நீங்கள் வெகு கடினமாய்ப் பேசுகிறீர்கள். ஆனால் உங்கள் வார்த்தைகளை மறுக்க முடியவில்லை.

**சாக்ரடீஸ்:** உங்கள் வியாஜ்யங்கள் பல சமயங்களில் கலகத்தில் முடிந்து மண்டைகள் உடைகின்றன. ஆதலால் ப்ளேக் ஈயினாற்போல் உங்களால் உலகம் படும் அவஸ்தைகளுக்கு அளவே இல்லை.

**வக்கீல்:** சாக்ரடீஸ்! தாங்கள் சொல்வதில் பிசகில்லை. ஆனால் இந்த மாதிரி எங்கள் உபாத்தியாயர்கள் எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை.

**சாக்ரடீஸ்:** ஆமாம். சட்டங்களை உங்களுக்குப் போதிக்கத்தானே அவர்கள் சம்பளம் பெறுகிறார்கள். உலக வாழ்க்கையின் உண்மைகளைக் காண உங்கள் கண்களைத் திறக்க வேண்டுமென்று அவர்களுக்கு என்ன அவசியம்? அதிருக்கட்டும், மணியக்காரரே! இந்த வியாஜ்யத்தைப்பற்றி இப்பொழுது பேசுவோம். வக்கீலுக்குக் கொடுப்பதுதானே உங்களுக்குச் செலவெல்லாம். அநேகமாக நீங்கள் ஜயித்து விடுவீர்கள். செலவான தொகையைவிட அதிகமாகவே பெற்றுவிடுகிறீர்கள் அல்லவா?

**நகப்பன்:** ஐயோ! அவ்வளவுதானா செலவு? மொத்த செலவில் வக்கீலுக்குக் கொடுப்பது எந்த மூலை? ஜயிக்கட்டும், தோற்கட்டும், எங்களுக்கு அதனால் லாபமே கிடையாதே. சாட்சிகளைக்கூட்டி அவர்களுக்குப் பாடம் போதிப்பதற்கும், கோர்ட்டுக்குப் போவதற்கும் திரும்பி வருவதற்கும், பிரதிகள் வாங்குவதற்கும், ஸ்டாம்புகள் ஒட்டுவதற்கும் உண்டாகும் தொந்திரவும் செலவுகளும் சொல்லத்தரமில்லை. மேலும் கவலை எவ்வளவு? காலம் வீணாவதெவ்வளவு?

வியாஜ்யங்களால் உண்டாகும் கஷ்டங்களுக்கும் தொந்திரவுகளுக்கும் அளவே கிடையாது. இவைகளின் முடிவு என்னவென்ருல் சொற்பப்பகை தீராப் பகையாக ஆகிறது. அநேகமாக ஸிவில் வழக்குகள் அடிதடியில் முடிந்து, போலீஸ்காரர்கள் தலையிடும்படியாக ஏற்பட்டு, நூதனமாகப் பல கஷ்டங்களை உண்டுபண்ணிவிடுகின்றன.

**சாக்ரடீஸ்:** உபயோகமற்றதும், மிகவும் மலிந்துமுள்ள இந்த உத்தியோகத்தைவிட, வைத்தியத்திலாவது விவசாயத்திலாவது உங்கள் பிள்ளைகளைப் பயிலச் செய்வது மேலல்லவா?

**தகப்பன்:** மேல்தான்; ஆனல், இந்தக் காலத்தில் பெற்ருேர் பேச்சைக் கேட்கிற பிள்ளைகள் எங்கே இருக்கிருர்கள்?

**சாக்ரடீஸ்:** ஆமாம், உமக்கும் உம் மனைவிக்கும் யார் மரியாதை செய்வார்கள்? நீங்கள் படிப்பில்லா மூடர்கள். அழுக்குப் பிடித்தவர்களாக இருக்கிறீர்கள். நீங்கள் பண்டைக்காலத்துப் பழக்கங்களுக்கும் மூடபக்திக்கும் அடிமைகள்; உங்கள் குழந்தைகளுக்கு உங்களிடம் இருக்கும் பக்தி எல்லாம் அவர்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளும் வரையில்தான். ஏனென்ருல் அந்தப் பக்தி நிலைத்திருக்க ஆதாரம் ஏதும் கிடையாது. அவர்களுக்கு வயதாகவாக உங்களைவிட அவர்கள் அநேக விஷயங்களை அறிந்து கெட்டிக்காரர்களாகிவிடுகிருர்கள். ஆதலால் அவர்களுக்கு உங்களிடம் மரியாதை குறைந்து அவமதிப்பு மேலிடுகிறது.

**நகப்பன் :** சாக்ரடீஸ்! உங்கள் வார்த்தைகள் முற்றிலும் சரியே. நிலை மாறிக்கொண்டே இருக்கு மிவ்வுலகத்தில் வயதானவர்களுக்கு மதிப்பு இல்லைதான்.

**சாக்ரடீஸ்:** எப்படி இருக்கும்? பழைய சம்பிரதாயங்களைச் சற்றேனும் நழுவவிடாமலிருப்பதிலும், உண்மையான முன்னேற்றத்திற்கு அனுகூலமான வழிகளைத் தடுத்து நிற்பதிலும் தானே உங்கள் முயற்சியெல்லாம் செலவாகின்றன? நல்ல பழக்கங்களை நீங்கள் நழுவவிடுகின்றீர்கள். கெட்ட வழக்கங்களையோ கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகிறீர்கள்.

**நகப்பன் :** பெரியவரே! அதுவும் உண்மையென்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. எங்களுடைய சிறிய கஷ்டங்களுக்குக் காரணங்களையெல்லாம் நீங்கள் ஊன்றிப் பார்த்துத் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள்.

**சாக்ரடீஸ் :** சரி. அது போகட்டும். உம்முடைய வக்கீல் மகனைப் பற்றிப் பேசுவோம். அநேக வழக்குகளை அவனுக்குத் தேடிக்கொடுப்பதைவிட, வீட்டில் அவனை வேலையில்லாமல் வைத்துக்கொள்ளுதல் இலாபகரமானதும் சுலபமானதுமாகுமல்லவா?

**நகப்பன் :** நல்லதுதான். ஆனால் பீ. ஏ. படித்த எங்கள் பிள்ளைகள் கிராமங்களில் உட்கார்ந்திருக்கமாட்டார்களே! அவர்களுக்குப் பொழுதும் போகாதே! கிராமங்களைக் கண்டாலே அவர்கள் வெறுக்கிறார்களே!

**சாக்ரடீஸ்:** (சிரித்துக்கொண்டு) உங்கள் பீ. ஏ. பிள்ளை நினைப்பது முற்றிலும் சரியென்று நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

**தகப்பன்:** ஏன் ஐயா? ஊர் ஏற்பட்ட நாள்முதல் இந்த ஊர் எனக்கும் என் மூதாதைகளுக்கும் பிடித்துத்தான் இருந்தது. இப்பொழுது என் மகனுக்குப் பிடிக்காமல் போவானேன்?

**சாக்ரடீஸ்:** அதுவா? பெரியவரே! காலம் மாறிக்கொண்டே வரவில்லையா? உங்கள் வெற்றிலைப் பெட்டி அவனுக்குப் பிடிக்கிறதில்லை. அவனது சிகரட் உங்களுக்குப் பிடிக்கவில்லை. நாற்காலியில் உட்காரவும், வெள்ளைக்காரரைப்போல உடுக்கவும் அவன் பழக்கப்பட்டிருக்கிறான். நீங்கள் கட்டிக்கொள்வது கையால் நெய்த துணி; உட்காருவது தரையில். ஆதலால் ஒருவர் பழக்கம் ஒருவருக்குப் பிடிக்கவில்லை. அவன் தினந்தோறும் பத்திரிகைகள் படிக்கவும், ஒவ்வொரு சமயங்களில் சினிமா நாடகங்களைப் பார்க்கவும் பிரியப்படுவான். உங்கள் தெருக்களோ வெகு குறுகலாகவும், அசுத்தம் நிரம்பியும் கிடக்கின்றன. பட்டணத்திலுள்ள பெரிய வீதிகளிலும் கடைகளிலும் பெரிய கலாசாலைகளிலும் பழகியுள்ள அவனுக்கு இவைகளெல்லாம் எப்படிப் பிடிக்கும்?

**தகப்பன்:** பழையகாலத்து மனிதர்களாகிய நாங்கள் எப்படி இந்த மாறுபாடுகளுக்கு இசைந்து நடக்க முடியும்? அது வெகு கஷ்டமான காரியமாயிற்றே.

**சாக்ரடீஸ்:** பெரியவரே! நீங்கள் முயல்வதில்லை. உங்கள் கிராமங்களைச் சுத்தப்படுத்த வேண்டுமென்றும், உங்கள் பெண்களைப் படிப்பிக்க வேண்டுமென்றும் நான் எத்தனை காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

**தகப்பன்:** ஏ! ஞானியாரே! அப்படிச் செய்திருந்தால் என்னவாகிவிடும்?

**சாக்ரடீஸ்:** அப்படிக் கேளுங்கள். உங்கள் மகனைப் போலவே அவன் மனைவியும் படித்திருப்பாளேயானுல், அவள் அவனுக்குகந்த துணையாய் இருந்து, வீட்டைச் சுகமாகவும் அழகாகவும் செய்து, ஆகாரத்தையும் பக்குவமாகச் சமைப்பாள். இப்பொழுதோ அவள் அவனுக்கொரு பாரமாயிருக்கிருள். சமையல் நன்ருயிருப்பதில்லை, வீடு சுகமற்றதாயிருக்கிறது. உமது குமாரனுடைய நோக்கங்களுக்கும் எண்ணங்களுக்கும் அவளுடையவைகளுக்கும் யாதொரு ஒற்றுமையுமில்லை.

**தகப்பன்:** அது அப்படித்தானிருக்கிறது. என் பிள்ளைகளுக்குக் கலியாணம் பண்ணிவைக்கும்போது நான் இவ்விஷயங்களைப்பற்றி நினைக்கவேயில்லை. நாங்கள் வாலிபர்களாயிருந்தபோது இவைகளைக் குறித்து ஒன்றும் அறியோம். என் பையனின் பாடசாலையும் கலாசாலையும் இவ்வளவு வித்தியாசங்களை உண்டுபண்ணுமென்று நாங்கள் அறியவில்லை. ஜோசியர் அந்தப் பெண் வரட்டி தட்டுவதிலும், மாவரைப்பதிலும் கெட்டிக்காரியாயிருப்பாள் என்று சொல்லக் கேட்டு, அவ்வளவே என் பிள்ளைக்குப் போதும் என்று எண்ணிக் கலியாணம் பண்ணிவைத்தேன்.

**சாக்ரடீஸ்:** உம்முடைய பையன் இப்பொழுது ஒரு பீ. ஏ., பீ. எல். அவனுடைய மனைவி மாவரைப்பதில் பீ. ஏ. வரட்டி தட்டுவதில் பீ. எல். கிழவரே! இவ்விருவரும் எப்படிச் சந்தோஷமாகக் கூடிவாழ முடியும்! அவளுடைய எண்ணமெல்லாம், அடுத்த வீட்டுக்காரியைவிட அதிக நகை போட்டுக்கொள்ள வேண்டுமென்பது தவிர வேறென்றுமிராது. அவள்

புருஷன் சம்பாதிப்பதை யெல்லாம் அவள் வீணடிப்பாள். மேலும் அவள் புருஷன் எவ்வளவு சம்பாதித்தாலும் அதெல்லாம் உங்கள் இனத்தார் வியாஜ்யத்தில் இழக்கும் பொருள்தானே! இதெல்லாம் நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

**தகப்பன்:** உண்மையாகவே நீங்கள் சித்திரத்தில் எழுதிக் காட்டுவதுபோல் எடுத்துக்காட்டிய இவ்விஷயம் வெறுக்கத் தகுந்ததாய்த்தானிருக்கிறது. வியாஜ்யம் ஒரு வீண், நகை மற்றொரு வீண்.

**சாக்ரடீஸ்:** எதுவரையில் உங்கள் கிராமங்கள் வாசத்திற்குச் சௌக்கியமாகச் செய்யப்படவில்லையோ, எதுவரையில் உங்கள் பெண்களும் புருஷர்களைப் போலவே படிப்பைப் பெறவில்லையோ, அதுவரையில் உங்கள் பிள்ளைகளுக்காக நீங்கள் செலவிடும் பணமெல்லாம் வீண்தான். ஏனெனில் அப்பிள்ளைகளுக்கு உங்கள் வீடுகளிடத்தில் அருவருப்பும் அதிருப்தியுமே உண்டாகும். அதனால் அவர்கள் ஊரைவிட்டுப் போய்விடுவார்கள். அவர்களுடன், நீங்கள் செய்த செலவால் அவர்கள் பெற்ற படிப்பும் ஊருக்குப் பயன்படாமல் போய்விடும்.

**தகப்பன்:** சாக்ரடீஸ்! அது முற்றிலும் உண்மை என்றே தோன்றுகிறது.

**சாக்ரடீஸ்:** சந்தேகமில்லாமல் உண்மையே, மணியக்காரரே! இந்த உண்மையை நீங்கள் எவ்வளவு சீக்கிரமாய் அறிந்துகொள்ளுகிறீர்களோ, அவ்வளவு சீக்கிரமாய் உங்களெல்லாருக்கும் க்ஷேமம் உண்டாகும்.

# ‘மக்களின் மக்கள்’

சாக்ரடீஸ் ஒருதினம் சாலையின் மார்க்கமாகப போய்க்கொண்டிருந்தனர். அங்கே திருமண ஊர் கோலம் ஒன்று வர, சாக்ரடீஸ் மாப்பிள்ளையின் தந்தையைக் கண்டு கல்யாணம் விசாரித்தார்.

**சாக்ரடீஸ்:** ஐயர்வாள்! உங்கள் குமாரன் மிகவும் அதிர்ஷ்டசாலி.

**அய்யர்:** ஏன் பெரியவரே?

**சாக்ரடீஸ்:** ஏனு? வண்டிகள் எத்தனை? நகைகள் எத்தனை? இவ்வளவு ஐசுவரியத்துடன் அவன் தன் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கிறுனன்றே?

**அய்யர்:** ஓஹோ! சாக்ரடீஸவர்களே, இவைகளெல்லாம் கடன்வாங்கின பணத்தைக் கொண்டு நடைபெறுகின்றன. இந்தக் கலியாணத்திற்கு நான் ரூபாய் இரண்டாயிரம் கடன் வாங்கினேன்.

**சாக்ரடீஸ்:** அப்படியானுல் உமது குமாரன் கடனுளியாகவா தன் வாழ்க்கையைத் துவக்குகின்றுன்?

**அய்யர்:** ஆம், முதியவரே! நானும் அப்படித்தான் செய்தேன்! என் பிதாவும் அப்படியேதான் செய்தார்.

**சாக்ரடீஸ்:** ஆனுலும் இது ஒரு மிக மூடத்தனமான காரியமல்லவா?

**அய்யர்:** அது எங்களுக்குள் வழக்கம், பெரியவரே!

**சாக்ரடீஸ்:** எண்ணித் துணிவது புத்திசாலித்தனமல்லவா? உங்கள் குமாரர்களை ஆயுள் முழுமையும் கடனிலேயே மூழ்கிக் கிடக்கச் செய்வது எவ்வளவு மூடத்தனமான காரியம்?

**அய்யர்:** அது உண்மையாயிருக்கலாம், ஆனுல் இந்த வழக்கங்களெல்லாம் இலகுவில் மாற்ற முடியாதவை.

**சாக்ரடீஸ்:** ஆனால் உங்கள் குமாரன் இந்த முட்டாள் தனத்திற்கெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறானா? அவன்




உங்கள் குமாரர்களை கடனிலே மூழ்கிக் கிடக்கச்செய்வது எவ்வளவு மூடத்தனமான காரியம்

நன்றாகப் படித்த நாகரிகமுள்ளவன் தானே? இவ்வளவு பணம் கலியாணத்திற்குச் செலவிடுவதானால், அவன் படிப்புக்கு இதைப்போல இரண்டத்தனைப் பணமாவது செலவிட்டுத்தானிருக்க வேண்டும்! அப்

படியில்லாவிட்டால் அவன்மேல் நீங்கள் சுமத்தும் கடனைத் தொலைக்க அவனால் எங்ஙனம் முடியும்?

**அய்யர்:** என்ன ஐயா நீங்கள் சொல்லுகிறீர்கள்? அவன் படிப்பது இரண்டாம் வகுப்புத்தானே! அதற்கு என்ன செலவாகப் போகிறது?

**சாக்ரடீஸ்:** என்ன ஐயர்வாள்! நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே. இவ்வளவு பெரிய பையன் இரண்டாம் வகுப்பிலா படிப்பான்? அவன் என்ன மந்தபுத்தியுடையவனா?

**அய்யர்:** அப்படிச் சொல்லவேண்டாம், சாக்ரடீஸவர்களே! என் குமாரன் மிகவும் புத்திசாலியான பையன்.

**சாக்ரடீஸ்:** நீர் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை, ஐயா! அவன் கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறான் என்கிறீர். அதே சமயத்தில் அவன் பையன் என்றும் சொல்லுகிறீர்.

**அய்யர்:** ஆமாம் அதனால் என்ன?

**சாக்ரடீஸ்:** பையன்கள் மணந்துகொள்வதுண்டா? ஐயர்வாள்!

**அய்யர்:** எனக்குப் பன்னிரண்டாவது வயதில் கலியாணம் நடந்தது. என் தகப்பனாரும் பன்னிரண்டு வயதில்தான் மணந்தார். அதனாலென்ன?

**சாக்ரடீஸ்:** என்ன அநியாயம்! குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தை விடுவதற்கு முன்பா கலியாணம் செய்வது?

**அய்யர்:** ஏன் பெரியவரே அப்படிச் சொல்லுகிறீர்கள்? அதில் குற்றமொன்றும் தெரியவில்லையே. நாம் சாவதற்குள் பேரப்பிள்ளைகளை நாம் கண்ணாலே காணலாமல்லவா?

**சாக்ரடீஸ்:** ஆமாம். அதனால்தான் நீங்கள் நாற்பது பிராயம் வருமுன் வயோதிகத்தை அடைகிறீர்கள்; சீக்கிரத்திலும் மரித்துவிடுகிறீர்கள். நீங்கள் நன்றாய் வளர்ந்த பிறகு கல்யாணம் செய்துகொண்டால் ஒரு வேளை இன்னும் அதிகநாள் ஜீவித்திருப்பீர்கள்.

**அய்யர்:** ஒருவேளை அது உண்மையாயிருக்கலாம். எங்களில் வயது முதிர்ந்தவர்கள் இப்படிச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால் இந்த வழக்கங்களைப் பற்றின வரையில் நாங்கள் யார் சொல்வதையும் கேட்பதில்லை.

**சாக்ரடீஸ்:** பாலிய விவாகம் நிச்சயமாகக் குழந்தைகளின் வளர்ச்சியைக் குறைத்துவிடும். அவர்களைப் பலத்திலும் காத்திரத்திலும் குறைந்தவர்களாகவும் ஆக்கிவிடும்.

**அய்யர்:** ஆம், அதுவும் உண்மையாய் இருக்கலாம்.

**சாக்ரடீஸ்:** அவர்கள் படிப்புக்கும் அது தடையாகும்.

**அய்யர்:** ஆம், அது நிச்சயம்.

**சாக்ரடீஸ்:** அவர்கள் மன வளர்ச்சிக்கும் இடைஞ்சல் ஆகும்.

**அய்யர்:** அதுவும் உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** தன்னடக்கம் என்னும் உயர்ந்த பயிற்சியை அடைய அவர்களுக்குச் சாவகாசமே இராதே!

**அய்யர்:** இராது என்பதற்குச் சந்தேகமில்லை.

**சாக்ரடீஸ்:** இந்தக் கலியாணமான குழந்தைகளுக்குக் குழந்தைகள் பிறக்குமல்லவா?

**அய்யர்:** ஆம்.

**சாக்ரடீஸ்:** நன்றாய் வளர்ந்த மனிதர்களுக்குப் பிறந்த குழந்தைகளைப்போல அவ்வளவு பலமுள்ளவைகளாக இருக்குமா பாலிய விவாகத்தால் பிறந்த குழந்தைகள்?

**அய்யர் :** இருக்கமாட்டா.

**சாக்ரடீஸ் :** இக்காலத்தில் மனிதர்கள் பலவீனர்களாக இருப்பதை நீங்களெப்பொழுதும் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே. ஒருவேளை வாலிப விவாகமே அதற்குக் காரணமா யிருக்கலாமன்றோ?

**அய்யர் :** அது காரணமாக இருக்கலாம். இப்படிப் பல தலைமுறைகள் பாலிய விவாகம் செய்வதால் வர வர ஜனங்களின் பலம் குறைந்திருக்கலாம்.

**சாக்ரடீஸ் :** இந்தக் குழந்தைகளின் குழந்தைகளை வளர்ப்பதற்காக அதிகக் கவலையும் ஜாக்கிரதையும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதல்லவோ?

**அய்யர் :** ஆம்.

**சாக்ரடீஸ் :** அக்குழந்தைகளின் பெற்றோர்கள், தாங்களே குழந்தைகளானதால் சிசுக்களை வளர்க்கும் வழியையும் அறியாதவர்கள்.

**அய்யர் :** மிகவும் உண்மையே, ஐயா!

**சாக்ரடீஸ் :** ஆதலால், பெற்றோர்களாகிய குழந்தைகள், தம் குழந்தைகளை வளர்க்கும் விதத்தை அறியாதவர்களாகையால், அவர்களது குழந்தைகள் அநேகமாய்ச் சிசுக்களா யிருக்கும்பொழுதே இறக்க நேரிடுகின்றதல்லவோ?

**அய்யர் :** அது உண்மைதான், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ் :** இக்குழந்தை தன் சிசுக்களை வளர்க்கத் தெரிந்துகொள்வதற்குள் அநேக சிசுக்களைப் பறிகொடுப்பாளல்லவா?

**அய்யர் :** அப்படித்தான் நேருகிறது.

**சாக்ரடீஸ் :** அந்தத் தாயாருக்குத்தான் எவ்வளவு கஷ்டம்? முதன் முதல் அவள் பக்குவமடையாத குழந்தையா யிருக்கும்போதே சிசுக்களைப் பெறவேண்

டியவளாகின்ருள். இரண்டாவது, எவ்வளவோ பாடு பட்டுப் பெற்ற மக்களை ஒன்றன்பின் ஒன்ருகச் சாகக் கொடுக்கிருள். இவைகளெல்லாம் பெற்ரேர்களின் மூடத்தனத்தினுல் அன்ரே? அவள் சரீரம் அவ்வளவு பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தகுந்த வலிமையை அடைவதற்கு முன்னும், அவள் மனம் அப்பொறுப்புக்களை நிர்வகிக்கும்படியான வளர்ச்சியையும் பயிற்சியையும் பெறுவதற்கு முன்னம் அவள் தாய் ஆகும்படி நேரிட்டதனுல் இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

**அய்யர்:** உங்கள் புகார்கள் எல்லாம் உண்மையே.

**சாக்ரடீஸ்:** அய்யர்வாள்! இன்னெரு விஷயம். உங்கள் குமாரன் இன்னும் குழந்தைப் பருவத்தைக் கடக்கவில்லை அன்ரே? ஆகவே, அவன் இப்பொழுது வேண்டுவது மனைவியன்று, விளையாட்டுச் சாமான்களே.

**அய்யர்:** சரி.

**சாக்ரடீஸ்:** அப்படியிருக்க, நன்மையாயினும் சரி, தீமையாயினும் சரி என்று மற்ருெரு மானிடரை அவன் கழுத்தில் கட்டிவிடுகிறீர்கள்.

**அய்யர்:** ஆம். ஏன் கூடாது?

**சாக்ரடீஸ்:** ஏனெனில் கணவனுகிய உங்கள் குழந்தை தன்னிச்சையை யடக்கத் தெரிந்துகொள்ளாதவன். பிறருக்கு மரியாதை செய்வதென்பது அவனுக்குத் தெரியாது; மரியாதை என்ருல் இன்னதென்றே அவனறியான்.

**அய்யர்:** அது உண்மைதான்.

**சாக்ரடீஸ்:** அவன் தாயாரோ, அவனறிந்தவரையில் எவராலும் மதிக்கப்படுவதில்லை. உமக்கு அவள் வேலை செய்ய அடிமைப்பட்டவளாக நீங்கள் நினைக்

கிறீர்களே தவிர, அவளை உமக்குத் தோழமை வாய்ந்தவளாக நினைப்பதில்லை.

**அய்யர்:** ஐயா, நீங்கள் சொல்வதெல்லாம் கேட்கக் கடினமானவையாக இருந்தாலும், மிகவும் உண்மையானவையே.

**சாக்ரடீஸ்:** இப்பொழுது அவன் வசம் ஒப்பிக்கின்ற அந்த எளிய சிறிய பெண்ணுக்குப் பயிற்சி இல்லை, கல்வி இல்லை, விசால அறிவு இல்லை. அத்தகைய பெண்ணுக்கு யார் மரியாதை செய்வார்கள்?

**அய்யர்:** உண்மையாக ஒருவரும் செய்யமாட்டார்கள்.

**சாக்ரடீஸ்:** ஆதலால், உங்கள் வாலிபக் கணவன் ஆரம்பத்திலேயே மனைவியிடத்தில் மரியாதையில்லாதவன். ஆகையால் அவன் ஒருநாளும் அவளை மதிக்கப்போகிறதில்லை. அவளும் மதிப்பதற்கு உரியவளாக என்றைக்கும் ஆகப்போகிறதுமில்லை. உயர்ந்த பக்ஷம் அச்சிறிய பெண் அப்பையனுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாவாள். அவன் அவ்விளையாட்டில் சலிப்படைந்துவிட்டால் அவளைக் கேவலம் வேலைக்காரப் பெண்போல்தான் நடத்துவான். மேலும் அவனுக்குத் தன் மனதை அடக்கிக்கொள்ள வல்லமை இல்லாததால் அவளை அடித்து உதைத்து ஹிம்ஸித்தாலும் ஹிம்ஸிக்கலாம்.

**அய்யர்:** சாக்ரடீஸவர்களே! இவை எல்லாவற்றையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

**சாக்ரடீஸ்:** என்ன துரதிருஷ்டமான பெண்! துரதிருஷ்டமான பையன்! துரதிருஷ்டமான தேசம்! இந்த அநியாயத்தை ஒழிக்காமல் நூற்றுண்டு நூற்றுண்டாக வளரவிட்டுக்கொண்டே வருவது எவ்வளவு துரதிருஷ்டமான காரியம்!

# ஒரு விடுகதை

ஒருநாள் சாயந்திரம் சாக்ரடீஸ் ஊரிலுள்ள பெரிய வர்களுடன் உட்கார்ந்திருந்தார். அச்சமயம் கிராம வாசி ஒருவன் அங்கே வந்து சேர்ந்தான். அவன் செருப்புக்களும் உடைகளும் புழுதியடைந்திருந்ததைப் பார்த்தால் அவன் வெகு தூரம் நடந்து வந்திருக்கவேண்டுமென்று தோன்றிற்று. அவன் மிக்க இளைப்புடன் உட்கார்ந்துகொண்டு, வெற்றிலைபாக்குப் பையை எடுத்து வெற்றிலை போட ஆரம்பித்தான்.

சாக்ரடீஸ் சற்றுநேரம் தாமதித்து, அவனுக்குக் களைப்படங்க இடங்கொடுத்துப் பிறகு, 'நீர் எங்கிருந்து வருகிறீர்?' என்று கேட்டார்.

**கிராமவாசி:** நான் சாட்சி சொல்ல கோர்ட்டுக்குப் போயிருந்தேன். என்ன கஷ்டமான வேலை அது ஐயா? எவ்வளவு நாழிகை பிடிக்கிறது!

**சாக்ரடீஸ்:** ஏன்? அதுதான் உமக்கு இனிமையான வேலையாயிற்றே.

**கிராமவாசி:** அங்கே அவர்கள் நெடுநேரம் காக்க வைக்கிறார்கள். அதனால் என்ன சொல்லப்போகிறோம் என்பதைக்கூட நாம் மறந்துவிடும்படியாக இருக்கிறது. பிறகு திடீரென்று நம்மைக் கூப்பிடுகிறார்கள். இரண்டாவது கூப்பாட்டுக்குள் ஆஜராகாவிட்டால் அவர்களுக்குத் தாங்காத கோபம் வந்துவிடுகிறது. உள்ளே நுழைந்தவுடன் ஒன்றன்பின் ஒன்றாக நூறு கேள்விகளைக் கேட்டுப் புத்தியை பிரமிக்கச் செய்து விடுகிறார்கள். நாம் எங்கே இருக்கிறோம் என்றுகூட விளங்காமல் போய்விடுகிறது.

**சாக்ரடீஸ்:** எவ்விதமான கேள்விகள் கேட்கிறார்கள்?

**கிராமவாசி:** அதுவா! ஒரே மூச்சில் பல கேள்விகளை அடுக்கி, 'உன் பெயர் என்ன? உன் தகப்பன் வயது என்ன?—இல்லை யில்லை; உன் வயதென்ன? உன் தகப்பன் வயதென்ன?—உன் தொழில் என்ன?' இப்படிப்பட்ட கேள்விகள் நூறு—என்னென்று சொல்வேன்? ஒரு மிராசுதாரனை, உன் தொழில் என்ன என்று கேட்டால், அவன் என்ன சொல்வது?

**சாக்ரடீஸ்:** என்ன சொல்வது? கேட்காமலே அது தெரியாதா?

**கிராமவாசி:** தெரியும்.

**சாக்ரடீஸ்:** நல்லது. நீர் என்ன சொன்னீர்?

**கிராமவாசி:** சொல்வதென்ன? பயிர்த்தொழில்தான். வேறென்ன நான் சொல்லியிருக்கக்கூடும்?

**சாக்ரடீஸ்:** (மெதுவாகவும் திருத்தமாகவும்) எனது நண்பரே! உமது பழக்க வழக்கங்களை வெகுநாளாய் நான் கவனித்து வந்ததிலிருந்து உம்முடைய உண்மையான தொழில்—

**கிராமவாசி:** (ஆவலுடன்) என்ன சாக்ரடீஸவர்களே?

**சாக்ரடீஸ்:** வெற்றிலைபாக்கு மெல்வது.

அதைக்கேட்டவுடன் அங்கிருந்தவர்களெல்லாரும் கொல்லென்று நகைத்தார்கள். அவர்கள் சிரித்து ஓய்ந்தபிறகு சாக்ரடீஸ் சாவதானமாய் இங்ஙனம் மொழியலானார்.

'கிராமவாசிகளே! உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், நீங்களும், உங்கள் முன்னோர்களும் எந்தக் கருவியை விருத்தி செய்யும்பொருட்டும் சீர்ப்படுத்தும்பொருட்டும் அதிகமாகக் கவலை செலுத்தி வந்திருக்கிறீர்கள்? உங்கள் புத்திசாலித்தனம் எதன் பொருட்டு விசேஷமாகச் செலவிடப்பட்டிருக்கிறது?

எதற்காக எல்லாவிதமான பொருள்களையும் உபயோகித்துப் பரீக்ஷைசெய்து பார்த்திருக்கிறீர்கள்?'

**கிராமவாசிகள்:** கலப்பைக்காக.

**சாக்ரடீஸ்:** இல்லவே இல்லை.

**கிராமவாசிகள்:** குடியானவர்களின் வண்டிக்காக?

**சாக்ரடீஸ்:** இல்லை.

**கிராமவாசிகள்:** கிணற்றுக்காக?

**சாக்ரடீஸ்:** இல்லை. யோசித்துப் பாருங்கள்.

**கிராமவாசிகள்:** கவலையைக் குறித்து?

**சாக்ரடீஸ்:** அதுவுமன்று.

**கிராமவாசிகள்:** நீங்கள் உண்மையாகவே கேட்கிறீர்களா? அல்லது உங்கள் வழக்கம்போல் ஏதேனும் தந்திரப் பேச்சுக்கள் பேசுகிறீர்களா?

**சாக்ரடீஸ்:** வெகு உண்மையாகத்தான் கேட்கிறேன்.

**கிராமவாசிகள்:** அப்படியானால் உங்கள் கேள்விக்குப் பதில் எங்களுக்குத் தெரியவில்லை.

**சாக்ரடீஸ்:** நான் சொல்லட்டுமா?

**கிராமவாசிகள்:** சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** கோபித்துக்கொள்ளமாட்டீர்களே!

**கிராமவாசிகள்:** இல்லவே இல்லை. எங்களுக்கு மிகவும் உகந்த நண்பராகிய உங்களைக் கோபித்துக்கொள்வோமா?

**சாக்ரடீஸ்:** அப்படியானால் சொல்லுகிறேன்; கேளுங்கள்: ஆனால் உங்களுக்கு நிச்சயம் வருத்தம் உண்டாகும்.

**கிராமவாசிகள்:** இல்லவே இல்லை. சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ்:** சரி. இதோ சொல்லுகிறேன்—அதுதான் வெற்றிலைபாக்கு மெல்வது.

# ‘ஆமாம் ஐயா’ என்பதும் ‘உடன்கல்வி’யும்

சாக்ரடீஸ் கிராமத்துக்குள் நுழைந்து புதுப் பள்ளிக் கூடத்தின் வழியாகச் சென்றார். அதனுள்ளே எட்டிப் பார்க்க, பெரிய வகுப்பில் பையன்கள் மாத்திரமே



பள்ளிக்கூடம் போகாமல் பெண் குழந்தைகள் மண்ணில் விளையாடுகிறார்கள்

இருக்கக் கண்டார். திரும்பி ஊருக்குள் பார்க்கும் பொழுது ஊர்ச் சாவடிக்குமுன் பல பெண்குழந்தை கள் விளையாடிக்கொண் டிருந்ததையும் கண்டார். அவர்களுக்கு வயது சுமார் ஒன்பது அல்லது பத்து இருக்கலாம். அவர்கள் மண்ணில் உட்கார்ந்து

கொண்டு, வரட்டி தட்டும் பாவனையாக விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் கொஞ்சங்கூட சரீர சுத்தமில்லாமல் இருந்தனர்.

சாக்ரடீஸ் சுற்றிலும் பார்க்க ஊரார் ஒருவரும் கண்ணில் படாமற்போனதால் அவர் தமக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டே, 'இன்றையதினம் எனது நண்பர்களுக்கு நல்லதோர் சவுக்கு வைத்திருக்கிறேன். அவர்கள் செய்வதாகப் பிரமாணம் செய்யும் காரியங்களை எப்பொழுதுதான் செய்வார்களோ? என்ன அநியாயம்! எத்தனையோ தடவை பெண்களையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதாகச் சத்தியும் செய்தார்கள். அங்கே அந்தப் பாடசாலையில் ஒரு பெண் குழந்தையும் காணப்படவில்லை. 'ஆம், ஐயா! ஆம்!, ஐயா!' என்று சொல்லிச் சொல்லி என் கழுத்தை அறுக்கிறார்களே ஒழிய, காரியத்தில் ஒன்றையும் காணேம். இவர்கள் 'ஆம், ஐயா!'வின் குழந்தைகள்! இன்றையதினம் மாத்திரம் அந்தக் கிழ மணியக்காரன் 'ஆமாம், ஐயா!' சொல்வதை நான் கேட்கட்டும், அவனை என்னபாடு படுத்துகிறேன் பார். என்ன நயமாக அவன் பேசுகிறான்! பேசும்போது நாக்கில் வெண்ணெய் உருகிவிடும்போலத்தா னிருக்கிறது! காரியாம்சத்தில் ஒன்றும் செய்வதில்லை. ஊர் முழுவதும் அவனையே பின்பற்றியிருக்கிறது. எனக்கு அவனைக் கண்டால் வெறுப்பா யிருக்கிறது!' என்று தமக்குள் பேசிக்கொண்டே நடந்தார்.

அவர் சாவடியைக் குறுகினதும் மணியக்காரர் தூரத்திலிருந்துகொண்டே, 'நமஸ்காரம், சாக்ரடீஸ்! உங்களை மறுபடியும் இக்கிராமத்தில் காண எவ்வளவு ஆநந்தப்படுகிறேன்!' என்றார்.

**சாக்ரடீஸ்:** நமஸ்காரம், மணியக்காரரே !—(தமக்குள்ளேயே) ஏ! கிழ மோசக்காரனே! உன்னைக் காண எனக்குப் பிடிக்கவேயில்லை.—(உரக்க) பெரியவரே ! நான் சென்றதடவை வந்தபோது சொன்னதெல்லாம் செய்து முடித்துவிட்டீரா ?

**மணியக்காரன்:** ஆகிவிட்டது ; ஐயா!

**சாக்ரடீஸ்:** (தமக்குள்ளே) சரி! வந்துவிட்டான் பழைய வழிக்கு—(உரக்க) சபாஷ்! அதைக் கேட்க வெகு சந்தோஷப்படுகிறேன். சரி; கடைசியாகக் குழி ஆறடி ஆழம் வெட்டப்பட்டுவிட்டதா ?



குழி ஆறடி ஆழம் வெட்டியாகிவிட்டது

**மணியக்காரன்:** அப்படியே ஆகிவிட்டது.

**சாக்ரடீஸ்:** நல்லது. நாம் அதை இப்பொழுதே போய்ப் பார்க்கலாம் வாருங்கள்.

**மணியக்காரன்:** ஏன் அந்தக் கஷ்டம் இப்பொழுது? இன்னொரு சமயம் போனால் போகிறது.

**சாக்ரடீஸ்:** மணியக்காரரே! இப்பொழுதுதான் அதற்கு நல்ல சமயம்.—(மறைவாக) மூன்றடி ஆழங் கூட அது வெட்டப்பட்டிராது. இதற்கு நான் பந்தயம் கட்டுவேன்—(வெளியே) நாம் இப்பொழுது நேராக அங்கே போய்ப் பார்க்கலாம் வாரும். நன்றாகச் செய்யப்பட்ட வேலையை நேரில் பார்ப்பதில் எனக்குத் திருப்தி அதிகம். ஏனெனில் ஒரு வேலை ஒழுங்காய் முடிவது இந்தப் பக்கத்தில் வெகு துர்லபம். ஆகையால் முடிந்தது என்று கேட்க வெகு சந்தோஷமாயிருக்கிறது. வாருங்கள், போகலாம். இந்தச் சந்தின் வழியாகத்தானே போகவேண்டும்?

**மணியக்காரன்:** இல்லை—ஆமாம்—இல்லை. நல்லது.—அந்த வழியாகப் போகலாம். ஆனால் ஏன் அதைப் பற்றி அவ்வளவு சங்கடம் இப்பொழுது? வெகு தூரம் நடந்து வந்திருக்கிறீர்கள்; கொஞ்சம் உட்கார்ந்து களைப்பாறுங்கள். இந்த வெயிலில் எங்கே போவது?

**சாக்ரடீஸ்:** மணியக்காரரே! நான் எப்பொழுதாவது களைப்பு அடைந்ததை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

**மணியக்காரன்:** இல்லை. வேலையிருக்கும்போது நீங்கள் ஒருபொழுதும் களைப்பென்றுகூறி நான் கேட்டறியேன்.

**சாக்ரடீஸ்:** அப்படியிருக்க ஏன் திடீரென்று இப்பொழுது என்னைப்பற்றிக் கவலைப்படுகிறீர்கள்?

**மணியக்காரன்:** அப்படியொன்றுமில்லை. ஒருவேளை சற்று உட்கார்ந்து இளைப்பாற விரும்புவீர்களென்று நினைத்தேன்.

**சாக்ரடீஸ்:** மணியக்காரரே! என்னைச் சற்று நேராகப் பாரும். உண்மையைப் பேசும். அந்தக் குழி நிஜமாய் ஆறடி ஆழம் வெட்டப்பட்டாகிவிட்டதா?

**மணியக்காரன்:** நல்லது! நீங்கள் அவ்வளவு குறிப்பாகக் கேட்பதால் சொல்லுகிறேன். இன்னும் ஆறடி சுத்தமாக ஆயிராது. ஆனால் நீங்கள் வரும்போதுகூட நான் அதில்தான் வேலை செய்துகொண்டிருந்தேன். அநேகமாக வேலை தீர்ந்துவிட்டது.

**சாக்ரடீஸ்:** மணியக்காரரே! நான் வரும்போது நீங்கள் ஒரு சுருட்டை வாயிலிருந்து கீழே எறிந்தமாதிரி அன்றோ காணப்பட்டது? இல்லையா?

**மணியக்காரன்:** இல்லை, சாக்ரடீஸவர்களே! இவ்வளவு காலையிலா சுருட்டு?

**சாக்ரடீஸ்:** அதுபோகட்டும். குழி ஐந்தடி ஆழம் வந்திருக்குமா?

**மணியக்காரன்:** நீங்கள் மிகவும் ஊன்றிக் கேட்கிறீர்களே! ஐந்தடி இராது, ஆனாலும் என்ன? அநேகமாக ஐந்தடி இருக்கலாம், ஏன்? ஐந்தடி என்றே சொல்லிவிடலாம்.

**சாக்ரடீஸ்:** நல்லது. நாம் போய் அளந்துவிடலாமே?

**மணியக்காரன்:** வேண்டாம், சாக்ரடீஸவர்களே! வேண்டாம். அது இங்கிருந்து கொஞ்ச தூரத்துக்கு அப்பால் இருக்கிறது.

**சாக்ரடீஸ்:** சரி. இடுப்புமட்டும் ஆழமிருக்குமா?

**மணியக்காரன்:** இல்லை. இன்னும் இடுப்பளவு இராது என்று நினைக்கிறேன்.

**சாக்ரடீஸ்:** முழங்காலளவு இருக்குமா? அல்லது ஒரு முழம் என்று சொல்லலாமா?

**மணியக்காரன்:** ஆமாம், ஒரு முழம் நிச்சயம் இருக்கும், சாக்ரடீஸ்! சத்தியமாகச் சொல்வேன். என் சொந்தக் கைகளால் எத்தனை நேரம் வேலை செய்தேன்!

**சாக்ரடீஸ்:** அதிலென்ன ஆக்ஷேபனை யிருக்கப்போகிறது? ஆனால் சத்தியம் மாத்திரம் செய்யவேண்டாம். சத்தியம் செய்தல் வெகு கடினமான காரியம்—அதாவது அது அவ்விதம் எண்ணப்படவேண்டும்.

அச்சமயம் அங்கே ஊர் ஜனங்கள் பலர் வந்து கூடினர். மணியக்காரர் சற்றுத் திகைத்துக்கொண்டிருந்ததையும், சாக்ரடீஸ் சிறிது கோபங்கொண்டிருப்பதையும் பார்த்தனர்.

**கிராமவாசிகள்:** மணியக்காரரே! இன்று என்ன சமாசாரம்! ஞானியாரிடம் மறுபடியும் சிக்கிக்கொண்டீரா? இதுவரையில் எத்தனை தரம் நீர் அவரிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறீர்?

**மணியக்காரன்:** நண்பர்களே! பேசாமலிருங்கள்.

**சாக்ரடீஸ்:** ஏன் பேசாமலிருக்கச் சொல்லுகிறீர் மணியக்காரரே? நமஸ்காரம், மிராசுதாரர்களே! மணியக்காரர் தாம் வெகு சிரமப்பட்டுத் தம் கையால் வெட்டின அழகான குழியைப்பற்றி எனக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**கிராமவாசிகள்:** எந்தக் குழி, ஞானியாரே!

**சாக்ரடீஸ்:** ஏன்! நான் முன்னே வந்தபோது அவர் வெட்டுவதாக வாக்களித்த குப்பைக் குழி.

**கிராமவாசிகள்:** ஓ ஹோ! அப்படியா!

**மணியக்காரன்:** அது உங்களெல்லாருக்குந்தான் தெரியுமே, என் கொல்லைக்கோடியில் வெட்டியிருப்பது!

**கிராமவாசிகள்:** ஆம், ஆம், தெரியும். நேற்று மாலையெல்லாம் பண்ணையாட்கள் வேலை செய்துகொண்

டிருந்தார்களே! சாக்ரடீஸவர்களே, அது சுமார் ஒரு முழம் ஆழமிருக்கும். குழி நன்றாயிருக்கிறது, சாக்ரடீஸவர்களே.

சாக்ரடீஸ்: (மறைவாக) சத்தியம் செய்ததெவ்வளவு! உண்மையாய் நடந்ததெவ்வளவு!—(உரக்க) சரி. அதுபோகட்டும். நீங்கள் எல்லோரும் போனதடவை உறுதியாய் வாக்களித்தபடி உங்கள் பெண் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறீர்களல்லவா?

கிராமவாசிகள்: இல்லை, சாக்ரடீஸவர்களே. எங்கள் ஜாதியாரெல்லாம் அது கூடாதென்று சொல்லிவிட்டார்கள். தனியாய் ஒரு பெண்பாடசாலை வைத்தால் அனுப்ப அவர்களுக்கும் விரோதமில்லை.

சாக்ரடீஸ்: பெண்பாடசாலையில் யார் சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்?

கிராமவாசிகள்: ஏன்? ஒரு ஸ்திரீதான் சொல்லிக் கொடுப்பாள்.

சாக்ரடீஸ்: அவள் எங்கே யிருந்து வரப்போகிறாள்?

கிராமவாசிகள்: எங்களுக்குத் தெரியாது. ஜில்லா போர்டார் அவளை அனுப்புவார்கள்.

சாக்ரடீஸ்: ஜில்லா போர்டு அவளை எங்கிருந்து கொண்டு வருவார்கள்?

கிராமவாசிகள்: எங்களுக்குத் தெரியாது.

சாக்ரடீஸ்: இந்தக் கிராமத்தில் படித்த பெண்பிள்ளை யாராவது உண்டா?

கிராமவாசிகள்: நிச்சயமாய் இல்லை.

சாக்ரடீஸ்: அடுத்த கிராமத்திலாவது இருப்பாளா?

கிராமவாசிகள்: இல்லை.

சாக்ரடீஸ்: அல்லது இங்கிருந்து பன்னிரண்டு காதத்துக்குள் எங்காவது இருப்பாளா?

**கிராமவாசிகள்:** எங்களுக்குத் தெரிந்தவரையில் இல்லை.

**மணியக்காரர்:** எங்கள் கிராமங்களிலுள்ள மிராசுதார் வீடுகளில் படித்த பெண்ணே கிடையாது.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் அவள் எங்கிருந்து வருவாள்? பட்டணங்களிலிருந்து வருவாளோ?

**கிராமவாசிகள்:** இல்லை. பட்டணத்துப் பெண்பிள்ளைகள் இந்தப் பட்டிக்காட்டுக்கு ஒருநாளும் வரவே மாட்டார்கள். வந்தாலும் எங்கள் மாதிரி அவர்களுக்குத் தெரியாது. எங்களுக்கும் அவர்களுடைய போக்குத் தெரியாது. அவர்களால் எங்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படாது. மேலும் அவர்கள் வசிக்கத் தக்க வீடுகளும் இங்கே இல்லை.

**சாக்ரடீஸ்:** அப்படியானால், உங்கள் ஸ்திரீகளே கொஞ்சம் படிப்புக் கற்றுக்கொள்ளுகிறவரையில், உங்களுக்கு உபாத்தியாயர்களே கிடைக்கமாட்டார்கள் போல விருக்கிறதே.

**கிராமவாசிகள்:** அப்படித்தான் தோன்றுகிறது.

**சாக்ரடீஸ்:** ஆகையால், உங்கள் பெண்குழந்தைகளை ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினாலொழிய, உங்கள் ஸ்திரீகளிலொருவரும் படிக்க முடியாது.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸ்! அப்படித்தான் தோன்றுகிறது.

**சாக்ரடீஸ்:** நீங்கள்தானே இரண்டுதினங்கள் முன்பு வரிகளெல்லாம் வெகு அதிகமாகப் போய்விட்டன என்றும், அவைகளைக் குறைத்துவிடவேண்டுமென்றும் குறை சொல்லிக்கொண்டீர்கள்?

**கிராமவாசிகள்:** ஆம். நாங்கள் அதிக வரிதான் செலுத்துகிறோம்.

**சாக்ரடீஸ்:** நல்லது. பெண்பிள்ளைப் பாடசாலை வேண்டுமானால், அதற்குக் கட்டிடங்களும் உபாத்தியாயர்களும் வேண்டாமா? மறுபடியும் உங்கள் சாவடியைக் கொடுப்பீர்களா?

**கிராமவாசிகள்:** மாட்டவேமாட்டோம். பையன்கள் பள்ளிக்கூடத்திலிருந்து இப்பொழுதுதான் அது எங்கள் வசம் வந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு வேறு புதுக்கட்டிடம் ஒன்று கட்டிக்கொண்டு அதனைக் கொடுத்துவிடுவதாகச் சொல்லி, ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்காக அதை வாங்கிக்கொண்டார்கள். இப்பொழுது ஒரு வாரத்திற்கு முன்தான் அதைத் திருப்பிக்கொடுத்தார்கள். இன்னொரு முறை நாங்கள் சாவடியைக் கொடுக்கமாட்டோம். அதுவும் ஒரு பெண் பாடசாலைக்காகவென்றால் கட்டாயம் கொடுக்கவேமாட்டோம்.

**சாக்ரடீஸ்:** வந்தீர்களா! பள்ளிக்கூடங்களும் உபாத்தியாயர்களும் எவ்வளவு பணம் செலவிட்டால் கிடைக்கும். இந்த ஜில்லாவில் சுமார் ஆயிரத்து நானூறு கிராமங்கள் இருக்கின்றன. அவைகளில் இருநூறு கிராமங்களிலேதான் பாடசாலைக் கட்டிடங்கள் இதுவரையில் கட்டி முடிந்தன. இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் இன்னமொரு பள்ளிக்கூடக் கட்டிடம் வேணுமென்று கேட்கிறீர்கள். அதே மூச்சில் வரிகளையும் குறைக்கக் கேட்கிறீர்கள். நீங்கள் இப்படி கேட்பது நியாயமாயிருக்கிறதா?

**கிராமவாசிகள்:** சிறிது இல்லைதான்.

**சாக்ரடீஸ்:** அஃதல்லாமலும், உங்களில் சிலர்க்குக் கோஷா உண்டல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், சிலர்க்கு உண்டு. ஆனால் எங்களுக்கு இல்லை.

**சாக்ரடீஸ்:** நல்லது. உங்களில் சிலர் ஒரு கோஷாப் பாடசாலை வேண்டுமென்றார்கள். கோஷா இல்லாதவர்களும் அங்கேபோய் கோஷாவைக் கற்றுக்கொள்ளலாம் அன்றோ?

**கிராமவாசிகள்:** ஒருகாலும் இல்லை. கோஷாவை விட்டுவிட்ட எங்கள் ஸ்திரீகள் பள்ளிக்கூடத்துக்குப் போய் அதைக் கற்றுக்கொள்ளவேண்டுமா? அப்படிப்பட்ட பாடசாலையும் படிப்பும் எங்களுக்கு வேண்டாம். எங்கள் ஸ்திரீகளுக்கு இருக்கும் வேலைக்குக் கோஷா எப்படிச் சாத்தியம். மேலும் கோஷாவைக் கைப்பற்றியிருக்கும் குடும்பங்கள், வரவர ஏழைகளாகி, வியாதியாலும் க்ஷீணித்துப்போகின்றன.

**சாக்ரடீஸ்:** நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மையே. கிராமங்களில் கோஷா என்பது ஒரு பெரிய இடைஞ்சல். ஆகையால், பல கிராமங்களில் இரண்டு பெண் பாடசாலைகள், அதாவது ஒன்று கோஷாப் பெண்களுக்கும், மற்றொன்று பிறர்க்கும் வேண்டியிருக்குமல்லவா?

**கிராமவாசிகள்:** ஆம், அது சரியே.

**சாக்ரடீஸ்:** ஆம், அதிக வரியும் உதவாது அல்லவா? அப்படியிருக்கச் சாதாரணமான கிராமங்களுக்குத் தனியாகப் பெண்பிள்ளைப் பாடசாலைகள் எப்படிக் கிடைக்கும்?

**கிராமவாசிகள்:** கிடைப்பது அருமைதான்.

**சாக்ரடீஸ்:** அப்படியே ஒரு தனிப்பாடசாலை கிடைத்தாலும், அதனைப் பரீக்ஷைசெய்து, மேற்பார்வை பார்ப்பது யார்?

**கிராமவாசிகள் :** ஒரு ஸ்திரீதான் அதையும் கவனிக்க வேண்டும்.

**சாக்ரடீஸ் :** ஒதுங்கிக் கிடக்கும் இந்தக் கிராமத்திற்கு அவள் எப்படி வருவாள். பையன்களின் பாடசாலைக்கு இன்ஸ்பெக்டர் வருஷத்தில் எத்தனை முறை வருகிறார் ?

**கிராமவாசிகள் :** மூன்று மாதங்களுக்கொருமுறை அவர் வருகிறார். ஆனால் அவர்தாம் இங்கு வந்துபோகப் படுகிற சிரமமும் தொல்லையும் கொஞ்சமில்லை என்று அடிக்கடி சொல்லுகிறார்.

**சாக்ரடீஸ் :** ஆகையால், உங்கள் இன்ஸ்பெக்டரம்மாள் வருஷத்துக்கு ஒருமுறை இங்கு வருவதே பெரிய காரியமாயிருக்கும் அல்லவா ?

**கிராமவாசிகள் :** இருக்கலாம்.

**சாக்ரடீஸ் :** அவைகளைப் பரீக்ஷைசெய்யவும், குற்றங்களைத் திருத்தவும், எவ்விதம் படிப்பு நடக்கிறதென்று பார்க்கவும் பரீக்ஷை அதிகாரிகள் வராமல்போனால், உங்கள் பெண்பிள்ளைப் பாடசாலைகள் நன்கு வேலை செய்யுமா ?

**கிராமவாசிகள் :** அடிக்கடி மேற்பார்வை இல்லாவிட்டால் வேலை ஒழுங்காய் நடைபெறாது; எங்களுக்குக் கூட அவ்விஷயம் தெரியும்.

சாக்ரடீஸ் இதனுடன் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதை நிறுத்திவிடுபவராகக் காணப்படவில்லை. ஒரு நிமிஷம் சும்மாவிருந்துவிட்டு அவர் மறுபடியும் தொடங்கலாயினார்.

**சாக்ரடீஸ் :** ஸ்திரீகளுக்கு நீங்கள் அதிக கௌரவம் கொடுப்பதில்லை அல்லவா ? காலையில் போகும்போது, முன்னால் ஒரு ஸ்திரீ சென்றுகொண்டிருந்தால், 'ஏ,

பெண்பிள்ளை, விலகிப்போ' என்று கூவுவது உண்டல்லவா?

**கிராமவாசிகள் :** இதை நீங்கள் பலதடவை சொல்லிச் சொல்லிக் காட்டியிருக்கிறீர்கள். இன்னமும் ஏன் அது?

**சாக்ரடீஸ்** நான் சொல்வது சரிதானே?

**கிராமவாசிகள் :** அதில் பிசகில்லை.

**சாக்ரடீஸ் :** அதைப்பற்றி உங்கள் மனச்சாட்சி கொஞ்சம் உங்களை உருத்த ஆரம்பித்திருக்கிறதுபோல தோன்றுகிறது. அதைப்பற்றி என்ன, கொஞ்சமும் வெட்கமும் அடைகிறீர்களோ?

**கிராமவாசிகள் :** ஆம்; நீங்கள் சொல்வது சரியே, சாக்ரடீஸ்! நீங்கள் ஒரு விஷயத்தை அடிக்கடி எங்களுக்குச் சொல்ல, அது எங்கள் மனத்தில் நன்முகப் பதிகிறது. நாங்கள் வேமுென்றும் செய்யாவிட்டாலும், அடிக்கடி அதைப்பற்றி நினைத்து, எங்களுக்குள்ளேயே பேசிக்கொள்ளுகிறோம். அதனுல் அது எங்கள் மனத்தில் உறுதியாய்ப் படிந்துவிடுகிறது. இப்பொழுது சொல்லிய விஷயத்தில் நாங்கள் எல்லோரும் எங்கள் குற்றத்தை நன்முய் உணருகிறோம். கொஞ்சங் கொஞ்சமாக நாங்களும் முன்னுக்கு வர முயற்சி செய்கிறோம். நீங்களும் அதைக் காண்பீர்கள்.

**சாக்ரடீஸ் :** நல்லது இந்தப் புதிய பாடத்தைக் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பது மிக்க நல்லதல்லவா?

எல்லாக் கிராமவாசிகளும் ஆவலுடன் 'ஆமாம். கிழவர்களான எங்களை விட்டுவிட்டுக் குழந்தைகளிடமே இந்த உபதேசங்களைச் செய்யவேண்டுமென்று நாங்களும் எத்தனை தரம் சொல்லியிருக்கிறோம்?' என்றனர்.

**சாக்ரடீஸ்:** சரி. குழந்தைகள், தங்கள் தாயார்களையும், சகோதரிகளையும் மரியாதைசெய்ய எங்கிருந்து கற்றுக்கொள்ளப்போகிறார்கள்? உண்மையாக அது உங்களிடமிருந்தன்று.

**கிராமவாசிகள்:** எங்களிடமிருந்து அல்ல—உண்மை தான்.

**சாக்ரடீஸ்:** இல்லையானால், வேறெங்கே அவர்களதைக் கற்றுக்கொள்வார்கள்?

**கிராமவாசிகள்:** பாடசாலைகளில் என்று எண்ணுகிறோம்.

**சாக்ரடீஸ்:** சரி, பள்ளிக்கூடத்தில் ஆண்பிள்ளைகள் மாத்திரம் இருந்தால் அது எப்படி முடியும்? மேலும் பெண்குழந்தைகள் அழுக்கிலும் அறியாமையிலுமே வளர்ந்து கொண்டுவந்தால், அவர்களை யார் மரியாதை செய்வார்கள்?

**கிராமவாசிகள்:** உண்மையாகவே, அவைகள் இடையூறுகள் தான்.

**சாக்ரடீஸ்:** எதுபரியந்தம் பெண்களை ஊரில் ஒரு மூலையில் குவித்துத் தொத்துவியாதி கண்டவர்களைப்போல அவர்களை ஒதுக்கிவைக்கிறீர்களோ, அதுவரையில் உங்களுக்கு முன்னேற்றம் என்பது கிடையாது. உங்கள் குமாரர்கள் தங்கள் தாய்மார்களையும் சகோதரிகளையும் மரியாதை செய்யவேண்டும் என்று நீங்கள் எண்ணினால், ஆண் பெண் குழந்தைகள் எல்லோரையும் ஒரே பள்ளிக்கூடத்திற்கு நீங்கள் அனுப்பவேண்டும். அங்கே உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிகளும் சொல்லிக்கொடுப்பதாலும், தாங்களே நடந்து காட்டுவதாலும், பள்ளிக்கூடத்தில் சிறிய பெண்க

ளிடமும், வீடுகளில் தாய்களிடமும் மரியாதையாய் இருக்கவேண்டுமென்பதை ஆண்பிள்ளைகள் கற்றுக் கொள்வார்கள். மேலும் அந்தப் பெண்களும், பையன்களுடன் பாடங் கற்றுச் சரிசமானமாய் நடத்தப்படுவதால், தாங்களும் பையன்களைப்போல உபயோகமுள்ளவர்களே என்றும், தாழ்ந்த பிராணிகளல்லவென்றும் உணர்வார்கள். அதனால் அவர்கள் தங்களிடத்திலேயே மதிப்பு உள்ளவராவார்கள். பாடசாலைகளில் படித்தால், பிறரால் மரியாதை செய்யப்படவும் உரியவர்களாவார்கள். அவர்கள் பெரியவர்களாய்க் கலியாணம் செய்துகொண்டால், கணவர்களால் மரியாதையுடன் நடத்தப்படுவார்கள். அவர்கள் குழந்தைகளும் இம்மாதிரியே நடக்கக் கற்றுக் கொள்வார்கள்.

**கிராமவாசிகள் :** சாக்ரடீஸ், நீங்கள் சொல்வது முழுமையும் ஞாயமானதே. ஆனால் உங்கள் நோக்கங்கள் முற்றுப்பெற வருஷங்கள் பல பிடிக்கும்.

**சாக்ரடீஸ்:** அப்படியானால் பெண்களையும், ஆண் பாடசாலைகளுக்கு அனுப்ப உடனே ஆரம்பியுங்கள். பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படித்த பிள்ளைகள் வீட்டிலுள்ள மூடத் தாயார்களையும், வரட்டி தட்டவும் நகை யணியவுமே தெரிந்துகொண்டிருக்கும் சகோதரிகளையும் மதித்து மரியாதை எவ்விதம் செய்வார்கள்? கிராமவாசிகளே! இவ் வாழ்க்கையில் அநேக நல்ல விஷயங்களை நீங்களனுபவிக்காமல் விடுகிறீர்கள். நான் தெரிந்துகொண்ட எல்லா சத்விஷயங்களும் என் தாயாரிடமிருந்தே கற்றுக்கொண்டேன். அவளது திவ்விய ஞாபகத்தைப்போல என் மனத்தில் குடிகொண்டிருப்பது வேறொன்றும் இல்லை.

**கிராமவாசிகள் :** அவள் மகா மேன்மையான மாதாக



தாயாரிடமிருந்து கற்ற குழந்தையின் வீடு அழகே அழகு இருந்திருக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

**சாக்ரடீஸ்:** ஆமாம், ஒவ்வொரு தாயாரும் தன் குழந்தைகளுக்கு அப்படியேதான் இருக்கவேண்டும். உங்கள் பெண்களையும் பாடசாலைகளுக்கு அனுப்பி நன்றாகக் கற்பித்து, உங்கள் ஸ்திரீகளையும் நீங்கள் மரியாதையாய் நடத்தி வந்தீர்களானல், உங்கள் குழந்தைகளும் அவ்வித தாய்மார்களாகவே ஆவார்கள். மிராசுதார்களே! இப்பொழுது என் குழந்தைகள் தங்கள் நல்லொழுக்கங்களை யெல்லாம் அவர்களின் தாயாரிடமிருந்தே கற்றுக்கொண்டு வருகிறார்கள்.

**கிராமவாசிகள்:** அது எங்களுக்கொன்றும் ஆச்சரியமாக இல்லை. தங்கள் மனைவி எங்கள் கிராமத்தை வந்து பார்வையிட்டு, எங்கள் குழந்தைகளையும் பார்த்து, அவைகளை எவ்விதம் வளர்க்கவேண்டுமென்று அவர்களின் தாய்மார்களுக்கு எவ்வளவோ சொல்லிப்போனார்கள். மேலும் அவர் ஊரிலுள்ள குழந்தைகளுக்குள் வெகு நேர்த்தியானதொன்றை— அதுவும் ஒரு பெண்குழந்தை—உயரத் தூக்கிக்கொண்டு, அந்தமாதிரியே குழந்தைகளை வளர்க்கவேண்டுமென்று எங்களிடம் வற்புறுத்தினார்.

**மணியக்காரர்:** அது ஒரு சக்கிலியர் குழந்தையல்லவா?

**கிராமவாசிகள்:** அந்த அம்மாளுடைய குழந்தைகள் கூடாரத்துக்கு வெளியிலே விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது பார்த்திருக்கிறோம். அவை எவ்வளவு சுத்தமாயும் அழகாயும் இருந்தன? அவர்கள் போட்டிருந்த உடுப்புக்களெல்லாம் சீமையிலிருந்து வந்திருக்கவேண்டும். அவைகள் எவ்வளவு நன்றாகவும் கதகதப்பாகவும் இருந்தன?

[library stamp]

**சாக்ரடீஸ்:** சிநேகிதர்களே! நீங்கள் நினைப்பது தவறு. அவைகளையெல்லாம் அவர்கள் தாயாரே செய்தார். அதேமாதிரி உங்கள் ஸ்திரீகளும், மனை இயல் போதிக்கும் பாடசாலையில் தைக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். அந்தப் பாடசாலையில் உங்கள் கிராமப்பாடசாலைகளுக்காக ஸ்திரீகளைப் பழக்குகிறோம். ஆகையால் உங்கள் பெண்களையும் பாடசாலைகளுக்கு அனுப்புங்கள். சிறு பையன்கள் அவர்களை மரியாதை செய்யவும் கௌரவப்படுத்தவும் கற்றுக்கொள்ளட்டும். உங்களுக்கு நல்ல குழந்தைகள் வேண்டுமானால், தாயார்கள் நல்லவர்களாக இருக்கவேண்டும். தாயார்கள் கௌரவிக்கப்பட்டாலல்லாமல் நல்ல தாயார்கள் ஆகமாட்டார்கள்.

**கிராமவாசிகள்:** நல்லது. எங்கள் ஜனங்களிடம் வற்புறுத்திப்பேசி, புதிய பையன்களது பாடசாலைக்கு எங்கள் பெண்களையும் அனுப்புகிறோம். அப்படிச் செய்வதால் இப்பொழுது பையன்கள் பாடசாலையாயிருப்பது, சீக்கிரத்தில் பையன்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் ஒரு கிராமப் பாடசாலையாக ஆகிவிடும்.

**சாக்ரடீஸ்:** ஆம், அதுதான் நல்லது. கிராமப்பள்ளிக்கூடம் என்ற பெயர்தான் நல்லது. உங்கள் இனத்தார் நீங்கள் சொல்வதற்கு இசையாவிட்டால் நானே அவர்களிடம் வருகிறேன். ஆனால் உண்மையாக உங்கள் சோம்பேறித்தனமும் பிடிவாதமுந்தான் முக்கிய தடையாக எனக்குத் தோன்றுகின்றன. நீங்கள் இனத்தார்கள் என்று சொல்வதெல்லாம் உங்கள் சோம்பேறித்தனமும் மூடத்தனமுந்தான் என்று எனக்கு எற்படுகிறது.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸ்! அநேக விஷயங்களில் உங்கள் புத்தியில் தோன்றுகிறது உண்மையாகவே இருக்கின்றது. ஆனால் இந்த விஷயத்தில் மாத்திரம் எங்கள் ஜாதிக்காரர்களின் பிடிவாதம் அதிகமாகத்தானிருக்கிறது.

**சாக்ரடீஸ்:** ஆம், அப்படித்தானிருக்கவேண்டுமென்று எனக்கும் ஏற்படுகிறது. நான் இப்பொழுது சொன்ன தகுதியற்ற வார்த்தைகளுக்காக என்னை மன்னியுங்கள்.

**மணியக்காரர்:** நீங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமில்லை, சாக்ரடீஸ்! எங்களைப்பற்றி நீங்கள் சொல்லுவதில் பத்துக்கு ஒன்பது உண்மையாகவே இருக்கின்றன.

**சாக்ரடீஸ்:** நூற்றில் தொண்ணூற்றொன்பது பங்கு என்கிறீர்களா? நல்லது. சிநேகிதர்களே, நாழிகையாகிவிட்டது. நான் அவசரமாய்ப் போகவேண்டும். போய்வருகிறேன், நமஸ்காரம்.

**கிராமவாசிகள்:** நமஸ்காரம், சாக்ரடீஸ்! நமஸ்காரம்.

## போய்வருகிறேன்

ஒருநாள் சாக்ரடீஸ் சாவடிக்கு வரும்போது அவர் முகம் ஒருமாதிரியாக இருந்தது. கிராமவாசிகள் அவரைப் பார்த்து, 'ஏதோ, கெட்ட நாற்றத்தையும் அழுக்குக் குழந்தையையும்விடக் கேடான ஒரு விஷயம் அவர் கண்ணில்பட்டு விட்டதுபோலிருக்கிறது,' என்று சந்தேகித்தனர்.

**சாக்ரடீஸ்:** கிராமவாசிகளே! இன்று நான் துக்கமுள்ளவனாயிருக்கிறேன். நான் உங்களைவிட்டுப்

போகவேண்டிய காலம் வந்துவிட்டது. சொல்லிக் கொண்டு போவதற்காக வந்தேன்.

**கிராமவாசிகள் :** ஏன் பெரியவரே ?

**சாக்ரடீஸ் :** எனக்குக் குழந்தைகள் இருக்கின்றன. அவர்களை எங்கள் தேசத்திற்கு அழைத்துப்போய்ப் பள்ளிக்கூடங்களில் விடவேண்டும். எனக்கும் என் சுதேசத்தைப்பார்க்க ஆவலிருக்கிறது. ஆயினும் உங்களிடமும் உங்கள் கிராமத்திடமும் எனக்கு விசேஷ அபிமானம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் உங்களைவிட்டுப் பிரிய மனமில்லை. என்றாலும் நான் போகத்தான்வேண்டும். கொஞ்சமும் தாமதிக்க முடியாது.

**கிராமவாசிகள் :** நீங்கள் போய்விட்டால் நாங்கள் என்ன செய்வோம்? எங்களுடைய பழைய, அழுக்கான, வீண் வழிகளிலே விழுந்துவிட வேண்டியதுதான்.

**சாக்ரடீஸ் :** இல்லை, நீங்கள் விழமாட்டீர்கள். சுத்தம் என்பதற்குச் சுகம் என்றும், செல்வம் என்றும் அருத்த முண்டென்பதை நீங்கள் கற்றுக்கொண் டிருக்கிறீர்கள். இன்னும், வீணடிப்பது தரித்திரத் தைக் கொண்டுவந்து விடுகிறதென்பதையும், படித்த மனைவியுள்ள வீடே சந்தோஷமான கிரகமாகவும் அழகான குழந்தைகளுள்ள வீடாகவும் இருக்கும் என்பதையும் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கிறீர் கள்.

**கிராமவாசிகள் :** அதெல்லாம் சரிதான். உண்மையாக நாங்கள் எவ்வளவு சோம்பேறிகள் என்பதும் எவ்வ ளவு எங்களுக்குள்ளே சச்சரவு செய்துகொண்டிருப் பவரென்பதும், எங்களுக்குள் ஒரு நல்ல காரியத்திற்

காக ஒன்றுகூடுவது எவ்வளவு துர்லபம் என்பதும் உங்களுக்குத் தெரியாதனவல்லவே.

**சாக்ரடீஸ்:** நண்பர்களே! கெட்ட காரியங்களுக்கென்றால் வெகு சீக்கிரம் நீங்கள் ஒன்றுகூடி விடுவீர்கள். அது எனக்கு நன்றாய்த் தெரியும்.

**கிராமவாசிகள்:** சரி. நீங்களும் போய்விடுகிறீர்கள்; கடைசி தினத்தன்றும், நீங்கள் எங்களைக் குத்திப் பேசுகிறீர்கள். ஆனால் நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையேயொழிய தவறில்லை. நீங்கள் போதித்த இவ்வளவு நல்ல காரியங்களும் நீங்கள் போனபின் எப்படி நடக்கப்போகின்றன?

**சாக்ரடீஸ்:** நீங்கள் ஒன்றுசேர்ந்து அவைகளை நடத்த வேண்டியதுதான்.

**கிராமவாசிகள்:** எப்படி?

**சாக்ரடீஸ்:** கூட்டுறைப்புச் சங்கத்தார்களைக் கூப்பிட்டு ஒரு சங்கம் ஸ்தாபியுங்கள்.

**கிராமவாசிகள்:** அதெப்படி நடக்கும்?

**சாக்ரடீஸ்:** நல்லது. முதல் முதல் சங்கத்தை ஸ்தாபியுங்கள். பிறகு, நீங்கள் ஏற்படுத்திக்கொண்ட எல்லாப் புது வழிகளையும் சட்டமாக்குங்கள். அப்பொழுது அவைகளை நீங்கள் அனுஷ்டித்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் மற்ற அங்கத்தினர்கள் உங்களுக்கு அபராதம் விதிப்பார்கள்.

**கிராமவாசிகள்:** அது நல்ல யோசனைதான். ஆனால் காரியங்களை நடத்துவது எப்படி?

**சாக்ரடீஸ்:** உங்களுடைய மற்ற நிதிகளையெல்லாம் எப்படி நடத்துகிறீர்களோ அதைப்போலவே கூட்டுறைப்புச் சங்க உத்தியோகஸ்தர்கள் அவைகளைக் கவனித்துவருவார்கள்.

**கிராமவாசிகள்:** நல்லது. நாங்கள் உடனே அவ்விதம் செய்வோம்.

**சாக்ரடீஸ்:** நல்லது. நண்பர்களே, போய்வருகிறேன். சில சமயங்களில் என் நாக்கு உங்களிடம் கொடிய தாக இருந்திருக்கிறது. ஆனால் உங்களிடம் எனக்கு அன்பு அதிகம். பிரிவதற்கும் நான் வருந்துகிறேன்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! எங்களை முற்றி லும் நீங்கள் மாற்றிவிட்டீர்கள். இப்பொழுது நாங் கள் சந்தோஷமும், சுகமும், சௌக்கியமும் உள்ள மனுஷ்யர்களாக இருக்கிறோம். கடவுள் உங்களை ஆசீர்வதித்துச் சீக்கிரம் எங்களிடம் திரும்பிக் கொண்டுவந்து சேர்ப்பாராக.

**சாக்ரடீஸ்:** சீக்கிரம் திரும்பி வரவா? நான் எப்படி வரப்போகிறேன்?

**கிராமவாசிகள்:** நீங்கள் வந்தே தீரவேண்டும்.

**சாக்ரடீஸ்:** நல்லது. நானொன்று சொல்லுகிறேன், கேளுங்கள். நான் சொன்ன எல்லாவற்றையும் செய்து வந்து, உங்களுடைய பழைய அழுக்குப் பிடித்த வழிகளில்போகாமல் இருப்பீர்களானால், நான் இங்கேயே திரும்பிவருவதாக வர்க்களிக்கிறேன்.

**கிராமவாசிகள்:** நாங்கள் அப்படியே நடப்பதாக உண் மையாகச் சத்தியம் பண்ணுகிறோம்.

**சாக்ரடீஸ்:** ஒரு மிராசுதாரனின் பிரமாணத்தை எவ் வளவு தூரம் நம்பலாம் என்று எனக்குத் தெரியும்.

**கிராமவாசிகள்:** இன்னமும் உங்கள் வழக்கம்போல் கடுமையாய்ப் பேசுகிறீர்களே! சாக்ரடீஸ்.

**சாக்ரடீஸ்:** நண்பர்களே! வருந்துகிறேன். ஆனால் உங்களை வெகு நாளாக நான் அறிவேனல்லவா!

**கிராமவாசிகள்:** ஆனால் இப்பொழுது செய்தது உண்மையான பிரமாணம். எங்கள் வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்றும், எல்லாக்காரியங்களிலும் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் நீங்கள் கற்பிக்கவில்லையா? எங்கள் பிள்ளைகளும் இப்பொழுது மெய்பேசியே வருகிறார்களில்லையா?

**சாக்ரடீஸ்:** ஆம், அப்படித்தான். உங்கள் பிரமாணத்தை நீங்கள் காப்பாற்றி மற்ற ஜில்லாக்களுக்கும் இம்முன்னேற்ற ஒளியைப் பரப்புவீர்களேயானால் சீக்கிரத்தில் உங்கள் (ஜில்லாவின்) முன்னேற்றம், இந்தியாவின் முன்னேற்றமாகும். நான் அப்பொழுது நிச்சயம் வந்து பார்த்து, நீங்களெல்லோரும் எவ்விதம் இருக்கிறீர்கள் என்று அறிவேன்.

**கிராமவாசிகள்:** அப்பொழுது இன்னமும் மேலான முன்னேற்றத்தை அடையும்பொருட்டு எங்களுக்கு ஒருவேளை இன்னும் உபதேசங்களைச் செய்யலாமன்றோ?

**சாக்ரடீஸ்:** நிச்சயமாகச் செய்யலாம். இப்பொழுது நாம் ஆரம்பந்தானே செய்திருக்கிறோம்.

**கிராமவாசிகள்:** ஓ அய்யா! மேம்பாட்டை யடையும் வழி வெகு கஷ்டமானது! செங்குத்தானது.

**சாக்ரடீஸ்:** நீங்கள் சொல்வது மிகவும் சரியே. ஒவ்வொரு அடியும் புதிய கஷ்டங்களை உண்டாக்கி அவைகளை வெல்லுவதற்கு வேண்டிய உபாயங்களையும் தேடிக்கொள்ளும்படிச் செய்கிறது.

**கிராமவாசிகள்:** உங்கள் தேசமாவது இப்பொழுது பரிபூர்ணமான நிலைமையை அடைந்திருக்கிறதென்று எண்ணுகிறோம், சாக்ரடீஸவர்களே.

**சாக்ரடீஸ்:** ஐயோ! ஒருக்காலும் இல்லை. நாங்கள் இவ்வளவு செய்தும் இன்னும் ஆகவேண்டியவை அளவில்லாமல் கிடக்கின்றன. தேசம் முன்னேற ஏற, புதிய யோசனைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. ஏதோ என்னாலானவரையில் நானும் அதற்கு உதவி செய்யலாம் என்று எண்ணுகிறேன்.

**கிராமவாசிகள்:** சாக்ரடீஸவர்களே! அவ்விஷயங்களிலேயே அதிக ஊக்கங்கொண்டு அங்கேயே தங்கிவிடாதீர்கள். நீங்கள் சொல்வது உண்மையானால் சீக்கிரத்தில் நீங்கள் இங்கே வரவேண்டியது அவசியமாகும்.

**சாக்ரடீஸ்:** ஏன்?

**கிராமவாசிகள்:** நாங்கள் முன்னேற்றம் அடையவேணுமென்று தீர்மானித்துவிட்டோம். முன்னேற்றமேற வேற, புதிய யோசனைகள் உண்டாகிக்கொண்டிருக்கும் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆதலால், சாக்ரடீஸ்! நீங்கள் சீக்கிரம் திரும்பிவந்துவிட வேண்டியதுதான்.

**சாக்ரடீஸ்:** நீங்கள் உங்கள் பிரமாணத்தைக் காப்பாற்றுங்கள். நானும் என் வார்த்தையைக் காப்பாற்றி விடுகிறேன.

**கிராமவாசிகள்:** நல்லது: அது சரி.

**சாக்ரடீஸ்:** போய்வருகிறேன், நண்பர்களே! கடவுள் உங்களைக் கடாக்ஷிப்பாராக!

**கிராமவாசிகள்:** போய்வாருங்கள், சாக்ரடீஸ்! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# முடிவு

சாக்ரடீஸ் சீக்கிரத்தில் தம் தேசத்திற்குப் போகப் போகிற சமாசாரம் ஊரெங்கும் அதிவேகமாய்ப் பரவிற்று. மிருகங்களும் அதைப்பற்றிப் பேசத்தொடங்கின. கொசு. 'புஸ்ஸ்ஸ் அவர் தொலைகிருரென்பதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்தக் கிராமத்திலிருந்த என் வமிசத்தாரில் நானே கடைசி பேர்வழி. பழைய சாக்கடைகளையெல்லாம் அவர்கள் வடியச்செய்துவிட்டார்கள். மழையால் தேங்கின ஜலத்தின்மேலெல்லாம் எண்ணெயை ஊற்றினுர்கள். எனக்கு முட்டையிட இடமேயில்லாமல் போய்விட்டது. வீடுகளும் வெளிச்சம் நிறைந்து சுத்தமாக ஆகிவிட்டன. உள்ளேயும் வெளியிலும் குப்பையையே காணமுடியவில்லை. எனக்குக் குடியிருக்க இடமே இல்லாமல் போய்விட்டது,' என்று ரீங்காரம் பண்ணிக்கொண்டே சென்றது.

அதைக்கேட்ட ஒரு ஈ, 'என் கஷ்டமும் அதுதான். முட்டையிட இடமில்லை. உண்ணவும் உணவில்லை. எல்லா ஆகாரமும் மூடப்பட்டிருக்கின்றன,' என்றது.

ஒரு தெள்ளுப்பூச்சி, 'என்கதி என்ன? எனக்கேதாவது இருட்டிடம் இருந்தால் பிழைக்கலாம். இப்பொழுதோ எங்குப் பார்த்தாலும் வெளிச்சமும் காற்றும் நிறைந்து கிடக்கின்றன,' என்று முணகிற்று.

ஒரு எலி, 'உங்களுக்கெல்லாம் என்ன? எப்படியாவது பிழைத்துப்போவீர்கள். நான்தான் எல்லோரிலும் துரதிருஷ்டசாலி. வீடுகளில் என் மூக்கைக் காண்பித்தால் போதும்; உடனே என் வீட்டில் விஷக்

காற்றைச் செலுத்திவிடுகிருர்கள். வயலில் நுழைந்தாலும் அதே கதிதான். மேலும் ஒவ்வொரு அறையிலும் ஜன்னல்கள் வைத்திருக்கிருர்கள். எனக்குக் கண்ணை விழிக்கவும் முடியவில்லை,' என்று முறையிட்டது.

ஒரு நாய் 'பௌ! வௌ! நான் சாக்ரடீஸை நேசிக்கிறேன். அவர் எனக்குக் குடியிருக்க வீடு கொடுத்தார். இப்பொழுது நான் நன்ருகப் போஷிக்கவும்படுகிறேன். எனக்கொரு பெயரும் கிடைத்திருக்கிறது. என் கழுத்திலுள்ள பட்டையைப் பாருங்கள், எவ்வளவு அழகாயிருக்கிறது! வீடுகளைக் காக்கவும், எலிகளைப் பிடிக்கவும், இன்னும் உபயோகமான பல காரியங்களைச் செய்யவும் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிருர்கள். இப்பொழுது மனிதருக்குப் பெரும் தோழனுய் இருக்கிறேன். 'சாக்ரடீஸுக்கு ஜே! ஜே! ஜே!' என்று உரக்கக் கூவிற்று.

ஊர்ப்பன்றி, 'உம்! உம். என் ஆகாரமெல்லாம் போயிற்று! ஊரில் எங்கே பார்த்தாலும் சுத்தமாக இருக்கிறது. குப்பைகளைக் குழிகளில் போட்டுவிடுகிருர்கள். நான் வேறெங்கேயாவது ஓடிவிடவேண்டியதுதான்,' என்று அழுதது.

தோட்டங்களிலுள்ள பக்ஷிகளும், சாக்ரடீஸ் செய்த மாறுதல்களைப்பற்றிப் பேசலாயின. கௌதாரிகளுக்கு உண்டான கோபத்திற்கு அளவே இல்லை. ஒரு கிழப் பெட்டை, 'பழைய காலங்களில் வயல்களிலுள்ள குப்பையும் புல்லும் நாங்கள் ஒளிந்துகொள்வதற்கு வெகு உதவியாயிருந்தன. இப்பொழுதோ, இரும்புக் கலப்பை வைத்துக்கொண்டு உழ வாரம்பித்துவிட்

டார்கள். வயல்கள் சுத்தமாகவும் மேடுபள்ள மில்லாமலும் ஆகிவிட்டன. பயிர்கள் வளர்ந்துகொண்டிருக்கும்பொழுது எங்கள் குஞ்சுகள் இருக்க இடமேயில்லை,' என்று கூறிற்று.

அதைக்கேட்ட ஒரு கிழச்சேவல், 'இரவில் பத்திரமாய்ப் படுத்து உறங்க இடம் இருக்கிறதோ? இங்கிருந்த புதர்களும்செடிகளும்வெட்டப்பட்டுவிட்டன. வேல மரங்களெல்லாம் அழிந்துபோயின. இந்தச் சாக்ரடீஸ் தொலையட்டும்: என் பழைய ஸ்திதியைக் கொடுத்தால் போதும்,' என்று உரைத்தது.

ஒரு (*Starling*) பறவை 'வா! வா! இரும்புக் கலப்பை ஏற்பட்டகாலம் முதல் எனக்கு எவ்வளவோ ஆகாரம் கிடைக்கிறது. மண்ணுள்ளிருக்கும் புழு பூச்சிகளெல்லாம் வெளியே கொண்டுவரப்படுகின்றன. இப்பொழுது வருஷத்துக்கு இரண்டு குடும்பங்களை நான் வளர்ப்பேன். சாக்ரடீஸ் மகாராஜாவுக்கு ஜேய்!' என்று கூவிற்று.

அச்சமயம் ஒரு காட்டுப்பன்றி அப்பக்கம் செல்ல, அது மிகவும் முணுமுணுத்துக்கொண்டே, 'பழைய காலங்களில் நாங்கள் கிராமத்திடல்களில் இருந்த புதர்களில் சொஸ்தமாக வசித்துக்கொண்டு கரும்புக் கொல்லைகளை அழித்துத் தின்றுகொண்டிருந்தோம். இப்பொழுது நடப்படும் கரும்புகளோ வெகு கெட்டியாயிருக்கின்றன. கடித்தால் பற்கள்தாம் நோகின்றன. மேலும் புதர்களையெல்லாம் அழித்துவிட்டுப் புல்லையும் மரங்களையும் வைத்துப் பயிராக்குகிறபடியால் எனக்குத் தங்க இடமில்லை. இப்பொழுது ஒவ்வொரு காலையிலும் நான் ஆற்றுப்படுக்கையிலிருக்கும் காடுகளுக்கு ஓடவேண்டியிருக்கிறது. ஹூ! ஹூ!

அதோ அவர் வந்துவிட்டார். நான் ஓடிப்போக வேண்டும்' என்று கூறி ஓட்டம் எடுத்தது.

சாக்ரடீஸ் 'ஆம். இன்று காலை என் ஈட்டியை எடுத்துவர மறந்தேன். நீ பிழைத்தாய்,' என்று கூறினர்.

அவர் வந்துகொண்டிருந்ததைப் பார்த்த ஒரு அழகான இளங்கன்றுடன் நின்றுகொண்டிருந்த பசு ஒன்று, 'அந்தக் கெட்ட மனிதன் நல்ல வேளையாக ஒழிகின்றுன், இந்த அழுக்குப்பிடித்த மனிதர்கள், மாடுகளை விட மேம்பட்டவர்களென்று அவன் சொன்னுனல்லவா? என்னைக்காட்டிலும் அவர்கள் மேம்பட்டவர்களா? இல்லவே இல்லை. என்னையும் என் கன்றையும் பார். ஒரு நாளைக்குப் பன்னிரண்டு தடவை நான் அதைச் சுத்தம் செய்கிறேன். அவர்களோ, சமீபகாலம் வரையில் தங்கள் குழந்தைகளை மாதத்திற்கு ஒருமுறைகூடக் குளிப்பாட்டவில்லை. மேலும் என் வமிசத்தைப் பார். நான் சுத்த நெல்லூர் பசு,' என்றது.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு கிழப்பசு அதன் விலாவில் தன் கொம்பினுல் முட்டி, 'மூடமே! வாயை மூடு! நீ எவ்விதம் உயர்குலத்துப் பசுவானுய்? உன் பாட்டனைச் சாக்ரடீஸ் நெல்லூரிலிருந்து கொண்டு வந்ததனுல் உனக்கு உயர் குலம் வந்தது. அவர் இங்கு வருவதற்கு முன்னே நாங்கள் இருந்த நிலைமையை நீ என்ன அறிவாய்? இப்பொழுது எங்களுடைய சுத்தமும் காற்ருேட்டமுமான மாட்டுக்கொட்டிலைப் பார். ஏற்கெனவே இருட்டிலும், அழுக்கிலும் நாங்கள் குடியிருந்தோம். நாற்றத் தண்ணீரைக் குடித்து வந்தோம், நல்ல ஆகாரம் என்றைக்காவது கிடைத்தால்

அதிருஷ்டந்தான். இப்பொழுது நமது குடிதண்ணீர் வெகு பரிசுத்தமாயிருக்கிறது. ஆகாரம் வேண்டிய மட்டும் கிடைக்கிறது. மூடப்பெண்ணே! ஏன் சாக்ரடீஸ் பேரில் குறைகூறுகிறாய்? சாக்ரடீஸ், மனிதர்களை வரட்டி தட்டாமல் தடுத்து, நமது சாணத்தை வயலுக்கு எருவாகப் போடச் சொன்னார். அதுமுதல் நமக்கு ஆகாரம் விசேஷமாகக் கிடைக்கிறது. ஆதலால் நாமெல்லோரும் 'சாக்ரடீஸுக்கு ஜே!' என்று கூவுவோம் வா' என்றது.

ஒரு கிழக்கழுதை 'ஹீஹா! ஹீஹா! எனக்கும் வேண்டிய தீனி இப்பொழுது கிடைக்கின்றது. முன் போல ஆகாரத்தைப் பெற பன்றிகளுடன் ஊர்க் குப்பையைப் போய்க் கிளறவேண்டிய அவசியம் இப்பொழுது எனக்கில்லை,' என்று ஆநந்தித்தது.

மயில் 'கூக்! கூக்! கூக்! கூக்! முன் நான் குப்பை மேடுகளில் உட்கார்ந்திருந்தேன்! இப்பொழுதோ அழகான பூந்தோட்டத்தில் நான் விளையாடுகிறேன். அழகும் சுத்தமும் உள்ள பெண்மணிகளும் குழந்தைகளும் ஒவ்வொரு மாலையிலும் எனக்கு அன்னம் இடுகிறார்கள். கூக்! கூக்! கூக்! 'சாக்ரடீஸுக்கு ஜே!' கூக்! கூக்! கூக்!' என்று அகவினது.

THE MADURA TAMIL SANGAM